அக்டோபர் 2021

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்










**1.** FSSAI'இன்படி, தொழிற்துறையில் உற்பத்தி செய்யப்படும் மாறுபக்க கொழுப்பை (trans-fat) எம்மதிப்பிற்கு மட்டுப்படுத்த வேண்டும்?



அ) 10%

ஆ) 5%

**இ) 2% ☑**

ஈ) 1%

✓ இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையமானது (FSSAI) தொழிற்துறையில் உற்பத்தி செய்யப்படும் மாறுபக்க கொழுப்புகள் 2%'க்கும் குறைவாக இருக்க வேண்டும் என்றும் 2022'க்குள் மாறுபக்க கொழுப்பற்ற நாடாக மாறவேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது.

✓ அண்மையில் சோதிக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு மாதிரிகளுள் 1.34 சதவீத மாதிரிகளில் மட்டுமே மாறுபக்க கொழுப்புகள் பரிந்துரைக்கப்-பட்ட அளவுக்கு மேலிருந்தது. இது இந்தியா மாறுபக்க கொழுப்புகளற்ற நாடாக மாறுகிறது என்பதைக் காட்டுகிறது.

---

**2.** "Climate Indicators and Sustainable Development: Demonstrating the Interconnections" **என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ) UNFCCC

ஆ) UNICEF

இ) NITI ஆயோக்

**ஈ) WMO ☑**

✓ உலக வானிலை அமைப்பானது (WMO) "Climate Indicators and Sustainable Development: Demonstrating the Interconnections" என்ற தலைப்பிலான ஓரறிக்கையை வெளியிட்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு உடனடி நடவடிக்கை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தை இவ்வறிக்கை வலியுறுத்துகிறது.

✓ புவி வெப்பத்தை 2 டிகிரி செல்சியசுக்கும் குறைவாகக் குறைப்பதையும் இது கூறுகிறது. WMO என்பது ஐநா'இன் சிறப்பு நிறுவனமாகும். அது, சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

---

**3. பின்வரும் திட்டங்களுள் எது, இந்தியாவில், அனைவருக்கும் சுகாதார காப்பீட்டை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது?**

அ) PM JDY

ஆ) PM JJBY

**இ) PM JAY ☑**

ஈ) PM FBY

✓ PM ஜன் ஆரோக்கியா யோஜனா (PM-JAY) என்பது இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும். அது அனைவருக்கும் சுகாதாரக் காப்பீட்டை அடைவதை நோக்கமாகக்கொண்டு கடந்த 2018 செப்டம்பர்.23 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம் 3ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ், 10 கோடிக்கும் மேற்பட்ட ஏழைக்குடும்பங்க-ளுக்கு 2ஆம் மற்றும் 3ஆம் நிலை மருத்துவமனைகளில் ஆண்டுக்கு ஒரு குடும்பத்திற்கு ₹5 லட்சம் வரை சுகாதாரக்காப்பீடு வழங்கப்படுகிறது

---

**4.** "Fed to Fail? The Crisis of Children's Diets in Early Life" **என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ) NITI ஆயோக்

ஆ) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

**இ) UNICEF ☑**

ஈ) உலக வங்கி

✓ ஐநா குழந்தைகள் நிதியமானது (UNICEF) "Fed to Fail? The Crisis of Children's Diets in Early Life" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. அறிக்கையின்படி, 6–23 மாத வயதுடைய குழந்தைகளில் பாதி பேருக்கு மட்டுமே ஒருநாளுக்கு பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச உணவு வழங்கப்படுகிறது. மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே அவர்கள் வளரத்தேவையான குறைந்தபட்ச உணவுகளை உட்கொள்கின்றனர். COVID-19 தொற்றுநோய் நிலைமையை மோசமாக்கலாம் என்றும் அது வெளிப்படுத்தியது.

**5. நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் குறித்து இந்தியா தனது முதல் கூட்டுப் பணிக்குழுக் கூட்டத்தை எந்த நாட்டோடு நடத்தியது?**



அ) இங்கிலாந்து

ஆ) ரஷ்யா

**இ) ஆஸ்திரேலியா ☑**

ஈ) ஜப்பான்

✓ காணொலிக்காட்சிமூலம் நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் குறித்த இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் முதல் கூட்டுப்பணிக்குழுக் கூட்டம் நடந்தது.

✓ அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்தியா–ஆஸ்திரேலியா ஆற்றல் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக இது நடைபெற்றது. இவ்விவாதங்கள் இந்திய நிலக்கரி வளங்கள், உத்திசார் கனிமங்கள்–தேவை மற்றும் விநியோக சூழல் மற்றும் ஆஸ்திரேலியாவுடனான ஈடுபாடுகளில் கவனம் செலுத்தின. தூய நிலக்கரி தொழில்நுட்பம், மேற்பரப்பு நிலக்கரி வாயு உருவாக்கம், நிலக்கரி படுக்கை மீத்தேன், தீயணைக்கும் தொழில்நுட்பத்தைப் பகிர்வது, நிலக்கரி அடிப்படையிலான ஹைட்ரஜன் போன்றவற்றைப் பற்றியும் அவர்கள் விவாதித்தனர்.

---

**6. 2021 உலக கொடுக்கும் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**




**அ) 14 ☑**

ஆ) 26

இ) 45

ஈ) 82

✓ Charities Aid Foundation ஆனது உலக கொடுக்கும் குறியீட்டை (WGI) வெளியிடுகிறது. 2021 பதிப்பின்படி, இந்தியா, உலகின் முதல் 20 தாராள குணங்கொண்ட நாடுகளில் 14ஆவது இடத்தில் உள்ளது. COVID-19 தொற்றுநோய் உலகின் தொண்டு போக்குகளை வீழ்த்தியுள்ளது.

✓ COVID காரணமான முடக்கங்களால் இக்குறியீட்டில் பல மேற்கத்திய நாடுகள் சரியாக செயல்படவில்லை. அமெரிக்கா, கனடா, அயர்லாந்து, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகியவை மிகவுயர்ந்த தரநிலையில் இருந்து சரிந்துள்ளன.

---

**7. சமீப செய்திகளில் இடம்பெற்ற குன் சிகரம் அமைந்துள்ள மாநிலம் / UT எது?**



**அ) லடாக் ☑**

ஆ) சிக்கிம்

இ) இமாச்சல பிரதேசம்

ஈ) பீகார்

✓ குன் சிகரம் என்பது நன் குன் மலைப்பகுதியின் ஒருபகுதியாகும். இது கிழக்கு இமயமலைத்தொடரில் 23,219 அடி உயரத்திலுள்ள 2ஆவது மிக உயர்ந்த சிகரமாகும். இந்தச் சிகரம் லடாக்கின் கார்கில், சுரு பள்ளத் தாக்குக்கு அருகில் அமைந்துள்ளது.

✓ அருணாச்சலப் பிரதேசத்தின் தீராங்கில் உள்ள தேசிய மலையேறுதல் மற்றும் அதனுடன் இணைந்த விளையாட்டு நிறுவனத்தில் (NIMAS) ஓர் அணியை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இணைத்து வைத்தார். இந்தக்குழு 2021 ஜூலை 15, முதல் 2021 ஆகஸ்ட்.10 வரை மவுன்ட் குன் மலைப்பாதை பயணத்தை நிறைவு செய்தது. NIMAS என்பது பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஒரு முதன்மையான மலையேற்ற நிறுவனம் ஆகும்.

---

**8. சமீபத்தில் எந்த மாநிலத்தில், KVIC, 'துசார் பட்டு நூல் உற்பத்தி மையத்தை' நிறுவியுள்ளது?**



அ) குஜராத்

ஆ) கர்நாடகா

**இ) ஒடிசா ☑**

ஈ) மேற்கு வங்கம்

✓ காதி மற்றும் கிராமப்புறத் தொழிலகங்கள் ஆணையமானது (KVIC) கட்டாக் மாவட்டத்தில் உள்ள சௌத்வாரில் ஒடிசாவின் முதல் துசார் பட்டு நூல் உற்பத்தி மையத்தை நிறுவியுள்ளது.

- ✓ துசார் பட்டானது சிறந்த பட்டு வகைகளில் ஒன்றாகும். இது கரடுமுரடான மற்றும் நுண்ணிய நெசவுக்கு பெயர்பெற்றது. ஒடிசாவின் மொத்த காதி துணி உற்பத்தியில் பட்டின் சதவீதம் 75 ஆகும்.
- ✓ ₹75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பட்டு நூல் உற்பத்தி மையம் ஆண்டுக்கு 94 இலட்சம் மதிப்புடைய 200 கிலோ பட்டு நூலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

---

**9. இந்திய துளிர் நிறுவனம் மற்றும் தொழில்முனைவோருக்காக 'கோளரங்க புதுமை சவாலை' தொடங்கியுள்ள அமைச்சகம் எது?**

அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ) ஜல் சக்தி அமைச்சகம்

ஈ) MSME அமைச்சகம்

- ✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் உள்ள மைகௌ இந்தியா, இந்திய துளிர் நிறுவனம் மற்றும் தொழில்நுட்ப தொழில்முனைவோருக்கான கோளரங்க புதுமை சவாலை அறிமுகம் செய்துள்ளது. ஆக்மெண்ட் ரியாலிட்டி (AR), விர்ச்சுவல் ரியாலிட்டி (VR) & மெர்ஜ்ட் ரியாலிட்டி (MR) போன்ற அண்மைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஓர் உள்நாட்டு கோளரங்க அமைப்பு மென்பொருளை உருவாக்குவதற்கு தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் இந்திய துளிர் நிறுவனங்களை ஊக்குவிப்பதை இந்தச் சவால் நோக்கமாகக் கொண்டுள்ளது. விண்ணப்பதாரர்கள், துளிர் நிறுவனங்கள், இந்திய நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் அல்லது அணிகளாக இருக்கலாம்.

---

**10. யாருக்கு 2021ஆம் ஆண்டுக்கான உலகளாவிய கோல்கீப்பர் விருது வழங்கப்பட்டுள்ளது?**

அ) நரேந்திர மோடி

**ஆ) பம்சைல் மிலம்போ-ங்குகா ☑**

இ) லேமா கோபோவி

ஈ) எல்லன் ஜான்சன் சர்லீப்



- ✓ பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையானது 2021ஆம் ஆண்டின் உலகளாவிய கோல்கீப்பர் விருதை, ஐநா அவையின் முன்னாள் பொதுச் செயலாளரும் ஐநா பெண்கள் அமைப்பின் நிர்வாக இயக்குநரான பம்சைல் மிலம்போ-ங்குகாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ வங்காளதேசத்தைச் சேர்ந்த பைரூஸ் பைசா பீதர், நலவாழ்வை ஊக்கு-விக்கும் பணிக்காக 2021 சேஞ்ச்மேக்கர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்-டுள்ளார். 2021ஆம் ஆண்டின் முன்னேற்ற விருது கொலம்பியாவின் ஜெனிபர் கோல்பாசுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டுக்கான பரப்புரை விருது, பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் பணிக்காக லைபீரியாவின் சத்தா ஷெரிப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அக்.1 – உலக முதியோர் தினம்**

---

**2. நேபாளத்தில் நடைபெற்ற தடகள போட்டியில் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்ற பூங்கோதை**

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் உள்ள பொக்ராவில் அனைத்து விளையாட்டுகள் தெற்காசிய கூட்டமைப்பு சார்பில் போட்டிகள் நடைபெற்றது. இதில்இந்தியா, நேபாளம், பூடான், இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இந்தியாவில் இருந்து 130 பேர் கொண்ட அணி பல்வேறு போட்டிகளில் பங்கேற்றது. இதில் மகளிருக்கான 5 ஆயிரம்மீட்டர் தொடர் ஓட்டத்தில் தமிழகத்தின் கோவை மாவட்டம் சூலூர்பட்டணத்தைச் சேர்ந்த பூங்கோதை தங்கப்பதக்கம் வென்றார்.

---

**3. மாணவர்களின் வீடுகளுக்கே சென்று பாடம் கற்பிக்கும் 'மக்கள் பள்ளி திட்டம்' – பள்ளிக்கல்வித்துறை நடவடிக்கை**

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவா்களின் கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்காக 'மக்கள் பள்ளி' என்ற திட்டம் வரும் அக்.18-ஆம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கரோனா பரவல் காரணமாக தமிழகத்தில் அனைத்து வகை பள்ளிகளும் மூடப்பட்டன. இந்நிலையில் 9 ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரையிலான மாணவா்களுக்கு மட்டும் கடந்த செப்.1-ஆம் முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. மாணவா்களின் நலன் கருதி தற்போதுவரை புத்தாக்கப் பயிற்சிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இதற்கிடையே ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவா்களுக்கு வரும் நவ.1-ஆம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்படவுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளை பள்ளிக் கல்வித்துறை கடந்த சில நாள்களாக மேற்கொண்டு வருகிறது. இந்தநிலையில் கரோனா பெருந்தொற்று காரணமாக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவா்களின் கற்றல் இடைவெளி அல்லது கற்றல் இழப்பைக் குறைப்பதற்கு தினசரி ஒன்றிலிருந்து ஒன்றரை மணி நேரம் குறைதீா் கற்றல் செயல்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் 'மக்கள் பள்ளி' என்ற திட்டத்தை தமிழக பள்ளிக் கல்வித்துறை வரும் அக்.18-ஆம் தேதி முதல் தொடங்கவுள்ளது.

**எந்தெந்த மாவட்டங்களில்...**

இது குறித்து பள்ளிக் கல்வித்துறை உயரதிகாரிகள் கூறியது: கிராமப்புற மாணவா்களின் நலன் கருதி இந்தத் திட்டம் முதல் கட்டமாக கிருஷ்ணகிரி, நீலகிரி, விழுப்புரம், கடலூா், திருச்சி, திண்டுக்கல், காஞ்சிபுரம், தஞ்சாவூா் ஆகிய 8 மாவட்டங்களில் மட்டும் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவா்களுக்கு பள்ளி நேரத்துக்குப் பிறகு அவா்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடங்களில் தன்னாா்வலா்கள் மூலம் செயல்முறைக் கற்பித்தல் வகுப்புகள் நடைபெறும். இதைத் தொடா்ந்து பள்ளியில் நடத்தப்பட்ட பாடங்களுக்கு திருப்புதல் நடைபெறும்.

சான்றிதழ், பரிசுகள் வழங்கப்படும்: ஒரு தன்னாா்வலா் குறைந்தபட்சம் 15 முதல் 20 வரையிலான மாணவா்களுக்கு வகுப்பெடுப்பாா். இந்தத் திட்டத்தில் சிறப்பாக செயல்படும் தன்னாா்வலா்களுக்கும், திறமையை வெளிப்படுத்தும் மாணவா்களுக்கும் அரசின் சாா்பில் பாராட்டுச் சான்றிதழ், பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இந்த திட்டம் சிறப்பாக செயல்பட அந்தந்த கிராம ஊராட்சி நிா்வாகிகளின் ஒத்துழைப்பும் அவசியமாகும். 'மக்கள் பள்ளி' திட்டம் விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என அவா்கள் தெரிவித்தனா்.

**கிராம சபைக் கூட்டத்தில்...**

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கிராமசபைக் கூட்டங்கள் அக்.2-ஆம் தேதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அப்போது, பள்ளிக் கல்வி சாா்ந்து விவாதிக்கப்படவுள்ள கூட்டப் பொருளோடு, 'மக்கள் பள்ளி' திட்டம் குறித்தும் விவாதிக்க ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிடம் பள்ளிக் கல்வித்துறை கேட்டுக் கொண்டுள்ளது. இந்தக் கூட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலா், மாவட்டக் கல்வி அலுவலா், வட்டாரக் கல்வி அலுவலா், தலைமை ஆசிரியா்கள் என அனைத்து நிலை கல்வி அலுவலா்களும் கலந்து கொண்டு 'மக்கள் பள்ளி' திட்டத்துக்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

---

**4. சென்னை மெட்ரோ திட்டத்துக்கு ஏஐஐபி வங்கி ரூ.2,600 கோடி கடனுதவி**

சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்காக சுமாா் ரூ.2,600 கோடியை ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி (ஏஐஐபி) கடனாக வழங்கியுள்ளது. இதன்மூலமாக இந்தியாவுக்கு அந்த வங்கி வழங்கியுள்ள கடன் சுமாா் ரூ.47,000 கோடியாக அதிகரித்துள்ளது. சீன தலைநகா் பெய்ஜிங்கை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகக் கடன்களை வழங்கி வருகிறது. அந்த வங்கியில் சீனா 26.06 சதவீத பங்குகளை வைத்துள்ளது; இந்தியா 7.5 சதவீத பங்குகளை வைத்துள்ளது.

சென்னையில் மெட்ரோ ரயிலின் 2-ஆம் கட்டப் பணிகள் தொடங்கியுள்ளன. அதற்காக ரூ.2,600 கோடியை ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி கடனாக வழங்கியுள்ளது. இது தொடா்பாக அந்த வங்கியின் துணைத் தலைவா் டி.ஜே.பாண்டியன் பிடிஐ செய்தி நிறுவனத்திடம் வியாழக்கிழமை கூறுகையில், "இந்தியாவில்

மொத்தமாக 28 திட்டங்களுக்கு ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி ரூ.47,000 கோடி கடன் வழங்கியுள்ளது. போக்குவரத்து, எரிசக்தித் துறைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அதிக அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஏஐஐபி வங்கியின் மூலம் அதிக கடன் பெற்று பலனடைந்துள்ள நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கரோனா தொற்றை எதிர்கொள்வதற்காக சுமார் ரூ.13,000 கோடியை இந்தியாவுக்கு ஏஐஐபி வழங்கியுள்ளது.

பெங்களூரு மெட்ரோ ரயில் திட்டம், ஆந்திர நகர்ப்புற குடிநீர்த் திட்டம், கேரள திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், மும்பை நகர்ப்புற போக்குவரத்துத் திட்டத்தின் 3–ஆம் கட்டம், தில்லி–மீரட் புகர் போக்குவரத்துத் திட்டம் உள்ளிட்டவற்றுக்கும் ஏஐஐபி கடன் வழங்கியுள்ளது. ஏஐஐபி வங்கியின் கடனுதவி மூலமாக சென்னை மெட்ரோ ரயில் திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படும். இது வர்த்தகத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் அதிகரிக்கும்' ' என்றார்.

---

**5. இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 7% –க்கு மேல் இருக்கும்: தலைமைப் பொருளாதார ஆலோசகர்**

அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 7 சதவீதத்துக்கு மேல் இருக்கும் என்று தலைமைப் பொருளாதார ஆலோசகர் கே.வி.சுப்பிரமணியன் தெரிவித்தார். சர்வதேச அளவில் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையை, இந்தியாவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் சரியான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள முடியும். இதன்மூலம் சர்வதேச அளவிலான பொருளாதார மேம்பாட்டில் இந்தியா பங்களிக்கும் என்றும் அவர் கூறினார். வாஷிங்டனில் இந்தியாவின் பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான மாநாடு நடைபெற்றது. அமெரிக்க பெரு நிறுவனங்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில் கே.வி.சுப்பிரமணியன் பங்கேற்று பேசியதாவது:

கரோனா பெருந்தொற்று பிரச்னை ஏற்படுவதற்கு முன்பிருந்து இப்போது வரை அடிப்படைப் பொருளாதாரக் கட்டமைப்புகள் எப்போதும் வலுவாகவே உள்ளன. சில நிதி சார்ந்த பிரச்னைகள் மட்டும் இந்தியாவில் இருந்து வந்தன. அடுத்த 10 ஆண்டுகள் ஒருங்கிணைந்த வளர்ச்சியில் இந்தியாவுக்கான காலகட்டமாக இருக்கும். 2023–ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதம் முதல் 7 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும். எனவே, 10 ஆண்டுகளில் இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 7 சதவீதத்துக்கு மேல்தான் இருக்கும்.

இந்தியாவில் அமைப்புரீதியாக பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன. புதிய வேளாண் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த 18 முதல் 20 மாதங்களில் பல்வேறு பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒரே நாடாக இந்தியா உள்ளது. இந்தியாவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களால் அடித்தட்டு மக்களுக்கும் போதிய வருவாய் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. எனவே, பொருள்கள், சேவைகளுக்கான தேவைகள் பரவலாக அதிகரித்து வருகின்றன. நாட்டில் பொருளாதார சமநிலையின்மை குறைந்து வருகிறது என்றார்.

---

**6. தென்மேற்கு பருவமழை: தமிழகத்தில் இயல்பை விட 17 சதவீதம் அதிகம்**

நிகழாண்டில் தென்மேற்கு பருவமழை காலமான, கடந்த ஜூன் முதல் செப்டம்பர் வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 393.2 மி.மீ. மழை பெய்துள்ளது. இது சராசரி அளவைவிட 17 சதவீதம் அதிகம் ஆகும். பெரம்பலூரில் இயல்பை விட மிக அதிக மழையும், கோயம்புத்தூர், தேனி, திருப்பத்தூர், தூத்துக்குடி உள்பட 14 மாவட்டங்களில் இயல்பை விட அதிக மழையும் பெய்துள்ளது.

**தென் மேற்கு பருவமழை:** நமது நாட்டில் ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்கு பருவமழை காலமும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்கு பருவமழை காலமும் ஆகும். நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் அதிக மழையை கொடுக்கும் தென்மேற்கு பருவமழை நிகழாண்டில் ஜூன் 3–ஆம் தேதி கேரளத்தில் தொடங்கியது. இது, படிப்படியாக விரிவடைந்து பல்வேறு மாநிலங்களிலும் மழையைக் கொடுக்க தொடங்கியது.

தமிழகம் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் ஜூன் 5–ஆம் தேதி பருவமழை தொடங்கியது. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, தென்மேற்கு பருவக்காற்று, வெப்பச்சலனம் காரணமாக, தமிழகத்துக்கு அவ்வப்போது மழை கிடைத்து வந்தது. குறிப்பாக, பருவக்காற்று காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை பகுதியை ஒட்டிய மாவட்டங்களில் பரவலாக மழை கிடைத்தது. இதுபோல, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, வெப்பச்சலனம் காரணமாக, உள்மாவட்டங்களிலும் மிதமானது முதல் பலத்தமழை வரை பெய்து வந்தது. இதற்கிடையில், தென் மேற்கு பருவமழை காலமான ஜூன் 1– ஆம் தேதி முதல் செப்டம்பர் 30–ஆம் வரையிலான காலக்கட்டத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 393.4 மி.மீ. மழை பெய்துள்ளது. இந்த காலக்கட்டத்தில் இயல்பாக 336.1 மி.மீ. மழை பெய்வது வழக்கம். இது சராசரியை விட 17 சதவீதம் அதிகமாகும்.

**மிக அதிக மழை:** தென்மேற்கு பருவமழை காலத்தில் பெரம்பலூரில் 68 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது. பெரம்பலூரில் இந்த காலக்கட்டத்தில் இயல்பான மழை அளவு 278.7 மி.மீ. ஆகும். ஆனால், நிகழாண்டில் 468.7 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**அதிகமழை:** கோயம்புத்தூர், கடலூர், கரூர், நீலகிரி, ராணிப்பேட்டை, சேலம், தேனி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, வேலூர், விழுப்புரம் ஆகிய 14 மாவட்டங்களில் இயல்பை விட அதிக மழை பெய்துள்ளது. தேனியில் இயல்பை விட 52 சதவீதமும், திருப்பத்தூரில் 51 சதவீதமும், கோயம்புத்தூரில் 50 சதவீதமும் இயல்பை விட அதிகமழை பெய்துள்ளது.

**இயல்பான மழை:** அரியலூர், சென்னை, தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருப்பூர், திருவள்ளூர், திருவாரூர் உள்பட 23 மாவட்டங்களில் இயல்பான மழை பெய்துள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத்தலைவர் எஸ்.பாலச்சந்திரன் கூறியது: தென்மேற்கு பருவமழை காலம் (ஜூன் 1 முதல் செப்.30 வரையிலான கணக்கிட்டு காலம்) வியாழக்கிழமையுடன் நிறைவடைந்தது. அதேநேரத்தில், பருவமழை திரும்பப்பெறுவது காலதாமதம் ஏற்படும். குஜராத் கடலோரத்தில் காணப்படும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், பிகார் பகுதியில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத்தாழ்வுப்பகுதி ஆகிய காரணங்களால், தென்மேற்கு பருவமழை தொடர்கிறது. வட இந்தியாவையொட்டிய பகுதிகளில் அக்டோபர் 6–ஆம் தேதி தென் மேற்கு பருவமழை விலக சாத்தியக்கூறுகள் உள்ளன. அதன்பிறகே, தென் இந்திய பகுதிகளில் இருந்து விலகி, வடகிழக்கு பருவமழை தொடங்கும் என்றார் அவர்.

---

**7. வேளாண் ரசாயன உற்பத்தியில் இந்தியாவுக்கு 4–ஆவது இடம்: தோமர்**

உலக அளவில் வேளாண் ரசாயன உற்பத்தியில் இந்தியா 4–ஆவது இடத்தில் உள்ளதாக வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் வியாழக்கிழமை தெரிவித்தார். க்ராப்லைஃப் இந்தியா அமைப்பின் 41–ஆவது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்ற தோமர் இதுகுறித்து மேலும் பேசியது: மத்திய அரசு எண்ம (டிஜிட்டல்) வேளாண் இயக்கத்தை தொடங்கியுள்ளதுடன், பண்ணைத் துறையில் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. வேளாண் ரசாயன உற்பத்தியை பொருத்தமட்டில் இந்தியா உலகளவில் 4–ஆவது இடத்தில் உள்ளது. மேலும், இந்த துறையில் சாதனை வளர்ச்சியை எட்டுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன.

வேளாண் ரசாயனம் உள்ளிட்ட 12 முக்கிய துறைகளை உள்ளடக்கிய சர்வதேச விநியோகச் சங்கிலியில் இந்தியா மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. கண்டுபிடிப்பு, வேகமான பதிவு நடைமுறை அமைப்பு, ஆரம்பகால பயிர் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் எண்ம மயமாக்கல் திட்டங்களின் உதவியுடன் ரசாயனத் துறையில் முதலிடம் வகிக்க அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன என்றார் அவர்.

---

**8. சிவ நாடார், மல்லிகா ஸ்ரீநிவாசனுக்கு விருது: அமெரிக்க–இந்திய தொழில் கூட்டமைப்பு**

இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபர்கள் சிவ நாடார், மல்லிகா ஸ்ரீநிவாசன் ஆகியோர் அமெரிக்க–இந்திய தொழில் கூட்டமைப்பு விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து அமெரிக்க இந்திய தொழில் கவுன்சில் (யுஎஸ்ஐபிசி) வியாழக்கிழமை வெளியிட்டுள்ள

அறிவிப்பில் கூறியிருப்பதாவது: ஹெச்சிஎல் டெக்னாலஜீஸ் நிறுவனர் சிவ நாடார், டாஃபே நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மல்லிகா ஸ்ரீநிவாசன் ஆகியோர் 'உலகளாவிய தலைமை விருது 2021'-க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அக்டோபர் 6-7-ஆம் தேதிகளில் நடைபெறும் 'இந்தியா சிந்தனைகள்' உச்சி மாநாட்டில் இந்த விருது வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சிவ நாடாரின் தலைமையின் கீழ் ஹெச்சிஎல் நிறுவனமானது ஒரு தகவல் தொழில்நுட்ப சேவையிலிருந்து அதிநவீன தொழில்நுட்பத்தின் உலகளாவிய நிறுவனமாக மாறியுள்ளது. விவசாயத்தில் புதுமையைப் புகுத்தும் டாஃபே நிறுவனத்தின் தலைவர் மல்லிகா ஸ்ரீநிவாசனின் அர்ப்பணிப்பு இந்தியாவில் கிராமப்புற சமுதாயத்தில் வாய்ப்புகளை ஏற்படுத்த உதவியது' என யுஎஸ்ஐபிசி தலைவர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார். 2007-ஆம் ஆண்டுமுதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் இந்த விருது டாடா குழும தலைவர் என்.சந்திரசேகரன், லாக்ஹீட் மார்ட்டின் தலைமைச் செயல் அதிகாரி ஜிம் டெய்ஸ்லெட், கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, நாஸ்டாக் தலைவர் அடீனா ஃப்ரீட்மன் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

**9. தூய்மை இந்தியா இயக்கம், அடல் இந்தியா 2.0: இன்று தொடங்கி வைக்கிறார் பிரதமர் மோடி**

நகரமயமாக்குதலில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் நடவடிக்கையாக ரூ.4.28 லட்சம் கோடி மதிப்பில் புதுப்பித்தல், நகர்ப்புற மாற்றத்துக்கான அடல் இயக்கம் (அம்ருத்), தூய்மை இந்தியா இயக்கம் ஆகியவற்றின் இரண்டாம் கட்ட திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை (அக்டோபர் 1) தொடங்கிவைக்கிறார். 2030 -ஆம் ஆண்டுக்குள் நகரங்களில் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இந்தத் திட்டங்கள் உதவிகரமாக இருக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தில்லியில் டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் இன்று பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கும் இந்த நிகழ்ச்சியில், மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப்சிங் புரி, இணையமைச்சர் கௌசல் கிஷோர் மற்றும் தமிழக உள்ளாட்சி, நகர்புறத் துறை அமைச்சர் கே.என் நேரு மற்றும் பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர். பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, அனைவருக்கும் 'குடிநீர் கிடைத்தல்', 'கழிவுகள் இல்லாத' நகரங்களாக மாற்றும் லட்சியத்தை நிறைவேற்றும் வகையில், இந்த இரு இயக்கங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள விவரங்கள் வருமாறு:

இரண்டாம் பதிப்பு அம்ருத் 2.0 : 4,700 நகர்ப்புற உள்ளாட்சிகளில் 100 சதவீதம் அளவிற்கு அனைத்து வீடுகளுக்கும் 2.68 கோடி குடிநீர் இணைப்புகளை வழங்குவது, அடல் இயக்கத்தில் (அம்ருத்) உள்ள 500 நகரங்களில் சுமார் 2.64 கோடி கழிவுநீர் இணைப்புகளை வழங்கி 100 சதவீதம் கழிவுநீர் வசதிகளை உருவாக்குவது ஆகியவை இரண்டாம் பதிப்பு 2.0 இயக்கத்தின் நோக்கமாகும். இந்த இரு திட்டங்கள் மூலம் நகர்ப்புறங்களில் வசிக்கும் 10.50 கோடி மக்கள் பயனடைவர். மேலும், நிலத்தடி நீர், நீர் வளங்களின் பாதுகாப்பு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை இந்த இயக்கம் ஊக்குவிக்கும். நவீன சர்வதேச தொழில்நுட்பங்கள், திறன்கள்ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கான நீர் மேலாண்மைக்கு இந்த இயக்கம் ஆதரவளிக்கும். நகரங்கள் இடையே வளர்ச்சிக்கான போட்டியை ஊக்குவிப்பதற்காக குடிநீர் ஆய்வு நடத்தப்படும். இது போன்ற பணிகளுக்காக சுமார் ரூ.2.87 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கம் 2.0: அடல் இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்படாத நகரங்கள் மற்றும் ஒரு லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை உள்ள நகர்ப்புற பகுதிகளில் 'கழிவுகள் இல்லாத' நிலையை ஏற்படுத்துவதே நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கம் இரண்டாம் பதிப்பின் நோக்கமாகும். இந்த நகரங்களில் கழிவு நீர் மேலாண்மையை உறுதிசெய்வது, திறந்தவெளியில் மலம் கழிக்காத நிலையை (ஓடிஎஃப்+) உருவாக்குவதும் முக்கியப் பணியாக இருக்கும். மேலும், இந்த நகரங்களில் திடக் கழிவுகளின் ஆதாரங்கள் மூன்று வகையில் தரம் பிரிக்கப்படுக்கப்படுகிறது. குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி ஆகிய மூன்று வகைகள் இந்த நகரங்களில் பின்பற்றப்படும். அனைத்து விதமான திடக் கழிவுகளையும் அறிவியல் ரீதியாக அகற்றி பயனுள்ள திடக்கழிவு மேலாண்மைக்கு இந்த இயக்கம் கவனம் செலுத்தும். இதற்காக சுமார் ரூ.1.41 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா-அடல் இயக்க தாக்கங்கள்: கடந்த ஏழு ஆண்டுகளில் நகர்ப்புற தோற்றங்களை மேம்படுத்துவதில் தூய்மை இந்தியா – அடல் இயக்கம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன. மக்களுக்குத் தண்ணீர் விநியோகம் மற்றும் துப்புரவு ஆகிய அடிப்படை சேவைகள் வழங்குவதை இந்த இரண்டு முக்கிய இயக்கங்கள் மேம்படுத்தி உள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பலவற்றில் திறந்தவெளியில் மலம் கழிக்கும் நிலை இல்லாததாக அறிவிக்கப்பட்டுள்ளது. 70 சதவீதம் திடக் கழிவுகள் அறிவியல் ரீதியாக தற்போது அப்புறப்படுத்தப்படுகின்றன. 1.1 கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகளும், 85 லட்சம் கழிவுநீரை வெளியேற்றுவதற்கான இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் 4 கோடிக்கும் அதிகமான மக்கள் பயனடைந்துள்ளனர்.

---

**1. எந்தத் தெற்கு பசிபிக் பெருங்கடல் நாடு சமீபத்தில் காலநிலை மாற்றம் குறித்து பன்னாட்டு நீதிமன்றத்தை நாடியது?**



அ) பிஜி

ஆ) ஆஸ்திரேலியா

**இ) வனுவாட்டு ☑**

ஈ) பப்புவா நியூ கினி

✓ தென் பசிபிக் பெருங்கடல் நாடான 80 தீவுகளைக் கொண்ட வனுவாட்டு, சமீபத்தில் காலநிலை மாற்றத்தின் விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினரின் உரிமைகள் குறித்த கருத்தை வெளியிட பன்னாட்டு நீதிமன்றத்தை நாடியுள்ளது. இந்தத் தீவு நாடுகளில் கடல் மட்டம் மற்றும் வழக்கமான புயல்களை அதிகரித்து வருகின்றன. வனுவாட்டு சுமார் 280,000 மக்கள்தொகையைக் கொண்டுள்ளது. ஐநா பொதுச்சபை (UNGA) மூலம் இந்த முயற்சியை வனுவாட்டு அமைக்கவுள்ளது.

---

**2. இந்தியாவில், "டிஜிட்டல் ஸ்கை" தளத்தை இயக்குகிற நிறுவனம் எது?**



அ) NITI ஆயோக்

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

**இ) சிவில் வான்போக்குவரத்து இயக்குநரகம் ☑**

ஈ) தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ "டிஜிட்டல் ஸ்கை" தளம் இந்தியாவில் சிவில் ஏவியேஷன் இயக்குநரகம் மூலம் இயக்கப்படுகிறது. சமீபத்தில், உள்நாட்டு விமானப்போக்குவரத்து அமைச்சகம், இந்தியாவில் டிரோன் நடவடிக்கைகளுக்காக பிரத்யேகமா -க ஒரு வான்வெளி வரைபடத்தை வெளியிட்டது. இந்த வரைபடத்தை "டிஜிட்டல் ஸ்கை" தளத்தைப் பயன்படுத்தி அணுகலாம். இந்த வரைபடத் -தின்படி, டிரோன் செயல்பாடுகளுக்காக வான்வெளி பச்சை, சிவப்பு மற்றும் மஞ்சள் மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

---

**3. வங்கிகளுடனான வைப்பு குறித்த அறிக்கையை, அவ்வப்போது வெளியிடப்படுகிற அமைப்பு எது?**




அ) டிஐசிஜிசி

**ஆ) ஆர் பி ஐ ☑**

இ) நிதி அமைச்சகம்

ஈ) ஐபிஏ

✓ வங்கிகளுடனான வைப்பு குறித்த அறிக்கை இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டது. இது, 2019-20ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், 2020-21ஆம் நிதியாண்டில், வங்கி வைப்பு, ஆண்டுக்கு 11.9% அதிகரித்துள்ளது என்று கூறுகிறது. இதற்கு காரணம் CASA (நடப்பு கணக்கு – சேமிப்புக் கணக்கு வைப்பு) வளர்ச்சியாகும். மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம், கர்நாடகா ஆகியவை இந்தியாவின் மொத்த வங்கி வைப்புத் தொகையில் 1/3 பங்கு என அறிக்கை கூறுகிறது.

---

**4. PFRDA'ஆல் எந்தத் தேதியில் தேசிய ஓய்வூதிய அமைப்பு திவாஸ் அனுசரிக்கப்படுகிறது?**

**அ) அக்டோபர்.1 ☑**

ஆ) அக்டோபர்.2

இ) அக்டோபர்.3

ஈ) அக்டோபர்.4

✓ ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (PFRDA) அக்.1ஆம் தேதியை தேசிய ஓய்வூதிய அமைப்பு திவாஸாக கொண்டாட முன்மொழிந்துள்ளது. இது ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தை ஊக்குவிப்பதற்கான PFRDA'இன் ஒருபகுதியாகும்.

✓ #npsdiwas என்ற தலைப்பில் ஒரு பரப்புரை சமூக ஊடகங்களில் விளம்ப -ரப்படுத்தப்படுகிறது. PFRDA என்பது மத்திய நிதியமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறை அமைப்பாகும். அதன் தற்போதைய தலைவர் சுப்ரதிம் பாண்டியோபாத்யாய் ஆவார்.

---

**5. முதல் இமாலய திரைப்பட விழாவை நடத்திய இந்திய மாநிலம் / UT எது?**




**அ) லடாக் ☑**

ஆ) உத்தரகாண்ட்

இ) சிக்கிம்

ஈ) ஜம்மு காஷ்மீர்

✓ முதலாவது இமாலய திரைப்பட விழாவை லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள லே நகரத்தில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் அனுராக் தாக்கூர் தொடங்கிவைத்தார். இந்தியாவின் 75 ஆண்டுகள் சுதந்திரத்தை கொண்டாடும் விடுதலையின் அம்ரித் மகோத்சவத்தின் ஒரு பகுதியாக செப்.24 முதல் 28 வரை இந்த ஐந்து நாள் திரைப்பட விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் திரைப்பட விழாக்கள் இயக்குநரகத்துடன் இணைந்து லடாக் யூனியன் பிரதேச நிர்வாகம் இதை நடத்துகிறது. இது லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலுடன் இணைந்து நடத்தப்படுகிறது.

---

**6. பிரீடம் ஹவுஸால் தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாக இணைய சுதந்திரத்திற்கான மோசமான சூழல் உள்ள நாடாக அறிவிக்கப்பட்டு உள்ள நாடு எது?**

**அ) சீனா ☑**

ஆ) வட கொரியா

இ) சிரியா

ஈ) ஈராக்

✓ அமெரிக்காவைச்சார்ந்த இலாப நோக்கற்ற நிறுவனமான பிரீடம் ஹவுஸ் சமீபத்தில் இணைய சுதந்திரம், டிஜிட்டல் உரிமைகள், தகவல் சுதந்திரம் மற்றும் இணைய அணுகல் உரிமை ஆகியவை அடங்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, இணைய சுதந்திரமானது உலகளவில் தொடர்ச்சியாக 11ஆவது ஆண்டாக குறைந்துள்ளது.

✓ மியான்மர், பெலாரஸ் & உகாண்டாவில் மிகப்பெரிய சேதம் நிகழ்த்தும் விளைவுகள் காணப்பட்டன. தொடர்ச்சியாக 7ஆம் ஆண்டாக இணைய சுதந்திரத்திற்கான மோசமான சூழல் உடைய நாடாக சீன நாடு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

---

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற அபிஷேக் வர்மாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) டென்னிஸ்

ஆ) பூப்பந்து

**இ) வில்வித்தை ☑**

ஈ) மட்டைப்பந்து

✓ மும்முறை உலகக்கோப்பையில் தங்கப்பதக்கம் வென்ற இந்தியாவின் 'காம்பவுண்ட்' வில்வித்தை வீரர் அபிஷேக் வர்மா உலக வில்வித்தை விளையாட்டு வீரர்களின் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உலக வில்வித்தை சாம்பியனான ரஷ்யாவின் நடாலியா அவ்தீவா மற்றும் இந்தியாவின் அபிஷேக் வர்மா ஆகியோர் நான்கு ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

✓ 32 வயதான அபிஷேக் வர்மா, 'அர்ஜுனா' விருது பெற்றவராவார். இந்த ஆண்டு தொடக்கத்தில் போலந்து (2015) மற்றும் பாரிஸில் நடந்த உலகக்கோப்பையில் அவர் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஜோதி சுரேகா வென்னம் உடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) டென்னிஸ்

ஆ) ஸ்குவாஷ்

**இ) வில்வித்தை ☑**

ஈ) துப்பாக்கிச்சுடுதல்

✓ யாங்டனில் நடைபெற்று வரும் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் 'காம்பவுண்ட்' பிரிவு போட்டியில் ஜோதி சுரேகா வென்னம் வெள்ளி வென்றுள்ளார். இறுதிப்போட்டியில், உலகின் 3ஆம் நிலையிலுள்ள கொலம்பியாவின் சாரா லோபஸால் அவர்

தோற்கடிக்கப்பட்டார். முன்னதாக, உலக சாம்பியன்ஷிப்பில், இந்திய பெண்கள் மற்றும் கலப்பு கூட்டு அணிகள் வெள்ளிகளை வென்றன. இந்திய பெண்கள் அணியில் ஜோதி, முஸ்கான் கிரார் மற்றும் பிரியா குர்ஜார் ஆகியோர் அடங்குவர்.

**9. நியூயார்க்கில் நடைபெற்ற தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாட்டில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**



அ) நரேந்திர மோடி

**ஆ) அனுராக் தாக்கூர் ☑**

இ) பியூஷ் கோயல்

ஈ) நிர்மலா சீதாராமன்

- ✓ ஐநா பொதுச்சபை கூட்டத்தையொட்டி நியூயார்க்கில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாட்டில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் அனுராக் தாக்கூர் உரையாற்றினார். 'தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான சர்வதேச கூட்டணி' நியூயார்க்கில் கடந்த 2019ஆம் ஆண்டு செப்.26 அன்று தொடங்கப்பட்டது. இது கருத்து மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் இலவச, பன்மை மற்றும் நம்பகமான தகவல்களுக்கான அணுகலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கூட்டாண்மையில் இன்றுவரை 43 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

**10. வங்காள விரிகுடாவில் உருவான 3ஆவது செப்டம்பர் புயலின் சூறாவளியின் பெயர் என்ன?**



அ) கிசா

**ஆ) குலாப் ☑**

இ) ஜீனா

ஈ) குணா

- ✓ குலாப் சூறாவளி, ஆந்திர பிரதேச மாநிலத்தில் கரையைக் கடந்தது. ஆந்திரா மற்றும் ஒடிசா இடையேயான நிலப்பரப்பை அது தாக்கியது. யாஸ் புயல், ஒடிசா மற்றும் மேற்கு வங்க மாநிலம் முழுவதும் அழிவை ஏற்படுத்திய நான்கு மாதங்களுக்குப் பிறகு, தெற்கு ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திர பிரதேச கடற்கரையில் மற்றொரு சூறாவளி உருவானது.
- ✓ 21ஆம் நூற்றாண்டில், இரண்டு வெப்பமண்டல சூறாவளிகள் – தயே (2018) மற்றும் பியார் (2005) – வங்காள விரிகுடாவில் இருந்து இந்திய கிழக்கு கடற்கரையில் கரையை கடந்தது. செப்டம்பர் மாதத்தில் கரையைக் கடந்த 'குலாப்' புயல் இதுபோன்ற மூன்றாவது புயலாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அக்.1 – தன்னார்வ இரத்த தான நாள்**

**கருப்பொருள்:** உயிர்க்காக்கும் உதிரதானம்.

**2. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் பொற்கிழி விருது அறிவிப்பு**

சென்னை புத்தகக் கண்காட்சியை நடத்தும் பபாசி வழங்கும் 2021ஆம் ஆண்டிற்கான முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் பொற்கிழி விருது வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பபாசி வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

2007–ல் 30ஆவது சென்னை புத்தகக் காட்சியை துவக்கிவைத்த, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தம் சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை பபாசியிடம் வழங்கி, ஆண்டுதோறும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 4 தமிழ் எழுத்தாளர்களுக்கும் ஒரு பிறமொழி எழுத்தாளருக்கும் ஒரு ஆங்கில மொழி எழுத்தாளருக்கும் தலா ஒரு லட்சம் வீதம் பொற்கிழியும், விருதும் வழங்கக் கூறினார்கள். அதற்காக பபாசியால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளையில் இருந்து, கவிதை, புனைவிலக்கியம், உரைநடை, நாடகம் ஆகியவற்றில் சிறந்த 4 தமிழ் எழுத்தாளர்களுக்கும், ஆங்கிலம் மற்றும் பிற இந்திய மொழிகளில் எழுதும் சிறந்த 2 பேருக்கும் ஆண்டுதோறும் விருது மற்றும் ₹1 லட்சம் பணமும் அளித்துக் கவுரவித்து வருகிறது. அதன்படி 2007ல் இருந்து இதுவரை 84 எழுத்தாளர்களுக்கு 84 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான விருதாளர்களை அதற்காக அமைக்கப்பெற்ற குழு தேர்வு செய்துள்ளது. தேர்வுபெற்ற விருதாளர்கள் பட்டியலை பபாசியின் தலைவர் ஆர் எஸ் சண்முகம் அவர்கள் அறிவித்துள்ளார். கொரோனா காரணமாக நடைபெறாமல் நின்றுவிட்ட 2020ம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவும் 2021ஆம் ஆண்டுக்கான விழாவுடன் இணைந்து நடைபெறும். விழா குறித்த தேதி மற்றும் நேரம் விரைவில் அறிவிக்கப்படும் என்று பபாசி தலைவர் அறிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு விருது பெறும் விருதாளர்கள்:

1. அபி – கவிதை
2. இராசேந்திர சோழன் – புனைவிலக்கியம்
3. எஸ் ராமகிருஷ்ணன் – உரைநடை
4. வெளி ரங்கராஜன் – நாடகம்
5. மருதநாயகம் – ஆங்கிலம்
6. நதித் சாகியா – பிற இந்திய மொழி (காஷ்மீரி)

**3. 3,200 ஆண்டுகளுக்கு முந்தைய பொருநை நாகரிகம்; ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கையில் அகழாய்வு நிறைவு: 2,000'க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுப்பு**

ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும்கொற்கையில், 3,200 ஆண்டுகளுக்கு முந்தைய 'பொருநைநாகரிகத்தை' வெளிக்கொணர்ந்த அகழாய்வுப் பணிகள் நிறைவடைந்தன. இதில், 2,000–க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தமிழக தொல்லியல் துறை சார்பில், தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி கரையில் உள்ள ஆதிச்சநல்லூர், சிவகளையில் 2–ம் கட்டமாகவும், பாண்டியர்களின் துறைமுக நகரான கொற்கையில் முதல் கட்டமாகவும் கடந்த 7 மாதங்களாக அகழாய்வுப் பணி நடைபெற்றது. நேற்று முன்தினம் பணி நிறைவுபெற்றது. ஆதிச்சநல்லூரில் 10–க்கும் மேற்பட்ட இடங்களில் குழிகள் தோண்டப்பட்டு, அகழாய்வுநடைபெற்றது. இதில், 500–க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கொற்கையில் 1,000–க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்தன. குறிப்பாக, 9 அடுக்குகள் கொண்ட திரவப்பொருட்களை வடிகட்டும் குழாய், சங்க இலக்கியத்தில் கூறப்படும் 29 அடுக்குகள் கொண்ட செங்கல் கட்டுமான அமைப்பு, இரண்டடுக்கு கொள்கலன், சங்கு அறுக்கும் தொழிற்கூடம், தமிழ் பிராமி எழுத்துகள், குறியீடுகள், சங்குகள், சங்கு வளையல்கள், வண்ண பாசிமணிகள், பானைகள், ரோம் மற்றும் சீன நாட்டுப் பானை ஓடுகள், சுடுமண் உருவபொம்மைகள் எனஏராளமான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிவகளையில் பரம்பு, பேட்மா நகரம், மூலக்கரை ஆகிய 3 இடங்களில் 18 குழிகளும், பராக்கிரமபாண்டி திரடு, ஆவாரங்காடு திரடு, பொட்டல் திரடு, செக்கடி ஆகிய நான்கு இடங்களில் வாழ்விடப் பகுதிகளை கண்டறிவதற்காக 8 குழிகளும் அமைக்கப்பட்டன. பரம்பு பகுதியில் 400'க்கும் மேற்பட்ட பொருட்களும், வாழ்விடப் பகுதிகளில் 300'க்கும் மேற்பட்ட பொருட்கள் & 48 முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குழந்தைகள் விளையாடும் வட்ட சில்கள், பெண்கள் அணியும் காதணிகள், சதுரங்க காய்கள், நூல் நூற்கப் பயன்படும் தக்களி, சுடுமண்ணால் செய்யப்பட்ட முத்திரைகள், சுடுமண் பந்து, சுடுமண்சக்கரம், நுண்கற்கால கருவிகள், பட்டை தீட்டும் கற்கள், எலும்புகளால் ஆன கூர்முனைக் கருவிகள், அம்மி குழவி, கண்ணாடி வளையல்கள், சங்கு வளையல்கள், பாசிமணிகள், சீன நாட்டு நாணயம், காப்பர் குழாய், சீன பானை ஓடுகள், வாள், கத்தி என ஏராளமான பொருட்கள் கிடைத்தன. ஆவாரங்காடு திரட்டில் சுடாத செங்கல்லால் அமைக்கப்பட்ட கட்டுமானம், பராக்கிரமபாண்டி திரட்டில் செங்கல்லால் கட்டப்பட்ட கழிவுநீர் வடிகால் என பல முக்கியத்துவம் வாய்ந்த தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மூலக்கரை பகுதியில் கல்வட்டங்கள் கிடைத்தன.

சிவகளையில் கிடைத்த முதுமக்கள் தாழியில் இருந்து எடுக்கப்பட்ட நெல்மணிகளை ஆய்வு மேற்கொண்டதில், அவற்றின் வயது 3,200 ஆண்டுகள் என்றும், தாமிரபரணிக்கரை 'பொருநை நாகரிகத்தின்' வயது 3,200 ஆண்டுகள் என்றும், தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார். இதை பெருமைப்படுத்தும் விதமாக திருநெல்வேலியில் ₹15 கோடி மதிப்பில் 'பொருநைஅருங்காட்சியகம்' அமைக்கப்படும். அங்கு, ஆதிச்ச நல்லூர், சிவகளை மற்றும் கொற்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்படும் என்றும் முதல்வர்

அறிவித்தார். சிவகளையில் மூன்றாம் கட்ட அகழாய்வும், கொற்கையில் கடல்சார் ஆய்வும் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ளன.

**4. செப்டம்பரில் ₹1.17 லட்சம் கோடி GST வசூல்: 5 மாதங்களில இல்லாத உயர்வு**

கடந்த செப்டம்பர் மாதத்தில் ஒட்டுமொத்த GST வருவாயாக ₹1,17,010 கோடி வசூலாகி உள்ளது. இது கடந்த 5 மாதங்களில் இல்லாத அதிக வசூலாகும். தொடர்ந்து 3 மாதங்களாக ஒரு லட்சம் கோடிக்கு மேல் GST வசூலாகியுள்ளது. இது தொடா்பாக நிதியமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

செப்டம்பர் மாதத்தில் மொத்தம் ₹1,17,010 கோடி GST வசூலாகி உள்ளது. இதில் மத்திய GSTயாக ₹20,578 கோடி, மாநில GSTயாக ₹26,767 கோடி, ஒருங்கிணைந்த GST ஆக ₹60,911 கோடி (இறக்குமதி பொருள்கள் மீது வசூலிக்கப்பட்ட ₹29,555 கோடி உள்பட) & கூடுதல் (செஸ்) வரியாக ₹8,754 கோடியும் (இறக்குமதி பொருள்களுக்கா –க வசூலிக்கப்பட்ட ₹623 கோடி உள்பட) வசூலாகியுள்ளது.

செப்டம்பர் மாத வருவாய் கடந்த ஆண்டு இதே காலத்தில் கிடைத்த GST வருவாயைவிட 23% அதிகமாகும். கடந்தாண்டு இதேமாதத்தில் கிடைத்ததைவிட, இந்த மாதத்தில் பொருள்கள்மூலம் கிடைக்கும் வருவாய் 30% அதிகம் & உள்நாட்டு பரிவர்த்தனைமூலம் கிடைக்கும் வருவாய் (சேவை இறக்குமதி உள்பட) 20% அதிகமாகும். செப்டம்பர் 2019–இல் ₹91,916 கோடி வருவாய் கிடைத்த நிலையில் 2020 செப்டம்பரிலேயே அதைவிட 4% அதிக வருவாய் கிடைத்தது.

நடப்பாண்டின் இரண்டாவது காலாண்டில், மாதாந்திர மொத்த GST வசூல் சராசரி ₹1.15 லட்சம் கோடி. இது ஆண்டின் முதல் காலாண்டில் கிடைத்த மாதாந்திர வசூலான ₹1.10 லட்சம் கோடியையவிட 5% அதிகமாகும். இது நாட்டின் பொருளாதாரம் வேகமாக எழுச்சி பெற்றுவருவதை தெளிவாக உணர்த்துகிறது.

பொருளாதார வளர்ச்சியுடன், வரி ஏய்ப்பு தடுப்பு நடவடிக்கைகள், குறிப்பாக போலி ரசீது தயாரிப்பவர்களுக்கு எதிரான நடவடிக்கை GST வசூல் அதிகரிப்புக்கு காரணமாகியுள்ளது. வருவாய்க்கான இந்தச் சாதகமான போக்கு தொடர்வதுடன் ஆண்டின் இரண்டாவது அரை ஆண்டில் கூடுதல் வருவாய் கிடைக்கச் செய்யும். மாநிலங்களின் GST வருவாய்ப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கான இழப்பீடாக ₹22 ஆயிரம் கோடியையும் மத்திய அரசு விடுவித்துள்ளது.

தமிழ்நாட்டின் GST வருவாய் கடந்த ஆண்டு செப்டம்பரில் ₹6,454 கோடி இருந்த நிலையில் இந்த ஆண்டு செப்டம்பரில் 21% அதிகரித்து ₹7,842 கோடி வசூலாகியுள்ளது என மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**5. தமிழகத்துக்கு ₹1,112 கோடி கடன்: உலக வங்கி ஒப்புதல்**

தமிழகத்துக்கு ₹1,112 கோடி கடன் வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை நகரை பருவநிலை மாற்றங்களுக்கு உகந்த அதிக பசுமை நிறைந்ததாகவும், வாழ்வதற்குத் தகுதியுள்ள வகையிலும் உலகத் தரத்திலான நகரமாக உருவாக்கும் தமிழக அரசின் திட்டத்துக்கு உதவும் வகையிலும் இந்தக் கடனை வழங்க ஒப்புதல் அளித்திருப்பதாக உலக வங்கி அதன் செயல் இயக்குநர்கள் குழுவிடம் தெரிவித்தது.

இதுதவிர, மேகாலய மாநிலத்தில் சுகாதார சேவைகளைத் தரம் உயர்த்தவும், கரோனா பாதிப்பு உள்ளிட்ட அவசரகால மருத்துவத் தேவைகளைக் கையாளும் வகையில் மாநிலத்தின் திறனை மேம்படுத்தும் வகையிலான திட்டத்துக்காக அந்த மாநிலத்துக்கு ₹296 கோடி கடன் வழங்கவும் உலக வங்கி ஒப்புதல் அளித்திருக்கிறது.

இதுதொடர்பாக உலக வங்கி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது: சுமார் ஒரு கோடி மக்கள்தொகையுடன் இந்தியாவில் நான்காவது அதிக மக்கள்தொகை கொண்ட மாநகரமாக சென்னை உள்ளது. மாநிலத்தின் பொருளாதார மையமாக விளங்கும் சென்னை, இயற்கைப்பேரிடர், பருவநிலைமாற்ற பாதிப்புகளால் அதிகம் பாதிப்புறக்கூடிய நகரமாகவும் உள்ளது.

இத்தகைய சூழலில் 'சென்னை நகர கூட்டுறவு: நிலைத்த நகர்ப்புற சேவைகள் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் ₹1,112 கோடி கடன் வழங்க ஒப்புதல் அளித்திருப்பது, நகரின் சேவைத் துறைகளின் நிதி நிலையை மேம்படுத்த உதவும் என்பதோடு, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுதல், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய 4 முக்கிய நகர்ப்புற சேவைகளின் தரத்தை மேம்படுத்தவும் உதவும். மேகாலயத்துக்கு வழங்கப்பட இருக்கும் கடன்மூலம், அந்த மாநிலத்தில் உள்ள 11 மாவட்டங்களும் பயன்பெறும். அதோடு, மாநிலத்தின் ஆரம்ப சுகாதார மையம் மற்றும் இரண்டாம் நிலை சுகாதார மைய ஊழியர்கள், அவர்களுடைய மேலாண்மைத் திறன் மற்றும் சிகிச்சையளிக்கும் திறன் ஆகியவற்றை மேம்படுத்திக்கொள்ளவும் உதவும். குறிப்பாக, மாநில மருத்துவ சுகாதார சேவைகளை பெண்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள இந்தத் திட்டம் உதவும்.

மேகாலயத்தில் 5 வயதுக்குள்பட்ட இறப்பு விகிதம் 2019–20–ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 40 உயிரிழப்புகள் என்ற விகிதத்தில் இருந்தது. இது முந்தைய 2015–16–ஆம் ஆண்டு கணக்கெடுப்பைக் காட்டிலும் சற்று கூடுதலாகும். இந்த விவகாரத்தில் மாநிலத்தின் ஒருசில மாவட்டங்கள் சிறப்பாக செயல்பட்டபோதும், கிராமப்புறங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இடையேயான வேறுபாடு தொடர்கிறது.

பெரும்பாலான சுகாதாரக் குறியீடுகளில் நகர்ப்புறங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. அதே நேரம், தொற்றும் தன்மை அல்லாத உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இதய நோய் மற்றும் புற்றுநோய் பாதிப்புகள் மேகலாயத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று உலக வங்கி செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6. பாதுகாப்பு தொழில்துறைக்கான கூட்டு செயற்குழு: இந்தியா – அமெரிக்கா முடிவு**

இந்தியா மற்றும் அமெரிக்க பாதுகாப்புத் தொழில்துறைகள் தொடர்பான கூட்டு செயற்குழுவை அமைக்க இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன. இதுகுறித்து பாதுகாப்புத் துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்ததாவ –து: கடந்த ஐந்து நாள்களாக தில்லியில் நடைபெற்று வந்த இந்திய – அமெரிக்க தொழில்துறை பாதுகாப்பு மாநாடு நிறைவடைந்தது.

பாதுகாப்பு தொடா்பான தளவாடங்கள் மற்றும் மென்பொருள்களை உருவாக்கி வரும் இருநாட்டு நிறுவனங்கள், தங்களிடையே முக்கியத்து –வம் வாய்ந்த இரகசியத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான வரையறைகளை உருவாக்கும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

பாதுகாப்பு உற்பத்தியில இந்திய தனியார் நிறுவனங்களும் ஈடுபட்டு வரும் நிலையில், அவர்களிடம் ராணுவ ரகசியத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று முன்னணி அமெரிக்க பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்கள் வலியுறுத்தி வந்தன. அதனை நிறைவு செய்வதற்காக நடத்தப்பட்ட இந்த மாநாட்டில், இதுதொடர்பான கூட்டு செயற்குழுவை அமைக்க கொள்கை ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அந்தக் குழு அவ்வப்போது சந்தித்து, அதிநவீன தொழில்நுட்பங்களை பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்கள் தங்களிடையே பரிமாறிக் கொள்வதற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிர்ணயிக்கும் என்று பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**7. ஜல் ஜீவன் செயலி: பிரதமர் மோடி இன்று அறிமுகம்**

ஜல் ஜீவன் செயலியை பிரதமர் நரேந்திர மோடி தொடக்கிவைத்தார். இதன்மூலம் இந்தியாவில் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோகத் திட்டம் மேலும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவதுடன், அதன் மூலம் பயனடைபவர்களுக்கும் போதிய விழிப்புணர்வு கிடைக்கும்.

ஜல் ஜீவன் இயக்க கிராம பஞ்சாயத்துகள் மற்றும் பானி சமிதிகளுடன் (நீர் வழங்கும் குழுக்கள்) காணொலி முறையில் கலந்துரையாடுகிறர். மேலும், உலகின் எந்தப் பகுதியில் இருக்கும் தனிநபர்களும் நிறுவனங்களும் இந்தியாவில் குடிநீர் விநியோகத் திட்டத்துக்கு நிதியதவி அளிக்கும் ராஷ்ட்ரீய ஜல் ஜீவன் கோஷ் திட்டத்தையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார். பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான தண்ணீரை குழாய் மூலம் வழங்க 2019 ஆகஸ்ட் 15–இல் ஜல் ஜீவன் இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது 3.23 கோடி (17%) கிராமப்புற வீடுகளுக்கு மட்டுமே குழாய் வழி குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறது.

கடந்த ஈராண்டுகளில், கரோனா தொற்றுநோய் நெருக்கடி இருந்த போதிலும் சுமார் 8.26 கோடி (43%) கிராமப்புற குடும்பங்கள் தங்கள் வீடுகளில் குழாய் வழி தண்ணீர் விநியோகத்தைப் பெற்றுள்ளன.

**8. ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: மானு பாக்கருக்கு தங்கம்; இஷா, கேன்மேட், ருத்ராங்ஷுக்கு வெள்ளி**

ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய நட்சத்திர வீராங்கனை மானு பாக்கர் தங்கம் வென்றார்.

இஷா சிங், கேன்மட் செகான், ஆடவர் பிரிவில் ருத்ராங்ஷ் பட்டீல் ஆகியோர் வெள்ளி வென்றனர். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட இளம் வீராங்கனை மானு பாக்கர் எந்தப் பதக்கமும் வெல்லாமல் ஏமாற்றத்தை தந்தார். இது இந்திய தரப்புக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் பெரு நாட்டு தலைநகர் லீமாவில் நடைபெற்ற ஜூனியர் உலகக் கோப்பையில் மகளிர் 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார். மற்றொரு வீராங்கனையான இஷா சிங் 240 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார். ஆடவர் 10 மீ ஏர் ரைபிள் பிரிவில் 250 புள்ளிகளை குவித்து வெள்ளி வென்றார் ருத்ராங்ஷ் சிங்.

அமெரிக்க வீரர் வில்லியம் ஷானர் தங்கம் வென்றார். மகளிர் 10 மீ ஏர் ரைபிள் பிரிவில் ரமிதா 229.1 புள்ளிகள் உடன் வெண்கலம் வென்றார். மகளிர் ஸ்கீட் பிரிவில் நட்சத்திர இளம் வீராங்கனை கேன்மட் செகான் வெள்ளி வென்றார், பர்த் மகிஜா, தனுஷ் ஆகியோர் முறையே 7, 8ஆம் இடங்களைப் பெற்றனர்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு பிறகு நடைபெறும் இப்போட்டியில் 32 நாடுகளைச் சேர்ந்த 370 பேர் பங்கேற்றுள்ளனர்.

---

**9. ஆசிய டேபிள் டென்னிஸ்: இந்தியாவுக்கு வெண்கலம்**

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்று வரலாறு படைத்தது இந்திய ஆடவர் அணி. கத்தார் நாட்டு தலைநகர் தோகாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டம் நடைபெற்றது. இதில் வலுவான கொரியாவுடன் மோதியது இந்தியா. இதில் இந்திய அணி 0–3 என்ற புள்ளிக்கணக்கில் தோல்வியடைந்தது. எனினும் அரையிறுதிக்கு தகுதிபெற்ற நிலையில் வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

இந்திய வீரர் சத்யன் 5–11, 12–10, 8–11, 5–11 என்ற கேம் கணக்கில் கொரியவீரர் ஹூஜின் ஜங்கிடம் தோல்வியடைந்தார். மற்றொரு வீரரான சரத் கமல் 7–11, 15–13, 8–11, 11–6, 1–9 என்ற கேம் கணக்கில் கொரியாவின் லீ சாங்ஸுவிடம் தோல்வியடைந்தார். ஹர்மீத் தேசாய் 11–4, 9–11, 8–11, 11–6, 13–11 என்ற கேம் கணக்கில் சியுங்மின் சோவிடம் தோல்வியடைந்தார். முன்னதாக காலிறுதியில் ஈரான் அணியை 3–1 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது இந்தியா.

கடந்த 1976ஆம் ஆண்டுக்கு பின் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா வெல்லும் இரண்டாவது பதக்கம் இதுவாகும்.

**மகளிர் அணி 5ஆம் இடம்:** 5 முதல் 10 இடங்களுக்கான போட்டியில் இந்திய மகளிர் அணி 3–1 என்ற புள்ளிக்கணக்கில் தாய்லாந்து அணியை வீழ்த்தி 5–ஆம் இடத்தைப் பெற்றது. சுதிர்தா முகர்ஜி, ஸ்ரீஜா அகுலா, ஆகியோர் ஒற்றையர் ஆட்டங்களில் வென்றனர். அர்ச்சனா கமத் போராடி தோல்வியடைந்தார்.

---

**10. முதியோர் நல மருத்துவர் VS நடராஜனுக்கு தேசிய விருது**

முதியோர் நல மருத்துவ சேவைகளை சிறப்புற மேற்கொண்டு வருவதற்–காக முதியோர் நல மருத்துவ நிபுணர் டாக்டர் வி எஸ் நடராஜனுக்கு தேசிய விருது வழங்கப்பட்டது. தில்லியில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு 'வயோஷ்ரேஷ்தா சமான்' என்ற அவ்விருதை வி எஸ் நடராஜனுக்கு வழங்கி கௌரவித்தார்.

மத்திய அரசின் சமூக நீதித்துறை மற்றும் அதிகாரம் அளித்தல் துறை சார்பில் ஒவ்வோர் ஆண்டும் உலக முதியோர் தினமான அக்.1ஆம் தேதி முதியோர் நலனுக்கு சிறப்பான சேவையாற்றுபவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அதன்படி நிகழாண்டில் 13 தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. அதில், முதியோர் நல சிகிச்சைகளை விரிவாக மேற்கொண்டமைக்காக வி எஸ் நடராஜன் முதியோர் நல அறக்கட்டளைக்கும் விருது வழங்கப்பட்டது.

'வருமுன் காப்போம்' என்ற தலைப்பில் பல சொற்பொழிவுகள் மற்றும் முதியோர் நல மருத்துவ முகாம்களை நடத்தியதுடன், சுமார் 1,853 முதியோர்களுக்கு இலவசமாக நிமோனியா தடுப்பூசியும் அந்த அறக்கட்டளை சார்பில் செலுத்தப்பட்டுள்ளது.

---

**11. மகிளா சக்தி கேந்திரா திட்டம் திரும்பப்பெறப்பட்டது புதிய இரண்டு திட்டங்கள் அறிமுகம்: சமூகநலத்துறை இயக்குநர் சுற்றறிக்கை**

மகிளா சக்தி கேந்திரா திட்டம் திரும்பப் பெறப் பட்டு அதற்கு பதிலாக சம்பல் மற்றும் சமர்த்தியா என்ற புதிய இரண்டு திட்டங்கள் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக சமூகநலத்துறை இயக்குநர் டி ரத்னா அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர்களுக்கு அவரனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: மகிளா சக்தி கேந்திரா திட்டம் செப்.30ஆம் தேதி வரை மட்டுமே நீட்டிக்கப்பட்டது. இந்த திட்டம் திரும்பப்பெறப்பட்டு அதற்கு பதிலாக புதிய திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதுகுறித்து 31.8.2021 அன்று அகமதாபாத்தில் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

இதில், மகிளா சக்தி கேந்திரா திட்டத்தை இரண்டாக பிரித்து பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் திட்டங்களை கொண்ட சம்பல் திட்டம் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திடங்களை கொண்ட சமர்த்தியா திட்டம் என்ற இரண்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. மகிளா சக்தி கேந்திரா திட்டத்திற்கு பதிலாக பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் சமர்த்தியா திட்டம் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு 2024ம் ஆண்டு வரை அமலில் இருக்கும். மேலும், கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட புதிய திட்டத்தின் முக்கிய கூறுகளாக, பெண்களை மேம்படுத்துவதற்கான தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான மையங்கள் அமைக்க வேண்டும்.

சுகாதாரம், பாலினம் மற்றும் ஊட்டச்சத்து, நிதி, கல்வியறிவு, திறன் மேம்பாடு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். நிர்வாகப் பணிக்கான ஊழியர்களை திட்டங்களை செயல்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும். மற்ற அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். வன்முறை மற்றும் துயரங்களை எதிர்கொள்ளும் பெண்களுக்கு குறைதீர்ப்பை விரைவுபடுத்துவது உள்ளிட்ட பல்வேறு புதிய திட்டங்கள் இதன்மூலம் செயல்பாட்டிற்கு வரும்.

மகிளா சக்தி கேந்திரா குழுவின் ஆட்சேர்ப்பு அதிகாரி என்ற வகையில் கலெக்டர்கள் அவரவர் மாவட்டங்களில் உள்ள இந்த குழுவின் ஊழியர்களை அவர்களது பணியில் இருந்து உடனே விடுவிக்க வேண்டும். மேலும், அதற்கான கோப்புகள் மற்றும் ஆவணங்களை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

---

**12. 2021 அக்.2 – 'மகாத்மா' காந்தியடிகளின் 153ஆவது பிறந்தநாள்.**

---

**13. உலக விண்வெளி வாரம்**

ஒவ்வோர் ஆண்டும் அக்.4 முதல் 10ஆம் தேதி வரை உலக விண்வெளி வாரம் கொண்டாடப்படுகிறது.

---

**14. காந்தி பிறந்தநாளையொட்டி – லடாக்கில் பறக்கவிடப்பட்ட உலகின் மிகப்பெரிய தேசியக்கொடி:**

மகாத்மா காந்தி பிறந்தநாளை ஒட்டி, முழுக்க முழுக்க கதர் துணியால் நெய்யப்பட்ட உலகிலேயே மிகப்பெரிய அளவிலான தேசியக் கொடி லடாக்கில் நேற்று பறக்கவிடப்பட்டது. தேசத் தந்தை மகாத்மா காந்தியின் 153ஆவது பிறந்தநாள் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, இந்திய இராணுவத்தின் பொறியாளர்களால் கதர் துணியால் நெய்யப்பட்ட மிகப்பெரிய தேசியக்கொடி, லடாக்கின் லே பகுதியில் பறக்கவிடப்பட்டது.

225 மீ நீளமும், 150 மீ அகலமும் கொண்ட இக்கொடிதான், உலகின் மிகப் பெரிய தேசியக்கொடியாகும். இக்கொடியின் மொத்த எடை 1000 கிலோ.

லடாக் துணைநிலை ஆளுநர் ஆர் கே மாத்தூர் இந்த தேசியக் கொடியை திறந்து வைத்தார். இந்திய இராணுவத்தலைமை தளபதி மனோஜ் முகுந்த் நரவனே முன்னிலையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

---

**15. மத்திய அரசின் 'ஜல் ஜீவன்' திட்டத்தின்மூலம் எனது சகோதரிகளுக்கு தேவையான குடிநீர் கிடைத்துள்ளது: வெள்ளேரி ஊராட்சி மன்றத் தலைவருடனான கலந்துரையாடலில் பிரதமர் மோடி பெருமிதம்**

'ஜல் ஜீவன்' திட்டத்தின்மூலம் எனது சகோதரிகளுக்கு அவர்கள் வெகு காலமாக எதிர்பார்த்திருந்த, தேவையான குடிநீர் கிடைத்துள்ளது என பிரதமர் மோடி பெருமையுடன் தெரிவித்தார். மத்திய அரசின் 'ஜல் ஜீவன்' திட்டத்தின்கீழ், இந்தியாவில் 100% குடிநீர் இணைப்பு கொடுத்துள்ள 5

ஊராட்சிகளைத் தேர்வு செய்து, அந்த கிராம மக்களிடம் காணொலிக் காட்சி வாயிலாக பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட ஐந்து ஊராட்சிகளில், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த வெள்ளேரி ஊராட்சியும் அடங்கும். மத்திய அரசின் 'ஜல் ஜீவன்' திட்டத்தின்கீழ் வெள்ளேரி ஊராட்சியில் உள்ள 412 வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டு, 100 சதவீதம் குடிநீர் தேவையை பூர்த்திசெய்த ஊராட்சியாக திகழ்கிறது.

---

**16. இலட்சத்தீவில் 'மகாத்மா' காந்தியின் முதல் சிலை: இராஜ்நாத் சிங் திறந்துவைத்தார்**

இலட்சத்தீவில் 'மகாத்மா' காந்தியின் முதல்சிலையை பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் திறந்துவைத்தார். இதுவே நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களை நினைவுகூரும் விதமாக லட்சத்தீவில் திறக்கப்பட்ட முதல் சிலையாகும். இரு நாள் பயணமாக பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலட்சத்தீவு சென்றார்.

---

**17. இலங்கை இந்திய ராணுவம் கூட்டுப் பயிற்சி**

இந்தியா இலங்கை ராணுவங்களுக்கு இடையேயான கூட்டுப் பயிற்சி, இலங்கை அம்பாறை பகுதியில் உள்ள போர்ப் பயிற்சிப் பள்ளியில் அக்.4 முதல் 15 வரையில் நடைபெறவுள்ளது.

இருநாட்டு ராணுவங்கள் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்துவதுட –ன், இருதரப்பு போர் ஆயத்த நிலையை வலுப்படுத்துவதோடு, தீவிரவாத மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் சிறந்த அணுகுமுறையை பரிமாறிக் கொள்வதே இந்தக் கூட்டுப் பயிற்சியின் நோக்கமாகும்.

சர்வதேச பயங்கரவாத எதிர்ப்புச் சூழலில் இருநாட்டு ராணுவத்தினருக்கு இடையே இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, 7ஆவது மித்ரா சக்தி கூட்டுப் பயிற்சி 2019'இல் மகாராஷ்டிர மாநிலம் புனேயில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

---

**18. அலிபாக் வெள்ளை வெங்காயத்துக்கு புவிசார் குறியீடு**

மகாராஷ்டிர, ராய்கட் மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற அலிபாக் வெள்ளை வெங்காயத்துக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வெள்ளை வெங்காயத்தின் வர்த்தகம் அதிகரிக்கக்கூடும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறுகையில், 'மருத்துவ குணம்கொண்ட வெள்ளை வெங்காயம் இருதய நோய்களுக்கும் உடலில் கொழுப்புச் சத்தைக் கட்டுப்படுத்துவதிலும் இன்சுலின் சுரக்க வைப்பதிலும் பயன்படுவதாக 1883ஆம் ஆண்டு அரசு குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலிபாக் வெள்ளை வெங்காயத்துக்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக மாநில வேளாண் துறையும் கொங்கண் வேளாண் பல்கலைக்கழகமும் விண்ணப்பத்தை 2019, ஜனவரி 15ஆம் தேதி சமர்ப்பித்தன. வெள்ளை வெங்காயம் பயிரிடுவதால் ஏக்கருக்கு சுமார் ₹2 இலட்சம் வருவாய் கிடைக்கும்' என்றனர்.

---

**1.** **லாஸ்கர்–டிபேக்கி விருதுடன் தொடர்புடைய துறை எது?**

அ) இலக்கியம்

ஆ) விளையாட்டு

**இ) அறிவியல் ☑**

ஈ) சமூக சேவை

- ✓ மனித நலத்தை மேம்படுத்துதற்கு உதவிய உயிரியல் மற்றும் மருத்துவ கண்டுபிடிப்புகள் அறிவியலாளர்களை கௌரவிப்பதற்காக மேரி மற்றும் ஆல்பர்ட் லாஸ்கர் ஆகியோர் 1945ஆம் ஆண்டில் லாஸ்கர் விருதுகளை நிறுவினர். இந்த ஆண்டு, கேடலின் கரிகோ மற்றும் மருத்துவர் ட்ரூ வெய்ஸ்மேன் ஆகிய இரு அறிவியலாளர்களுக்கு, COVID-19 mRNA தடுப்பூசிகளில் பயன்படுத்தப்படும் முக்கிய தொழில்நுட்பத்தை உருவாக்–கியதற்காக $250,000 மதிப்பிலான லாஸ்கர்–டிபேக்கி மருத்துவ ஆராய்ச்சி விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ பைசர்–பயோஎன்டெக் மற்றும் மாடர்னா COVID-19 தடுப்பூசிகளில் அடிப்படைகளாக மெசஞ்சர் RNA (mRNA) பயன்படுத்தப்படுகிறது.

---

**2.** **அண்மையில் 4 ஆண்டுகளை நிறைவு செய்த சௌபாக்கியா திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) எரிசக்தி அமைச்சகம் ☑**

இ) விவசாயம் & விவசாயிகள் நல அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

- ✓ பிரதம அமைச்சர் சகஜ் பிஜிலி ஹர் கர் யோஜனா – சௌபாக்யா என்பது உலகின் மிகப்பெரிய வீட்டு மின்மயமாக்கல் திட்டங்களுள் ஒன்றாகும். இது பிரதமர் மோடியால் 2017 செப்டம்பர்.25 அன்று அறிவிக்கப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்குதல் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து மின் இணைப்பு இல்லாத வீடுகளுக்கும் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை வீடுகளுக்கும் மின்–இணைப்பு வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- ✓ சௌபாக்யா தொடங்கப்பட்டதிலிருந்து, 2021 மார்ச் வரை 2.82 கோடி வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

**3.** **அல்டிமேட் லடாக் சைக்கிள் ஓட்டுதல் சவாலின் இரண்டாவது பதிப்பை ஏற்பாடு செய்துள்ள அமைப்பு எது?**



அ) இந்திய இராணுவம்

ஆ) இந்திய கடற்படை

**இ) லடாக் காவல்துறை ☑**

ஈ) இந்தியன் ஆயில்

- ✓ விடுதலையின் அம்ருத் மகோத்சவம் மற்றும் பிட் இந்தியா இயக்கத்தின் ஒருபகுதியாக, அல்டிமேட் லடாக் மிதிவண்டி சவாலின் 2ஆவது பதிப்பை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு, இளையோர் நலத்துறை மற்றும் விளையாட்டு அமைச்சர் அனுராக்சிங் தாக்கூர் கொடியசைத்துத் துவக்கி வைத்தார். சைக்கிளிங் பெடரேஷன் ஆப் இந்தியாவுடன் இணைந்து லடாக் காவல்துறை இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

---

**4.** **தமிழ்நாட்டில் உள்ள பின்வரும் எந்த ரயில் நிலையம், முழுவதும் சூரிய ஆற்றலால் இயங்கும் ரயில் நிலையமாக மாறியுள்ளது?**




**அ) சென்னை சென்ட்ரல் ☑**

ஆ) சேலம் சந்திப்பு

இ) விருத்தாசலம் சந்திப்பு

ஈ) திருநெல்வேலி சந்திப்பு

- ✓ இந்திய இரயில்வேயின் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம், டாக்டர் எம் ஜி இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம், முழு சூரிய சக்தியால் இயங்கும் தமிழ்நாட்டின் முதல் இரயில் நிலையமாக மாறியுள்ளது. இந்த நிலையம் அதன் அனைத்து ஆற்றல் தேவைகளையும், அதன் கூரையில் நிறுவப்பட்ட சோலார் பேனல்கள்மூலம் பூர்த்திசெய்கிறது. இந்நிலையம், 1.5 MW உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது.

---

**5.** **'தேசிய கூட்டுறவு மாநாடு' ஏற்பாடு செய்யப்பட்ட நகரம் எது?**



அ) மும்பை

**ஆ) புது தில்லி ☑**

இ) வாரணாசி

ஈ) காந்தி நகர்

- ✓ மத்திய உள்துறை அமைச்சரும் கூட்டுறவு அமைச்சருமான அமித் ஷா, புது தில்லியில் நடைபெற்ற, 'தேசிய கூட்டுறவு மாநாட்டில்' (சேகரிதா சம்மேளன்) தலைமை விருந்தினராக கலந்துகொண்டார்.
- ✓ மத்திய அரசு, விரைவில் ஒரு புதிய கூட்டுறவு கொள்கையை அறிமுகப்ப–டுத்தி, கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவதற்காக மாநிலங்களுடன் இணைந்து செயல்படும் என்றும் அவர் அறிவித்தார். கூட்டுறவு பொது சேவை மையங்கள், தேசிய தரவுத்தளம் மற்றும் தேசிய கூட்டுறவு பல்கலைக்கழகம் ஆகியவற்றை அமைப்பதில் தற்போது அரசாங்கம் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

---

**6.** **QUAD தலைவர்களின் முதல் உச்சிமாநாட்டை நடத்திய நகரம் எது?**



**அ) வாஷிங்டன் ☑**

ஆ) தாவோஸ்

இ) மெல்போர்ன்

ஈ) புது தில்லி

- ✓ QUAD தலைவர்களின் முதல் நேரடிச்சந்திப்பானது சமீபத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பிடனால் வாஷிங்டன் டிசியில் நடத்தப்பெற்றது. இந்தச் சந்திப்புக்காக இந்தியப் பிரதமர் மோடி மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்காட் மோரிசன் மற்றும் ஜப்பானைச் சேர்ந்த யோஷிஹிட் சுகா ஆகியோர் அந்நகரத்திற்கு சென்றனர். 2017ஆம் ஆண்டில், இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள், QUAD கூட்டணியை அமைத்தன.

---

**7.** **2021–உலக மருந்தாளுநர் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




அ) Leaving No one behind

**ஆ) Pharmacy: Always Trusted for Your Health ☑**

இ) Pharmacists are our Saviours

ஈ) Sustainable Pharmacy

- ✓ உலக மருந்தாளுநர் நாளானது மருந்தாளுநர்களின் பங்கை அங்கீகரிக்–கும் நோக்கில் செப்டம்பர்.25ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- ✓ இந்நாளை, சர்வதேச மருந்தியல் கூட்டமைப்பு (FIP) நிறுவியது. 1912'இல் FIP நிறுவப்பட்டதும் இதே நாளில்தான். FIP என்பது மருந்தாளுநர்கள் மற்றும் மருந்து அறிவியலாளர்களின் தேசிய சங்கங்களின் கூட்டமைப்பு ஆகும். "Pharmacy: Always Trusted for Your Health" என்பது 2021 உலக மருந்தாளுநர் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**8.** **வங்கபந்து–பாபு டிஜிட்டல் கண்காட்சி தொடங்கப்பட்ட நாடு எது?**



அ) இந்தியா

**ஆ) வங்காளதேசம் ☑**

இ) இலங்கை

ஈ) நேபாளம்

- ✓ வங்கபந்து–பாபு டிஜிட்டல் கண்காட்சியானது சமீபத்தில் வங்கதேசத்தின் டாகாவில் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டது. வங்கதேசத்தின் தேசத்தின் தந்தையான வங்கபந்து ஷேக் முஜிபுர் இரஹ்மான் மற்றும் மகாத்மா காந்தியின் வாழ்க்கையை இந்தக் கண்காட்சி காட்டுகிறது.
- ✓ இக்கண்காட்சி, வங்கபந்து நூற்றாண்டு மற்றும் 'மகாத்மா' காந்தியின் 150 ஆண்டுகள் பிறந்தநாள் நிறைவு மற்றும் இந்தியா–வங்கதேச இருதரப்பு உறவுகளின் பொன்விழா ஆகியவற்றிய நினைவுகூரும் விதமாக இரு அரசுகளால் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது.

---

**9.** **சமீபத்தில் அறிவிக்கப்பட்ட 'AUKUS' என்ற பாதுகாப்பு கூட்டணி உள்ளடக்கிய நாடுகளின் எண்ணிக்கை என்ன?**

**அ) மூன்று ☑**



ஆ) நான்கு

இ) ஐந்து

ஈ) பத்து

- ✓ 2021 செப் மாதத்தில், அமெரிக்க அதிபர் ஜோ பிடன், ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர் இணைந்து முத்தரப்பு பாதுகாப்பு கூட்டணியான 'AUKUS'ஐ அறிவித்தனர். இந்தியா அல்லது ஜப்பானை இம்முத்தரப்பு கூட்டணியில் சேர்ப்பதை அமெரிக்கா விரும்பவில்லை. இந்த கூட்டணி இந்தோ–பசிபிக் பகுதியில் சீனாவை எதிர்கொள்ளும் ஒரு முயற்சியாக பார்க்கப்படுகிறது.
- ✓ இது, அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் முதல்முறையாக அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் தொழில்நுட்பத்தை ஆஸ்திரேலிய நாட்டுக்கு வழங்க அனுமதிக்கும்.

---

**10.** **பன்னாட்டு துளிர்மையங்களின் தரவரிசையில், வளர்ந்துவரும் சூழலமைப்பில் முதலிடத்திலுள்ள இந்திய நகரம் எது?**

**அ) மும்பை ☑**



ஆ) பெங்களூரு

இ) சென்னை

ஈ) திருவனந்தபுரம்

- ✓ பன்னாட்டு துளிர்மையங்களின் தரவரிசையில், வளர்ந்துவரும் சூழல் அமைப்பில் மும்பை தனது முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டது. இத்தரவரிசை, ஸ்டார்ட்அப் ஜெனோமின் வருடாந்திர உலகளாவிய துளிர் நிறுவன சூழலறிக்கை – 2021'க்காக தொகுக்கப்பட்டுள்ளது. லண்டன், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக நியூயார்க்குடன் இணைந்து 2ஆம் இடத்தைப் பகிர்ந்துகொண்டது.
- ✓ உலக அளவில் பெங்களூரு 23ஆவது இடத்திலும், தில்லி 36ஆவது இடத்திலும் உள்ளது. சிலிக்கான் பள்ளத்தாக்குக்கு வெளியே ஒரு தொழில்நுட்ப துளிர்மையத்தை அமைப்பதற்கு இலண்டனைச் சிறந்த இடமாக இந்த அறிக்கை கூறியுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. புவி கண்காணிப்புக்காக இந்த ஆண்டு இறுதிக்குள் 3 செயற்கைக் கோள்களை ஏவ இஸ்ரோ திட்டம்**

புவி கண்காணிப்புக்காக இந்த ஆண்டு இறுதிக்குள் 3 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) புவி கண்காணிப்பு தொடர்பாக பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, நடப்பு ஆண்டின் இறுதி காலாண்டில் இஓஎஸ்–4 (ரிசாட்–1ஏ) மற்றும் இஓஎஸ்–6 (ஓசோன் சாட்–3) ஆகிய 2 செயற்கைக் கோள்களை PSLV ரக ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, முதல் சிறிய வகை ராக்கெட் (எஸ்எஸ்எல்வி) மூலமாக இஓஎஸ்–2 என்ற மைக்ரோசாட் செயற்கைக் கோளும் செலுத்தப்பட உள்ளது. எஸ்எஸ்எல்வி ராக்கெட்டில் ஏவப்படும் செயற்கைக் கோளின் செயல்பாடு தகுதிகுறித்து பல்வேறு கட்ட சோதனைகள் நிறைவு பெற்றுள்ளன. இந்த 3 செயற்கைக் கோள்களும் விவசாயம், உள்நாட்டு விவகாரங்கள், புவி அறிவியல், சுற்றுச்சூழல், வனம் உள்ளிட்ட துறைகள் சார்ந்த கண்காணிப்புக்கு பயன்படுத்தப்பட உள்ளன. இவை இந்தியாவின் நிலப்பரப்பு மற்றும் அதன் எல்லைப் பகுதிகளை துல்லியமாக கண்காணிக்கும். தெற்காசிய கடல் பகுதிகளில் கப்பல்கள், போர் விமானங்கள் ஊடுருவல் உள்ளதா என எதிரிகளின் நடமாட்டத்தை கணித்துக் கூறும். பேரிடர் மேலாண்மை, விவசாயம், காடுகள் பாதுகாப்புக்கு பயன்படும்.

---

**2. எண்ணிம சுகாதார அட்டை: புரிந்துகொள்வது எப்படி?**

சமீபத்தில், 'ஆயுஷ்மான் பாரத் எண்ணிம இயக்க'த்தைப் பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இதன்படி, இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் 'எண்ணிம சுகாதார அட்டை' இலவசமாக வழங்கப்பட இருக்கிறது. நாட்டில் சுகாதார வசதிகளை வலுப்படுத்தும் இயக்கத்தின் நீட்சி இது. ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் சுகாதாரப் பதிவை எண்ணிம முறையில் பாதுகாக்கும் இப்புதுக்கருவியை எப்படிப் புரிந்துகொள்வது?

'எண்ணிம சுகாதார அட்டை'யானது ஆதார் அட்டை போலவே தனித் தன்மை உடையது. பயனாளி இந்த அட்டையில் 14 இலக்க எண்ணைப் பெறுவார். இந்த எண், சுகாதாரத் துறையினருக்கு அவரை அடையாளம் காட்டும். இதில் அவருடைய உடல்நலம் தொடர்பான, உண்மையான தகவல்கள் பதிவுசெய்யப்படும்.

எந்த நோய்க்கு, எப்போது, எந்த மருத்துவமனையில், என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது, என்னென்ன பரிசோதனைகள் செய்யப்பட்டன, என்னென்ன மருந்துகள் வழங்கப்பட்டன, பிற உடல்நலப் பிரச்சினைகள் உண்டா என்பது போன்ற தகவல்கள் இதில் இருக்கும். இதன் மூலம், அவருடைய மருத்துவ வரலாற்றை முழுமையாக அறிய முடியும்.

இந்த அட்டையைக் கைபேசி எண் அல்லது ஆதார் எண் மூலம் உருவாக்கலாம். ndhm.gov.in எனும் இணையதளத்துக்குச் சென்று இதைப் பெற முடியும். இந்த அட்டையைச் சுயமாக உருவாக்க இயலாதவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை, ஆரம்ப சுகாதார மையம், சுகாதாரம் மற்றும் குடும்பநல மையம் அல்லது பதிவுபெற்ற சுகாதார அதிகாரி மூலமும் உருவாக்கிக்கொள்ளலாம்.

**தகவல்களை உள்ளிடும் முறை**

எண்ணிம சுகாதார அட்டையில், பயனாளியின் மருத்துவத் தகவல்களை உள்ளிடுவதற்கு, முதலில் இந்தியாவில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், மருத்துவகங்கள், மருத்துவர்கள் ஆகியோர் பதிவுசெய்யப்படுவார்கள். இதைத் தொடர்ந்து, பயனாளி 'NDHM ஹெல்த் ரெக்கார்ட்ஸ் செயலியை'ப்பதிவிறக்கம் செய்ய வேண்டும். பயனாளியின் 14 இலக்க எண் மற்றும் கடவுச்சொல் மூலம் இதனுள் நுழையலாம்.

இந்தச் செயலியில் பயனாளி சிகிச்சை பெற்ற மருத்துவமனையை இணைத்தால், அங்குள்ள பயனாளியின் உடல்நலம் தொடர்பான தகவல்கள், அவரது கைபேசி செயலிக்கு வந்துவிடும். மருத்துவமனைக்–கான 'QR' குறியீட்டை ஸ்கேன் செய்தும் அந்தந்த மருத்துவமனையை இணைக்க முடியும்.

அடுத்தடுத்துப் பெறும் சிகிச்சை, நோயறிதல், சோதனை விவரங்கள், பிற தகவல்கள் ஆகியவற்றையும் இந்தச் செயலியில் உள்ளிடலாம். நாடெங்கிலும் உள்ள மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் எந்தவொரு மருத்துவமனையும் பயனாளியின் சுகாதார அட்டை மூலம், அவரது உடல்நலத் தகவல்களைப் பார்க்க முடியும். இதற்குப் பயனாளியின் ஒப்புதல் பெறுவது அவசியம். பயனாளி எப்போது வேண்டுமானாலும் சுகாதாரப் பதிவை நிறுத்தவோ நீக்கவோ முடியும். அவரது தகவல்கள் பகிரப்பட்ட விவரத்தையும் அறிய முடியும்.

**என்னென்ன நன்மைகள்?**

எண்ணிம சுகாதார அட்டையில் மிகப் பெரிய நன்மை என்னவென்றால், இதுவரை தனியொரு மருத்துவமனையில் அல்லது மருத்துவமனைக் குழுவில் மட்டுமே பதிவுசெய்யப்பட்ட பயனாளியின் சுகாதாரத் தகவல்களை இனிமேல் நாட்டின் எல்லா மருத்துவக் கட்டமைப்புகளிலும் ஒரே நேரத்தில் பகிர்ந்துகொள்ள முடியும். பயனாளி முதல்முறையாக அதைப் பயன்படுத்திய பிறகு, மறுமுறை அதே மருத்துவரிடம் வந்தாலும், வேறு மருத்துவரிடம் சென்றாலும், முந்தைய சிகிச்சைகள், மருந்துச் சீட்டுகள் மற்றும் சோதனை விவரங்களை அவருடன் எடுத்துச் செல்லத் தேவையில்லை. இந்தியாவில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்குச் சிகிச்சைக்குச் சென்றாலும், பயனாளியின் கடந்த கால சுகாதாரத் தகவல்களை இந்தத் தனித்துவமான அட்டை மூலம் தெரிந்துகொண்டு சிகிச்சை அளிப்பது எளிதாகும். மேலும், மருத்துவ ஆவணம் தொலைந்துவிட்டால் கவலையில்லை.

பழைய சோதனை அறிக்கைகள் இல்லையென்றால், எல்லாச் சோதனைகளையும் மறுபடியும் மேற்கொள்ள வேண்டியதில்லை. பிற நோயாளிகளின் ஒப்புதலுடன் பயனாளிக்குத் தெரிந்த ஒருவரின் உடல்நலப் பதிவுகளையும் அவருடைய அட்டையில் நிர்வகிக்கலாம். இது நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தும். காகிதத் தேவையைக் குறைக்கும். கோப்புகள் வைக்கும் இடம் சுருங்கிவிடும். போலி மருத்துவர்களை இனம்கண்டுவிடும். எதிர்காலத்தில் பொதுச் சுகாதார முன்னேற்றத்துக்குத் தேவையான முன்திட்ட வரைவைத் தயாரித்து, நிதி ஒதுக்கீடு செய்வதும் அத்திட்டத்தைச் செயல்படுத்துவதும் மேம்படும்.

**பிரச்சினைகள் இல்லையா?**

இந்த அட்டையின் தகவல் பாதுகாப்பு தொடர்பில் பயனாளிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சம்தான் முதல் பிரச்சினை. கடந்த காலத்தில் ஆதார்

அட்டைத் தகவல்கள் திருடப்பட்ட நிகழ்வுகளை முன்வைத்து, நாட்டில் சைபர் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது என்றே வல்லுநர்கள் கவலைப்படுகின்றனர். மேலும், 'சர்வதேச ஆராய்ச்சியாளர்கள், காப்பீட்டு நிறுவனங்கள், மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் போன்றவற்றுக்குத் திருடப்பட்ட சுகாதாரத் தகவல்கள் உதவலாம்.

தகவல்களைப் பதிவிடும்போது, மனிதத்தவறுகள் ஏற்படலாம்; தகவல்கள் விட்டுப்போகலாம்; வேண்டுமென்றே மாற்றப்படலாம். இவற்றைக் கண்காணிப்பது யார் என்ற கேள்விக்கு இதில் விடையில்லை. நோய் குறித்த இந்தப் பின்னணிகள், அந்த நபரின் நோயையும் சிகிச்சையையும் மாற்றிவிடலாம். இது அவரது உடல்நலனுக்கு ஆபத்தை வரவழைக்கலா–ம்' என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சமீபத்தில், 'இந்தியாவில் தகவல் பாதுகாப்புக்கெனத் தனிச்சட்டம் இல்லை. 'தகவல் பாதுகாப்பு மசோதா – 2019' மட்டுமே உள்ளது. தனிச் சட்டம் இயற்றினால் மட்டுமே தகவல் தொடர்பில் தவறிழைப்பவர்களுக்கு அபராதம் அல்லது தண்டனை வழங்க முடியும்' என்கிறார் பிரபல இணையப் பாதுகாப்பு நிபுணர் பவன் துக்கல்.

அடுத்து, நாட்டில் கிராமப்புறம், கடலோரம் மற்றும் மலைவாழிடங்களில் திறன்பேசி மற்றும் இணைய வசதிகள் குறைவாகவே இருக்கும். அங்குள்ளவர்களுக்கு இந்த அட்டையின் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் குறைவு. மொழி ஒரு தடையாக இருக்கும். இவை இத்திட்டத்துக்குப் பெரிய சவாலாக இருக்கும். எனவே, எண்ணிம சுகாதார அட்டையை அனைவரும் பயன்படுத்த வேண்டுமென்றால், கிராமம் தொடங்கி எல்லா அரசு மருத்துவமனைகளிலும் இணையம் சார்ந்த மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும்.

தகவல்களை உள்ளிடுபவர்கள் மற்றும் அவற்றைச் சரிபார்த்துக் கையாளும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். முன்திட்டமிடுதல் மூலம் சுகாதாரத் துறைக்குத் தேவையான நிதி ஒதுக்கி, மாநிலங்களுக்குப் பகிர்வது முக்கியம். இந்த அட்டை, இந்திய சுகாதாரத் துறையை மேம்படுத்தும் புரட்சிகர இயக்க சக்தியாக இருக்கும் என்ற பிரதமரின் அறைகூவல் உண்மையாக வேண்டுமானால், இவை அனைத்தும் அவசியமான அடிப்படைகள்.

---

**3. உலக நாடுகளின் மருந்தகம் இந்தியா: உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி புகழாரம்**

உலக நாடுகளின் மருந்தகமாக இந்தியா உருவெடுத்து வருகிறது என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சவுமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

நான்கு மிகப்பெரிய சாதனைகளை இந்தியா படைத்திருக்கிறது. போலியோவை அறவே ஒழித்துள்ளது. பேறுகால உயிரிழப்பை கணிசமாக குறைத்துள்ளது. இதேபோல குழந்தைகள் உயிரிழப்பையும் குறைத்திருக்கிறது. நான்காவதாக உலக நாடுகளின் மருந்தகமாக இந்தியா உருவெடுத்து வருகிறது. நாடு சுதந்திரம் அடைந்த 75 ஆண்டுகளில் இந்தியா செய்த மாபெரும் சாதனைகளில் இதுவும் ஒன்றாகும்.

கரோனா பெருந்தொற்றால் உலக நாடுகளில் அத்தியாவசிய சுகாதார சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த பெருந்தொற்றால் சர்வதேச அளவில் காசநோய், தொற்று அல்லாதநோய்கள், குழந்தைகள் பராமரிப்பில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

எனவே வரும் மாதங்களில் எந்தெந்த சுகாதார துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். அப்போதுதான் கரோனா பெருந்தொற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். அதோடு அடிப்படை சுகாதார சேவைகளையும் தங்கு தடையின்றி மேற்கொள்ள முடியும்.

யுனிசெப் அறிக்கையின்படி இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு மிகப்பெரிய பிரச்சினையாக நீடிக்கிறது. ஊட்டச்சத்து குறைபாட்டால் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. பெருந்தொற்றால் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலையால் ஏராளமான குடும்பங்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே தள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினை மேலும் அதிகமாகி உள்ளது. குழந்தைகள் உயிரிழப்பு மட்டுமன்றி காசநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்பட ஊட்டச்சத்து குறைபாடு மிக முக்கிய காரணியாக உள்ளது. இந்த நேரத்தில் ஊட்டச்சத்து பிரச்சினையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு சவுமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

**4. இதயநோய் மருத்துவர் பினாய் ஜானுக்கு சாதனையாளர் விருது**

மருத்துவத்துறையில் சாதனை நிகழ்த்திய மருத்துவர்களுக்கான சாதனையாளர் விருது சென்னை நவீன இதய மருத்துவச் சிகிச்சை (இன்டர்வென்ஷனல் கார்டியாலஜி) மருத்துவர் பினாய் ஜானுக்கு வழங்கப்பட்டுள்ளது. தில்லியில் அண்மையில் நடைபெற்ற விழாவில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 20'க்கும் மேற்பட்ட மருத்துவத் துறையில் சாதனை புரிந்த மருத்துவர்களுக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இதய பொது மருத்துவச் சிகிச்சை பிரிவுக்கும், இதய அறுவை சிகிச்சை பிரிவுக்கும் இடையிலான நவீன இதய மருத்துவச் சிகிச்சையில் நீண்டகால அனுபவமிக்க மருத்துவர் பினாய் ஜான், மத்திய இணை அமைச்சர் பாஹன் சிங் குலாஸ்தி, முன்னாள் மக்களவை உறுப்பினர் ஜெயப்பிரதா ஆகியோரிடமிருந்து சாதனையாளர் விருதைப் பெற்றுக்கொண்டார்.

---

**5. காஞ்சிபுரம் நெசவாளர்கள் 5 பேருக்கு தேசிய விருதுகள்**

சிறந்த முறையில் பட்டுச்சேலையை வடிவமைத்தமைக்காக காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் 5 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ள–னர். இவர்களுக்கு தேசிய விருதுகளை மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. காஞ்சிபுரம் நகரீஸ்வரர் கோயில் தெருவில் மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் நெசவாளர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையம் ஆண்டுதோறும் பட்டுச்சேலைகளில் சிறந்த வடிவமைப்பாளர்களை தேர்வுசெய்து, மத்திய அரசின் விருதுக்கு பரிந்துரை செய்கிறது.

2018–ஆம் ஆண்டுக்கான நெசவாளர்களுக்கே உரிய மத்திய அரசின் உயரிய விருதான சந்த் கபீர் விருதும், 2019–ஆம் ஆண்டுக்கான தேசிய விருது 4 நெசவாளர்களுக்கும் கிடைத்துள்ளது. இதன்மூலம் சிறந்த நெசவாளருக்கான தேசிய விருதுகளை காஞ்சிபுரத்தைச் சேர்ந்த 5 பேர் பெற்று தமிழகத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

---

**6. உலக மகளிர் அணி செஸ் சாம்பியன்சிப்: முதல்முறையாக இந்தியாவுக்கு பதக்கம்**

ஸ்பெயினில் நடைபெற்ற பிடே உலக மகளிர் அணிகள் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றில் இந்தியா 0–2 என்ற கணக்கில் ரஷியாவிடம் தோற்று வெள்ளி பெற்றது. இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் பதக்கம் இதுவாகும்.

இறுதிச்சுற்றில் நடைபெற்ற ஆட்டங்களில் டி ஹரிகா – கோரியாச்கினா, ஆர் வைசாலி – அலெக்ஸாண்ட்ரா கோஸ்டெனியுக் ஆகியோர் மோதிய ஆட்டங்கள் டிரா ஆகின. தானியா சச்தேவ் – காடெரினா லாக்னோ, மேரி ஆன் கோம்ஸ் – போலினா ஷுவாலோவா ஆகியோர் மோதிய ஆட்டங்களில் இந்தியர்கள் தோல்விகண்டனர். அதேபோல், மற்றொரு ஆட்டத்தில் ஹரிகா – கோரியாச்கினாவை வீழ்த்த, மேரி ஆன் கோம்ஸ் – அலினா காஷ்லின்ஸ்கயா ஆகியோர் மோதிய ஆட்டம் டிரா ஆனது. பக்தி குல்கர்னி – லாக்னோவிடம் தோல்விகண்டார்.

---

**1. சமீபத்தில் தில்லி அரசு அறிமுகப்படுத்திய சுற்றுலா செயலியின் பெயர் என்ன?**



அ) எனது தில்லி

**ஆ) தேகோ மேரி தில்லி ☑**

இ) தில்லி சுற்றுப்பயணம்

ஈ) ஹமாரா தில்லி

✓ தில்லி அரசானது அண்மையில் 'தேகோ மேரி தில்லி' என்ற செயலியை அறிமுகப்படுத்தியது. இது தில்லி அரசின் சுற்றுலாத் துறையால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டதாகும். இந்தச் செயலி, தில்லியில் உள்ள அனைத்து சுற்றுலா தொடர்பான தகவல்களையும் வழங்கும். தில்லியில் உள்ள அனைத்து முக்கிய சுற்றுலாத்தலங்களுக்கான நுழைவுச் சீட்டுகளையும் இதில் பெற முடியும்.

---

**2. காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வறிக்கையானது நாட்டின் எத்தனை துறைகளின் வேலைவாய்ப்பு மற்றும் அது தொடர்புடைய மாறிகளை வழங்குகிறது?**




அ) 3

**ஆ) 9 ☑**

இ) 15

ஈ) 23

✓ தொழிலாளர் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட காலாண்டு அடிப்படையிலான அகில இந்திய வேலைவாய்ப்பு ஆய்வின் ஒருபகுதியாக, காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வின் (2021 ஏப்ரல் முதல் ஜூன் வரை) முதல் காலாண்டுக்கான அறிக்கையை மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சர் புபேந்தர் யாதவ் வெளியிட்டார்.

✓ முடிவுகளை அறிவித்த அமைச்சர் புபேந்தர் யாதவ், தேர்வு செய்யப்பட்ட 9 துறைகளில் முதற்கட்ட ஆய்வின்படி மதிப்பிடப்பட்டுள்ள மொத்த வேலை வாய்ப்பு 3 கோடியே 8 இலட்சம் என்றும், இது 6ஆவது பொருளாதார கணக்கெடுப்பு (2013-14) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2 கோடியே 37 இலட்சத்தை விட 29% அதிகம் என்றும் கூறினார்.

---

**3. தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் அசல் கால அளவு என்ன?**




அ) 2014- 2019

**ஆ) 2015-2020 ☑**

இ) 2016-2021

ஈ) 2017-2022

✓ 2015-20 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் காலத்தை மார்ச் 2022 வரை நீட்டிக்க இந்திய அரசு முன்மொழிந்துள்ளது. இந்தக் கொள்கை முதலில் மார்ச் 31, 2020 அன்று முடிவடைவதாக இருந்தது. இந்தக் கொள்கை, முதலில் 2021 மார்ச் வரையிலும் 2021 செப் வரையிலும் நீட்டிக்கப்பட்டது. மூன்றாவது முறையாக, தற்போது மீண்டும் நீட்டிக்க முன்மொழியப்பட்டது. இதை வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்தார்.

---

**4. சமீப செய்திகளில் இடம்பெற்ற "ஆகாஷ் பிரைம்" என்றால் என்ன?**



அ) AIR'இன் புதிய ஒலிபரப்பு நிலையம்

ஆ) BSNL வழங்கும் புதிய அகலக்கற்றை சேவை

**இ) ஆகாஷ் ஏவுகணையின் புதிய பதிப்பு ☑**

ஈ) இஸ்ரோவின் வழிசெலுத்தல் செயற்கைக்கோள்

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) சமீபத்தில் ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் 'ஆகாஷ் பிரைம்' ஏவுகணையை பரிசோதித்தது.

✓ ஆகாஷ் ஏவுகணையின் இந்த மேம்படுத்தப்பட்ட பதிப்பு டிஆர்டிஓவால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

---

**5. 'தேசிய பயோடிக் ஸ்ட்ரெஸ் டோலரன்ஸ் நிறுவனம்' அமைந்து உள்ள இடம் எது?**



அ) மும்பை

ஆ) புனே

இ) அகமதாபாத்

**ஈ) ராய்பூர் ☑**

✓ நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் பயோடிக் ஸ்ட்ரெஸ் டொலரன்ஸ் என்பது ஐசிஏஆரின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி பல்கலைக்கழகமாக ராய்ப்பூரில் அமைந்துள்ளது. இந்த நிறுவனம் கடந்த 2012'இல் உருவாக்கப்பட்டது.

✓ ராய்ப்பூரில் உள்ள இந்நிறுவனத்தின் புதிய வளாகத்தை பிரதமர் மோடி நாட்டிற்கு அர்ப்பணித்தை அடுத்து இந்த நிறுவனம் சமீப செய்திகளில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போது, பிரதம மந்திரி, 35 காலநிலை நெகிழ்திறனுடன் கூடிய பயிர் வகைகளையும் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

---

**6. மருத்துவமனை அடிப்படையிலான புற்றுநோய் பதிவேடுகளின் அறிக்கை, 2021'ஐ வெளியிட்ட நிறுவனம் எது?**



அ) ஐஎம்ஏ

**ஆ) ஐசிஎம்ஆர் ☑**

இ) NITI ஆயோக்

ஈ) எய்ம்ஸ்

✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலானது (ஐசிஎம்ஆர்) "இந்தியாவில் புற்றுநோய்களின் கிளினிகோபோதாலஜிக்கல் புரொபைல்: மருத்துவ மனை அடிப்படையிலான புற்றுநோய் பதிவேடுகளின் அறிக்கை-2021" வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, அனைத்து புற்றுநோய் பாதிப்புகளின் விகிதமும் பெண்களைவிட (47.4%) ஆண்களில் (52.4%) அதிகமாக உள்ளது.

✓ பெண்களைப் பாதிக்கும் புற்றுநோய்களுள் மார்பக புற்றுநோய் முதல் இடத்தில் உள்ளது. குழந்தைப்பருவ (0-14 வயது) புற்றுநோய்கள் 7.9% அளவுக்கு உள்ளது. தலை மற்றும் கழுத்துப்பகுதி புற்றுநோய்கள் ஆண்களுக்கு ஏற்படும் புற்றுநோய் பாதிப்புகளுள் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காக (31.2%) உள்ளது.

---

**7. '2021 உலகளாவிய துளிர்நிறுவன சூழலறிக்கையின்'படி, மலிவு திறமையுள்ள 5ஆவது ஆசிய சூழலமைப்பாக உருவான இந்திய மாநிலம் எது?**




அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா

✓ 2021 உலகளாவிய துளிர் நிறுவன சூழலறிக்கையில் மலிவு திறமை உள்ள ஐந்தாவது ஆசிய சூழலமைப்பாக கேரளா உருவெடுத்துள்ளது. இந்த அறிக்கை, ஸ்டார்ட் அப் ஜெனோம் மற்றும் உலகளாவிய தொழில் முனைவோர் நெட்வொர்க்கால் தயாரிக்கப்பட்டது. இந்த 2021 அறிக்கை, செயல்திறன், நிதி, இணைப்பு, சந்தை வரம்பு, வள ஈர்ப்பு, அனுபவம் & திறமை ஆகிய 7 அளவுருக்களின் அடிப்படையில், உலகெங்கிலும் உள்ள 140 சூழலமைப்புகளை தரவரிசைப்படுத்துகிறது.

---

**8. வட இந்திய மாநிலத்தின் முதல் மற்றும் மிகப்பெரிய பனைப் பூங்காவை (palmetum) திறந்து வைத்துள்ள மாநிலம் எது?**



அ) உத்தர பிரதேசம்

**ஆ) உத்தரகாண்ட் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) பீகார்

✓ உத்தரகாண்ட் வனத்துறையானது அம்மாநிலத்தின் முதல் பனைப் பூங்காவை நைனிடாலில் அமைந்துள்ள ஹல்த்வானி மக்களுக்கு அர்ப்பணித்தது. இது, வட இந்தியாவிலேயே மிகப்பெரிய பனைப்பூங்கா ஆகும். இங்கு 110'க்கும் மேற்பட்ட பனைமர வகைகள் உள்ளன. இது, CAMPA திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டதாகும்.

✓ உத்தரகண்டை பூர்வீகமாகக் கொண்ட டிராச்சிகார்பஸ் தகில் (தகில் பனை) என்ற பனை இனமும் இங்கு உள்ளது.

**9.'ஹுனர்பாஸ்' விருதுகளுடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

**அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**

ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

இ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகம்

- ✓ 'ஹுனர்பாஸ்' விருதுகள் நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் ஹைதராபாத்தில் உள்ள தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (NIRD&PR) அமைப்பால் நிறுவப்பட்டதாகும்.
- ✓ NIRD&PR ஆனது விடுதலையின் 75ஆம் ஆண்டுக் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக அந்தியோதயா நாள் அன்று 75 மாற்றுத்திறனாளிகளுக்–கு விருதுகளை வழங்கியது. இந்த நாள், 2021 செப்.25 அன்று பண்டிட் தீனதயாள் உபாத்யாயாவின் பிறந்தநாளாகும்.
- ✓ தீனதயாள் உபாத்யாயா கிராம கௌசல்யா யோஜனா மற்றும் கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் திட்டங்கள்மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

---

**10.எம்மாநிலத்தில், உலகின் அதிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னேற்ற நிலையம் உள்ளது?**

**அ) இமாச்சல பிரதேசம் ☑**




ஆ) பீகார்

இ) உத்தரகாண்ட்

ஈ) பஞ்சாப்

- ✓ இமாச்சல பிரதேச மாநிலத்தின் ஸ்பிட்டி மாவட்டத்தில் அமைந்துள்ள காசா, உலகின் அதிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னேற்ற நிலையத்தைக் கொண்டுள்ளது. இந்நிலையம் 'Go Ego' என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிலையம், சராசரி கடல் மட்டத்திலிருந்து 500 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சோதனை ஓட்டமாக, இரண்டு மின்சார ஸ்கூட்டர்கள் இந்த நிலையத்தில் மின்னேற்றம் செய்யப்பட்டன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. காஞ்சிபுரம் நெசவாளர்கள் 6 பேருக்கு தேசிய விருது: உயரிய விருதான 'சந்த் கபீர்' விருதை ஒருவர் பெறுகிறார்**

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் 6 பேருக்கு 4 தேசிய விருது கிடைத்துள்ளது. நெசவாளர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான 'சந்த் கபீர்' விருதையும் ஒரு நெசவாளர் பெறுகிறார். மத்திய அரசு, நெசவாளர்களுக்கு வழங்கும் மிக உயரிய விருது 'சந்த் கபீர்' விருதாகும். 2018–ம் ஆண்டுக்கான 'சந்த் கபீர்' விருது இந்திய அளவில் 10 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் காஞ்சிபுரம் மேட்டுப்பாளையம் தெருவைச் சேர்ந்த நெசவாளர் கிருஷ்ணமூர்த்தி பெயரும் இடம் பெற்றுள்ளது. நிறைய நெசவாளர்களுக்கு பயிற்சி அளித்தது, வழக்கமான சேலைகளுக்கு மாற்றாக 114 வடிவமைப்புகளை சேர்த்து சேலை நெய்தது ஆகிய காரணங்களுக்காக இவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் 2019–ம் ஆண்டுக்கான தேசிய விருது 20 பேருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. இதில் 6 பேர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்கள். காஞ்சிபுரம் தர்மலிங்கம் நகரைச் சேர்ந்த சரளா – கணபதி தம்பதி மற்றும் பிள்ளையார்பாளையத்தைச் சேர்ந்த காமாட்சி – ஹரி தம்பதி இணைந்தும், கணிகண்டீஸ்வர் கோயில் தெருவைச் சேர்ந்த ராம்குமாரி, ராயன்குட்டை பிள்ளை தெருவைச் சேர்ந்த ஹரி ஆகியோர் தனித்தனியாகவும் தேசிய விருதை பெறுகின்றனர். காஞ்சிபுரத்தைச் சேர்ந்த 6 நெசவாளர்கள் 4 தேசிய விருதுகளை பெறுகின்றனர். சிறந்த வடிவமைப்பு, சிறந்த தொழில் நுட்பங்களை கைத்தறியில் பயன்படுத்தியது, சிறந்த வண்ணங்கள் ஆகிய காரணங்களுக்காக இவர்களுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் தேசிய சிறப்புச் சான்றிதழை காஞ்சிபுரம் திருக்காலிமேடு பகுதியைச் சேர்ந்த கோவிந்தராஜ், சீனுவாசன் ஆகியோர் இணைந்து பெறு கின்றனர். தேசிய விருதுகளுக்கான தகுதிகளின் அடிப்படையிலேயே இவர் களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

---

**2. காவல் துறையின் அதிரடி நடவடிக்கைகள் சட்டம் ஒழுங்கைப் பலப்படுத்தட்டும்**

கொலைக் குற்றப் பின்னணி உள்ளவர்களை முற்றுகையிட்டு, அவர்களிடம் உள்ள ஆயுதங்களைக் கைப்பற்றிவரும் தமிழ்நாடு காவல் துறையின் தொடர் நடவடிக்கைகள், சட்டம் ஒழுங்கு தொடர்பில் மாநில அரசு தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பதன் வெளிப்பாடுகளாகத் தெரிகின்றன.

கடந்த செப்டம்பர் 23 அன்று இரவு தொடங்கி, அடுத்த சில நாட்களில் தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட 'ஆபரேஷன் டிஸ்ஆர்ம்' நடவடிக்கையில், பழைய கொலைக் குற்றவாளிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களில் 3,325 குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டுள்–ளதாகக் காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. காஞ்சிபுரத்தில் பட்டுப் பூங்கா ஓரிரு மாதங்களில் திறப்பு; தறி இயந்திரங்கள் செயல்பாட்டுக்கு வந்தன; பெண்களுக்கு 66 % வேலைவாய்ப்பு**

காஞ்சிபுரத்தை அடுத்த கீழ்கதிர்பூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பட்டுப் பூங்கா உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின்பு திறக்கப்பட உள்ளது. அங்கு நிறுவப்பட்டுள்ள கைத்தறி இயந்திரங்கள் தற்போது முதல்கட்டமாக செயல்பாட்டுக்கு வந்துள்ள நிலையில், இங்கு 66% பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பட்டுக்குப் புகழ்பெற்ற காஞ்சிபுரத்தில் ரூ.83.33 கோடியில் பட்டுப் பூங்கா அமைக்கப்படும் என்று கடந்த 2012–ம் ஆண்டு தமிழக அரசு அறிவித்தது. இதற்காக அரசு, ரூ.14 கோடி மதிப்புள்ள 75 ஏக்கர் நிலம், மானியத் தொகையாக ரூ.7.54 கோடியையும் ஒதுக்கியது. மற்ற தொகை தனியார் மூலம் முதலீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு இதற்கான பணிகள் விரைவாக நடைபெறவில்லை. காஞ்சிபுரத்தை அடுத்த கீழ்கதிர்பூர் கிராமத்தில் பட்டுப் பூங்கா அமைக்கும் பணிகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டன. கடந்தஆண்டு இதற்கான பணிகள் ஓரளவுக்கு நடைபெற்றன. திமுக ஆட்சி பொறுப்பேற்றதும் இந்தப் பட்டுப் பூங்காவை செயல்பாட்டுக்கு கொண்டு வர பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

முதல்கட்டமாக தறி நெய்வதற்கான கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தறி இயந்திரங்கள் பொருத்தப்பட்டு துணி நெய்யும் பணிகள் தொடங்கியுள்ளன. பல்வேறு தனியார் நிறுவனங்கள் தறி நெய்வதற்கான கைத்தறி இயந்திரங்களை பொருத்தி வருகின்றன. இந்தப் பட்டுப் பூங்காவில் கைத்தறிக்கு என தனிப் பிரிவும், சாயப்பட்டறைகள், விற்பனைப் பிரிவுகள் உட்பட பல அமைக்கப்பட உள்ளன. இங்கு 66 சதவீதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சாயமிடுதல் நடைபெறும்போது நீர் மறுசுழற்சி முறையில் பயன்படுத்தப்பட உள்ளன.

இங்கு மொத்தம் 2,160 கைத்தறி இயந்திரங்கள் அமைக்கப்பட உள்ளன. நெசவாளர்களுக்கு 700 குடியிருப்புகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 82 யூனிட்டுகளாக இவை இயங்க உள்ளன. பட்டு கைத்தறி நெசவுக்காக 22 யூனிட்டுகளும், காட்டன் கைத்தறி துணிகள் நெசவு செய்ய 30 யூனிட்டுகளும் ஒதுக்கப்பட உள்ளன. மற்ற 30 யூனிட்டுகளில் சாயமிடுதல் உள்ளிட்ட கைத்தறிச் சார்ந்த இதரப் பணிகள் நடைபெற உள்ளன.

---

**4. சேதி தெரியுமா?**

செப்.24: பள்ளிக் கல்விக்கான புதிய பாடத்திட்டத்தை வகுக்க கே.கஸ்தூரி ரங்கன் தலைமையில் 12 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு நியமித்துள்ளது.

செப்.25: உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநராக உள்ள எத்தியோப்பியாவைச் சேர்ந்த டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸை, அந்தப் பதவிக்கு இரண்டாவது முறையாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பரிந்துரைத்துள்ளன.

செப்.26: இந்தியாவின் முதல் விளையாட்டுத் துறை நடுவண் தீர்ப்பாயம் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

செப்.26: செக் குடியரசில் நடைபெற்ற ஆஸ்ட்ராவா ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா–சீனாவின் ஷுவாய் ஜங் இணை பட்டம் வென்றது.

செப்.27: அமெரிக்காவின் டகோடா மாகாணத்தில் உள்ள யாங்டன் நகரில் நடந்த 2021 உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வில்வித்தை அணி 3 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

செப்.27: ஆயுஷ்மான் பாரத் என்கிற தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டத்தைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். ஒவ்வொரு குடிமகனுக்கும் சுகாதார அடையாள அட்டையையும் பதிவேட்டையும் உள்ளடக்கியது இத்திட்டம்.

செப்.28: சென்னை எழும்பூரில் உள்ள பழைய காவல் ஆணையரகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு காவல் துறை அருங்காட்சியகம் பொதுமக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டது.

செப்.28: டி20 கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆயிரம் ரன்களைக் குவித்த முதல் இந்திய வீரர் என்கிற பெருமையை விராட் கோலி பெற்றார்.

செப்.29: காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் முழு நேரத் தலைவராக சவுமித்ரா குமார் ஹல்தார் என்பவரை மத்திய அரசு நியமித்துள்ளது.

அக்.1: போலீஸ், அதிகாரிகளின் கொடுமைகள் குறித்து சாமானியர்கள் அளிக்கும் புகார்களை விசாரிக்க உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள் தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அமைக்க உச்ச நீதிமன்றம் ஆதரவாக இருக்கும் என்று தலைமை நீதிபதி என்.வி.ரமணா தெரிவித்துள்ளார்.

---

### 5. மருத்துவம்: அமெரிக்க விஞ்ஞானிகள் இருவருக்கு நோபல்

மனிதா்கள் வெப்பநிலையையும் தொடுதலையும் உணா்ந்து கொள்வதற்கான உணா்விகளை (ரிசப்டா்ஸ்) கண்டறிந்ததற்காக அமெரிக்காவைச் சோ்ந்த இரு விஞ்ஞானிகளுக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடா்பான அறிவிப்பை திங்கள்கிழமை வெளியிட்ட நோபல் குழுவின் பொதுச் செயலா் தாமஸ் பெல்மன் கூறுகையில், "கண்களின் பாா்க்கும் செயல்பாடு, காதுகளின் கேட்கும் தன்மை, தோலின் உணரும் செயல்பாடு ஆகியவை தொடா்பான 'சொமேடோசென்சேஷன்' என்ற பிரிவில் டேவிட் ஜூலியஸும் ஆா்டம் படாபூடியனும் ஆய்வுகளை மேற்கொண்டனா். அந்த ஆய்வுகள் இயற்கையின் ரகசியத்தை அறிவதற்கு உதவின. மனிதா்கள் உயிா் வாழ்வதற்கு உணா்வுகள் மிகவும் அவசியமானவை. எனவே, அவா்களின் கண்டுபிடிப்பானது முக்கியமானதாகவும் உயா்ந்ததாகவும் உள்ளது.

மிளகாயில் காணப்படும் 'கேப்சைசின்' என்ற வேதிப்பொருளைப் பயன்படுத்தி வெப்பத்தை உணா்வதற்காகத் தோலில் உள்ள நரம்பு உணா்வியை டேவிட் ஜூலியஸ் கண்டறிந்தாா். தொடுதலை உணா்ந்து கொள்வதற்காக உடலில் உள்ள செல்லில் காணப்படும் உணா்வியை ஆா்டம் படாபூடியன் கண்டறிந்தாா்'' ' என்றாா். சமமான பரிசுத் தொகை: நோபல் பரிசாக தங்கப் பதக்கத்துடன் சுமாா் ரூ.8.40 கோடி பரிசுத்தொகையும் அளிக்கப்படும். அந்தப் பரிசுத்தொகையானது இரு விஞ்ஞானிகளுக்கும் சமமாகப் பகிா்ந்தளிக்கப்படவுள்ளது. கடந்த ஆண்டு இரு விஞ்ஞானிகளும் நரம்பியலுக்கான 'கவ்லி' விருதைப் பகிா்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

முக்கியத்துவம்: நோபல் குழுவின் உறுப்பினா்களில் ஒருவரான பேட்ரிக் என்ஃபோா்ஸ் கூறுகையில், "கோடைக்காலத்தின் காலை வேளையில் ஒரு தோட்டத்தில் காலணிகளின்றி நடந்து சென்றால், சூரியனின் இதமான வெயிலையும், காலை நேரத்தின் குளுமையையும், சில்லென்ற காற்றையும், காலுக்கடியில் படா்ந்திருக்கும் சிறுபுற்களின் மெல்லிய அமைப்புகளையும் உணர முடியும். அத்தகைய உணா்வுகளைப் பற்றிய ஆய்வே 'சொமேடோசென்சேஷன்' என்பது. அத்தகைய உணா்வுகள் தொடா்பான விவரங்கள், தோலில் இருந்து தொடா்ந்து உடலின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அந்த உணா்வுகள் சில பணிகளை சிரமமின்றியும் அதிகம் யோசிக்காமலும் செய்ய அத்தியாவசியமாக உள்ளன' ' என்றாா். இந்தக் கண்டுபிடிப்புகள் வாயிலாக ரத்த நாளங்களில் அழுத்தம் ஏற்படுவதற்கான சிகிச்சைகளை உருவாக்குவது, மருந்துகள் தயாரிப்பது உள்ளிட்டவை எளிதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நோபல்–மருத்துவம்

டேவிட் ஜூலியஸ் (65) அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள கலிஃபோா்னியா பல்கலைக்கழக விஞ்ஞானியான டேவிட் ஜூலியஸ், மிளகாயில் உள்ள வேதிப்பொருள் தோலில் ஏற்படுத்தும் எரிச்சலை உணரும் 'டிஆா்பிவி1' என்ற உணா்வியைக் கண்டறிந்தாா். வெப்பநிலையைப் பொருத்து அந்த உணா்வியில் உருவாக்கப்படும் அயனிகள், வெப்பத்தை உணா்த்துகின்றன என்பதை அவா் கண்டறிந்தாா்.

ஆா்டம் படாபூடியன் (54)

லெபனானில் பிறந்து அமெரிக்காவின் கலிஃபோா்னியா மாகாணம், லாஹோல்லா நகரத்தில் உள்ள கல்வி ஆய்வு நிலையத்தில் விஞ்ஞானியாக உள்ள ஆா்டம் படாபூடியன், தொடுதலை உணா்ந்து கொள்ளும் 'பியஸ்01', 'பியஸ்02' ஆகிய உணா்விகளைக் கண்டறிந்தாா். தொடுவதன் மூலமாக தோலில் ஏற்படும் அழுத்த மாறுபாட்டை செல்லில் உள்ள ஜீன்கள் எவ்வாறு உணா்ந்து மூளைக்குத் தகவலை அனுப்புகின்றன என்பதில் தீவிர ஆராய்ச்சிகளை அவா் மேற்கொண்டாா்.

---

### 6. புதிய நகர்ப்புற இந்தியா மாநாடு: பிரதமா் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்

உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் 'ஆசாதி75 – புதிய நகர்ப்புற இந்தியா' மாநாடு மற்றும் கண்காட்சியை பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார். அங்குள்ள 75 மாவட்டங்களில் உள்ள 75,000 பயனாளிகளுக்கு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா – நகர்ப்புற (PMAY –U) வீடுகள் திட்டத்தை பிரதமர் மோடி டிஜிட்டல் முறையில் திறந்து வைக்கிறார். அதன்பின், இந்த திட்டத்தின் பயனாளிகளுடன் உரையாடுகிறார். ஸ்மார்ட் சிட்டி மற்றும் அம்ருத் திட்டத்தின் கீழ், 75 நகா்ப்புற வளா்ச்சித் திட்டங்களுக்கு அவா் அடிக்கல் நாட்டவுள்ளாா். ஃபேம்–2 திட்டத்தின் கீழ் லக்னோ, கான்பூா், வாரணாசி, பிரயாக்ராஜ், கோரக்பூா், ஜான்சி, காஜியாபாத் ஆகிய நகரங்களுக்கு 75 பேருந்துகளின் இயக்கத்தை அவா் தொடக்கி வைக்கவுள்ளாா்.

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகா்ப்புற அமைச்சகத்தின் 75 திட்டங்கள் அடங்கிய சிறு புத்தகத்தையும் அவா் வெளியிடுகிறாா். இந்த நிகழ்ச்சிகளில் பாதுகாப்பு அமைச்சா் ராஜ்நாத் சிங், உத்தரப் பிரதேச ஆளுநா் ஆனந்திபென் படேல், அந்த மாநில முதல் மந்திரி யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோா் பங்கேற்கவுள்ளனா்.

---

### 7. இந்திய–இலங்கை கூட்டு ராணுவ பயிற்சி தொடங்கியது

இந்தியா இலங்கை ராணுவங்களுக்கு இடையேயான கூட்டுப் பயிற்சி 'மித்ர சக்தி' , இலங்கை அம்பாறை பகுதியில் உள்ள போா்ப் பயிற்சிப் பள்ளியில் திங்கள்கிழமை (அக். 4) தொடங்கியது. வரும் 15–ஆம் தேதி வரையில் நடைபெற உள்ள இந்தக் கூட்டுப் பயிற்சியில் இந்தியாவின் சாா்பில் 120 ராணுவ வீரா்களைக் கொண்ட அணி இலங்கை ராணுவ பட்டாலியனுடன் இணைந்து போா்ப் பயிற்சியில் ஈடுபடுகிறது. இதற்கு கலோனல் பிரகாஷ் குமாா் தலைமை தாங்குகிறாா். இரு நாட்டு ராணுவங்கள் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்துவதுடன், இருதரப்பு போா் ஆயத்த நிலையை வலுப்படுத்துவதோடு, பயங்கரவாத எதிா்ப்பு நடவடிக்கைகளில் சிறந்த அணுகுமுறையை பரிமாறிக் கொள்வதே இந்த கூட்டுப் பயிற்சியின் நோக்கமாகும் என்று இலங்கை ராணுவம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, 7–வது மித்ர சக்தி கூட்டுப் பயிற்சி 2019–ல் மகாராஷ்டிர மாநிலம் புணேயில் நடைபெற்றது. இலங்கையில் கடந்த 2019, ஏப்ரலில் நடைபெற்ற தொடா் வெடிகுண்டு தாக்குதலில் 300–க்கும் மேற்பட்டோா் உயிரிழந்தனா். இதனைத் தொடா்ந்து இந்தியா– இலங்கையும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பை அதிகரித்து வருகின்றன.

---

### 8. ஈரோட்டில் சாலைக்கு திருப்பூா் குமரன் பெயா்

ஈரோட்டில் உள்ள சாலைக்கு, திருப்பூா் குமரன் சாலை எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான பெயா் பலகையை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக முதல்வா் மு.க.ஸ்டாலின், திங்கள்கிழமை திறந்து வைத்தாா்.

---

### 9. 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நியாண்டர்தால் மனிதர்கள் வசித்த குகை கண்டுபிடிப்பு

பல லட்சம் ஆண்டு பரிணாம வளர்ச்சியில் பல்வேறு உயிரினங்கள் அடியோடு அழிந்து போய் விட்டது. அப்படி அழிந்த இனம்தான் நியாண்டர்தால் மனிதர்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆதிகாலத்தில் வாழ்ந்த இந்த நியாண்டர்தால் மனிதர்கள் பூமியில் வாழ்ந்தனர். 40,000 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த ஒரு குகை ஒன்று

பிரிட்டன் ஜிப்ரால்டர் பகுதியில் உள்ள 'வான்கார்ட் குகை' பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கிடைத்த தொல் பொருள்கள் மூலம் ' பண்டைய காலத்தில் வாழ்ந்த நியாண்டர்தால் எனும் மனித இனம் வாழ்ந்திருப்பதற்கான சான்றுகள் கிடைக்கலாம்' என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜிப்ரால்டர் தேசிய அருங்காட்சியகத்தின் இயக்குனர் கிளைவ் ஃபின்லேசன் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்ட போது இந்த குகை பகுதியை கண்டுபிடித்தனர். '43 அடி நீளம் கொண்ட இக்குகையின் உள்ளே விசித்திரமான பொருள்கள் தொங்குவதை பார்த்தனர். குகை அறையின் மேற்பரப்பில் கழுதைப்புலிகள் மற்றும் கழுகுகளின் எச்சங்களையும், கடல் நத்தையையும் 4 வயது நியாண்டர்தால் மனித பல் ஒன்றையும்' கண்டுபிடித்தனர். இது கோர்ஹாமின் குகை வளாகம் என்று அழைக்கப்படுகிறது, சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்பு நியாண்டர்தால்கள் அழிந்துபோவதற்கு முன்பு வாழ்ந்த கடைசி இடங்களில் ஒன்றாக இந்த குகை இருந்திருக்கலாம் என தெரிவிக்கின்றனர்.

**1.** **காது கேளாதோரின் பன்னாட்டு வாரமானது ஒவ்வோர் ஆண்டும் எந்த மாதத்தில் கடைபிடிக்கப்படுகிறது?**

**அ) செப்டம்பர் ☑**

ஆ) ஆகஸ்ட்

இ) ஜூலை

ஈ) ஜூன்




✓ பன்னாட்டு காதுகேளாதோர் வாரமானது செப்டம்பர் கடைசி வாரத்தில் அனுசரிக்கப்படுகிறது. காது சர்வதேச கேளாதோர் வாரத்திற்கான இந்த ஆண்டின் (2021) கருப்பொருள் "Celebrating Thriving Deaf Communities" ஆகும். இந்த வாரம் "Nothing about us, without us!" என்ற முக்கிய கொள்கையின்கீழ் வருகிறது. உலக காதுகேளாதோர் கூட்டமைப்பு, 1951 ஆம் ஆண்டில் இத்தாலியின் ரோம் நகரில் நிறுவப்பட்டது. இந்த சர்வதேச அமைப்பு, செப்டம்பர் கடைசி வாரத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமையை சர்வதேச காதுகேளாதோர் நாளாக அறிவித்தது. பின்னர், அதனை ஒரு வாரமாக நீட்டித்து அறிவித்தது.

---

**2.** **சர்வதேச அணுசக்தி முகமையின் வெளியக தணிக்கையாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?**

அ) வினோத் ராய்

ஆ) சஷி காந்த் சர்மா

இ) ராஜீவ் மெஹ்ரிஷி

**ஈ) ஜி சி முர்மு ☑**



✓ இந்தியாவின் கன்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரலான ஜி சி முர்மு பன்னாட்டு அணுசக்தி முகமையின் (IAEA) வெளியக தணிக்கையாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். IAEA என்பது ஒரு மதிப்புமிக்க பன்னாட்டு நிறுவனமாகும். இது அமைதியான அணுவாற்றல் பயன்பாட்டை ஊக்கு -விக்கிறது. மத்திய வெளியுறவு அமைச்சகத்தின்படி, அவரது வேட்புமனு IAEA பொது மாநாட்டின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றது. அவரது பதவிக்காலம் 2022 முதல் 2027 வரை ஆறு ஆண்டுகள் இருக்கும்.

---

**3.** **"Seafarers: at the core of shipping's future" என்பது செப்டம்பர்.30 அன்று கொண்டாடப்படும் எந்த நாளின் கருப்பொருளாகும்?**

அ) உலக கடற்படையினர் நாள்

**ஆ) உலக கடல்சார் நாள் ☑**

இ) உலக பெருங்கடலியல் நாள்

ஈ) உலக மீன்வள நாள்




✓ பன்னாட்டு கடல்சார் அமைப்பு என்பது ஐநா அவையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும். அது கப்பல்போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகிறது. அதன் தலைமையகம் லண்டனில் அமைந்துள்ளது. உலக கடல்சார் நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்.30 அன்று கொண்டாடப்படுகிறது.

✓ COVID தொற்றால் கஷ்டங்களை எதிர்கொள்ளும் கடற்படையினருக்காக, IMO, 2021'ஐ அவர்களுக்கான ஓர் ஆண்டாக அறிவித்துள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான உலக கடல்சார் நாளின் கருப்பொருள், "Seafarers: at the core of shipping's future" என்பதாகும். கடல்சார் சமூகத்தை ஒன்றிணை -ப்பதற்காக, கடல்சார் நினைவுச்சின்னம் உட்பட IMO கட்டடம் உள்ளிட்ட -வை உலக கடல்சார் நாளன்று நீல நிறத்தில் ஒளியூட்டப்படும்.

---

**4.** **இந்தியாவில் 'எதிர்கால பொறியாளர் திட்டத்தை'த் தொடங்கி உள்ள நிறுவனம் எது?**

அ) கூகிள்

**ஆ) அமேசான் ☑**

இ) மைக்ரோசாப்ட்

ஈ) பேஸ்புக்




✓ மின்னணு வணிக நிறுவனமான அமேசான் இந்தியா, இந்தியாவில் 'அமேசான் எதிர்கால பொறியாளர்' திட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. இது, அந்த நிறுவனத்தின் உலகளாவிய கணினி அறிவியல் கல்வித்திட்டமாகும். அந்நிறுவனத்தின் கூற்றுப்படி, இத்திட்டம் தரமான கணினி அறிவியல் கல்வி மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தொழிற்துறை வாய்ப்புகளை அணுக உதவும்.

---

**5.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற தங்கப்பரிமாற்றம் மற்றும் சமூகப் பங்குச்சந்தை ஆகியவற்றை அங்கீகரித்த நிறுவனம் எது?**

அ) RBI

**ஆ) SEBI ☑**

இ) ECGC

ஈ) NSDL

✓ SEBI'இன் வாரியம் சமீபத்தில் ஒரு 'தங்கப்பரிமாற்றம்' மற்றும் 'சமூகப் பங்குச்சந்தை' ஆகியவற்றை நிறுவுவதற்கான திட்டத்தை அறிவித்தது. தங்கப்பரிமாற்றத்தில், உலோகமானது மின்னணு தங்க பற்றுச் சீட்டுகள் வடிவில் வணிகம்செய்யப்படும் & அவை பத்திரங்களாக அறிவிக்கப்படும்.

✓ தற்போதுள்ள மற்றும் புதியதாக அங்கீகரிக்கப்பட்ட எந்த பங்குச்சந்தையும் மின்னணு தங்க பற்றுச் சீட்டுகள் வடிவில் வர்த்தகத்தைத் தொடங்கலாம்.

---

**6.** **வெறிநாய்க்கடி நோயை எந்த ஆண்டுக்குள் ஒழிப்பதற்காக, ஒரு தேசிய செயல் திட்டத்தை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ) 2025

ஆ) 2027

**இ) 2030 ☑**

ஈ) 2032



✓ உலக ரேபிஸ் நாளாக செப்.28 அன்று, 2030ஆம் ஆண்டுக்குள் நாய் மூலம் பரவும் ரேபிஸ் நோயை ஒழிப்பதற்கான தேசிய செயல் திட்டத்தை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் தொடங்கிவைத்தது.

✓ இது மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் ஆலோசனையுடன் தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையத்தால் வரைவு செய்யப்பட்டது. இத்திட்டம் ஐந்து முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டதாகும் – அரசியல் விருப்பம், நிலையான நிதி, இடைநிலை திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் மறுஆய்வு, சமூக திட்டமிடல் மற்றும் செயல்பாட்டு ஆராய்ச்சி.

---

**7.** **இந்தியன் வங்கியின் முன்னாள் MD & CEOஆன பத்மஜா சந்துரு, எந்த நிறுவனத்தின் புதிய MD & CEOஆக நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ) SEBI MF

**ஆ) NSDL ☑**

இ) SBI

ஈ) LIC



✓ பத்மஜா சந்துரு தேசியப் பத்திரங்கள் வைப்புத்தொகையின் (NSDL) நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயலதிகாரியாக (MD & CEO) நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2018 செப்டம்பர் மற்றும் 2021 ஆகஸ்ட்டுக்கு இடையில் இந்தியன் வங்கியின் MD & CEOஆக பணியாற்றியுள்ளார். அவரது நியமனம் NSDL'இன் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. NSDL'இன் முந்தைய MD & CEOஆக GV நாகேஸ்வர ராவ் இருந்தார்.

---

**8.** **எந்த நாட்டின் அண்மைய பொதுத்தேர்தலில் 48 சதவீத பெண் வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர்?**

அ) ஜெர்மனி

ஆ) இத்தாலி

**இ) ஐஸ்லாந்து ☑**

ஈ) பின்லாந்து



✓ வெற்றிபெற்ற வேட்பாளர்களில் 48% பெண்கள் என்பதால், ஐஸ்லாந்தில் பொதுத்தேர்தல் முடிவுகள் அந்நாட்டிற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக உள்ளது. 63 இடங்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில், 30 இடங்களை பெண் வேட்பாளர்கள் வென்றுள்ளனர். பின்லாந்தில் 47% பெண் வேட்பாளர்க -ள் வென்றுள்ளனர். சுவீடன் நாடாளுமன்றம் 465 பெண் உறுப்பினர்க -ளைக் கொண்டுள்ளது.

---

**9. உலகின் மிகப்பழமையான குடியரசுகளுள் ஒன்றான எந்த நாடு, சமீபத்தில், கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்க வாக்களித்தது?**



அ) இத்தாலி

ஆ) ஸ்பெயின்

**இ) சான் மரினோ ☑**

ஈ) சுவிச்சர்லாந்து

✓ சான் மரினோ குடியரசில் பன்னிரண்டு வார கர்ப்பத்தை கருக்கலைக்க அனுமதிப்பதற்கான ஒரு வாக்கெடுப்பு சமீபத்தில் நடத்தப்பட்டது. மொத்த வாக்காளர்களில் கிட்டத்தட்ட 77% பேர் இந்தக் கருத்தை ஆதரித்தனர் மற்றும் கருக்கலைப்பை அனுமதிக்க விரும்பினர். இன்றுவரை, சான் மரினோ குடியரசில், கர்ப்பத்தை களைப்பது என்பது சட்டவிரோதமானது ஆகும். அதனை மீறி முயற்சி செய்வோருக்கு மூவாண்டுகள் சிறைத் தண்டனையும், கலைப்பவருக்கு ஆறாண்டு சிறையும் விதிக்கப்பட்டது.

---

**10.** 2022 **ஸ்வச் சர்வேக்ஷனில் கீழ்காணும் எந்தப் புதிய குறிகாட்டி** (indicator) **இணைக்கப்பட்டுள்ளது?**

அ) மக்களின் மகிழ்ச்சி

**ஆ) பணிச்சூழல்கள் & தூய்மைப்பணியாளர்களின் வாழ்வாதாரம் ☑**

இ) மருத்துவர்களின் நலன்

ஈ) சேரிகளின் நிலை மற்றும் மறுவடிவமைப்பு

SWACHH SURVEKSHAN

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் நடத்தப்பட்ட ஏழாவது தூய்மை ஆய்வை வெளியிட்டுள்ளது. இதன் தற்போதைய பதிப்பில், தொற்றுகாலத்தின்போது தூய்மைப் பணியாளர்களின் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக, 'பணிச்சூழல்கள் & தூய்மைப்பணியாளர்களின் வாழ்வாதாரம்' குறித்த குறிப்பிட்ட குறிகாட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வள்ளலார் பிறந்த நாள்: தனிப்பெருங்கருணை நாளாக முதல்வர் அறிவிப்பு**

வள்ளலார் பிறந்த நாள் இனி தனிப்பெருங்கருணை நாளாக கடைபிடிக்கப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார். தமிழகம் முழுவதும் வள்ளலார் பிறந்த நாளான இன்று(அக்.5) பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் முதல்வர் ஸ்டாலின் இன்று வெளியிட்ட அறிவிப்பில், "அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் கடலூர் மாவட்டம் சிதம்பரத்திலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள மருதூரில் 05.10.1823–இல் பிறந்தார். கருணை ஒன்றையே வாழ்க்கைநெறியாகக் கொண்டு வாழ்ந்தார். அனைத்து நம்பிக்கைகளிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதை குறிக்கும் வண்ணம் இவர் சமரச சுத்த சன்மார்க்கத்தை நிறுவினார். இவர் வடலூரில் சத்தியஞான சபையை எழுப்பினார். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடிய இவர், மக்களின் பசித்துயர் போக்க சத்தியதர்ம சாலையை நிறுவினார். அவர் ஏற்றிய அடுப்பு இன்றுவரை அணையாமல் தொடர்ந்து எரிந்த வண்ணம் பசியோடு இருக்கும் மக்களின் வயிற்றை நிரப்புகிறது.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடைகளை எழுதினார். இவர் பாடிய பாடல்களின் திரட்டு திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது 6 திருமுறைகளாக பகுக்கப்பட்டுள்ளது. திருவருட்பா ஆறாம் திருமுறையில், எந்தச் சமயத்தின் நிலைப்பாட்டையும் எல்லா மதநெறிகளையும் சம்மதம் ஆக்கி கொள்கிறேன் என்றார். சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நிறுவிய அவர், சத்திய தருமச்சாலையையும், சித்தி வளாகத்தையும் உருவாக்கினார். பசிப்பிணி நீக்கும் மருத்துவராக வாழ்ந்து காட்டினார். அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி! தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி! என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டு ஒளி இன்றும் அறியாமையை நீக்கி அன்பை ஊட்டி வருகிறது. அவர் பிறந்தநாளான அக்டோபர் ஐந்தாம் நாள் இனி ஆண்டுதோறும் "தனிப்பெருங்கருணை நாள்" எனக் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

---

**2. இயற்பியலுக்கான நோபல் பரிசு மூவருக்குப் பகிர்ந்தளிப்பு**

2021ஆம் ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு விஞ்ஞானிகள் மூவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயிலும், மற்ற பரிசுகள் ஸ்டாக்ஹோமிலும் அறிவிக்கப்படும். அந்த வகையில் இயற்பியலுக்கான நோபல் பரிசு இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இயற்பியலுக்கான நோபல் பரிசு ஜப்பானைச் சேர்ந்த சுயுகுரோ மனாபே, ஜெர்மனியைச் சேர்ந்த கிளாஸ் ஹசில்மேன், இத்தாலியைச் சேர்ந்த ஜார்ஜியோ பாரிசி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், சுயுகுரோ மனாபே, கிளாஸ் ஹசில்மேன் ஆகியோருக்குப் புவியின் காலநிலை மாறுபாட்டை அளவிடுதல் மற்றும் புவி வெப்பமடைதலைக் கணித்தல் போன்ற ஆய்வுக்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. அணுவிலிருந்து கிரக அளவுகள் வரை அவற்றின் அமைப்புகளின் மாறுபாடு மற்றும் ஏற்ற இறக்கங்களின் இடைவெளியைக் கண்டறிந்ததற்காக ஜார்ஜியோ பாரிசிக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, 2021ஆம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் ஜூலியஸ், ஆர்டம் பட்டாஹவுடியன் ஆகிய இரு விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

**3. ஊரக சுயாட்சி ஏன் முக்கியமானது?**

புதிய மாவட்டங்களிலும் பிரிக்கப்பட்ட மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பகுதிகளில் இன்றும் வருகிற 9–ம் தேதியும் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற உள்ளன. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த உச்ச நீதிமன்றம் மேலும் நான்கு மாதங்களுக்கு அவகாசம் அளித்துள்ளது என்றபோதும் அதற்காக மாநிலத் தேர்தல் ஆணையம் கூறிய காரணங்கள் மிகவும் மோசமாக உள்ளதாகவும் கருத்து தெரிவித்துள்ளது. உள்ளாட்சி அமைப்பிலும் நிர்வாகத்திலும் இந்தியாவுக்கே முன்னோடியாகக் கொள்ளப்பட்ட தமிழ்நாடு, இன்று அது குறித்து அக்கறையும் ஆர்வமும் இல்லாமல் போய்விட்டது வரலாற்றின் முரண்நகை.

தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகள் பற்றிய மிகப் பெரும் ஆய்வை நடத்தியவர் காந்தியச் சிந்தனையாளரான தரம்பால். அறுபதுகளில் அனைத்திந்திய பஞ்சாயத் பரிஷத் அமைப்பின் ஆய்வுத் துறை இயக்குநராக அவர் நியமிக்கப்பட்டிருந்தார். காலனிய காலகட்டத்திலிருந்து தமிழ்நாடு தொடர்பான அரசு ஆவணங்களைப் பார்வையிட்டும் ஊர் ஊராகச் சென்று நேரடிக் கள ஆய்வுகளை நடத்தியும் தனது ஆய்வறிக்கையை அவர் சமர்ப்பித்தார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள ஓலைச் சுவடிகள் வரைக்கும் அவர் பார்வையிட்டு, உள்ளாட்சி அமைப்புகள் பற்றிய வரலாற்றுத் தகவல்களைத் திரட்டினார்.

அவரது முடிவுகளின்படி, ஏற்கெனவே இங்கு நெடுங்காலமாக சிறப்பாகச் செயல்பட்டுவந்த ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கால நில வருவாய் அமைப்பால் சீர்குலைக்கப்பட்டன. காலனிய அதிகார எந்திரம் உள்ளூர்ச் சமூகங்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளவில்லை. சுதந்திர இந்தியாவிலும் அந்த நிலை தொடராமல், சுயாட்சி பெற்ற உள்ளாட்சி அமைப்புகள் மறுவுருவாக்கம் செய்யப்பட வேண்டும் என்பது அவரது பிரதான பரிந்துரை.

கிராமப்புறக் குடியாட்சி

பஞ்சாயத்து என்கிற வார்த்தைக்கு உரிமையியல், குற்றவியல் பிரச்சினைகளைக் கிராம அளவில் பேசித் தீர்த்துக்கொள்வதற்கான ஒரு அமைப்பு என்றுதான் பொதுவாகப் பொருள்கொள்ளப்படுகிறது. அவை பின்பற்றிய வழக்கங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தன என்றாலும் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் நிர்வாகரீதியிலும் அரசியல்ரீதியிலும் தன்னைச் சுயாட்சி பெற்ற பகுதியாகக் கருதிவந்திருப்பதை இத்தகைய அமைப்புகளின் வரலாற்றிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. சார்லஸ் மெட்காப் போன்ற பிரிட்டிஷ் அதிகாரிகள் பஞ்சாயத்து அமைப்பைக் கிராமப்புறக் குடியாட்சி என்றே அழைத்துவந்துள்ளனர்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு உள்ளாட்சி அமைப்புகளே தங்களது நில நிர்வாகத்தையும் கவனித்துக்கொண்டன என்கிறார் தரம்பால். நிலங்கள் தொடர்பான ஆவணங்கள் கர்ணம் என்று அழைக்கப்படுபவர்களின் பொறுப்பில் இருந்தன. வடஇந்தியாவில் இவர்கள் பத்வாரி (Patwari) என்று அழைக்கப்பட்டனர். கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டில் வந்த பிறகு, மதராஸ் மாகாணத்தில் இருந்த அனைத்து நிலங்களும் தங்களது

விவசாய வருமானத்தில் சரிபாதியை வரியாகச் செலுத்த வேண்டியிருந்தது. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தங்களது ஆளுகையை இழந்து, வரி வசூலிக்கும் முகவாண்மைகளாக மட்டுமே சுருங்கிப் போயின.

ஆட்சியர்களின் கட்டுப்பாடு

சென்னை மாகாணத்துக்கு உட்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1880, 1907, 1946 ஆகிய ஆண்டுகளில் முழுமையான மறுபரிசீலனைக்கு ஆளாகியுள்ளன. 1880–களில் ஏற்கெனவே இருந்த திட்டங்களைத் தீவிரப்படுத்தவும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தவும் மாவட்ட அளவில் கூடுதல் நிதியாதாரங்கள் உருவாக்கப்பட்டன. மைய அரசின் வழக்கமான அரசு எந்திரத்திலிருந்து விடுபட்டு, மாவட்ட ஆட்சியர்கள் சூழலுக்கேற்பச் சுயமாக முடிவெடுத்துக்கொள்ள வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. 1884–ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி, சென்னை மாகாணத்தில் மாவட்ட, வட்ட, கிராம அளவில் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஊரகப் பகுதிகளில் சாலை வசதிகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் ஆகியவை பெருமளவில் தொடங்கப்பட்டது இந்தக் காலகட்டத்தில்தான். ஆனாலும்கூட, உள்ளாட்சி அமைப்பின் அதிகாரங்கள் பெரிதும் மாவட்ட ஆட்சியர்களால் கட்டுப்படுத்தப்படும் நிலை இருந்தது. 1907–ல் நியமிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்துக்கான ராயல் கமிஷன், உள்ளாட்சி நிர்வாகத்தின் மீதும் கவனம் செலுத்தியது. அப்போது உள்ளாட்சி அமைப்புகள் குறித்துப் பெறப்பட்ட கருத்துகள் 1920 வரையிலும் விவாதிக்கப்பட்டன. 1920–ல் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கான விரிவான விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளும் அதிகரித்தன. 1946–ல் இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கான விவாதங்களின்போதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான முக்கியத்துவம் குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்டது.

பல்வந்த் ராய் பரிந்துரை

சுதந்திர இந்தியாவில் 1958–ல் மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டம் இயற்றப்பட்டது. எனினும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும் அந்தச் சட்டம் கொண்டிருந்தது. உள்ளாட்சி அமைப்பின் ஒவ்வொரு நோக்கத்தையும் எட்டுவதற்கு அச்சட்டம் முன்பிருந்த பிரிட்டிஷ் நடைமுறைகளைப் பின்பற்றியதே குழப்பங்களுக்குக் காரணமாயிற்று என்கிறார் தரம்பால். தவிர, உள்ளாட்சி அமைப்புகளின் மொத்தச் செலவினங்களும் குறைவாகவே இருந்தன. எனினும், 1958–ல் இயற்றப்பட்ட பஞ்சாயத்து சட்டம்தான், சென்னை மாநிலத்தில் உள்ள எல்லாக் குடிசைகளையும் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர உதவியது.

அதற்கு முன்னால், மாநிலத்தின் பாதிப் பரப்பளவு மட்டுமே கிராமப் பஞ்சாயத்துகளைப் பெற்றிருந்தது. 1957–ல் அளிக்கப்பட்ட பல்வந்த் ராய் மேத்தா கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்று இயற்றப்பட்ட சட்டம் அது. அரசு மேற்கொள்ளும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாலேயே நிர்வகிக்கப்பட வேண்டும் என்பது அந்த கமிட்டியின் முக்கியப் பரிந்துரை. 73 மற்றும் 74–ம் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்குப் பிறகு இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டுப் பெண்களுக்கும் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கும் இடஒதுக்கீடு உறுதிசெய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடுகளும் அதிகரித்துவருகின்றன

உள்ளாட்சி அமைப்புகள் இன்று அரசமைப்போடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. எனவே, அரசமைப்பில் நிகழும் அத்தனை தவறுகளும் உள்ளாட்சி அமைப்பிலும் பிரதிபலிக்கக்கூடும். மத்திய மாநில அளவில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களின் வெற்றி என்பது ஒவ்வொரு நிலையிலும் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்வதால் மட்டுமே சாத்தியம். அந்தப் பொறுப்பேற்பு, உள்ளாட்சி அமைப்புகளின் நியாயமான நிர்வாகத்தாலேயே சாத்தியமாகும்.

ஒருவேளை, உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் சரிவர இயங்கவில்லை என்றால், அது அமைப்பின் தவறால் அல்ல, அவ்வமைப்பின் பணிகளைப் பற்றிய அறியாமையின் காரணமாகத்தான் என்கிறார் தரம்பால். உள்ளாட்சி குறித்த விழிப்புணர்வால் மட்டுமே அந்த அமைப்புகளின் சுயாட்சியை மீட்டெடுக்க முடியும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு தமிழ்நாட்டுக் கிராமங்கள் சமுதாயங்களாகவும் மகமைகளாகவும் தங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொண்டன. அந்நியர்களிடம் இழந்த அந்த உரிமையைச் சுதந்திர இந்தியா திரும்பவும் கிராமங்களின் கைகளிலேயே திரும்பக் கொடுத்திருக்கிறது.

---

**4. இந்தியா–ஜப்பான் கடற்படைகள் கூட்டுப் பயிற்சி இன்று தொடக்கம்**

இந்தியா–ஜப்பான் கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி புதன்கிழமை தொடங்கவுள்ளது. அரபிக் கடலில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி அக்.8–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதுதொடா்பாக இந்திய பாதுகாப்புப் படை வெளியிட்ட அறிக்கையில், "இந்தியா–ஜப்பான் கடற்படைகளின் கடல்சாா் கூட்டுப் பயிற்சி (ஜிமெக்ஸ்) 5–ஆவது முறையாக நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் கொச்சி, தேக் கப்பல்கள் பங்கேற்கின்றன. ஜப்பான் கடற்படை சாா்பில் ககா, முராசேம் கப்பல்கள் கலந்து கொள்கின்றன. அத்துடன் கடற்படையின் பி8ஐ, டாா்னியா் வகை ரோந்து விமானங்கள், மிக் 29கே ரக போா் விமானங்களும் பயிற்சியில் ஈடுபடவுள்ளன. ஆயுதப்பயிற்சி, நீா்மூழ்கி கப்பல்களுக்கு எதிரான போரிடும் முறைகள் உள்ளிட்டவற்றில் இருநாட்டு கடற்படைகளும் ஈடுபடும்’ ’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. ஜூனியா் துப்பாக்கி சுடுதல்: உலக சாதனையுடன் தங்கம் வென்றாா் ஐஷ்வரி பிரதாப்**

ஐஎஸ்எஸ்எஃப் ஜூனியா் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஐஷ்வரி பிரதாப் சிங் தோமா் உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றாா். பெருவில் நடைபெறும் இப்போட்டியில் ஆடவா் 50 மீட்டா் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் பிரிவின் களம் கண்ட ஐஷ்வரி பிரதாப் சிங் தோமா், இறுதிச்சுற்றில் 463.4 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தாா். அவா் இந்தப் புள்ளிகளை வென்ன் மூலம் ஜூனியா் பிரிவில் புதிய உலக சாதனை படைத்து தங்கத்தை தனதாக்கினாா். பிரான்ஸ் வீரா் லூகாஸ் கிரைஸஸ் 456.5 புள்ளிகளுடன் வெள்ளியும், அமெரிக்காவின் காவின் பாா்னிக் 446.6 புள்ளிகளுடன் வெண்கலமும் வென்றனா்.

முன்னதாக தகுதிச்சுற்றிலும் ஐஷ்வரி பிரதாப் 1,185 புள்ளிகள் பெற்று முந்தைய உலக சாதனையை சமன் செய்ததுடன், முதல் நபராக இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றிருந்தாா். இதர இந்தியா்களான சன்ஸ்காா் ஹவேலியா 1,160 புள்ளிகளுடன் 11–ஆவது இடமும், பங்கஜ் முகேஜா 1,157 புள்ளிகளுடன் 15–ஆவது இடமும், சா்தாஜ் திவானா 1,157 புள்ளிகளுடன் 16–ஆவது இடமும், குா்மான் சிங் 1,153 புள்ளிகளுடன் 22–ஆவது இடமும் பிடித்து தகுதிச்சுற்றுடன் வெளியேறினா். இளம் வீராங்கனை அசத்தல்: அதேபோல், மகளிருக்கான 25 மீட்டா் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் நாம்யா கபூா் தங்கமும், மானு பாக்கா் வெண்கலமும் வென்றனா்.

இதில் 14 வயது இளம் வீராங்கனையான நாம்யா, 19 வயது அனுபவ வீராங்கனையான மானுவை பின்னுக்குத்தள்ளி தங்கம் வென்று ஆச்சா்யமளித்தாா். அவா்கள் களம் கண்ட பிரிவின் இறுதிச்சுற்றில் நாம்யா கபூா் 36 புள்ளிகளுடன் முதலிடம் பிடிக்க, பிரான்ஸின் கேமிலி ஜெடா்ஸெஜெவ்ஸ்கி 33 புள்ளிகளுடன் 2–ஆம் இடத்தையும், மானு பாக்கா் 31 புள்ளிகளுடன் 3–ஆம் இடத்தையும் பிடித்தனா். மற்றொரு இந்திய வீராங்கனை ரிதம் சங்வான் 4–ஆம் இடம் பிடிக்க, இப்பிரிவில் இந்தியாவின் ஆதிக்கமே இருந்தது. இப்போட்டியில் ஏற்கெனவே வேறு 3 பிரிவுகளில் தங்கம் வென்ற மானு பாக்கருக்கு இந்த வெண்கலம் 4–ஆவது பதக்கமாகும். முன்னதாக இப்பிரிவின் தகுதிச்சுற்றில் நாம்யா 580 புள்ளிகளுடன் 6–ஆம் இடம் பிடிக்க, மானு பாக்கா் 587 புள்ளிகளுடன் முதலிடமும், ரிதம் சங்வான் 586 புள்ளிகளுடன் 2–ஆம் இடமும் பிடித்திருந்தனா்.

முதலிடத்தில் இந்தியா: 8 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலம் என 17 பதக்கங்கள் வென்றுள்ள இந்தியா, பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறது. அமெரிக்கா 4 தங்கம் உள்பட 12 பதக்கங்களுடன் 2–ஆம் இடத்திலும், இத்தாலி 2 தங்கம் உள்பட 6 பதக்கங்களுடன் 3–ஆம் இடத்திலும் உள்ளன.

---

**6. முதல் முறையாக விண்வெளியில் சினிமா படப்பிடிப்பு நடத்தும் ரஷியா..!**

சர்வதேச விண்வெளி மையத்தில் வைத்து படப்பிடிப்பு நடத்த உள்ளதாக ரஷியா அறிவித்துள்ளது. இதற்காக, ரஷியா ஒரு நடிகை மற்றும் ஒரு திரைப்பட இயக்குநரை வெகு விரைவில் விண்வெளிக்கு அனுப்ப தயாராகி வருகிறது.ஏற்கனவே இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஹாலிவுட் படம் ஒன்று விண்வெளியில் வைத்து படமாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த முயற்சி இன்னும் தொடங்கப்படவில்லை. முன்னதாக புகழ்பெற்ற ஹாலிவுட் திரைப்படமான 'மிஷன் இம்பாசிபில்’ பட கதாநாயகன் டாம் குரூஸ், நாசா மற்றும் எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்–எக்ஸ் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த திட்டம் குறித்து அறிவித்திருந்தார். நடிகை யூலியா பெரிசில்ட் (37 வயது) மற்றும் திரைப்பட இயக்குநர் ஷிபென்கோ (38 வயது) ஆகியோர் பழைய

சோவியத்–கசகஸ்தானில் உள்ள பைகோனர் காஸ்மோட்ரோமில் இருந்து வெகுவிரைவில் விண்வெளிக்கு பயணம் செய்ய உள்ளனர்.

மூத்த விண்வெளி வீரர் ஆண்டன் ஷ்காப்லெரோவ் இப்பயணத்துக்கு தலைமை தாங்குகிறார்.அவர்கள் மூவரும் சோயுஸ் எம் எஸ்–19 விண்கலத்தில் 12 நாள் பயணமாக செல்ல உள்ளனர்.அவர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் வைத்து படப்பிடிப்பு நடத்த உள்ளனர். "தி சேலஞ்ச்" என்று அந்த படத்திற்கு தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.படத்தின் பட்ஜெட் மற்றும் கதைக்களம் போன்ற விஷயங்கள் வெளியிடப்படாமல் இருந்த நிலையில், தற்போது ரஷியாவின் விண்வெளி நிறுவனமான 'ராஸ்காஸ்மோஸ்' அவற்றை வெளியிட்டுள்ளது.அதன்படி படத்தின் கதையாக, பெண் அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவர் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்று அங்கு ஆபத்தில் சிக்கியுள்ள விண்வெளி வீரரை பாதுகாக்க உள்ளார். இவ்வாறு படத்தின் கதை அமைக்கப்பட்டுள்ளது.

**1. நெசவாளர் சேவைகள் மற்றும் வடிவமைப்பு வள மையம் அமைக்கப்படவுள்ள மாநிலம் / UT எது?**

அ) ஜம்மு & காஷ்மீர்

**ஆ) இமாச்சல பிரதேசம் ☑**

இ) சிக்கிம்

ஈ) மேற்கு வங்கம்



✓ இமாச்சல பிரதேசத்தின் குல்லு மாவட்டத்தில், "நெசவாளர் சேவைகள் மற்றும் வடிவமைப்பு வள மையம்" அமைக்கப்படவுள்ளதாக நடுவண் வர்த்தகம், தொழில் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்தார். இந்த மையம், அம்மாநிலத்தின் ஈர்க்கத்தக்க கைவினைப் பொருட்களை ஊக்குவிக்கவும், சர்வதேச சந்தையில் அப்பொருட்களை ஏற்றுமதி செய்யவும் சிறந்த தளத்தை வழங்கும். 2021 செப்.27 அன்று இமாச்சல பிரதேசத்தின் பொன்விழா ஆண்டை நினைவுகூரும் வகையி –ல் 'சேவா & சமர்பன்' திட்டத்தின்கீழ் இது ஏற்பாடு செய்யப்பட்டது.

---

**2. "My Life in Full: Work, Family and Our Future" என்பது யாரின் நினைவுக்குறிப்பாகும்?**

அ) ஜெப் பெசோஸ்

ஆ) ஆண்டி ஜாஸி

**இ) இந்திரா நூயி ☑**

ஈ) கிரண் மஜும்தார் ஷா



✓ "My Life in Full: Work, Family and Our Future" என்பது 65 வயதான முன்னாள் பெப்சிகோ தலைமைச் செயல் அதிகாரி இந்திரா நூயியின் நினைவுக்குறிப்பு ஆகும். இது போர்ட்போலியோ புத்தகங்களால் 2021 செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்படும். இது குழந்தைப் பருவத்திலிருந்து உலகின் மிக சக்திவாய்ந்த பெண்களில் ஒருவராக மாறும் வரை அவரது வாழ்க்கையை விவரிக்கிறது. இந்திரா நூயி, பெப்சிகோவின் தலைமைச் செயல் அதிகாரியாக பன்னிரண்டு ஆண்டுகள் பணியாற்றினார்.

---

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற லூசி திட்டத்துடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?**

அ) இஸ்ரோ

**ஆ) நாசா ☑**

இ) புளூ ஆர்ஜின்

ஈ) ஸ்பேஸ் எக்ஸ்



✓ லூசி திட்டம் என்பது அமெரிக்காவின் நாசாவின், வியாழனின் டிரோஜன் விண்கற்களை ஆய்வுசெய்வதற்கான ஒரு திட்டப்பணியாகும். இது 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு சூரிய மண்டலத்தின் உருவாக்கம் பற்றிய புதிய நுண்ணறிவுகளை வழங்க அமைக்கப்பட்டுள்ளது.

✓ மனித உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய நுண்ணறிவுக –ளை வழங்கிய ஒரு பழங்கால புதைபடிவத்தின் பெயர் இந்த ஆய்வுக்கு சூட்டப்பட்டுள்ளது. இது அக்டோபர்.16 அன்று புளோரிடாவில் உள்ள கேப் கனாவெரல் விண்வெளி படை நிலையத்திலிருந்து ஏவப்படவுள்ளது.

---

**4. இந்தியாவில், 'படைப்பாளி கல்வி திட்டத்தை'த் தொடங்கியுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ) கூகிள்

ஆ) அமேசான்

இ) மைக்ரோசாப்ட்

**ஈ) பேஸ்புக் ☑**

facebook

✓ பேஸ்புக் தனது மிகப்பெரிய 'படைப்பாளி கல்வி மற்றும் செயல்படுத்தும் திட்டத்தை' இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. "Born on Instagram" என பெயரிடப்பட்ட இத்திட்டத்தில் படைப்பாளர்களை ஊக்குவித்தல், கல்வி கற்பது மற்றும் செயல்படுத்துவதை இலக்காகக் கொண்ட மின்னணு கற்றல் படிப்பு அடங்கும். இத்திட்டம் முதலில் 2019'இல் தொடங்கப்பட்டது.

---

**5. இந்திய ரிசர்வ் வங்கியுடன் தொடர்புடைய PCA கட்டமைப்பில் 'P' என்பது எதைக் குறிக்கிறது?**

அ) Public

ஆ) Private

**இ) Prompt ☑**

ஈ) Priority

✓ Prompt Corrective Action (PCA) என்பது ரிசர்வ் வங்கியின் பலவீனமான வங்கிகளின் கண்காணிப்பு பட்டியலைக் குறிக்கிறது. அத்தகைய வங்கிகள் மற்றவர்களுக்கு கடன் கொடுப்பது போன்ற கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி விதிக்கிறது.

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI), சமீபத்தில், இந்திய வெளிநாட்டு வங்கியை PCA கட்டமைப்பிலிருந்து நீக்கியது. அவ்வங்கி, கடந்த 2015'இல் PCA கட்டமைப்பின்கீழ் வைக்கப்பட்டது. வெளியிடப்பட்ட 2020-21 நிதியியல் முடிவுகளின் அடிப்படையில், அவ்வங்கி PCA அளவுருவை மீறவில்லை என்பதை நிதி மேற்பார்வை வாரியம் கண்டறிந்தது.

---

**6. 2020 மார்ச் மாத நிலவரப்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிப்புறக் கடன் வீதம் என்ன?**

அ) 1.11%

ஆ) 11.1%

**இ) 21.1% ☑**

ஈ) 41.1%



✓ இந்தியாவின் வெளிப்புறக் கடன் பற்றிய மத்திய நிதி அமைச்சகத்தின் நிலை அறிக்கையின்படி, 2020 மார்ச் மாத நிலவரப்படி, இந்தியாவின் வெளிப்புறக் கடன் மற்றும் GDP விகிதம் 20.6%'இலிருந்து 21.1%ஆக அதிகரித்துள்ளது. 2021 மார்ச் மாத இறுதிப்படி இந்தியாவின் வெளிப்புறக் கடன் 2.1% உயர்ந்து $570 பில்லியன் டாலராக உள்ளது. வெளிப்புறக் கடன் விகிதத்திற்கான ஒதுக்கீடு அதே காலகட்டத்தில் 85.6%'இலிருந்து 101.2%ஆக அதிகரித்துள்ளது.

---

**7. 'Ease of Logistics' வலைதளத்தைத் தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?**

அ) MSME அமைச்சகம்

**ஆ) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑**

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம்



✓ இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் கூட்டமைப்பு (FIEO) என்பது 1965ஆம் ஆண்டில் வர்த்தக அமைச்சகம் மற்றும் தனியார் வர்த்தகம் மற்றும் தொழில் அமைப்புகளால் அமைக்கப்பட்ட வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு ஆகும். மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சரான பியூஷ் கோயல், அண்மையில், 'ஈஸ் ஆப் லாஜிஸ்டிக்ஸ்' என்ற வலைதளத்தைத் தொடங்கினார். இந்தப் புதிய தளம், ஏற்றுமதியாளர்களுக்கும் லாஜிஸ்டிக் சேவை வழங்குநர்களுக்கும் இடையே ஓர் இணைப்பாக இருக்கும்.

---

**8. பிரான்ஸ் நாட்டுடன் பல பில்லியன் மதிப்புள்ள யூரோ பாதுகாப்பு ஒப்பந்தத்தை அறிவித்துள்ள நாடு எது?**

**அ) கிரேக்கம் ☑**

ஆ) துருக்கி

இ) இத்தாலி

ஈ) ஸ்பெயின்



✓ பிரான்ஸும் கிரேக்கமும் பல பில்லியன் மதிப்புடைய யூரோ பாதுகாப்பு ஒப்பந்தத்தை அறிவித்துள்ளன. இதில் 3 பிரெஞ்சு போர்க்கப்பல்களை வாங்கும் கிரேக்கத்தின் முடிவும் அடங்கும். கிழக்கு மத்திய தரை கடலில் துருக்கியுடனான பதட்டங்களுக்கு இடையே கிரீஸ் தனது பாதுகாப்புத் திறனை அதிகரிக்கும் முடிவை எடுத்துள்ளது. அதிபர் இம்மானுவேல் மக்ரோன் மற்றும் கிரேக்க பிரதமர் கிரியகோஸ் மிட்சோடகிஸ் ஆகியோர் பாரிஸில் உத்திசார் பாதுகாப்பு கூட்டாண்மையை அறிவித்தனர். கிரீஸ் ஏற்கனவே 18 பிரெஞ்சு ரபேல் போர் விமானங்களை வாங்கியுள்ளது.

---

**9.** **பின்வரும் எந்நகரத்தில் CIPET: பெட்ரோ இரசாயன தொழில்நுட்ப நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது?**



அ) காந்தி நகர்

**ஆ) ஜெய்ப்பூர் ☑**

இ) சென்னை

ஈ) ஹைதராபாத்

✓ பிரதமர் மோடி, காணொலிக்காட்சிமூலம் ஜெய்ப்பூரில் அமைந்துள்ள CIPET: பெட்ரோ இரசாயன தொழில்நுட்ப நிறுவனத்தை தொடங்கிவைத்தார். மத்திய பெட்ரோகெமிக்கல்ஸ் எஞ்சினியரிங் & டெக்னாலஜி நிறுவனம் ஆனது முன்னர் மத்திய பிளாஸ்டிக் எஞ்சினியரிங் & டெக்னாலஜி நிறுவனம் என அழைக்கப்பட்டது. அது, சென்னையில், கடந்த 1968'இல் ஐநா வளர்ச்சித்திட்டத்தின் உதவியுடன் இந்தியாவில் நிறுவப்பட்டது.

---

**10.** **தேசிய ஏற்றுமதி காப்பீட்டு கணக்கு திட்டத்தை எந்த ஆண்டு வரை தொடர அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?**



அ) 2022–23

ஆ) 2023–24

இ) 2024–25

**ஈ) 2025–26 ☑**

✓ தேசிய ஏற்றுமதி காப்பீட்டு கணக்கு திட்டத்தை தொடர அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. 2021–2022 நிதியாண்டு முதல் 2025–2026 வரை ஐந்து ஆண்டுகளில் ₹1,650 கோடி மானிய நிதி உதவியை அரசாங்கம் அறிவித்துள்ளது. பட்டியலிடா CPSEஆன ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனத்தை (ECCG) பங்குச்சந்தையில் பட்டியலிடுவதற்கும் அமைச்சர–வை ஒப்புதலளித்தது. 2021–22 நிதியாண்டில் தொடங்கி, 5 ஆண்டுக–ளில், ₹4,400 கோடி அளவுக்கு ECCG'இல் முதலீடு செய்யப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. புலம்பெயர் தமிழர் நல வாரியம் உருவாக்கப்படும்: முதல்வா் மு.க.ஸ்டாலின்**

வெளிநாடு வாழ் தமிழா்களின் நலன்களைக் காக்க புலம்பெயா் தமிழா் நல வாரியம் தோற்றுவிக்கப்படும் என்று முதல்வா் மு.க.ஸ்டாலின் அறிவித்தாா். இதுகுறித்து, புதன்கிழமை அவா் வெளியிட்ட அறிவிப்பு:– புலம்பெயா்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழா் நலன் காக்க, புலம்பெயா் தமிழா் நலவாரியம் அமைக்கப்படும். அரசு மற்றும் புலம்பெயா்ந்த தமிழா் பிரதிநிதிகள் 13 நபா்களைக் கொண்டு இந்த வாரியம் ஏற்படுத்தப்படும். ரூ.5 கோடி புலம்பெயா் தமிழா் நலநிதி என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு வாரியம் உருவாக்கப்படும்.

என்னென்ன திட்டங்கள்?: மூலதனச் செலவினமாக ரூ.1.40 கோடியும், நலத் திட்டங்கள் மற்றும் நிா்வாகச் செலவினங்களுக்காக ரூ.3 கோடியும் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும். புலம்பெயா் தமிழா் குறித்த தரவு தளம் ஏற்படுத்தப்படும். வாரியத்தில் பதிவு செய்பவா்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம், மருத்துவ காப்பீடு திட்டம், அடையாள அட்டையுடன் வழங்கப்படும். வெளிநாடுகளுக்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சோ்ந்த தமிழா்கள் பணியின் போது இறக்க நேரிட்டால் அவா்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி மற்றும் திருமண உதவித் தொகைகள் அளிக்கப்படும்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காக தமிழா்கள் புலம்பெயரும் போது, பயண புத்தாக்கப் பயிற்சி சென்னை மட்டுமின்றி, இனி ராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூா், பெரம்பலூா், சிவகங்கை, விழுப்புரம் மாவட்டங்களிலும் நடத்தப்படும். வெளிநாடுகளுக்கு புலம்பெயா்ந்துள்ள தமிழா்களுக்கு ஆலோசனை வழங்க வசதியாக கட்டணமில்லாத தொலைபேசி வசதி மற்றும் இணையதளம், செல்லிடப்பேசி செயலி அமைத்துத் தரப்படும். வெளிநாடுகளில் புலம்பயொ்ந்துள்ள தமிழா்களுக்கு என தனியாக சட்ட உதவி மையம் அமைக்கப்படும். கரோனா தொற்று காரணமாக சுமாா் ஏழு லட்சம் தமிழா்கள் தாயகம் திரும்பியுள்ளனா். அவா்களில் பலா் வேலை இழந்துள்ளனா். அவா்களுக்கு உதவி செய்யும் நோக்கில் தமிழ்நாடு திரும்பியோருக்கு சிறு தொழில்கள் தொடங்கிட அதிகபட்சமாக ரூ.2.5 லட்சம் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும். இதற்கென ரூ.6 கோடி ஒதுக்கப்படும்.

வெளிநாடு வாழ் தமிழா்களில் பெரும்பாலானோா் தங்களது சேமிப்பை தாய்நாட்டில் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்ய ஆா்வத்துடன் உள்ளனா். இதற்காகப் புரிந்துணா்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, அவா்களது முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்.

எனது கிராமம் திட்டம்: புலம்பெயா்ந்த தமிழா்கள், தாம் பிறந்து வளா்ந்த சொந்த ஊரில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும், ஊா் மக்களின் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூா்த்தி செய்யவும் எனது கிராமம் திட்டம் உருவாக்கப்படும். இதில், பள்ளி, மருத்துவமனை, நூலகம் போன்ற கட்டடங்களை கட்டித் தரவும், சீரமைத்திடவும் புலம்பெயா் தமிழா்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். இதற்கான அனைத்து ஒருங்கிணைப்பும் அரசின் தரப்பில் எளிய முறையில் செய்து தரப்படும்.

கல்வி, வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே நிரந்தரமாக குடியுரிமை பெற்றுள்ள தமிழா்களின் வாரிசுகளுக்கு தமிழ் கற்கும் ஆா்வம் உருவாக்கப்படும். தமிழ் மொழியை கற்றிட ஏதுவாகவும், தமிழ் பரப்புரைக் கழகம் மற்றும் தமிழ் இணைய கல்விக் கழகம் மூலமாக குழந்தைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுக்கப்படும். மேலும், அங்குள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் பயிற்றுவிப்பதற்காக ஊக்கத் தொகை மற்றும் தமிழ் கல்வி கற்பிக்கும் ஆசிரியா்களுக்கு பயிற்சியும் வழங்கப்படும்.

புலம்பெயா்ந்துள்ள தமிழா்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும். இந்தச் சங்கங்களின் மூலமாக நமது கலை, இலக்கியம், பண்பாடு பரிமாற்றங்கள் நடைபெறும். இதற்காக ரூ.4 கோடி ஒதுக்கப்படும்.

வெளிநாட்டில் உள்ள தமிழா் நலனைப் பேணிட, நலவாரியம், அதுசாா்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூ.20 கோடி ஒதுக்கப்படும் என்று முதல்வா் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளாா்.

பெட்டிச் செய்தி....ஜனவரி 12 உலகத் தமிழா் நாள்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12–ஆம் தேதி, புலம்பெயா் உலகத் தமிழா் நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று முதல்வா் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளாா். பல்வேறு நாடுகளில் உள்ள தமிழா்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், அவா்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12–ஆம் தேதி, புலம்பெயா்ந்த உலகத் தமிழா் நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று தனது அறிவிப்பில் முதல்வா் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளாா்.

---

**2. இந்தியாவில் 7 இடங்களில் ரூ.4,445 கோடியில் ஜவுளி பூங்கா: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

வேலை வாய்ப்பை அளிக்கும் ஜவுளித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் ரூ.4,445 கோடி முதலீட்டில் 7 மெகா ஜவுளிப் பூங்காக் களை அமைக்க பிரதமர் தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்பு தல் வழங்கப்பட்டுள்ளது. இத்தகவலை மத்திய அமைச்சர் பியுஷ் கோயல் தெரிவித்தார்.

இந்தியாவில் ஜவுளித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 'பி.எம்.மித்ரா' திட்டத்தின்கீழ் 7 மெகா ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை பூங்கா அமைக்கப்படும் என கடந்த பட்ஜெட்டில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். இந்திய ஜவுளித் தொழிலை சர்வதேச அளவில் போட்டியிடும் வகையில் மேம்படுத்துவது இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

அத்துடன் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பது, வேலைவாய்ப்பை உருவாக்குவது, ஏற்றுமதியை அதிகரித்து, அந்நியச் செலா வணியை ஈட்டுவது, சர்வதேச தரத்திலான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்து, அதன்மூலம் வெளிநாட்டு சந்தையில் போட்டியிடும் வகையில் இந்திய தயாரிப்பு களை உருவாக்குவது போன்ற அம்சங்கள் இத்திட்டத்தின் நோக்கங்களாக இருக்கும் என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடந்தது. இதில், 'பிஎம் மித்ரா' திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் மத்திய அமைச்சர் பியுஷ் கோயல் கூறியதாவது:

நாட்டின் 7 இடங்களில் 'பிஎம் மித்ரா' திட்டத்தின்கீழ் மெகா ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைப் பூங்கா அமைக்க மத்திய அமைச் சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.4,445 கோடி செலவிடப்படும். தனியார் முதலீடுகளும் அனுமதிக்கப்படும். இதன்மூலம் ஜவுளி உற்பத்தி அதிகரித்து ஏற்றுமதி வளர்ச்சி ஏற்படும். மேலும், லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளும் உருவாகும்.

பெரிய அளவில் அமைக்கப்படும் இந்த ஜவுளிப் பூங்காக்கள், அந்நிய முதலீடு களை பெருமளவில் ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2021–22 நிதி ஆண்டில் ஜவுளி ஏற்றுமதி மூலம் 4,400 கோடி டாலர் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் 10 ஆயிரம் கோடி டாலர் அளவுக்கு ஜவுளி ஏற்றுமதியை எட்ட இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பியுஷ் கோயல் தெரிவித்தார்.

ரயில்வே ஊழியருக்கு 78 நாள் ஊதியம் போனஸ்

புதுடெல்லி: ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் ஊதியத்தை போனஸாக வழங்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையின்போது ரயில்வே ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் ஊதியம் போனஸாக வழங்கப்படுகிறது.

இது தொடர்பாக அமைக்கப்பட்ட குழு, 72 நாள் ஊதியத்தை போனஸாக அளிக்கலாம் என மத்திய அரசுக்கு பரிந்துரைத்திருந்தது. இந்நிலையில், நேற்று நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கப்பட்டது. பிரதமரும் அமைச்சரவைக் குழுவினரும் 78 நாள் ஊதியத்தை ரயில்வே ஊழியர்களுக்கு போனஸாக அளிக்க ஒப்புதல் அளித்தனர்.

இத்தகவலை செய்தியாளர்களிடம் மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் தெரிவித்தார். ரயில்வே ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவதன் மூலம் அரசுக்கு ரூ.1,985 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

---

**3. பருவநிலை மாற்றமும் இயற்பியல் நோபலும்**

இரண்டு, நான்கு, ஆறு என இப்படியே இரண்டின் மடங்கில் கூட்டிக்கொண்டே செல்கிறோம், இந்தத் தொடரில் 1,000–க்கு அடுத்து எந்த எண் வரும் என்று கேட்டால், 1,002 என்று எளிதாகக் கணிக்க முடியும். இதுவே ஒன்றிலிருந்து ஒன்பது வரை எண்களைக் கொடுத்து, நம் மனப்போக்கில் மாறிமாறி எண்களைச் சொல்லச் சொன்னால், நம் இஷ்டத்துக்கு 2, 9, 7, 5, 1, 4 என்று சொல்லிக்கொண்டே போவோம். இதே போக்கில் போனால், ஒருவர் அடுத்து என்ன எண்களைச் சொல்லுவார் கணிக்க முடியுமா? இப்படி உலகில் பல விஷயங்கள் தற்போக்காகத்தான் நடைபெறுகின்றன. இதனாலேயே அறிவியல் ஆய்வுகளும் கணிப்புகளும் நேரடியானவையாக இருப்பதில்லை.

கூட்டமாகப் பறக்கும் பறவைகள் அடுத்து எந்தத் திசையில் திரும்பும்? வளிமண்டலத்தில் ஏற்படும் சிறுசிறு மாற்றங்களால் நூறாண்டுகள் கழித்துக் கடலின் வெப்பநிலை என்னவாக இருக்கும்? இப்படித் தன் போக்கில் நடக்கும் விஷயங்களைக் கணிக்க முடியாது என்று நாம் நினைத்தாலும், முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள், இந்த ஆண்டு இயற்பியலில் நோபல் பரிசு வென்ற விஞ்ஞானிகளான சுகுரோ மனாபே (Syukuro Manabe), கிளவுஸ் ஹாஸல்மான் (Klauss Hasselmann), ஜார்ஜோ பரீசி (Giorgio Parisi) ஆகிய மூவரும். மிகவும் சிக்கலான விஷயங்களில்கூட அடிப்படையில் ஓர் ஒழுங்கு இருக்கிறது, வடிவுரு இருக்கிறது என்னும் புரிதலைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே "சிக்கலான இயற்பியல் அமைப்புகளைப் புரிந்துகொள்வதற்குத் திறவுகோலாக இருந்த ஆய்வுப் பங்களிப்புகளுக்காக" இந்த ஆண்டுக்கான இயற்பியல் நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

இரவில் வெப்பம் எப்படி?

சூரியனிலிருந்து வரும் கதிர்களால் பூமிக்கு வெப்பம் கிடைக்கிறது. அப்படியென்றால், சூரியன் மறைந்த பின்பு வெப்பம் இல்லாமல் பூமி குளிர்நிலைக்குச் சென்றுவிட வேண்டும் இல்லையா? ஆனால், இரவிலும் குறிப்பிட்ட அளவு வெப்பம் நிலவுகிறது. அதனால்தானே நாம் உறைந்துபோகாமல் இருக்கிறோம். இது ஏன் என்று சிந்தித்த ஃபூரியர், பூமியில் இருக்கும் வளிமண்டலம் வெப்பத்தைத் தக்க வைக்கிறது என்று 200 ஆண்டுகளுக்கு முன்பு கண்டறிந்தார்.

ஜப்பானைச் சேர்ந்த இயற்பியலாளரான மனாபே இரண்டாம் உலகப் போரினால் சிதைந்த டோக்கியோ நகரிலிருந்து 1950–களில் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து, ஆய்வுப் பணிகளை மேற்கொண்டவர். வளிமண்டலம்தான் வெப்பத்தைத் தக்கவைக்கிறது என்றாலும், அதில் எந்த வாயு எவ்வளவு வெப்பத்தைத் தக்கவைக்கிறது என்கிற கேள்வி அவருக்கு எழுந்தது. வளிமண்டலத்தில் பல வாயு மூலக்கூறுகள், பல்வேறு அடுக்குகள் இருப்பதால், இது மிகுந்த சிக்கலான கேள்வி. எனினும் தன் அசாத்திய உழைப்பால், இதற்கான விடையை மனாபே கண்டறிந்தார். காற்றில் இருக்கும் ஆக்ஸிஜனும் நைட்ரஜனும் வெப்பநிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால், வளிமண்டலத்தில் இருக்கும் கரியமில வாயுவின் அளவு இரட்டிப்பானால் வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அதிகரிக்கிறது என்று துல்லியமாகக் கணக்கிட்டுச் சொன்னது, 1960–களில் இவர் கண்டுபிடித்த பருவநிலை மாதிரி. அதற்குப் பின், தினசரி மாறும் வானிலையையும், பொதுவான பருவநிலையையும் இணைக்கும் பணியில் ஈடுபட்டவர் ஜெர்மனியைச் சேர்ந்த பருவநிலையாளர் ஹாஸல்மான்.

மனிதரே காரணம்

ஒரு நாயைக் கூட்டிக்கொண்டு நீங்கள் சாலையில் நடந்துபோனால், அது முன்னே செல்லும், பின்னால் இழுக்கும், காலைச் சுற்றும். இதுபோன்ற சிறுசிறு மாற்றங்களைக் கொண்டதுதான் வானிலை. ஆனால், நீங்களோ சீராக நடந்துபோய் இலக்கை அடைந்துவிடுவீர்கள். இதுதான் பருவநிலை. இன்றளவும் ஒரு வாரம், பத்து நாட்களுக்கு மேல் வானிலை எப்படியிருக்கும் என்று துல்லியமாகக் கணிக்க முடியாது. ஆனால், 50 ஆண்டுகள் கழித்துப் பருவநிலை எப்படியிருக்கும் என்று சொல்ல முடிகிறது.

நாள்தோறும் விரைவாக மாறும் வானிலையால், கடலில் சிறிய மாறுபாடு உண்டாகும் என்பதை 1980–களில் தன் கணக்கீட்டு மாதிரிகளின் அடிப்படையில் ஹாஸல்மான் நிரூபித்தார். மேலும், பருவநிலையில் மனிதச் செயல்பாடுகளால் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கிட்டுச் சொன்னார். பசுங்குடில் விளைவால் புவி வெப்பமடைகிறது என்பதை அறுதியிட்டுச் சொன்னவை, இன்றளவும் பயன்பாட்டில் உள்ள இவருடைய மாதிரிகள். 1980–களில் ஒழுங்கற்ற பொருட்களில் மறைந்திருக்கும் வடிவுருக்களைக் கண்டுபிடித்தவர் இத்தாலியைச் சேர்ந்த ஜார்ஜோ பரீசி.

காந்தத் தன்மையின் ரகசியம்

தற்சுழற்சிக் கண்ணாடி (spin glass) என்று சொல்லப்படும் பொருட்களில் காந்தத் தன்மை கொண்ட அணுக்கள் இருக்கும். அருகில் உள்ள அணுக்களின் தன்மையால் தங்களின் காந்த அமைப்பை இவை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டிவரும். இருப்பினும், அவற்றில் ஓர் அடிப்படை உருமாதிரி இருப்பதைக் கண்டுபிடித்து, எப்படி அணுக்களின் காந்தத்தன்மை அமையும் என்னும் சிக்கலைத் தீர்த்துவைத்தவர் பரீசி. மேலும், இதன் அடிப்படையில், பறவைக் கூட்டம் முதற்கொண்டு கோள்கள் வரை பல்வேறு சிக்கலான அமைப்புகள் சார்ந்து விடையளித்தவர் பரீசி.

பருவநிலை மாற்றத்துக்கு அங்கீகாரம்

நோபல் பரிசுத் தொகையின் ஒரு பாதியை மனாபேவும் ஹாஸல்மானும் பிரித்துக்கொள்ள, மறுபாதி பரீசிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பரீசியின் கண்டுபிடிப்புகள் மற்றவற்றிலிருந்து மாறுபட்டவை போலத் தோன்றினாலும் மூவரும் சிக்கலான, சீரற்ற இயற்பியல் அமைப்புகளைப் புரிந்துகொள்ளும் வழிமுறைகளைக் கொடுத்திருக்கிறார்கள். நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது அரிய கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும் என்பதைத் தாண்டி, ஒரு கண்டுபிடிப்பால் உலகம் எந்த அளவுக்குப் பயனடைந்திருக்கிறது என்பதும் முதன்மையாகக் கொள்ளப்படுவதுண்டு. அப்படிப் பார்க்கையில் இவர்களின் பணி பல்வேறு துறை ஆய்வாளர்களுக்கு ஒளிவிளக்காகத் திகழ்கிறது.

பருவநிலை மாற்றம் குறித்த ஆய்வுகளுக்கு நோபல் பரிசு வழங்கியதன் மூலம், உலகத் தலைவர்களுக்கு ஒரு செய்தியை உணர்த்துகிறீர்களா என்று தேர்வுக் குழுவினரை நோக்கிக் கேள்வி எழுப்பப்பட்டது. "ஆமாம், புவி வெப்பமாதல் என்பது வெறும் வார்த்தை விளையாட்டல்ல, அறிவியல்பூர்வமானது என்று உரக்கச் சொல்லியிருக்கிறோம்'' என்று அதற்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இது ஒன்று போதாதா இந்த ஆண்டு நோபல் பரிசின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்

---

**4. செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சார்பில் 23 மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் 'மணிமேகலை' காப்பியம்**

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான 'மணிமேகலை' காப்பியத்தை சீனம், ஜப்பனீஸ், கொரியன், சிங்களம் உள்ளிட்ட 23 மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியை மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று 'மணிமேகலை' . சிலப்பதிகார காப்பியத்தின் கதாபாத்திரங் களான மாதவி, கோவலனுக்குப் பிறந்த மணிமேகலையைப் பற்றிக்கூறும் இலக்கியமாகும்.

பவுத்த மதத்தை தழுவிய மணிமேகலையின் வாழ்க்கை குறிப்பு மற்றும் பவுத்த மதத்தின் அறநெறிகளை 30 அத்தியாயங்கள், 4,861 அகவல் அடிகளாக இந்தக் காப்பியத்தை 'சீத்தலைச் சாத்தனார்' இயற்றியுள்ளார்.

பாலி, சம்ஸ்கிருதம், தமிழ்உள்ளிட்ட பிற இந்திய மொழிகளில் இயற்றப்பட்ட பவுத்த மத நூல்கள் பல்வேறு காரணங்களால் அழிந்தபோதிலும், மணிமேகலை காப்பியம் மட்டுமே அழிவில் இருந்து தப்பியது. அதன்படி, பவுத்த மதக் கருத்துகளை எடுத்துரைக்கும் தலைசிறந்த நூலாகவும், மிகவும் தொன்மையான தாகவும் இது கருதப்படுகிறது.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த 'மணிமேகலை' காப்பியம் தற்போது மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தால் 15 வெளிநாட்டு மொழிகளிலும், பாலி, லடாக்கி, இந்தி, தெலுங்கு உள்ளிட்ட 8 இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவன இயக்குநர் இரா.சந்திரசேகரன், 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது: உலகிலேயே பவுத்த மதக் காப்பியமாக மணிமேகலை மட்டுமே எஞ்சியுள்ளதாக, பவுத்த மதத் தலைவர் தலாய் லாமா பல ஆண்டுகளுக்கு முன்பு சர்வதேச மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

அதில், பவுத்த மத அறநெறிகள், அதுகுறித்த அரிய தகவல்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, பவுத்த மதத்தைப் பின்பற்றும் நாடுகளில் மணிமேகலை காப்பியத்தை கொண்டுசெல்ல மத்திய தமிழாய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, மலேசியா (மலாய்),கம்போடியா (கெமர்), இந்தோனேசியா (இந்தோனேசியா), லாவோஸ் (லாவோ), மியான்மர் (பர்மீஸ்), சீனா (மாண்டரின் – சீனம்), திபெத்திய மொழி, தாய்லாந்து (தாய்), வியட்நாம் (வியட்நாமிஸ்), ஜப்பான் (ஜப்பனீஸ்), மங்கோலியா (மங்கோலியன்), வடகொரியா, தென்கொரியா (கொரியன்), பூடான் (திஃசொங்கா), இலங்கை (சிங்களம்), நேபாளம் (நேபாளி) ஆகிய நாடுகளின் 15 மொழிகள், பாலி, லடாக்கி, சீக்கியம் உள்ளிட்ட 3 இந்திய மொழிகள் என மொத்தம் 18 மொழிகளில் மணிமேகலை காப்பியம் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

இதற்காக சம்பந்தப்பட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ் பேராசிரியர்கள், அறிஞர்கள் பணியில் அமர்த்தப்பட் டுள்ளனர். இக்காப்பியத்தை ஒரு மொழியில் மொழிபெயர்க்க ரூ.2.5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பு பணிகள் விரைவில் நிறைவு பெற உள்ளன.

பின்னர், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் அவை நூல்களாக வெளியிடப்படும். இதன்மூலம், சர்வதேச அளவில் தமிழ் காப்பியம் சிறப்புமிக்க தகுதியை பெறும். அதேபோல, இந்தி, கன்னடம், மலையாளம், சம்ஸ்கிருதம், தெலுங்கு ஆகிய 5 மொழிகளிலும் மணிமேகலை மொழி பெயர்க்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

---

**5. ராணுவ மைதானத்தின் ஒரு பகுதிக்கு 'ஆரோக்கிய ராஜீவ்' பெயர்: தொடர்ந்து 2 முறை ஒலிம்பிக்கில் பங்கேற்ற திருச்சி வீரருக்கு உதகையில் கவுரவம்**

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே வழுதியூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஆரோக்கிய ராஜீவ்(30). உதகை வெலிங்டனில் உள்ள இந்திய ராணுவத்தின் மெட்ராஸ் ரெஜிமெண்டில் சுபேதாராக பணிபுரிந்து வரும் இவர், தேசிய அளவிலான போட்டிகளில் மட்டுமின்றி சர்வதேச தடகளப் போட்டிகளிலும் சாதனை படைத்து வருகிறார்.

2014 ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலம், 2018 ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி வென்றார். 2016 ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்றார். 2021 டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்கள், கலப்பு 4X400 தொடர் ஓட்டம் என 2 பிரிவுகளில் இந்தியா சார்பில் பங்கேற்றார்.

இப்போட்டிகளில் இந்தியா பதக்கம் வெல்ல முடியவில்லை. எனினும்முகமது அனஸ் யஹியா, நோநிர்மல் டாம், ஆரோக்கிய ராஜீவ்,அமோஜ் ஜேக்கப் ஆகிய வீரர்கள்இடம்பெற்ற ஆண்கள் பிரிவு அணியினர் 4X400 தொடர் ஓட்டத்தில் குறைந்த நிமிடங்களில் (3:00:25) பந்தய தூரத்தைக் கடந்து ஆசிய அளவில் சாதனை படைத்தனர்.

இந்நிலையில், இவர் பணிபுரிந்துவரும் வெலிங்டன் மெட்ராஸ் ரெஜிமெண்ட் வளாகத்தில் உள்ள தங்கராஜ் மைதானத்தின் ஒரு பகுதிக்கு (பார்வையாளர் மாடம்) ஆரோக்கிய ராஜீவ் பெயரைச் சூட்டி கவுரவப்படுத்தியுள்ளது இந்திய ராணுவம். இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ள ஆரோக்கிய ராஜீவ், வெலிங்டன் ராணுவ மைதானத்தில் தனது பெயர் சூட்டப்பட்ட பகுதிக்கு முன்பு நின்று புகைப்படம் எடுத்து 'பெரிதாக தோல்வியடையத் துணிந்தவர்களால் மட்டுமே, எப்போதும் பெரியளவில் சாதிக்க முடியும்' என்ற வாசகத்துடன் அதனை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார்.

இதுகுறித்து 'இந்து தமிழ்' நாளிதழிடம் ஆரோக்கிய ராஜீவ் கூறியதாவது: நான் பயிற்சி பெறும் மைதானத்தின் ஒரு பகுதிக்கு எனது பெயர் சூட்டப்பட்டிருப்பது எனக்கு கிடைத்த அங்கீகாரங்களில் மிகப்பெரிய ஒன்றாக கருதுகிறேன். 2016 ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அடுத்த ஆண்டில், இந்தியஅரசு எனக்கு அர்ஜூனா விருது கொடுத்தது. அதன் பின்பு 2021–ல்2–வது முறையாக ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று திரும்பியுள்ள நிலையில், இந்திய ராணுவ வரலாற்றில் இடம்பெறும் வகையில் தற்போது இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் கிடைத்துள்ள உற்சாகம், என்னை இன்னும்வேகமாக ஓட வைக்கும். எனவே,நிச்சயம் மேலும் மேலும் வெற்றிகளை குவிப்பேன் என்றார்.

ஒலிம்பிக்கில் பங்கேற்ற, அர்ஜூனா விருதுபெற்ற உதகையைச்சேர்ந்த கால்பந்து வீரர் தங்கராசுவின் பெயர், வெலிங்டன் மைதானத்துக்கு ஏற்கெனவே சூட்டப்பட்டுஉள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**6. விபத்தில் சிக்கியவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்பவர்களுக்கு ரொக்கப் பரிசு: மத்திய அரசு அறிவிப்பு**

சாலை விபத்தில் சிக்கியவர்களை அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றால் அவர்கள் உயிர் பிழைக்கும் வாய்ப்புகள் அதிகம். இதை மருத்துவத் துறையில் 'கோல்டன் ஹவர்' என்று சொல்கின்றனர்.

ஆனால் சாலை விபத்துகளில் சிக்கியவர்களை சரியான நேரத்தில் அழைத்துச் செல்ல முடியாததால் பலர் உயிரிழக்கின்றனர். மேலும் காயம் அடைந்தவர்களை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வதால் வழக்கு, போலீஸ் விசாரணை என பல்வேறு தொல்லைகள் வரும் என பயப்படுகின்றனர்.

இந்நிலையில் சாலை விபத்தில் சிக்கியவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் நபர்களுக்கு ரொக்கப் பரிசு தருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சாலை விபத்தில் சிக்கியவர்களை அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உயிரைக் காப்பாற்ற உதவும் நல்ல உள்ளம் கொண்ட நபர்களுக்கு ரூ.5 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இதற்காக உள்ளூர் போலீஸ் நிலையத்தில் இருந்தோ அல்லது மருத்துவமனையில் இருந்தோ அவர்கள் ரசீதைப் பெற்று வரவேண்டும். மாவட்ட அளவிலான குழுக்கள் இதை பரிசீலனை செய்து மாதம்தோறும் இந்த பரிசுகள் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்துக்காக ஒவ்வொரு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு தலா ரூ.5 லட்சத்தை மத்திய அரசு வழங்கும். இந்த நிதியிலிருந்து ரொக்கப் பரிசுகள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும். உள்துறை முதன்மை செயலர் தலைமையில் மாநில கண் காணிப்புக் குழு, இந்தத் திட்டத்தை கண்காணித்து அமல்படுத்தும். இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு நபர், ஓராண்டில் 5 முறை பரிசுகளை பெற முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.–பிடிஐ

---

**7. கிராமப் பொருளாதாரத்தை வலிமைப்படுத்தும் – இ–சொத்து அட்டை திட்டம் நாடு முழுவதும் அமல் : பயனாளிகளுடனான கலந்துரையாடலில் பிரதமர் நரேந்திர மோடி தகவல்**

சோதனை முறையில் அமல்படுத்தப்பட்ட இ–சொத்து அட்டை திட்டம் கிராமப் பொருளாதாரத்தை வலிமைப்படுத்தி உள்ளதாகவும் இது நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இ–சொத்து அட்டை (ஸ்வமித்வா) திட்டத்தை சோதனை முறையில் கடந்த ஆண்டு ஏப்ரல் 24–ம் தேதி பிரதமர் மோடி அறிமுகம் செய்தார். கிராமப்புறங்களில் சொத்து உரிமையை தெளிவாக நிறுவுவதுதான் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம். இதன்படி, ஆளில்லா குட்டி விமானங்கள் மூலம் (ட்ரோன்) நிலப்பரப்பை அளவிட்டு வரைபடம் உருவாக்கப்பட்டு நில உரிமையாளர்களுக்கு மின்னணு சொத்துஅட்டை வழங்கப்படும். அதில் சம்பந்தப்பட்ட நபருக்கு சொந்தமான சொத்து விவரங்கள் அனைத்தும் இடம்பெற்றிருக்கும். இந்ததிட்டத்தின் மூலம் சமூக–பொருளாதார நிலை மேம்படுவதுடன் கிராமங்கள் தன்னிறைவு பெறும் என மத்திய அரசு கருதுகிறது.

22 லட்சம் சொத்து அட்டை

இந்நிலையில், மத்திய பிரதேசமாநிலம் ஹர்தா மாவட்டத்தில் காணொலி மூலம் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஸ்வமித்வா திட்டத்தின் கீழ் 1.7 லட்சம் பேருக்கு இ–சொத்து அட்டையை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார். பின்னர் பயனாளிகளுடன் அவர் கலந்துரையாடினார். அப்போது அவர் கூறியதாவது:

ஸ்வமித்வா திட்டம் மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, உத்தராகண்ட், ராஜஸ்தான், ஹரியாணா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் சோதனை அடிப்படையில் அமல்படுத்தப்பட்டது. இதன்படி இதுவரை 22 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு சொத்து அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் மத்திய பிரதேசத்தில் மட்டும் 3 ஆயிரம் கிராமங்களுக்குட்பட்ட 1.7 லட்சம் குடும்பங்களுக்கு இ–சொத்து அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இந்த சொத்து அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெற்றுக் கொள்ளலாம். இதன்மூலம், அதிக வட்டி வசூலிக்கும் தனியாரிடமிருந்து கடன் வாங்குவதை கிராம மக்கள் தவிர்க்க முடியும். இதுபோன்ற காரணங்களால் இந்த திட்டம் அமல்படுத்தப்பட்ட பகுதிகளில் கிராமப் பொருளாதாரம் வலுவடைந்துள்ளது.

இந்த திட்டம் கிராமங்களின் வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும். வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டம்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும். கிராம சுயாட்சிக்கு எடுத்துக்காட்டாக இந்த திட்டம் விளங்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.– பிடிஐ

---

**8. வேதியியலுக்கான நோபல் பரிசு: இரு விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்தளிப்பு**

2021ஆம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு இரு விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்தளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயிலும், மற்ற பரிசுகள் ஸ்டாக்ஹோமிலும் அறிவிக்கப்படும்.

அந்த வகையில் வேதியியலுக்கான நோபல் பரிசு இன்று (புதன்கிழமை) அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜெர்மனியைச் சேர்ந்த பெஞ்சமின் லிஸ்ட், பிரிட்டனைச் சேர்ந்த டேவிட் மெக்மில்லன் ஆகியோருக்கு இவ்வாண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக நோபல் கமிட்டி தரப்பில் அறிவிக்கப்பட்டது,

இரு விஞ்ஞானிகளும் வேதியியல் மூலக்கூறு கட்டுமானத்திற்கான புதிய மற்றும் தனித்துவமான வினையூக்கி (asymmetric organocatalysis ) கருவியை உருவாக்கியதற்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

வேதியியலில் இருவித வினையூக்கிகளே (உலோகங்கள் மற்றும் நொதிகள்) உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் நீண்டகாலமாக நினைத்துவந்த சூழலில், இவர்களின் இந்தக் கண்டுபிடிப்பு புதிய மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு உதவிகரமாக அமைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**9. ஊரக உள்ளாட்சித் தோ்தல்: 74 சதவீத வாக்குப்பதிவு**

தமிழகத்தில் ஊரக உள்ளாட்சித் தோ்தல் நடைபெற்ற 9 மாவட்டங்களில் புதன்கிழமை நடைபெற்ற முதல்கட்ட வாக்குப் பதிவில் 74.37 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூா், ராணிப்பேட்டை, திருப்பத்தூா், திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் 78 மாவட்ட ஊராட்சி உறுப்பினா்கள், 755 ஒன்றியக் குழு உறுப்பினா்கள், 1,577 கிராம ஊராட்சித் தலைவா்கள், 12,252 கிராம ஊராட்சி உறுப்பினா்கள் பதவிக்கான முதல்கட்ட வாக்குப் பதிவு புதன்கிழமை (அக்.6) நடைபெற்றது. 41 லட்சத்து 94 ஆயிரம் வாக்காளா்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இணையதளம் வழியே கண்காணிப்பு: வாக்குப் பதிவு அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்யவும், அசம்பாவிதங்களைத் தவிா்க்கவும் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. வாக்குப் பதிவை சென்னையில் உள்ள மாநிலத் தோ்தல் ஆணையா் அலுவலகத்தில் இருந்து ஆணையா் வெ.பழனிகுமாா், செயலா் சுந்தரவல்லி ஆகியோா் இணையதளம் வழியே கண்காணித்தனா். இதையடுத்து ஆணையா் வெ.பழனிகுமாா் செய்தியாளா்களிடம் கூறியது: 9 மாவட்டங்களில் முதல்கட்ட வாக்குப் பதிவுக்காக 7,921 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. இவற்றில் 12 ஆயிரத்து 318 கண்காணிப்பு கேமராக்களும், 1,132 வாக்குச் சாவடிகளில் விடியோ பதிவும், சென்னையில் இருந்து வாக்குப் பதிவை நேரடியாகக் கண்காணிக்க 1,123 ஆன்லைன் கேமராக்களும் பொருத்தப்பட்டிருந்தன. 9 தோ்தல் பாா்வையாளா்கள், 129 பறக்கும் படைகள், 1,168 நுண் பாா்வையாளா்கள், 74 வட்டாரப் பாா்வையாளா்கள், 1 லட்சத்து 17 ஆயிரம் தோ்தல் பணியாளா்கள், 39,408 போலீஸாா் தோ்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டனா். அசம்பாவிதம் இன்றி அமைதியாக தோ்தல் நடைபெற்றது.

765 வழக்குகள் பதிவு: தோ்தல் நடத்தை விதிகளை மீறியது தொடா்பாக 9 மாவட்டங்களில் 765 போ் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 97 லட்சத்து 98 ஆயிரம் ரொக்கமும், 34 லட்சம் மது பாட்டில்களும், 14.48 கிலோ சந்தனக் கட்டைகளும், 1,551 பட்டுப் புடவைகள், 1,341 துண்டுகள், 100 மின் விசிறிகள், 250 பித்தளை விளக்குகள், 600 குங்குமச் சிமிழ்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றாா்.

விறுவிறு வாக்குப் பதிவு: புதன்கிழமை காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு நடைபெற்றது. பிற்பகல் வரை பெரும்பாலான மாவட்டங்களில் வாக்குப் பதிவு மந்தமாக நடைபெற்றது. அதன்பிறகு மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. கரோனாவுக்கு சிகிச்சை பெறுவோா் வாக்களிக்கும் வகையில் கடைசி ஒரு மணி நேரம் அதாவது மாலை 5 மணி முதல் 6 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. மாலை 6 மணிக்குள் வாக்களிக்க வந்தவா்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வாக்களிக்க அனுமதி அளிக்கப்பட்டது. முகக்கவசம் அணிந்து வந்தவா்கள் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டதுடன், வாக்காளா்களுக்கு கையுறை இலவசமாக வழங்கப்பட்டன. புதன்கிழமை காலை 9 மணி நிலவரப்படி, 7.72 சதவீத வாக்குகளும், மாலை 4 மணி நிலவரப்படி சுமாா் 50 சதவீத வாக்குகளும், வாக்குப் பதிவு முடிவடைந்தபோது சராசரியாக 74.37 சதவீத வாக்குகளும் பதிவானதாக மாநிலத் தோ்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

---

**10. மாசில்லா சுவாசம் எப்போது?**

ஒவ்வோர் ஆண்டும் காற்று மாசு உலகளவில் 70 லட்சம் முன்கூட்டிய இறப்புகளை ஏற்படுத்துவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. காற்று மாசால் குழந்தைகளுக்கு நுரையீரல் வளர்ச்சியும் இயக்கமும் குறைகிறது; சுவாச நோய்த்தொற்றும் ஆஸ்துமாவும் ஏற்படுகிறது.

உலக சுகாதார அமைப்பானது காற்று மாசு தொடர்பான மாற்றப்பட்ட தர விதிகளை கடந்த மாதம் வெளியிட்டது. அதன்படி, காற்றில் காணப்படும் பிஎம்2.5 எனப்படும் நுண் துகள்களின் அதிகபட்ச சுவாசிக்கத்தக்க அளவு ஒரு கனமீட்டருக்கு 15 மைக்ரான்களாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 2005–ஆம் ஆண்டு இந்த அளவு 25 மைக்ரான்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

10 மைக்ரான் விட்டம் அல்லது அதற்கு குறைவான நுண் துகள்கள் பிஎம்10 எனவும், 2.5 மைக்ரான் விட்டம் அல்லது அதற்கு குறைவான நுண் துகள்கள் பிஎம்2.5 எனவும் அழைக்கப்படுகின்றன. இந்த இரு அளவிலான நுண் துகள்களும் மனிதர்களின் நுரையீரலுக்குள்

ஊடுருவும் திறன் கொண்டவை. அதிலும் பிஎம்2.5 நுண் துகளானது ரத்த ஓட்டத்தில் கலந்து இதய மற்றும் சுவாச உறுப்புகளைப் பாதித்து, பிற உறுப்புகளையும் பாதிக்கிறது.

போக்குவரத்து, எரிசக்தி, வீடுகள், தொழிற்சாலைகள், விவசாயம் உள்ளிட்ட துறைகளில் எரிபொருள் எரிக்கப்படும்போது இந்த நுண்துகள்கள் வெளியாகின்றன.

இந்தியாவில் தேசிய சுற்றுப்புற காற்று தரநிலைகளின்படி (சஅஅணந), பிஎம்2.5 அளவானது அதிகபட்சம் 60 மைக்ரான்களாக இருக்க வேண்டுமென 2009–இல் நிர்ணயிக்கப்பட்டது. 2021–இல் இந்தியாவின் பெரிய நகரங்கள் பல, உலக சுகாதார நிறுவனத்தின் 2005–ஆம் ஆண்டு தர நிர்ணய அளவைத் தாண்டியுள்ளன.

புதிய விதிகளின்படி பார்த்தால் இந்த நகரங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காற்று மாசு காரணமாக அதிகரிக்கும் உயிரிழப்பும் இந்தியாவில் அதிகரித்துள்ளது.

காற்று மாசானது அனைத்து நாடுகளிலும் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றாலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம்கொண்ட நாடுகளில் பாதிப்பு அதிகமாக உள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் புதிய காற்றுத் தர வழிகாட்டுதல்கள் ஆதாரத்தின் அடிப்படையிலானது. அனைத்து உயிர்கள் தொடர்புடைய காற்றின் தரத்தை உயர்த்த இது வழிகாட்டும்.

அனைத்து நாடுகளும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் போராட வேண்டும் – டெட்ரோஸ் அதானோம், உலக சுகாதார அமைப்பின் இயக்குநர்.

புதிய தரவிதிகள்

உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய காற்று மாசு தரவிதியானது 24 மணி நேரத்தில் பிஎம்2.5 நுண் துகள்களின் சுவாசிக்கத்தக்க அளவு 15 மைக்ரான்களாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் அனுமதிக்கப்பட்ட அளவானது 60 மைக்ரான்களாக உள்ளது.

நகரங்களில் காற்றின் தரம்

2021 ஜன. 1–ஆம் தேதி முதல் செப். 27–ஆம் தேதி வரை, உலக சுகாதார நிறுவனத்தின் புதிய அறிவிப்பின்படி நகரங்களில் காணப்பட்ட நுண்துகள்களின் விவரம், காற்றில் பிஎம்2.5 நுண் துகள்களின் அனுமதிக்கப்பட்ட அளவான 15 மைக்ரான்கள், 25–மைக்ரான்களுக்கு மேல் 60 மைக்ரான்கள் வரை, இந்தியாவின் தரநிலையான 60 மைக்ரான்களுக்கு மேல் வரை காணப்பட்ட சராசரி நாள்கள் குறித்த அட்டவணை:

நகரங்கள் >15 25–60 >60

1 தில்லி 0 32 68

2 பாட்னா 1 37 44

3 லக்னௌ 4 47 31

4 கொல்கத்தா 11 39 29

5 ஜெய்ப்பூர் 4 62 23

6 ஆமதாபாத் 0 70 23

7 ஹைதராபாத் 43 38 8

8 மும்பை 16 47 7

9 கோவை 0 86 6

10 சென்னை வேளச்சேரி 53 29 2

11 பெங்களூரு 34 40 1

12 திருவனந்தபுரம் 11 39 0.4.

15 மைக்ரான்கள் வரை காணப்பட்ட சராசரி நாள்கள்

25 மைக்ரான்களுக்கு மேல் 60–க்குள் காணப்பட்ட சராசரி நாள்கள்

60 மைக்ரான்களுக்கு மேல் காணப்பட்ட சராசரி நாள்கள்

---

**11. 2025–இல் பெட்ரோலுடன் 20% எத்தனால் கலக்கப்படும்: இந்தியன் ஆயில் அதிகாரி தகவல்**

நாடு முழுவதும் வரும் 2025–ஆம் ஆண்டில் பெட்ரோலுடன் 20 சதவீதம் அளவுக்கு எத்தனால் கலக்கப்படும். பெட்ரோல், டீசலில் எத்தனால் கலப்பதால் பயனாளருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்தியன் ஆயில் நிறுவன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநா் எஸ்.எஸ்.வி.ராமகுமாா் தெரிவித்துள்ளாா்.

இந்தியன் ஆயில் நிறுவன விரிவாக்கம் குறித்தும், மாற்று எரிசக்தி குறித்தும் விளக்கமளிப்பதற்காக இந்தியன் ஆயில் நிறுவன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநா் எஸ்.எஸ்.வி.ராமகுமாா் சென்னையில் புதன்கிழமை செய்தியாளா்களை சந்தித்தாா்.

அப்போது அவா் கூறியது: பெட்ரோல், டீசல் ஆகியவற்றுடன் எத்தனால் கலப்பதால் என்ஜின் செயல்பாட்டில் எந்த பாதிப்பும் ஏற்படாது. பெட்ரோல், டீசல் என்ஜினில் எரியும் திறனோடு எத்தனால் சோ்ந்தால் அதிக அளவு ஆக்டான்ஸ் கிடைக்கும். எனவே பெட்ரோல், டீசலில் எத்தனால் கலப்பதால் எவ்வித இழப்பும் பயனாளருக்கு ஏற்படாது.

தற்போது 10 சதவீதம் அளவுக்கு பெட்ரோலில் எத்தனால் கலக்கப்படும் நிலையில், 2025– ஆம் ஆண்டு முதல் 20 சதவீதம் எத்தனால் கலக்கப்படும். சிஎன்ஜி (இசஎ) வாயு தயாரிக்கும், விநியோகிக்கும் நிலையங்களை நாடு முழுவதும் இந்தியன் ஆயில் நிறுவனம் நிறுவவுள்ளது. இதன் மூலம் 5,000 தொழில் முனைவோருக்கு வாய்ப்புக் கிடைக்கும். இந்த சிஎன்ஜி வாயுவுடன் ஹைட்ரஜன் வாயுவை கலப்பதால் அதி திறன் கொண்ட சிஎன்ஜி வாயு கிடைப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. எனவே அவற்றை உற்பத்தி, விநியோகம் செய்வது குறித்து பாதுகாப்பு நடவடிக்கைக்காக உச்ச நீதி மன்றத்தை அணுகியுள்ளோம். அதன் அனுமதி கிடைத்தவுடன் சிஎன்ஜி வாயுவுடன் ஹைட்ரஜன் வாயு கலந்து விநியோகம் செய்யப்படும்.

இந்தியாவில் 90 சதவீத மக்கள் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்துகின்றனா். ஆனால் 50 சதவீதத்துக்கும் குறைவான உற்பத்திதான் இந்தியாவில் நடக்கிறது. எனவே இந்தியா, பெரும்பாலான எரிவாயுவுக்கு இறக்குமதியை நம்பியே உள்ளது. இதற்கு முன்பு சலுகை விலையில் சமையல் எரிவாயு (கடஎ) விநியோகம் செய்யப்பட்டது. தற்போது அரசின் கொள்கையின் படி, சா்வதேச சந்தை விலையை பொறுத்து விற்கப்படுகிறது. இதனால் விலை மாறுதல் ஏற்படுகிறது என்றாா் எஸ்.எஸ்.வி.ராம்குமாா்.

---

**12. விவசாயியும் விவசாயமும்**

இந்திய கிராமப்புற குடும்பத்தின் வருமானத்தில் நான்கில் மூன்று பங்கு விவசாயத்திலிருந்து வந்தது. இது 1970–இல். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு 2020– ஆம் ஆண்டில் இது மூன்றில் ஒரு பங்கிற்கும் கீழே குறைந்துள்ளது.

தற்போது பெரும்பாலான விவசாயக் குடும்பங்கள் விவசாயத்தினைக் கைவிட்டு வேறு தொழில்கள் மூலம் சம்பாதிக்கின்றன. 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரம், ஒவ்வொரு நாளும் 2,000 விவசாயிகள் விவசாயத்தைக் கைவிடுகின்றனா் என்று கூறுகிறது.

காலநிலை மாற்றம் விவசாயத்தினை கடுமையாக பாதிக்கிறது. காலநிலை மாற்ற பாதிப்புகளால் விவசாயிகளின் வருமானம் 25 சதவீதம் வரை குறையும் என்கிறது அரசாங்க தரவு. காலநிலை மாற்றம், விவசாயம் அதிகம் நடைபெறும் இந்தியாவின் நூறு ஏழை மாவட்டங்களில் கடுமையான பாதிப்பினை ஏற்படுத்துகிறது.

இதுபோன்ற காலநிலை மாற்ற பாதிப்புகள் ஆண்டுக்கு 700 கோடி ரூபாய் வரை இழப்பை ஏற்படுத்துகின்றன. உலகின் அதிக மக்களை பாதிக்கும் இரண்டாவது மிக மோசமான பாதிப்பான வறட்சி, 30 கோடி இந்திய மானாவாரி விவசாயிகளைக் கடுமையாக பாதிக்கிறது.

1950–இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 51 சதவீதமாக இருந்த விவசாயத்தின் பங்களிப்பு, தற்போது 16 சதவீதமாக குறைந்துள்ளது. அதேவேளையில், 1951–ஆம் ஆண்டில் ஏழு கோடி குடும்பங்கள் விவசாயத்தை நம்பியிருந்த நிலையில், தற்போது அது 12 கோடி குடும்பங்களாக உயா்ந்துள்ளது.

உலகின் மிக வேகமாக வளா்ந்து வரும் பொருளாதாரங்களில் இந்தியப் பொருளாதாரமும் ஒன்று என்ற தரவு விவசாயிக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தவில்லை. ஏனெனில் நமது நாட்டின் ஒவ்வொரு இரண்டாவது விவசாயியும் கடன் வாங்குகிறாா்.

இந்திய விவசாயி சராசரியாக மாதம் 6,426 ரூபாய் சம்பாதித்து 6,223 ரூபாயை செலவிடுகிறாா். 15% இந்திய விவசாயிகள் மட்டுமே வருமானத்தில் 91%–ஐ சம்பாதிக்கின்றனா். இது வருமான சமத்துவமின்மைக்கு காரணமாக அமைகிறது.

ஒரு ஹெக்டோ் நிலத்தில் பயிரிடப்படும் கோதுமையிலிருந்து 7,639 ரூபாய் மட்டுமே ஒரு விவசாயி சம்பாதிக்கிறாா். கோதுமைக்கான உற்பத்திச் செலவு 32,644 ரூபாய். ஒரு ஹெக்டேருக்கான நஷ்டம் 25,005 ரூபாய். இது பெரும் இழப்பு என்கிறது ஒரு ஆய்வு.

விவசாயக் குடும்பங்கள், கிராமப்புறங்களில் விவசாய நிலம் வைத்திருப்பவா்களின் 2019–ஆம் ஆண்டுக்கான நிலை மதிப்பீட்டு அறிக்கை செப்டம்பா் 10, 2021 அன்று வெளியிடப்பட்டது. பாதிக்கும் மேற்பட்ட இந்திய விவசாய குடும்பங்கள் கடனில் உள்ளதாகவும், சராசரியாக அவா்களின் கடன்தொகை 74,121 ரூபாய் என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

2013–ஆம் ஆண்டிற்கான நிலை மதிப்பீட்டுக் கணக்கீட்டுடன் ஒப்பிடும்போது 2019–ஆம் ஆண்டில் கடனில் தவிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 51.9%–லிருந்து 50.2%–ஆக சற்று குறைந்துள்ளது. இருப்பினும் கடன்பெற்ற குடும்பங்களின் கடன்தொகை 47,000 ரூபாயிலிருந்து 74,121 ரூபாயாக அதிகரித்துள்ளது.

69.6% விவசாயிகள் வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசு சாா்ந்த நிறுவனங்களிலிருந்தும் 20.5% விவசாயிகள் தனியாா் நிதி நிறுவனங்களில் இருந்தும் கடன் பெற்றதாக தேசிய புள்ளியியல் அலுவலகத் தரவு கூறுகிறது. விவசாயிகள் வாங்கிய மொத்தக் கடனில் 57.5 சதவீதம் மட்டுமே விவசாய நோக்கங்களுக்காக வாங்கப்பட்டது என்கிறது இத்தரவு.

28 இந்திய மாநிலங்களில் அதிக கடன் பெற்றுள்ள விவசாயக் குடும்பங்கள் கொண்ட ஆந்திர மாநிலத்தில் 93.2 சதவீத விவசாயக் குடும்பங்கள் கடனில் உள்ளன என்றும், அவற்றின் சராசரி கடன் தொகை 2.45 லட்சம் என்றும் 2019–ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு கூறுகிறது.

இதற்கு அடுத்தபடியாக விவசாய கடன் பெற்ற 91.7% குடும்பங்களைக் கொண்ட தெலங்கானா மாநிலத்தின் சராசரி கடன் தொகை 1.52 லட்சமாகவும் 69.9% குடும்பங்களைக் கொண்ட கேரள மாநிலத்தின் சராசரி கடன் தொகை 2.42 லட்சமாகவும் இருப்பதாக இக்கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

ஹரியாணா, பஞ்சாப், கா்நாடகம், ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் கடன் பெற்ற விவசாயக் குடும்பங்கள் சராசரியாக ஒவ்வொன்றும் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் கடன் பெற்றுள்ளது. மொத்தத்தில் 11 மாநிலங்களில் இந்தத் கடன் தொகை தேசிய சராசரியான 74,121 ரூபாயை விட அதிகமாக உள்ளது.

ஒரு விவசாயக் குடும்பம் பயிா் சாகுபடி, விளைபொருட்கள் வணிகம் மட்டுமல்லாது விவசாயக் கூலி, கால்நடைகள் வளா்த்தல், உரம் – பூச்சிமருந்துகள் போன்ற விவசாயம் தொடா்பான பொருட்களின் வணிகம் ஆகியவற்றின் மூலமாக வருமானம் ஈட்டலாம். 2013–ஆம் ஆண்டில் 6,426 ரூபாயாக இருந்த விவசாயக் குடும்பங்களின் சராசரி வருமானம் 2019–ஆம் ஆண்டில் 10,218 ரூபாயாக அதாவது 57% அதிகரித்துள்ளது என்றும் ஆண்டு வளா்ச்சி விகிதம் 7.8% என்றும் தரவு கூறுகிறது.

இந்த வருமான அதிகரிப்பு, விவசாயத் தொழிலுக்கான ஊதியத்தாலும் கால்நடை வளா்ப்பாலும் உருவானது. 2018–19 ஆண்டில் விவசாய கூலி, பயிா் சாகுபடி, கால்நடை வளா்ப்பு, விவசாய சம்பந்தப்பட்ட பொருட்கள், வணிகம் வேளாண்துறை மொத்த வருமானத்தில் முறையே 40%, 38%, 16%, 6% பங்குகளைக் கொண்டிருந்தன. இதுவே 2012–13 ஆண்டில் முறையே 32%, 48%, 12%, 8% என இருந்தது.

இத்தரவுகள் விவசாயக் குடும்பங்கள் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை விவசாய சாகுபடி மூலமாக சம்பாதிக்கவில்லை என்பதைத் தெளிவாக்குகின்றன. மொத்த சராசரி வருமானத்தில் அதிக பங்கு (ரூ. 4,063) ஊதியத்திற்கான வருமானம்.

வேளாண் துறையில் ஒரு தொழிலாக சுருங்கி வரும் விவசாயம் விவசாயிகளின் பெரும் வருமான ஆதாரமாக இல்லை என்பது உண்மையில் வருத்தம் தரும் செய்தி. கரோனா தீநுண்மியின் தாக்கம் உச்சம் பெற்ற காலத்தில் விவசாயிகளின் உழைப்பு காரணமாக இந்தியாவில் வேளாண் துறை மட்டுமே வளா்ச்சிபெற்றது.

தன்னிறைவு உணவு உற்பத்தி கொண்ட நாடாக இந்தியா இருக்கிறது. அதற்குக் காரணமான விவசாயி தன்னிறைவு கொள்ள வேண்டுமானால் அவன் கடனின்றி வாழ வேண்டும். அதற்கு ஆவன செய்யட்டும் அரசு.

---

### 13. பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தகங்களின் இலக்கு நிறைவு

வறுமைக்கோட்டுக்குள் இருக்கும் மக்கள் பயன் பெறும் வகையிலான பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தகம் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் திறக்கப்பட்டுவிட்டதாக மத்திய ரசாயனம், உரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி 8,300 மக்கள் மருந்தகங்கள் இதுவரை திறக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண நோய்கள் முதல் நீடித்த நோய்கள் வரையிலான அலோபதி மருந்துகள், வெளிச் சந்தைகளில் அதிக விலையில் விற்கப்படுகின்றன. இந்த மருந்துகள் பொதுமக்களுக்கு மலிவான விலையில் கிடைக்க மத்திய அரசு கொண்டுவந்துள்ள திட்டம்தான் "பிரதம மந்திரி பாரதிய மக்கள் மருந்தக திட்டம் (பிஎம்பிஜேபி)' ஆகும். இந்தத் திட்டத்தை இந்திய மருந்துகள், மருத்துவ சாதனங்கள் பணியகம் (பிஎம்பிஜ) பொறுப்பேற்று நாடு முழுவதும் மலிவு விலையில் முக்கிய மருந்துகளை விற்பனை செய்யும் வகையில், பிரதம மந்திரி பாரதிய மக்கள் மருந்தகங்களைத் திறந்து வருகிறது.

இந்த மருந்தகங்கள் மூலம் சுமார் 1,451 மருந்துகள், 240 மருத்துவ சாதனங்கள் மலிவான விலையில் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த 2020, மார்ச் வரை 696 மாவட்டங்களில் 6,068 மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டன. நிகழ் 2021–22–ஆம் நிதியாண்டில் 8,300 மக்கள் மருந்தகங்கள் திறக்கத் திட்டமிடப்பட்டு அக்டோபர் 5–ஆம் தேதி வரை 8,355 மருந்தகங்கள் திறக்கப்பட்டுவிட்டதாக ரசாயனத் துறை தெரிவித்துள்ளது. மேலும், 2024–ஆம் ஆண்டுக்குள் 10,000 மக்கள் மருந்தகங்களைத் திறக்கவும் மத்திய ரசாயனத் துறை திட்டமிட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழகத்தில்... தற்போது நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (725) மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டுவிட்டன. தமிழகத்தில் இதுவரை சுமார் 827 மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டு நாட்டிலேயே சிறப்பாகச் செயல்படுவதாகவும் மத்திய ரசாயனத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் அனைத்து மக்கள் மருந்தகங்களும் விநியோகச் சங்கிலியால் இணைக்கப்பட்டு நிகழ்நேர அடிப்படையில் மருந்து விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது.

2020–21– ஆம் ஆண்டில் மக்கள் மருந்தகங்கள் மூலம் ரூ.665.83 கோடிக்கு விற்பனை நடந்துள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் ரூ. 4,000 கோடி வரை சேமிக்க முடிந்துள்ளது என்று அமைச்சகம் கூறியுள்ளது.

---

### 14. சர்வதேச ஆக்கி சம்மேளனத்தின் அனைத்து விருதுகளையும் அள்ளியது இந்தியா

சர்வதேச ஆக்கி சம்மேளனம் சார்பில் ஆண்டுதோறும் சிறந்த வீரர், வீராங்கனை உள்பட பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர், வீராங்கனை உள்ளிட்ட விருதுக்கான பட்டியல் ஏற்கனவே வெளியிடப்பட்டு இருந்தது. இதில் இருந்து ஒவ்வொரு பிரிவிலும் ஒருவரை விருதுக்கு தேர்வு செய்ய 'ஆன்–லைன்' மூலம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் தேசிய ஆக்கி அணிகளின் கேப்டன்கள், பயிற்சியாளர்கள், ரசிகர்கள் மற்றும் வீரர்கள், ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அளிக்கும் வாக்குகளின் சதவீதத்தை அடிப்படையாக கொண்டு விருதுக்கு தேர்வாகி இருக்கும் வீரர், வீராங்கனைகளின் பெயரை சர்வதேச ஆக்கி சம்மேளனம் நேற்று அறிவித்தது.

இதன்படி அனைத்து பிரிவுகளின் விருதுகளையும் இந்தியா கைப்பற்றியது. டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்த இந்திய அணியில் அதிக கோல்கள் அடித்த ஹர்மன்பிரீத் சிங் 52.11 சதவீத வாக்குகளுடன் சிறந்த வீரர் விருதுக்கும், டோக்கியோ ஒலிம்பிக்கில் 4–வது இடம் பெற்ற இந்திய பெண்கள் அணியில் அதிக கோல்கள் போட்ட குர்ஜித் கவுர் 46.63 சதவீத வாக்குகளுடன் சிறந்த வீராங்கனை விருதுக்கும் தேர்வாகி இருக்கிறார்கள்.

சிறந்த கோல்கீப்பர் விருதுக்கு இந்திய அணியை சேர்ந்த ஸ்ரீஜேஷ் (ஆண்கள்), சவிதா புனியா (பெண்கள்) ஆகியோரும், வளர்ந்து வரும் நட்சத்திர விருதுக்கு ஷர்மிளா தேவி (பெண்கள்), விவேக் சாகர் பிரசாத் (ஆண்கள்) ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்திய ஆண்கள் அணியின் பயிற்சியாளர் கிரகாம் ரீட், பெண்கள் அணியின் பயிற்சியாளர்

ஜோர்ட் மர்ஜினே ஆகியோர் சிறந்த பயிற்சியாளர்களாக தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றனர்.

சிறந்த வீரர்கள் தேர்வுக்கு பெல்ஜியம் ஆக்கி சம்மேளனம் அதிருப்தி தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த சம்மேளனம் வெளியிட்டு இருக்கும் டுவிட்டர் பதிவில், 'ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற பெல்ஜியம் அணியை சேர்ந்த வீரர்கள் பட்டியலில் இருந்தும் ஒருவர் கூட விருதுக்கு தேர்வாகாதது விருதுக்கான வாக்கெடுப்பு முறையின் தோல்வியை எடுத்துக்காட்டுகிறது. வருங்காலத்தில் விருது தேர்வுக்கான முறை நியாயமானதாக இருக்கும் வகையில் மாற்றி அமைக்க நாங்கள் சர்வதேச ஆக்கி சம்மேளனத்துடன் இணைந்து பணியாற்றுவோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு சர்வதேச ஆக்கி சம்மேளனம் அளித்த விளக்கத்தில் 'விருதுக்கு தேர்வானவர்கள், 3 பிரிவினரும் அளித்த வாக்குகளில் முதலிடத்தை பெற்றுள்ளனர். தேவைப்பட்டால் விருது வழங்கும் நடைமுறையில் மாற்றம் செய்ய வேண்டியது குறித்து மறுபரிசீலனை செய்வோம். தேசிய சம்மேளன பிரதிநிதிகள் முழுமையாக வாக்களிக்காதது ஏன்? என்பது குறித்து கவனம் செலுத்தப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**15. உலகின் முதல் மலேரியா தடுப்பூசி: ஆப்பிரிக்க குழந்தைகள் பெறுகிறாா்கள்**

உலகின் முதல் மலேரியா தடுப்பூசி, ஆப்பிரிக்க குழந்தைகளுக்குச் செலுத்தப்படவுள்ளது. மலேரியா காய்ச்சலைத் தடுப்பதற்காக மாஸ்குயிரிக்ஸ் என்ற தடுப்பூசியை கிளாக்ஸோ ஸ்மித்கிளைன் நிறுவனம் கடந்த 1987-இல் உருவாக்கியது. அந்த தடுப்பூசியின் செயல்திறன் குறைவாக இருந்ததால், அதை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடா்ச்சியாக, கடந்த 2019-இல் இருந்து கானா, கென்யா, மாலவி ஆகிய நாடுகளில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறாா்களுக்கு மலேரியா தடுப்பூசி செலுத்தப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆராய்ச்சியில் கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் இந்த தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு உலக சுதாகார அமைப்பு புதன்கிழமை ஒப்புதல் அளித்தது. முதல் முறையாக, ஆப்ரிக்காவைச் சோ்ந்த சிறுவா்கள், மலேரியா தடுப்பூசியை செலுத்திக்கொள்ள இருக்கிறாா்கள். 'இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம்' என்று உலக சுகாதார அமைப்பின் இயக்குநா் டெட்ரோஸ் அதானோம் கூறினாா். மலேரியாவைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மந்தமாகியிருந்த நிலையில், தடுப்பூசி வந்திருப்பது அதிகாரிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

---

**1. உணவு இழப்பு மற்றும் சேதம் குறித்த சர்வதேச விழிப்புணர்வு நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) செப்டம்பர்.29 ☑**

ஆ) செப்டம்பர்.30

இ) அக்டோபர்.1

ஈ) அக்டோபர்.2




✓ செப்.29 அன்று உணவுவிழப்பு மற்றும் சேதம் குறித்த இரண்டாவது சர்வதேச விழிப்புணர்வு நாளை உலகம் கொண்டாடுகிறது. சமீபத்தில் நடைபெற்ற ஐநா உணவமைப்பு உச்சிமாநாட்டில் "உணவு ஒருபோதும் வீணாகாது" என்ற கூட்டணியை UNEP அறிமுகப்படுத்தியது.

✓ "Stop Food Loss and Waste; For the People; For the Planet" என்பது இந்த ஆண்டின் (2021) கருப்பொருளாகும். உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களில் சுமார் 14% அறுவடை மற்றும் சில்லறை விற்பனையின் போது வீணாகின்றது. அதே நேரத்தில், உலகளாவிய உணவு உற்பத்தி –யில் 17% வரை பல்வேறு நிலைகளில் வீணாகின்றது. உலக இருதய நாளானது செப்டம்பர்.29 அன்று கொண்டாடப்படுகிறது. "Use Heart to Connect" என்பது இந்த ஆண்டின் கருப்பொருள் ஆகும்.

---

**2. 'இனிப்புப்புரட்சி' என்ற NBHM திட்டத்துடன் தொடர்புடையது எது?**

அ) கரும்பு

**ஆ) தேன் ☑**

இ) பழங்கள்

ஈ) பனை



✓ தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கமானது (NBHM), மூன்று ஆண்டுகளுக்கு (2020–21 முதல் 2022–23 வரை) அறிவித்துள்ளது. இது, 'இனிப்புப்புரட்சி' என்ற இலக்கை அடைவதற்காக நாட்டில் அறிவியல் பூர்வமான முறையில் தேனீ வளர்ப்பை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இது தேசிய தேனீ வாரியம் (NBB) மூலம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், சமீபத்தில், 'தேசிய தேனீ வாரியத்தின்' ஒத்துழைப்புடன் குஜராத் கூட்டுறவு பால் சந்தை கூட்டமை –ப்பின் தயாரிப்பான 'அமுல் தேன்' என்பதை வெளியிட்டார்.

---

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற புமியோ கிஷிடா, எந்த நாட்டின் அடுத்த பிரதமராவார்?**

**அ) ஜப்பான் ☑**

ஆ) வட கொரியா

இ) தாய்லாந்து

ஈ) வியட்நாம்



✓ ஜப்பானின் முன்னாள் வெளியுறவு அமைச்சரான புமியோ கிஷிடா, யோஷிஹைட் சுகாவுக்கு மாற்றாக பிரதமராகவுள்ளார். அவர், ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளார். COVID தொற்று, வரலாறு காணாத பொது சுகாதார நெருக்கடி மற்றும் சீனாவின் எல்லைமீறிய அரசியல் அச்சுறுத்தல் ஆகியவற்றால் நிலை குலைந்த பொருளாதாரத்தை ஜப்பான் எதிர்கொண்டுள்ளது.

---

**4. 'Independent Engineer' மூலம் "தகராறு தவிர்ப்பு வழிமுறையை" அங்கீகரித்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

GOVERNMENT OF INDIA
MINISTRY OF POWER

**அ) எரிசக்தி அமைச்சகம் ☑**

ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

இ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் அண்மையில் "இன்டிபென்டன்ட் எஞ்சினியர்" வழிமுறையிலான "தகராறு தவிர்ப்பு வழிமுறையை" அங்கீகரித்தார். முதலாளி மற்றும் ஒப்பந்தக்காரருக்கு இடையேயான தொடக்க நிலை தகராறுகளுக்கு, நீர்மின் துறையில் தற்போதுள்ள தீர்வு காண்முறைகள் பலனளிக்கவில்லை என நீர்மின் திட்டங்களை செயல்படுத்துகின்ற CPSE'கள் குரல் எழுப்பின.

---

**5. அவசரகால கடனளிப்பு உத்தரவாத திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) MSME அமைச்சகம்

**ஆ) நிதி அமைச்சகம் ☑**

இ) வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

ஈ) ஜவுளி அமைச்சகம்




✓ மத்திய நிதி அமைச்சகமானது அவசரகால கடனளிப்பு உத்தரவாதத் திட்டத்தின் செல்லுபடிகாலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கோ (மார்ச் 31, 2022) அல்லது ஒட்டுமொத்த உச்சவரம்பு 4.5 இலட்சம் கோடியை எட்டும் வரையோ நீட்டித்துள்ளது. இத்திட்டம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதிப்பற்றாக்குறையை சமாளிக்கவும், ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2021 செப். 24 நிலவரப்படி, 2.86 இலட்சம் கோடிக்கு மேல் இக்கடன் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

---

**6. தேசிய மதிய உணவு திட்டத்தின் புதிய பெயர் என்ன?**

அ) PM மதிய உணவுத் திட்டம்

**ஆ) PM போஷான் ☑**

இ) PM போஜன்

ஈ) PM ஆகார்



✓ தேசிய மதிய உணவுத்திட்டத்திற்கு 'PM போஷான்' திட்டம் என்று பெயர் மாற்றஞ்செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் உழவர்கள் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் பெண்கள் சுயஉதவிக் குழுக்களின் பங்களிப்பும் புதிய அம்சங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

✓ நாடு முழுவதுமுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு சூடான சமைத்த உணவை வழங்கும் 'பள்ளிகளில் PM போஷான்' திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இது பால்வாடி பள்ளி மாணவர்களையும் உள்ளடக்கும்.

---

**7. மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) குஜராத்

✓ மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம் (CIFT) 1957'இல் கொச்சினில் அமைக்கப்பட்டது. மீன்பிடித்தல் மற்றும் மீன் பதப்படுத்துதல் தொடர்பான அனைத்து துறைகளிலும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும் முதல் மற்றும் ஒரே தேசிய மையம் இதுவாகும். CIFT ஆனது இறால் ஓடுகளிலிருந்து உரத்தையும் செல்லப்பிராணிகளுக்கான உணவையும் உருவாக்கி உள்ளது. ஆண்டிமைக்ரோபியல் ஊக்கிகளுடன் தனிப்பயனாக்கப்பட்ட உரமான 'போலியர் ஸ்பிரே' பயிர்விளைச்சலை அதிகரிக்கின்றது.

---

**8. ஏறத்தாழ இந்தியாவின் ஏற்றுமதியில், MSME'களின் பங்களிப்பு மட்டும் எவ்வளவாக உள்ளது?**

அ) 30

**ஆ) 40 ☑**

இ) 50

ஈ) 60

40%

✓ இந்தியாவில் 63 மில்லியனுக்கும் அதிகமான MSME'கள் உள்ளன. அவை, இந்தியாவின் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 40 சதவீதமும் நாட்டின் உற்பத்தி GDP'இல் 6.11 சதவீதமும் ஆகும். சேவைத்துறையின்மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு MSME'கள் 24.63 சதவீத அளவிற்கு பங்களிப்பு செய்கின்றன. இந்திய MSME அமைச்சர் நாராயண் ரானே, இந்திய SME மன்றத்தின் இந்திய ஏற்றுமதி முயற்சி மற்றும் இந்திய ஏற்றுமதிகள்–2021 வலைதளத்தைத் தொடங்கி வைத்தார்.

✓ இந்த நிதியாண்டில் இந்தியா தனது ஏற்றுமதி இலக்கை 400 பில்லியன் அமெரிக்க டாலராக நிர்ணயித்துள்ளது. MSME'கள், 2027'க்குள் அதை $1 டிரில்லியன் டாலராக உயர்த்தும் என அமைச்சர் கூறினார்.

---

**9.** **இந்தியாவின் எந்த மாநிலத்திலிருந்து 'தூய்மை இந்தியா திட்டம்' தொடங்கப்பட்டது?**

அ) பீகார்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) மேற்கு வங்கம்



- ✓ மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு, இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், உத்தரபிரதேசத்தின் மோதிலால் நேரு தேசிய தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து ஒரு மாத காலம் நடக்கும் 'தூய்மை இந்தியா திட்டத்தை' தொடங்கினார். ஆசாதி கா அம்ருத் மகோத்சவத்தின் ஒருபகுதியாக இது தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மக்களை ஊக்குவிப்பதும், குறிப்பாக நாடு முழுவதும் 'ஒற்றை பயன்பாடுகொண்ட நெகிழி' கழிவுகளை சுத்தம் செய்வதில் அவர்களை ஈடுபடுத்துவதும் இந்தத் தூய்மை இயக்கத்தின் நோக்கமாகும். அக்டோபர்.31 வரை இந்த இயக்கம் தொடரும்.

---

**10.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Hwasong–8' என்பது எந்நாட்டின் புதிய ஹைப்பர்சோனிக் ஏவுகணையாகும்?**

அ) சீனா

ஆ) ஜப்பான்

இ) இஸ்ரேல்

**ஈ) வட கொரியா ☑**



- ✓ 'ஹ்வாசாங்–8' என்ற புதிய ஹைப்பர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்ததாக வட கொரியா கூறியுள்ளது.
- ✓ ஏவுகணைகளை எரிபொருள் நிரப்பி பின்னர் களத்திற்கு அனுப்புவதற்கு இத்தொழில்நுட்பம் அனுமதிக்கிறது. இந்தச் சோதனையை நடத்தி பல நாட்களுக்குப் பிறகு, வடகொரியா புதிய விமானந்தாக்கி ஏவுகணையை சோதனை செய்ததாகக் கூறியது. கடந்த ஒரு மாதத்திற்குள் வட கொரியா மேற்கொள்ளும் 4ஆவது ஆயுதசோதனையாகும் இது. தற்காப்புக்காக தனக்கு ஆயுதங்கள் தேவை என்றும் வட கொரியா கூறியுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. கன்னியாகுமரி கிராம்புக்கு புவிசார் குறியீடு

கன்னியாகுமரி மாவட்ட மலைப்பகுதிகளில் விளையும் கிராம்புக்கு 'கன்னியாகுமரி கிராம்பு' என புவிசார் குறையீடு வழங்கப்பட்டுள்ளது.

நறுமணப் பயிரான கிராம்பு தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலையின் சரிவு பகுதிகளில் அதிகம் பயிரிடப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளான மாறாமலை, கரும்பாறை, வேளிமலை, மகேந்திரகிரி பகுதிகளில் 750 ஹெக்டேர் பரப்பளவில் கிராம்பு பயிரிடப்பட்டுஉள்ளது. இது, தமிழகத்தில் கிராம்பு பயிரிடப்படும் மொத்த பரப்பில் 73 சதவீதமாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவும் மிதமான வெப்பநிலை காரணமாக, கிராம்பில் உள்ள வாசனை திரவியங்கள் குறைந்த அளவிலேயே ஆவியாகி, அடர்த்தியான வாசனை எண்ணெய் கிடைக்கிறது. இங்குள்ள கிராம்பு மரத்தின் மொட்டுகள், உதிர்ந்த இலைகள் மற்றும் தண்டுகளும் வாசனை எண்ணெய் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவிலேயே, கன்னியாகுமரி மாவட்ட மலைப்பகுதிகளில் விளையும் கிராம்பு தரத்தில் முதலிடத்தில் உள்ளது. இதனால், குமரி மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன், மாறாமலை தோட்ட விவசாயிகள் சங்கம், கரும்பாறை மலைத்தோட்ட விவசாயிகள் சங்கத்தினரால் 'கன்னியாகுமரி கிராம்பு' என புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தாமொழியில் உற்பத்தியாகும் நெட்டை ரக தென்னைக்கு இதற்குமுன் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இதுபோக, மார்த்தாண்டம் தேன், நேந்திரன் வாழை, மட்டி வாழை ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு கேட்டுள்ளனர். இந்நிலையில், கன்னியாகுமரி கிராம்பு புவிசார் குறியீடை பெற்றிருப்பது வேளாண் ஆர்வலர்கள் மற்றும் மலைத்தோட்ட விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

---

### 2. பளிச் பத்து 99: இந்திய விமானப்படை

இந்திய விமானப்படை கடந்த 1932ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் தேதி தொடங்கப்பட்டது.

முதலில் வெறும் 25 வீரர்களைக் கொண்டு இந்திய விமானப் படை தொடங்கப்பட்டது.

ஆரம்ப காலகட்டத்தில் 'ராயல் இந்தியன் ஏர் போர்ஸ்' என்ற பெயரில் விமானப்படை அழைக்கப்பட்டது. விடுதலைக்குப் பிறகு அதிலிருந்து ராயல் என்ற வார்த்தை நீக்கப்பட்டது.

இந்திய வான்படை உலகில் 7ஆவது வலிமையான விமானப்படையாக உள்ளது.

1933ஆம் ஆண்டுமுதல் இதுவரை இந்திய வான்படையின் இலச்சினை 4 முறை மாற்றப்பட்டுள்ளது.

வான்படைக்கு இந்தியாவின் பல்வேறு இடங்களில் அறுபது தளங்கள் உள்ளன.

இந்திய விமானப் படையில் முதல் பெண் ஏர் மார்ஷலாக பத்மாவதி பந்தோபாத்யாய நியமிக்கப்பட்டார்.

இந்தியாவுக்கு வெளியில் தஜிகிஸ்தானில், இந்திய விமானப் படைக்கு ஒரு தளம் உள்ளது.

உத்தராகண்ட் மாநிலத்தில் வெள்ளம் ஏற்பட்டபோது 20 ஆயிரம் பேரை மீட்டு விமானப் படை சாதனை படைத்துள்ளது.

இந்திய வான்படையின் அருங்காட்சியகம் தில்லியில் அமைந்துள்ளது.

---

### 3. தான்சானியா எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு

தான்சானியா எழுத்தாளர் அப்துல்ரசாக் குர்னாவுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் இதுவரை 10 நாவல்களையும் ஏராளமான சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

தான்சானியாவின் சான்சிபா தீவைச் சேர்ந்த இவர் கடந்த 1960ஆம் ஆண்டில் அகதியாக பிரிட்டனில் குடியேறினார். இதன் காரணமாக இவரது படைப்புகளில் அகதிகள் அனுபவிக்கும் இன்னல்கள், காலனி ஆதிக்கம் உள்ளிட்ட சிக்கல்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. இதற்காக இவர் நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக நோபல் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

---

### 4. மாநிலங்களுக்கு ஜிஎஸ்டி இழப்பீடு ₹40,000 கோடி

சரக்கு–சேவை வரி (GST) இழப்பீடாக மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் ₹40,000 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது. அதில், தமிழகத்துக்கு ₹2,036.53 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சரக்கு–சேவை வரியை மத்திய அரசு கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடு முழுவதும் அமல்படுத்தியது. ஜிஎஸ்டி அமலாக்கத்தின் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் நோக்கில் 5 ஆண்டுகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது.

அதன்படி, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கான ஜிஎஸ்டி இழப்பீட்டுத் தொகையை மத்திய அரசு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இந்நிலையில், நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் ₹2.59 இலட்சம் கோடியை ஜிஎஸ்டி இழப்பீடாக வழங்க கடந்த மே மாதம் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அந்த இழப்பீட்டுத் தொகையில் ₹1 லட்சம் கோடியை ஜிஎஸ்டி வருவாய் மூலமாக வழங்கவும், மீதமுள்ள ₹1.59 லட்சம் கோடியைக் கடனாகப் பெற்று வழங்கவும் மத்திய அரசு முடிவெடுத்தது. அதனடிப்படையில், முதல் தவணையாக ₹75,000 கோடியைக் கடனாகப் பெற்று மாநிலங்க–ளுக்கும் சட்டப்பேரவையைக் கொண்ட யூனியன் பிரதேசங்களுக்கும் மத்திய அரசு கடந்த ஜூலையில் வழங்கியிருந்தது.

தற்போது மேலும் ₹40,000 கோடியை ஜிஎஸ்டி இழப்பீடாக மத்திய அரசு வியாழக்கிழமை விடுவித்துள்ளது. அதிகபட்சமாக கர்நாடகத்துக்கு ₹4,555.84 கோடியும், மகாராஷ்டிரத்துக்கு ₹3,467.25 கோடியும், குஜராத்துக்கு ₹3,280.58 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்துக்கு ₹2,036.53 கோடியும், கேரளத்துக்கு ₹2,198.55 கோடியும், புதுவைக்கு ₹275.73 கோடியும் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இழப்பீடாக ஒட்டுமொத்தமாக ₹1.15 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. மீதமுள்ள தொகையானது படிப்படியாக விடுவிக்கப்படும் என்றும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் ₹1.10 லட்சம் கோடியைக் கடனாகப் பெற்று ஜிஎஸ்டி இழப்பீடாக மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

**5. கணித அறிவியல் பேராசிரியருக்கு 'சாந்தி ஸ்வரூப் பட்நாகர்' விருது**

சென்னை கணித அறிவியல் நிறுவனத்தில் கோட்பாட்டு கணினி அறிவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் சாகேத் சௌரவுக்கு கணித அறிவியலுக்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான 'சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது 2021' வழங்கப்பட்டுள்ளது.

---

**6. ரஷியாவிடம் எஸ்–400 ஏவுகணை கொள்முதல்: அமெரிக்காவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை; அரிந்தம் பாக்சி**

ரஷியாவிடம் இருந்து எஸ்–400 ரக ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வது தொடர்பாக அமெரிக்காவுடன் இந்தியா தொடர்ந்து விவாதித்து வருகிறது என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்தார்.

அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி, ரஷியாவிடம் இருந்து 4 எஸ்–400 ரக ஏவுகணைகளை ₹37,414 கோடியில் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கடந்த 2018'இல் கையெழுத்திட்டது. முதல் தவணையாக ₹5,986 கோடியை ரஷியாவுக்கு கடந்த 2019'இல் இந்தியா அளித்தது. இதற்கிடையே, ரஷியாவிடம் இருந்து எஸ்–400 ரக ஏவுகணைகளைக் கொள்முதல் செய்ததற்காக துருக்கி மீது அமெரிக்கா பொருளாதாரத்தடை விதித்தது. அதேபோன்று இந்தியா மீதும் அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கக் கூடும் என்ற அச்சம் நிலவியது.

இந்நிலையில், 3 நாள் பயணமாக இந்தியா வந்த அமெரிக்க வெளியுறவு துறை இணையமைச்சர் வெண்டி ஷெர்மன், இந்திய வெளியுறவு துறைச் செயலர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லாவை சந்தித்துப்பேசினார். அப்போது, ரஷியாவிடம் இருந்து எஸ்–400 ரக ஏவுகணைகளை இந்தியா கொள்முதல் செய்வதற்கு வெண்டி ஷெர்மன் ஆட்சேபம் தெரிவித்தார். இருப்பினும், இந்த விவகாரத்தில் சுமுக உடன்பாடு எட்டப்படும் என்று இருவரும் நம்பிக்கை தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து, எஸ்–400 ரக ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வதற்கு இந்தியாவுக்குத் தடை விதிப்பது தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோபைடன், வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் ஆகியோர் முடிவு செய்வார்கள் என்று வெண்டி ஷெர்மன் கூறினார்.

---

**7. ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல்: 4ஆவது தங்கம் வென்றார் மானு பாக்கர்**

ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை மானு பாக்கர் 4ஆவது தங்கம் வென்றார்.

பெரு நாட்டின் தலைநகர் லிமாவில் ISSF ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்று வருகிறது. நடைபெற்ற மகளிர் அணி 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் மானு பாக்கர், நாமியா கபூர், ரிதம் சங்வான் ஆகியோர் அடங்கிய இந்திய அணி 16–4 என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்க அணியை இறுதிச்சுற்றில் வென்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியில் மானு பாக்கர் பெறும் நான்காவது தங்கம் இதுவாகும். அதே நேரம் 14 வயதே ஆன நாமியா கபூர் இரண்டாவது தங்கப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

ஆடவர் 25 மீ ரேபிட் பையர் பிரிவில் இந்தியாவின் ஆதர்ஷ் சிங் 40 புள்ளிகளுக்கு 28 புள்ளிகளை குவித்து வெள்ளி கைப்பற்றினார். இரட்டையரான உதய்வீர்–விஜய்வீர் தோல்வியடைந்தனர். 50மீ ரைபிள் புரோன் கலப்பு அணி பிரிவில் இந்தியா தோல்வியைத் தழுவியது.

பதக்கப்பட்டியலில் ஒன்பது தங்கம், ஏழு வெள்ளி, 3 வெண்கலத்துடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது. ஐந்து தங்கத்துடன் அமெரிக்க அணி இரண்டாமிடத்தில் உள்ளது.

---

**8. தமிழ்நாடு ஒலிம்பிக் சங்க தலைவராக ஐசரி கணேஷ் போட்டியின்றி தேர்வு**

தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் 2021–2025ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் நடந்தது. சென்னை ஐகோர்ட்டு ஓய்வுபெற்ற நீதிபதி கே மோகன்ராம் மேற்பார்வையில் இந்தத் தேர்தல் நடைபெற்றது. இதில் அனைத்து நிர்வாகிகளும் போட்டியின்றி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். N இராமச்சந்திரன் செயல் தலைவராகவும், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனரும், இந்திய தேக்வாண்டோ சம்மேளன தலைவருமான ஐசரி கே கணேஷ் தலைவராகவும், ஆதவ் அர்ஜுனா பொதுச்செயலாளராகவும், செந்தில் வி தியாகராஜன் பொருளாளராகவும், சோலை M ராஜா, TV சீத்தாராமராவ், M ராமசுப்பிரமணி, VVR ராஜ்சத்யன், சைரஸ் போஞ்சா, S பாலசுப்பிரமணியன் ஆகியோர் துணைத்தலைவரா–கவும், பாலாஜி மரதபா, A சரவணன் ஆகியோர் இணைசெயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

**1.** 'பிரசாசன் கான் கே சங்' என்பது எந்த இந்திய மாநிலம் / UT'இன் முன்னெடுப்பாகும்?

அ) குஜராத்

ஆ) பஞ்சாப்

**இ) இராஜஸ்தான் ☑**

ஈ) ஹரியானா



- ✓ இராஜஸ்தான் மாநில அரசு 'பிரசாசன் காவ் கே சங்' என்ற பெயரில் ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. அம்மாநிலத்திலுள்ள தொலைதூர கிராம மக்களுக்காக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ இதன்மூலம் உள்ளூர் நிர்வாகத்தின் 22 துறைகளை அவர்கள் எளிமை –யாக அணுக முடியும். இதன்கீழ், கிராமங்களில் வாரநாட்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் கண்காணிப்பில் முகாம்கள் நடைபெறும். நிலப் பத்திரங்கள் மற்றும் பல்வேறு சான்றிதழ்களை வழங்குவது தொடர்பான சேவைகளும் செய்யப்படும்.

---

**2.** UNESCO'ஆல் அங்கீகரிக்கப்பட்ட நடன மற்றும் இசை விழாவான 'நட சங்கீர்த்தனா' நடைபெறுகிற மாநிலம் எது?

அ) அஸ்ஸாம்

**ஆ) மணிப்பூர் ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) பஞ்சாப்



- ✓ UNESCO'ஆல் அங்கீகரிக்கப்பட்ட நடன மற்றும் இசை விழாவான 'நட சங்கீர்த்தனா'வை மணிப்பூர் ஏற்பாடு செய்கிறது. இந்த ஆண்டுக்கான, 3 நாள் விழா, சமீபத்தில் தலைநகர் இம்பாலிலிருந்து தொடங்கப்பட்டது.
- ✓ பாக்யசந்திராவின் ஆட்சியில் நடா சங்கீர்த்தன் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் தனித்துவத்திற்காக, 2013'இல், UNESCO'ஆல் தொட்டுணரமுடியா கலாச்சார பாரம்பரியமாக இது அங்கீகரிக்கப்பட்டது.

---

**3.** தேசிய திபெத்திய காட்டெருமை ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள மாநிலம் / UT எது?

அ) லடாக்

**ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) சிக்கிம்

ஈ) உத்தரகாண்ட்



- ✓ விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (நபார்டு) திபெத்திய காட்டெருமைக்கான கடன் திட்டத்திற்கு ஒப்புதலளித்துள்ளது. இந்தத் திட்டம் அருணாச்சல பிரதேச மாநிலத்தின் டைராங்கில் உள்ள தேசிய திபெத்திய காட்டெருமை ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட் –டது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின்கீழ் இந்த ஆராய்ச்சி மையம் செயல்படுகிறது. திபெத்திய காட்டெருமைகள் பொதுவாக 'மலை கால்நடைகள்' என்று குறிப்பிடப்படுகின்றன.
- ✓ முன்னதாக, காலநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு எதிராக இமயமலை காட்டெருமைகளை காப்பீடு செய்யும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

---

**4.** 2021 – யிடான் பரிசு பெற்ற இந்தியர் யார்?

**அ) டாக்டர் ருக்மணி பானர்ஜி ☑**

ஆ) சாந்தனு மிஸ்ரா

இ) ரிப்பன் கபூர்

ஈ) அன்ஷு குப்தா



- ✓ யிடான் பரிசு என்பது கல்வி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கிய தனிநபர்கள் அல்லது குழுக்களை அங்கீகரிக்கும் ஒரு கல்விசார் விருது ஆகும். யிடான் பரிசு அறக்கட்டளை இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் ருக்மணி பானர்ஜி மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் எரிக் ஹனுசேக் ஆகியோருக்கு மதிப்புமிக்க யிடான் பரிசை வழங்கியுள்ளது. 2016'இல் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஒன்பது பேருக்கு யிடான் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ பிரதம் கல்வி அறக்கட்டளையின் தலைமைச் செயல் அதிகாரியான Dr ருக்மணி பானர்ஜி, கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதற்கான அவரது பணிக்காக கௌரவிக்கப்படுகிறார்.

**5.** சமீப செய்திகளில் இடம்பெற்ற டிஜிசக்ஷம் திட்டத்தைத் தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?




அ) MSME அமைச்சகம்

ஆ) நிதி அமைச்சகம்

**இ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ) ஜவுளி அமைச்சகம்

- ✓ மத்திய தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சரான பூபேந்திர யாதவ், மைக்ரோசாப்ட் இந்தியாவுடன் இணைந்து 'டிஜிசக்ஷம்' திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 'டிஜிசக்ஷம்' திட்டத்தின்மூலம், பதிவுசெய்யப்பட்ட 10 மில்லியன் வேலைதேடுவோர், தேசிய தொழில் சேவை வலைதளத் –தில் கணினி மற்றும் கணினி அறிவியல் பயிற்சி உள்ளிட்ட பயிற்சியை பெறமுடியும். நிரலாக்க மொழிகள், தரவு பகுப்பாய்வு, மென்பொருள் வளர் –ச்சிபோன்ற பாடங்களில் பயிற்சி அளிப்பதன்மூலம் முதலாம் ஆண்டில் 3,00,000 வேலை தேடுவோரை இது பயிற்றுவிக்கும்.

---

**6.** இந்திய அரசின் தலைமை நீரியலாளராக பொறுப்பேற்றவர் யார்?

**அ) ஆதிர் அரோரா ☑**

ஆ) வினய் பத்வார்

இ) கௌரவ் ஆர்யா

ஈ) R K மாத்தூர்



- ✓ வைஸ் அட்மிரல் ஆதிர் அரோரா, NM இந்திய அரசாங்கத்தின் தலைமை நீரியலாளராக பொறுப்பேற்றார். இந்த மாதத்தில், துணைவேந்தர் வினய் பத்வார், AVSM, NM ஓய்வுறுவதை அடுத்து ஆதிர் பொறுப்பேற்பார். வங்கதேசத்துடனான நிரந்தர தீர்பாயத்தில் இந்தியாவை பிரதிநிதித்து –வப்படுத்துவது உட்பட கடல் எல்லை அம்சங்களுக்கு ஆதிர் அரோரா பொறுப்பேற்றார். 3ஆவது இந்திய–மொரிஷியஸ் நீரியல் ஒத்துழைப்பு கூட்டத்திற்கும் அவர் இணைத்தலைவராக இருந்தார்.

---

**7.** உலகளாவிய நிதிநிலைப்புத்தன்மை அரையாண்டறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) உலக வங்கி

**ஆ) IMF ☑**

இ) ADB

ஈ) புதிய வளர்ச்சி வங்கி




- ✓ உலகளாவிய நிதி நிலைப்புத்தன்மை அறிக்கை என்பது பன்னாட்டுச் செலவாணி நிதியத்தின் அரையாண்டறிக்கையாகும். இது உலக நிதிச் சந்தைகளின் நிலைப்புத்தன்மை குறித்த விரிவான மதிப்பாய்வை அளிக்கிறது. சமீபத்திய உலகளாவிய நிதிநிலைப்புத்தன்மை அறிக்கையில், IMF, கிரிப்டோகரன்சிக்கு ஒரு பிரத்யேக அத்தியாயத்தை அர்ப்பணித்துள்ளது. அதன்கீழ், கிரிப்டோ சூழலின் விரைவான வளர்ச்சி புதிய வாய்ப்புகளை அளிக்கிறது என IMF குறிப்பிடுகிறது. நிதிநிலைப்புத் தன்மை சவால்களைப்பற்றியும் அது எச்சரிக்கை செய்துள்ளது.

---

**8.** ஆஸ்திரேலியாவில் சதமடித்த முதல் இந்திய பெண் கிரிக்கெட் வீராங்கனை யார்?

**அ) ஸ்மிருதி மந்தனா ☑**

ஆ) மிதாலி ராஜ்

இ) ஷபாலி வர்மா

ஈ) பூனம் ரௌத்



- ✓ ஆஸ்திரேலியாவில் சதமடித்த முதல் இந்திய பெண் என்ற பெருமையை பெற்று இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிருதி மந்தனா புதிய சாதனை படைத்துள்ளார். 1991ஆம் ஆண்டு மெல்போர்ன் டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சில் 58 ரன்கள் எடுத்ததே இதற்கு முன்பிருந்த சாதனையாகும். மந்தனா, 216 பந்துகளில் 22 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 127 ரன்கள் எடுத்தார்.

---

**9. சமீப செய்திகளில் இடம்பெற்ற மானு பாக்கருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) ஓடுதல்

ஆ) நீச்சல்

இ) மல்யுத்தம்

**ஈ) துப்பாக்கிச்சுடுதல் ☑**

- ✓ பெருவின் லிமாவில் நடைபெற்ற ISSF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில், இந்திய துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை மானு பாக்கர் முதலிடம் பிடித்துள்ளார். சரப்ஜோத் சிங்குடனான கலப்பணி போட்டியில் & தனிநபர் கைத்துப்பாக்கி நிகழ்விலும் அவர் தங்கம் வென்றார். அவரது பங்களிப்பு, இந்தியா, சாம்பியன்ஷிப் பதக்கப்பட்டியலில் முதலிடம் பெற உதவியது.

---

**10.சமீப செய்திகளில் இடம்பெற்ற எடையூர் மற்றும் குட்டியாத்தூர் ஆகிய ஊர்கள் சார்ந்த மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) ஆந்திர பிரதேசம்

**இ) கேரளா ☑**

ஈ) கர்நாடகா

- ✓ கேரள மாநிலத்தின் எடையூர் மிளகாய் மற்றும் குட்டியாத்தூர் மாம்பழம் ஆகியவற்றுக்கு அண்மையில் புவிசார் குறியீடு கிடைத்துள்ளன. புவிசார் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட புவிப்பரப்பில் நிலைபெறும் பொருட்களி –ன் மீது பயன்படுத்தப்படும் ஒரு அடையாளமாகும்.
- ✓ சரக்குகளின் புவிசார் குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999 'இன்கீழ் இது கட்டுப்படுத்தப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2021ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு: இரு பத்திரிகையாளர்களுக்கு அறிவிப்பு**

2021ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு பத்திரிகையாளர்கள் மரியா ரெஸ்ஸா மற்றும் டிமிட்ரி முரடோவ் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயிலும், மற்ற பரிசுகள் ஸ்டாக்ஹோமிலும் அறிவிக்கப்படும்.

கருத்து சுதந்திரத்தை பாதுகாக்க தைரியமான போராட்டத்தை முன்னெடுத்த பிலிப்பைன்ஸ்யைச் சேர்ந்த பத்திரிகையாளர் மரியா ரெஸ்ஸாவுக்கும், ரஷ்யாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் டிமிட்ரி முரடோவுக்கும் விருது பகிர்ந்து வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. 68 ஆண்டுக்கு பிறகு மீண்டும் டாடா கையில் ஏர் இந்தியா: மத்திய அரசுக்கு ₹2,700 கோடி வருமானம்**

ஏர் இந்தியா ஏல விற்பனையில் டாடா சன்ஸ் நிறுவனத்தை வெற்றியாளராக மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. கடந்த 2018ஆம் ஆண்டிலிருந்து ஏர் இந்தியா நிறுவனத்தை தனியாருக்கு விற்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுவருகிறது. சமீபத்திய ஏலத்தில் டாடா சன்ஸ் நிறுவனமும், ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்தின் தலைவர் அஜய் சிங்கும் போட்டியிட்டனர். இதில் டாடா சன்ஸ் வெற்றி பெற்றுள்ளது.

அஜய் சிங் ₹15,100 கோடிக்கு விண்ணப்பித்த நிலையில் ₹18,000 கோடிக்கு விண்ணப்பித்த டாடா சன்ஸ் ஏலத்தில் வெற்றியாளராக அறிவிக்கப்படுவதாக முதலீடுகள் மற்றும் பொது சொத்துகள் நிர்வாக துறையின் செயலர் துஹின் காந்தா பாண்டே கூறினார். இதில் ₹2,700 கோடி அரசுக்கு பணமாகக் கிடைக்கும். மீதமுள்ள ₹15,300 கோடி ஏர் இந்தியாவின் கடனுக்காக டாடா சன்ஸ் பொறுப்பேற்றுக் கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனையின் மூலம் ஏர் இந்தியாவின் 100 சதவீத பங்குகள், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்ஸின் 100 சதவீத பங்குகள் மற்றும் ஏர் இந்தியா சாட்ஸில் 50 சதவீத பங்குகள் டாடா சன்ஸ் குழுமத்துக்கு சொந்தமாகும்.

ஜேஆர்டி டாடா தொடங்கிய ஏர் இந்தியா 68 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டாடா குழுமத்துக்கே சொந்தமாகியிருப்பது மிகவும் பெருமித மிக்க தருணமாகும்.

ஓராண்டுக்கு ஏர் இந்தியாவின் 51 சதவீத பங்கை டாடா சன்ஸ் நிர்வகித்து வர வேண்டும். மேலும் ஓராண்டுக்குப் பிறகே பங்குகளை விற்பனை செய்ய வேண்டும். ஏர் இந்தியாவின் ஊழியர்களையும் ஓராண்டுக்கு பணியிலிருந்து நீக்கக் கூடாது போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஏர் இந்தியாவின் மொத்த கடன் ₹65,562 கோடியாக உள்ளது. இந்த விற்பனைக்கு பிறகு ₹46,262 கோடி கடன் ஏர் இந்தியா அசெட் ஹோல்டிங் லிமிடெட் நிறுவனத்துக்கு மாற்றப்படும். 1932'இல் ஜேஆர்டி டாடாவால் தொடங்கப்பட்ட நிறுவனத்தை 1953'இல் நாட்டுடைமையாக் –கியது. ஏர் இந்தியாவிடம் தற்போது மொத்தமாக 141 விமானங்கள் உள்ளன. ஏர் இந்தியா 42 நாடுகளுக்கு விமான சேவைகளை வழங்கி வருகிறது. ஏர் இந்தியா மற்றும் ஏஐஎக்ஸ்எல் இரண்டிலும் சேர்த்து 13,500 பணியாளர்கள் உள்ளனர்.

---

**3. அக்டோபர்.9 – உலக பறவைகள் நாள்**

---

**4. பருவநிலை மாற்றம் தொடர்பான ஆராய்ச்சி – எம் எஸ் சுவாமிநாதன் அறக்கட்டளையுடன்ஐ.நா. அமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்:**

இந்தியாவில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்ள MS சுவாமிநாதன் அறக்கட்டளை மற்றும் ஐநா மன்றத்தின் உலக உணவு பாதுகாப்பு திட்டம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இதுதொடர்பாக MS சுவாமிநாதன் அறக்கட்டளை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்தியாவில் பருவநிலை மாற்றத்தால் வேளாண்மை, உணவு உற்பத்தியில் பாதிப்பு, ஊட்டச்சத்து கிடைக்காத நிலை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் சமுதாயத்தை கட்டமைப்பது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட, ஐநா மன்றத்தின் உலக உணவு பாதுகாப்பு திட்டம் மற்றும் MS சுவாமிநாதன் அறக்கட்டளை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

---

**5. மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க மு க ஸ்டாலின் தலைமையில் ஒருங்கிணைப்பு குழு**

தமிழகத்தில் மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க முதல்வர் மு க ஸ்டாலின் தலைமையில் மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊரக வளர்ச்சித் துறை செயலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மத்திய அரசின் திட்டங்கள் மாவட்ட அளவில் நடைமுறைப்படுத்தப்படுவ –தைக் கண்காணிக்க, மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, முதல்வரை தலைவராக கொண்டு மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு உள்ளது. இக்குழுவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை செயலர் உறுப்பினர் – செயலராகவும் உள்ளனர்.

மேலும், பல்வேறு அரசுத்துறை செயலர்கள், துறைத் தலைவர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனபிரதிநிதிகள், மாநில அளவிலான வங்கியாளர் குழுவின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்புக் குழுமற்றும் கண்காணிப்புக் குழுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பொறுத்து திட்டங்கள் செயல்படுத்தப்படும் நிலையை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதில் மாநில அரசால் ஈடுபடுத்தப்ப –ட்டுள்ள மனிதவளங்களின் செயல்திறனை வரிசைபடுத்தி மதிப்பாய்வு செய்தல், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்து அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் வடிவமைப்புகளை மேம்படுத்த அல்லதுநடுநிலைப்படுத்த உரிய திருத்தங்களைச்செய்ய பரிந்துரைகளை வழங்குதல் ஆகியன இக்குழுவின் பணிகளாகும்.

மேலும், வளர்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிதி நிலையை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு திட்டங்களை சரியான நேரத்தில் செயல்படுத்துவதில் உள்ள தடைகளை மறு ஆய்வுசெய்தல், திட்டங்களை

செயல்படுத்துவதில் பெறப்பட்ட புகார்கள், முறைகேடுகள், பயனாளிகளி–ன் தவறான தேர்வு, முறைகேடான நிதி, திசைதிருப்புதல் போன்ற புகார்களை பின்தொடர்ந்து நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தல் ஆகிய பணிகளையும் இக்குழு மேற்கொள்ளும்.

பல்வேறு திட்டங்களின்கீழ் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து உரிய வழிகாட்டுதல்களை வழங்குதல், மத்திய துறை திட்டங்கள், சம்பந்தப்பட்ட மத்திய நிறுவனங்கள் முறையா–க செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களை அடையாளம் காணுதல், மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின்கீழ் கண்காணிக்கப்படும் திட்டங்கள் தொடர்பான நிகழ்வுகளை மத்திய வளர்ச்சி அமைச்சகத்தின் பார்வைக்கு கொண்டு செல்லுதல் உள்ளிட்ட பணிகளையும் இந்தக் குழு மேற்கொள்ளும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

**6. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாக இருக்கும்: உலக வங்கி**

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021–22ஆம் நிதியாண்டில் 8.3 சதவீதமாக இருக்கும் என உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெற்காசிய பிராந்தியத்துக்கான தலைமை பொருளாதார நிபுணர் ஹன்ஸ் டிம்மர் பிடிஐ செய்தியாளர்களிடம் கூறியதாவது: பொது முதலீடு அதிகரிப்பு, உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஊக்கத்தொகை போன்ற காரணங்களால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நிகழ் நிதியாண்டில் 8.3 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இது கரோனா இரண்டாவது அலையால் ஏற்பட்ட சுகாதார நெருக்கடிக்கு முன்பு நாங்கள் கணித்ததைவிடக் குறைவானது. இருப்பினும் இது நல்ல செய்தி என்றார். முன்னதாக, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நிகழ் நிதியாண்டில் 7.5 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாக இருக்கும் என, மார்ச் 31ஆம் தேதி வெளியிடப்பட்ட தெற்காசி பொருளாதார அறிக்கையில் உலக வங்கி தெரிவித்திருந்தது.

---

**7. பதவி விலகினார் மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் கே வி சுப்பிரமணியன்**

மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகரான கே வி சுப்பிரமணியன் பதவி விலகலை அறிவித்தார்.

கடந்த மூன்றாண்டுகளாக அவர் இப்பதிவியில் இருந்துவந்த நிலையில் தனது பதவிக்காலம் முடிந்ததால் பதவியை ராஜினாமா செய்தார். இதனை மத்திய அரசும் உறுதி செய்துள்ளது. மீண்டும் ஆராய்ச்சிப் படிப்புகளைத் தொடர்வதால் பதவி விலகியதாக அவர் தெரிவித்துள்ளார்.

KV சுப்பிரமணியன் தலைமை பொருளாதார ஆலோசகராக கடந்த 2017 டிசம்பரில் பதவியேற்றார், இவர் பதவியேற்றிய 5 மாதத்தில் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகரான அரவிந்த் சுப்பிரமணியன் பதவி விலகினார். தற்போது அரவிந்த் சுப்பிரமணியன் தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசனை குழுவில் முக்கிய பங்கு வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**8. ஐஎம்பிஎஸ் அளவு ₹5 லட்சமாக உயர்வு: இன்டர்நெட் இல்லாமல் டிஜிட்டல் பரிமாற்றம்: ரிசர்வ் வங்கி அறிவிப்பு**

நாட்டில் டிஜிட்டல் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் உடனடி பேமெண்ட் சேவையான ஐஎம்பிஎஸ் பரிமாற்றத்தின் அளவு ₹2 லட்சத்திலிருந்து ₹5 லட்சமாக உயர்த்தப்படும் என இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ரிசர்வ் வங்கி நிதிக் கொள்கை அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. நிதிக் கொள்கை குறித்து முடிவு எடுக்கும் 6 பேர் கொண்ட நிதிக் கொள்கைக் குழு நடப்பு நிதியாண்டு தொடங்கியபின் 3ஆவது முறையாக மும்பையில் கூடி விவாதித்தது. 2020ஆம் ஆண்டு மே 22ஆம் தேதி வட்டி வீதம் வரலாற்றில் இல்லாத அளவு குறைக்கப்பட்டது. அதன்பின் கடந்த ஓராண்டாக வட்டி வீதம் குறைக்கப்படவில்லை.

ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையிலான நிதிக் கொள்கைக்குழு தொடர்ந்து 8ஆவது முறையாக வட்டி வீதத்தில் மாற்றம் இல்லாமல் அறிவித்துள்ளது. இதனால் கடனுக்கான வட்டிவீதம் தொடர்ந்து 4 சதவீதமாகவே நீடிக்கிறது. வங்கிகளுக்கான இறுதிநிலை கடன்வசதி வட்டி வீதம் 4.5 சதவீதமாகவும், ரிசர்வ் ரெப்போ ரேட் 3.35 சதவீதமாகவும் நீடிக்கிறது. இந்தக் கூட்டத்துக்குப் பின் ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறியதாவது:

பொருளாதாரம் மீண்டு வரும் நிலையில் வங்கிகளுக்கான குறுகிய கால கடன் வட்டி விகிதங்களில் மாற்றம் செய்யவில்லை. நிதிக்குழு உறுப்பினர்களில் 6 பேரில் 5 பேர் வட்டிவீத மாற்றத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021– 2022 நிதியாண்டில் 9.5% ஆக இருக்கும். 2ஆவது காலாண்டில் 7.9 சதவீதமாகவும், 3ஆவது காலாண்டில் 6.8 சதவீதாகவும், 4ஆவது காலாண்டில் 6.1 சதவீதாகவும் இருக்கும். 2022–23ஆம் நிதி ஆண்டுக்கான GDP வளர்ச்சி 17.2 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் பணவீக்கம் 5.1 சதவீதமாக இருந்தது. நாட்டில் டிஜிட்டல் பணப்பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் ஐஎம்பிஎஸ் பரிமாற்றத்தின் அளவை ₹2 லட்சத்திலிருந்து ₹5 லட்சமாக உயர்த்தப்பட உள்ளது. இப்போது ஐஎம்பிஎஸ் மூலம் நாள்தோறும் அதிகபட்சமாக ₹2லட்சம் வரைமட்டுமே பரிமாற்றம் செய்ய முடியும், இனிமேல் ₹ 5 லட்சம்வரை பரிமாற்றம் செய்யலாம்.

இதன்மூலம் இன்டர்நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் செயலி, வங்கி கிளைகள், ஏடிஎம், எஸ்எம்எஸ், ஐபிஆர்எஸ் ஆகியவைமூலம் பரிமாற்றம் அதிகரிக்கும். தற்போது ஆர்டிஜிஎஸ், நெப்ட் மற்றும் ஐஎம்பிஎஸ் சேவை 24 மணிநேரமும் செயல்பட்டு வருகிறது. ஆன்லைன்மூலம் மட்டுமே டிஜிட்டல் பரிமாற்றம் செய்யப்பட்டு வரும் நிலையில் இனிமேல், ஆப் லைன் மூலமும் பரிமாற்றம் செய்யும் முறையை விரைவில் ரிசர்வ் வங்கி அறிமுகம் செய்ய உள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு ஆக.6ஆம் தேதி இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு பரிசோதனை முயற்சிகள் நடந்தன. இதில் இன்டர்நெட் இணைப்பின் சக்தி குறைவாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் டிஜிட்டல் பரிமாற்றம் செய்யமுடியும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு நகரங்களில் கடந்த 2020 செப்டம்பர் முதல் 2021 ஜூன் வரையில் ஆஃப் லைனில் டிஜிட்டல் பரிமாற்றம் செய்து பரிசோதிக்கப்பட்டது. இதில் வெற்றிகரமாக 2.41 லட்சம் பரிமாற்றத்தில் ₹1.16 கோடி மதிப்புக்கு டிஜிட்டல்பரிமாற்றம் செய்யப்பட்டது.

பரிசோதனை முயற்சியில் வெற்றிகரமான முடிவுகள் கிடைத்ததால், விரைவில் ஆப் லைன் பரிமாற்றத்துக்கான விதிகள் வகுக்கப்பட்டு அறிவிக்கப்படும். இவ்வாறு சக்திகாந்த தாஸ் தெரிவித்தார்.

---

**9. தமிழக காவல்துறையில் முதல் முறையாக நிர்வாக வசதிக்காக உளவுத்துறை SP பதவி 2ஆக பிரிப்பு: உள்துறை செயலாளர் பிரபாகர் உத்தரவு**

உளவுத்துறைக்கு தற்போது கூடுதல் டிஜிபியாக டேவிட்சன் தேவாசீர்வாதம் உள்ளார். உள்நாட்டு பாதுகாப்பு பிரிவு ஐஜியாக ஈஸ்வரமூர்த்தி உள்ளார். உளவுப் பிரிவு டிஐஜியாக ஆசியம்மாள், எஸ்பியாக அரவிந்தன் உள்ளனர்.

ஆசியம்மாள் நிர்வாகப் பிரிவுகளை கவனித்து வருகிறார். அரவிந்தன், உளவு தகவல்களை ஒருங்கிணைத்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் சாராத இயக்கங்களின் நடவடிக்கைகள் கண்காணிப்பு, சமூக வலைதங்கள் கண்காணிப்பு ஆகிய பணிகளை கவனித்து வந்தார். மாநில உளவுப்பிரிவில் தற்போது ஒரு SP, 2 ASP'கள், 12 DSP'கள், 85 இன்ஸ்பெக்டர்கள் மற்றும் தலைமை காவலர், காவலர்கள் என 609 பேர் தமிழகம் முழுவதும் பணியாற்றி வருகின்றனர்.

அதேநேரம் மாநிலம் முழுவதும் தற்போது குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. மக்கள் தொகையும் அதிகரித்து வருகின்றன. இதனால், மாநில உளவுப் பிரிவு எஸ்பியின் பணிகளை 2ஆக பிரிப்பது என்று முடிவு செய்யப்பட்டு அரசுக்கு பரிந்துரை அனுப்பப்பட்டது.

காவல் துறையின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட தமிழக அரசு, மாநில உளவுத்துறையில் உள்ள எஸ்பி பதவிகளை 2ஆக பிரித்து அரசாணை வெளியிட்டுள்ளது. அதில், ஒருங்கிணைந்த குற்ற வழக்குகளை கண்காணிக்கும் பிரிவு எஸ்பி பதவியை உளவுப் பிரிவு பதவியாக மாற்றி உத்தரவிட்டுள்ளது. இதனால் ஒருங்கிணைந்த குற்ற வழக்குகளை கண்காணிக்கும் பிரிவு எஸ்பியான சரவணன், உளவுப் பிரிவு பிரிவுக்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். உளவுத்துறைக்கு தற்போது 2 எஸ்பிக்கள் உள்ளதால் இருவருக்குமான பணிகளை உள்துறை செயலாளர் பிரபாகர் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார். அதில் தற்போது எஸ்பி சரவணன், ஒருங்கிணைந்த சென்னை மாநகரம் மற்றும் அரசியல் கட்சிகள், அரசியல் மற்றும் அரசியல் சாராத இயக்கங்கள் கண்காணித்தல், சமூக வலைதளங்கள் என 9 பிரிவுகளை கவனிப்பார்.

அதேபோல், காவல் கட்டுப்பாட்டு அறை, வடக்கு மண்டலம், தெற்கு மண்டலம், மேற்கு மண்டலம், மத்திய மண்டலம், போட்டோகிராபி பிரிவுகளில் உள்ள நிகழ்வுகளை கண்காணிப்பாளர் அரவிந்தன் கவனிப்பார் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

---

**10. பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் காலமானார்**

தமிழ் திரைப்பட பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் அக்.8 அன்று காலமானார். திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் 1956ஆம் ஆண்டு பிப்.6ஆம் தேதி பிறந்த கவிஞர் பிறைசூடன், 1985ஆம் ஆண்டு வெளியான சிறை திரைப்படத்தில் ராசாத்தி ரோசாப்பூவே என்ற பாடல் மூலம் மெல்லிசை மன்னர் MS விஸ்வநாதனால் திரைத்துறைக்கு பாடலாசிரியராக அறிமுகப்படுத்தப்பட்டார்.

கிட்டத்தட்ட தமிழில் இதுவரை 400'க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்பாடல்களையும், ஐந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்திப்பாடல்களையும் இவர் எழுதியுள்ளார்.

---

**11. அக்டோபர்.9 – உலக மனநல நாள்.**

---

**12. செவ்வாய் கிரகத்தில் நீர்நிலை இருந்ததற்கான கூடுதல் ஆதாரம்: ஆற்றுப்படுகையின் துல்லிய புகைப்படம் மூலம் நாசா உறுதி!!**

செவ்வாய் கிரகத்தில் உள்ள ஆற்றுப்படுகையின் துல்லிய புகைப் படத்தை நாசா வெளியிட்டுள்ளது. பெர்சவரன்ஸ் ரோவர்மூலம் கிடைத்து உள்ள இப்புகைப்படம் செவ்வாயில் நீர்நிலை இருந்ததற்கான ஆதாரத் –தை வலுப்படுத்தியுள்ளது. செவ்வாய் கிரகத்தை பற்றி ஆய்வுசெய்வதற்கு கடந்த பிப்ரவரியில் பெர்சவரன்ஸ் ரோவர் என்ற பெயரில் விண்கலத்தை நாசா அனுப்பியது. சுமார் ஏழு வாரங்கள் பணம் செய்து செவ்வாயை அடைந்த பெர்சவரன்ஸ் பல்வேறு புகைப்படங்களை அனுப்பி வருகிறது.

இந்த நிலையில் 'ezero' என்ற பள்ளத்தாக்கில் இருந்து தற்போது அனுப்பி உள்ள ஆற்றுப் படுகையின் துல்லிய புகைப்படங்கள் செவ்வாயில் நீர்நிலைகள் இருந்ததற்கான ஆதாரத்தை வலுப்படுத்தியுள்ளன. இந்த புகைப்படங்கள் புதையுண்ட ஏரி உருவாக்கிய ஆற்றுப்படுகையாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஆற்றுப்படுகையின் கீழே உள்ள 3 அடுக்குகளின் வடிவங்கள் நீர் தொடர்ந்து ஓடியதை உறுதிப்படுத்தியுள்ளன. இதனால் சுமார் 370 கோடி ஆண்டுகளுக்கு முன்பு செவ்வாயில் நீர் சுழற்சி இருந்திருக்கலாம் என்றும் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய் கிரகத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஆற்றுப்படுகையின் புகைப் படங்கள் புவி எல்லையை ஒட்டி இருப்பதாக நாசா கூறியுள்ளது. ஆற்றுப் படுகையை கடந்து புதையுண்ட ஏரியின் கரையை மற்றும் பள்ளத் தாக்கின் விளிம்புகளை ரோவர் புகைப்படங்களாக எடுத்து அனுப்ப உள்ளது. அதன் முடிவில் செவ்வாய் குறித்து கூடுதல் தகவல்கள் கிடைக்கும் என்று நாசா விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

---

**1. எந்த மாநிலத்தின் நகர்ப்புற வெள்ளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்காக $251 மில்லியன் டாலர் கடனுதவி செய்ய ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது?**



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) ஆந்திர பிரதேசம்

இ) கர்நாடகா

ஈ) கேரளா

✓ சென்னை – கொசஸ்தலையாறு ஆற்றுப்படுகையில் நகர்ப்புற வெள்ளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்காக $251 மில்லியன் டாலர் கடனுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் இப்பகுதியில் காலநிலை–நெகிழ்திறனுடன் கூடிய நகர்ப்புற வெள்ளப் பாதுகாப்பு உட்கட்டமைப்பை நிறுவும். இது 588 கிமீ நீள புதிய மழைநீர் வடிகால்களை அமைக்கும். மேலும், 175 கிமீ மழைநீர் வடிகால்களை மறுசீரமைக்கும் அல்லது மாற்றியமைக்கும். சென்னையின் விரைவான நகரமயமாக்கல், அதனை பரவலான வெள்ளத்தால் பாதிக்கக்கூடியதாக ஆக்கியுள்ளது.

---

**2. 'டிஜிட்டல் பொருளாதார அறிக்கை–2021' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**




அ) IMF

ஆ) உலக வங்கி

**இ) UNCTAD ☑**

ஈ) WTO

✓ டிஜிட்டல் பொருளாதார அறிக்கை–2021'ஐ ஐநா'இன் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு (UNCTAD) வெளியிட்டது. இந்த அறிக்கை வளர்ந்து வரும் எல்லைதாண்டிய தரவுப்பாய்வுகளின் தாக்கங்களை ஆராய்கிறது. தரவுப்பாய்வுகளிலிருந்து ஆதாயங்களை சமமாக வழங்குவதை உறுதி செய்வதற்காக தரவு மற்றும் தரவுப் பாய்வுகளை நிர்வகிப்பதற்கான புதுமையான அணுகுமுறைகளையும் இந்த அறிக்கை வரவேற்கிறது.

---

**3. "மாவட்ட மருத்துவமனைகளின் செயல்திறனில் சிறந்த நடைமு–றைகள்" என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) எய்ம்ஸ்

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) ஐஎம்ஏ

ஈ) உலக வங்கி

✓ NITI ஆயோக் சமீபத்தில் 'மாவட்ட மருத்துவமனைகளின் செயல்திறனில் சிறந்த நடைமுறைகள்' என்ற தலைப்பில் இந்தியாவின் மாவட்ட மருத்துவமனைகளின் செயல்திறன் குறித்த மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் மற்றும் WHO இந்தியாவுடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

✓ இந்த மதிப்பீட்டு கட்டமைப்பில், 10 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் இடம்பெற்றன. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களி–லும் உள்ள மொத்த 707 மாவட்ட மருத்துவமனைகள் மதிப்பீட்டில் பங்கேற்றன. 2017–18ஆம் ஆண்டிற்கான சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பின் தரவு இதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டது. 24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 75 மாவட்ட மருத்துவமனைகள் சிறந்த செயல்திறன் கொண்டவையாக உள்ளன.

---

**4. 'சாச்சா சௌத்ரி' என்பது இந்தியாவில் எத்திட்டத்தின் முகப்பமாக (mascot) அறிவிக்கப்பட்டுள்ளது?**




அ) தூய்மை இந்தியா 2.0

ஆ) சௌபாக்யா

**இ) நமாமி கங்கே திட்டம் ☑**

ஈ) பிரதமர் உஜ்வாலா யோஜனா

✓ நமாமி கங்கே திட்டத்தின் முகப்பமாக பிரபல காமிக் புத்தக கதாபாத்திரமான 'சாச்சா சௌத்ரி' அறிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய தூய்மை கங்கை இயக்கம் அறிவித்தது. கங்கை மற்றும் பிற ஆறுகளை தூய்மைப்படுத்துவதுபற்றி குழந்தைகள் மற்றும் இளையோருக்கு உணர்த்துவதற்கு இந்தப் பாத்திரம் பயன்படுத்தப்படும்.

✓ 'கங்கா கி பாத், சாச்சா சௌத்ரி கே சாத்' என்பது நமாமி கங்கே பணியின் பொதுச்செயல்பாடுகளின்கீழ் ஒரு பொது ஈடுபாட்டு நடவடிக்கையாகும்.

---

**5. "பால ரக்ஷா கிட்" என்பது எந்த அமைப்பால் உருவாக்கப்பட்ட ஒரு நோயெதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் மருந்தாகும்?**



அ) AIIMS

ஆ) IIT பாம்பே

**இ) AIIA ☑**

ஈ) DRDO

✓ அனைத்து இந்திய ஆயுர்வேத நிறுவனமானது (AIIA), மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின்கீழ், "பால ரக்ஷா கிட்" என்ற குழந்தைகளுக்கான நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் மருந்தை உருவாக்கியுள்ளது. இதை 16 வயது வரையுள்ள குழந்தைகள் உட்கொள்ளலாம். COVID நோய்க்கான தடுப்பூசி கிடைக்கும் வரை குழந்தைகள் இதை பயன்படுத்தலாம். தேசிய ஆயுர்வேத நாளன்று (நவ.2) 10,000 பால ரக்ஷா மருந்துகள் இலவசமாக விநியோகிக்கப்படும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

---

**6. "அத்தியாவசிய மருந்துகளின் மாதிரி பட்டியலை" வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) AIIMS

ஆ) IMA

**இ) WHO ☑**

ஈ) FAO

✓ உலக நலவாழ்வு அமைப்பானது அண்மையில், "குழந்தைகளுக்கான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகளின் மாதிரி பட்டியல்களின்" அண்மைய பதிப்பை வெளியிட்டது. இப்புதிய பட்டியலில் நீரழிவு & புற்றுநோய் சிகிச்சைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

✓ புகைபிடிப்பதை நிறுத்த விரும்பும் மக்களுக்கு உதவும் புதிய மருந்துகள் மற்றும் தீவிர பாக்டீரியா மற்றும் பூஞ்சை தொற்றுகளுக்கு சிகிச்சை அளிக்க புதிய நுண்ணுயிர் எதிர்ப்பிகள் ஆகியவை இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

---

**7. மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தால் மனநல விழிப்புணர்வு பிரச்சார வாரம் எப்போது அனுசரிக்கப்பட்டது?**



அ) அக்.1 முதல் அக்.5, 2021 வரை

ஆ) அக்.2 முதல் அக்.7, 2021 வரை

இ) அக்.10 முதல் அக்.17, 2021 வரை

**ஈ) அக்.5 முதல் அக்.10, 2021 வரை ☑**

✓ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது அக்.5–10, 2021 வரை மனநல விழிப்புணர்வு பிரச்சார வாரமாக கடைபிடித்தது. இது, அக். 10 உலக மனநல நாளின் ஒருபகுதியாக அனுசரிக்கப்படுகிறது. இந்த முன்னெடுப்பின் ஒருபகுதியாக, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சர் மான்சுக் மாண்டவியா, UNICEF'இன் உலக குழந்தைகள் அறிக்கையையும் வெளியிட்டார்.

---

**8. பின்வரும் எந்த இந்திய நகரத்தில் "ஆசாதி@75 – புதிய நகர்ப்புற இந்தியா" என்ற மாநாடு தொடங்கப்பட்டது?**

அ) மும்பை

ஆ) புது தில்லி

இ) வாரணாசி

**ஈ) லக்னோ ☑**

✓ இந்தியப் பிரதமர் மோடி, "ஆசாதி@75 – புதிய நகர்ப்புற இந்தியா" என்ற ஒரு நகர்ப்புற மாநாடு & கண்காட்சியை லக்னோவில் தொடங்கினார். இதன் தொடக்க நிகழ்வின்போது, பிரதமர், உத்தரப்பிரதேச மாநிலத்தின் 75 மாவட்டங்களில் அமைந்துள்ள 75,000 பயனாளிகளுக்கு, பிரதமர் ஆவாஸ் யோஜனா–நகர்ப்புற (PMAY–U) வீடுகளின் சாவியை டிஜிட்டல் முறையில் வழங்கினார்.

---

**9. தேசிய சாலை பாதுகாப்பு வாரியத்தின் தலைமையகம் உள்ள இந்திய நகரம் எது?**

அ) மும்பை

**ஆ) புது தில்லி ☑**

இ) ஔரங்காபாத்

ஈ) கொல்கத்தா



- ✓ சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் தேசிய சாலை பாதுகாப்பு வாரியத்தை நிறுவுவதற்கான அறிவிப்பை அறிவித்துள்ளது. சாலை பாதுகாப்பு, புதுமைகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது, போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுக்கு வாரியம் பொறுப்பாகும். வாரியத்தின் தலைமை அலுவலகம் தேசிய தலைநகர் பகுதியில் இருக்க வேண்டும்.
- ✓ இந்தியாவில் மற்ற இடங்களில் அலுவலகங்களை வாரியம் நிறுவலாம். மத்திய அரசால் நியமிக்கப்பட வேண்டிய தலைவர் மற்றும் 3 பேருக்கு குறையாமல் 7 பேருக்கு மிகாமல் உறுப்பினர்கள் வாரியத்தில் இருக்க வேண்டும்.

---

**10. விரிவான கைவினைப் பொருட்கள் குழும மேம்பாட்டுத் திட்டம் என்பது பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்தின் திட்டமாகும்?**

அ) MSME அமைச்சகம்

**ஆ) ஜவுளி அமைச்சகம் ☑**

இ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

- ✓ விரிவான கைவினைப் பொருட்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தை ₹160 கோடி மதிப்பீட்டில் தொடர ஜவுளி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. 2026 மார்ச் வரை இத்திட்டம் தொடரும். கைவினைஞர்களுக்கு உட்கட்டமைப்பு ஆதரவு, சந்தை அணுகல், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு ஆதரவு போன்றவை இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆதிச்சநல்லூரில் அகழாய்வுப் பணிகள்: 17 ஆண்டுகளுக்குப் பிறகு தொடக்கம்**

தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் 17 ஆண்டுகளுக்கு பிறகு மத்திய தொல்லியல் துறை சார்பில் நடைபெறும் அகழாய்வுப் பணிகளை கனிமொழி எம்பி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

தாமிரவருணி என்றழைக்கப்படும் பொருநை நதிக்கரையோரங்களில் உள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய பகுதிகளில் நடந்து வரும் அகழாய்வுப் பணிகளில் சேகரிக்கப்படும் பழங்கால பொருள்கள் மூலம் பண்பாடு, நாகரிகம், வணிகம் ஆகியவற்றில் தமிழர்கள் சிறந்து விளங்கியவர்கள் என்பதற்கான சான்றுகள் கிடைத்து வருகின்றன.

குறிப்பாக, ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் என்பது நாட்டிலேயே முதல் முதலாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் களமாகும். இங்கு, முதன்முறையாக ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஜாகோர் கடந்த 1876'இல் அகழாய்வுகள் மேற்கொண்டார். பின்னர் கடந்த 1896, 1904ஆம் ஆண்டில் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

அக்காலகட்டத்தில் அலெக்சாண்டர் ரெயா என்பவர் ஆயிரக்கணக்கான தொல்பொருள்களை கண்டெடுத்துள்ளார். இதில், முதுமக்கள் தாழிகள், மண்பாண்டங்கள், இரும்புக்கருவிகள், ஆயுதங்கள், வெண்கலப்பொருள்கள், பழங்கால மனிதர்களின் எலும்புகள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதன்பின்னர், 2004'இல் ஆதிச்சநல்லூரில் தொல்லியல் அலுவலர் சத்தியமூர்த்தி தலைமையில் மத்திய தொல்லியல்துறை சார்பில் அகழ் ஆய்வுப்பணிகள் நடைபெற்றன. இதன் ஆய்வு முடிவுகள் வரலாற்று ஆர்வலர்களின் பல்வேறு சட்டப் போராட்டங்களுக்கு பிறகு கடந்த மே மாதம் வெளியிடப்பட்டது. எனினும் முழுமையான ஆய்வு முடிவுகளை வெளியிட வேண்டும்.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டு வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் உள்ள பழங்கால பொருள்களை கொண்டுவர வேண்டும் எனவும் வரலாற்று ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனரர்.

சுமார் 114 ஏக்கர் பரப்பளவிலுள்ள ஆதிச்சநல்லூர் அகழாய்வு தளத்தில் பாறைகள் நிறைந்த மலைச் சரிவுகளில் குழி தோண்டப்பட்டு சுட்ட களிமண்ணினால் ஆன தாழிகள் புதைக்கப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ் எழுத்துகளுடன் கூடிய பல தாழிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழக தொல்லியல்துறை சார்பில் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்றன.

இதற்கிடையில் ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என 2020இல் நிதிநிலை அறிக்கையில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு அருங்காட்சியகம் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

---

**2. ஆட்டிசம் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பயிற்சி திருவள்ளூர் கோலப்பன்சேரியில் 'சங்கல்ப்' சிறப்பு குழந்தைகள் பள்ளி – முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார்**

திருவள்ளூர் மாவட்டம் கோலப்பன்சேரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'சங்கல்ப்' சிறப்புகுழந்தைகளுக்கான பள்ளியை முதல்வர் முக ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி அருகில் கோலப்பன்சேரியில் அமைக்கப்பட்டுள்ள 'சங்கல்ப்' சிறப்பு குழந்தைகளுக்கான பள்ளியை, சென்னை தலைமைச் செயலகத்தில், காணொலி வாயிலாக முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார். 'சங்கல்ப்' பள்ளி 20 ஆண்டுகளாக சிறப்பு குழந்தைகளின் மேம்பாட்டுக்காக செயல்பட்டு வருகிறது.

கற்றல் குறைபாடுள்ள குழந்தைகள், ஆட்டிசம் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கும் வகையில், இப்புதிய 'சங்கல்ப்' பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பள்ளியில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பிசியோதெரபி சிகிச்சை, பேச்சுப்பயிற்சி சிகிச்சை போன்ற சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்படும். மேலும், அக்குழந்தைகள் சுயமாக வாழ்வை நடத்தும் வகையில் தொழிற்கல்வி பயிற்சி மூலம் நகை தயாரிப்பு, பரிசுப் பொருட்கள் தயாரிப்பு, நெசவுத் தொழில், டேட்டா என்ட்ரி, சோப்பு தயாரிப்பு, மசாலா பொருட்கள் தயாரிப்பு, முகக்கவசம் தயாரிப்பு போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**3. அக்டோபர்.10 –** உலக மனநல நாள்

**கருப்பொருள்:** சமத்துவமற்ற உலகில் மனநலம் பேணுதல்.

---

**4. இந்தியா–டென்மார்க் நான்கு ஒப்பந்தங்கள்: சுகாதாரம், வேளாண் துறைகளில் உறவை வலுப்படுத்த முடிவு**

சுகாதாரம், வேளாண்மை, நீர்மேலாண்மை, பருவநிலை மாற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளிடையேயான உறவை மேலும் விரிவுபடுத்த இந்தியாவும், டென்மார்க்கும் முடிவு செய்துள்ளன. இந்தியா வந்துள்ள அந்நாட்டு பிரதமர் மெட்டே பிரட்ரிக்சென் தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியுடன் மேற்கொண்ட ஆலோசனையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**புதிய 4 ஒப்பந்தங்கள் என்னென்ன?**

இந்தியா – டென்மார்க் இடையே கையெழுத்தான 4 ஒப்பந்தங்களில், நிலத்தடி நீர் வளங்கள் மற்றும் நீர்நிலைகளை வரைபடமாக்குவது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐதராபாதில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் – தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் டென்மார்க் ஆர்ஹஸ் பல்கலைக்கழகம் மற்றும் கிரீன்லாந்தின் புவியியல் ஆய்வு அமைப்பு ஆகியவை இடையே கையெழுத்தானது.

பாரம்பரிய அறிவு எண்ம (டிஜிட்டல்) நூலக அணுகல் குறித்த ஒப்பந்தம் CISR மற்றும் டென்மார்க் காப்புரிமை மற்றும் டிரேட்மார்க் அலுவலகம் இடையே கையெழுத்தானது. கோடைக் காலங்களில் இயற்கை குளிர் பதன சீர்மிகு மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகம், டான்போஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் இடையே கையெழுத்தானது.

திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பது தொடர்பாக இந்தியா–டென்மார்க் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகங்கள் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில் திறன் மேம்பாடு மற்றும்

தொழில்முனைவு அமைச்சக செயலாளர் ராஜேஷ் அகர்வால், டென்மார்க் தூதர் ப்ரெடி ஸ்வானே ஆகியோர் கையெழுத்திட்டனர்.

---

**5. ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: 30 பதக்கங்களுடன் இந்தியா முதலிடம்**

ISSF ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய அணி 13 தங்கம், 11 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் முப்பது பதக்கங்களுடன் முதலிடம் பெற்றுள்ளது.

பெரு நாட்டின் தலைநகர் லிமாவில் நடைபெறும் இந்தப் போட்டியின் ஒரு பகுதியாக ஆடவர் 25 மீ ரேபிட் பையர் பிஸ்டல் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் அனிஷ் பன்வலா, ஆதர்ஷ் சிங், விஜயவீர் சித்து ஆகியோா் அடங்கிய அணி 10–2 என்ற புள்ளிக்கணக்கில் ஜெர்மனியின் பேபியன், பெலிக்ஸ், டோபியாஸ் அணியை வீழ்த்தி தங்கம் வென்றது.

மேலும் ஜூனியர் டபுள் டிராப் பிரிவில் இந்தியாவின் மான்வி சோனி (105), சக வீராங்கனைகள் ஏஷயா (90) ஹிடாஷா (76) ஆகியோர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலங்களை வென்றனர். ஆடவர் டபுள் டிராப் பிரிவில் வினய் பிரதாப் சிங் 120 புள்ளிகளுடன் தங்கப் பதக்கத்தையும், சேஜா ப்ரீத் சிங் 114 புள்ளிகளுடன் வெள்ளியையும், மயங்க் ஷோகின் 111 புள்ளிகளுடன் வெண்கலத்தையும் வென்றனர்.

கலப்பு 50 மீ ரைபிள் 3 பிரிவில் இந்தியாவின் ஆயுஷி பொடர், பிரதாப் சிங் டோமர் வெள்ளிப்பதக்கம் வென்றனர். 25 மீ ரேபிட் பையர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ரிதம் சங்வான், விஜய்வீர் சித்து 9–1 என்ற புள்ளிக் கணக்கில் தாய்லாந்து அணியை வென்று தங்கம் வென்றனர். மேலும் இதே பிரிவில் தேஜஸ்வினி–அனிஷ் இணை வெண்கலம் வென்றது.

ஒட்டுமொத்தமாக 13 தங்கம் உள்பட 30 பதக்கங்களுடன் இந்தியா முதலிடத்தைப் பிடித்தது. அமெரிக்கா இரண்டாம் இடத்தைப் பெற்றது.

---

**6. நாடாளுமன்ற நிலைக்குழுக்களில் மாற்றம்: பணியாளர், சட்ட விவகார குழுவின் தலைவராக சுஷில் மோடி நியமனம்**

தேசநலன்சார்ந்த விஷயங்கள், சர்ச்சைக்குரிய மசோதாக்கள் போன்றவ–ற்றை ஆய்வுசெய்து ஒன்றிய அரசுக்கு தகுந்த பரிந்துரைகளை வழங்கும் முக்கிய பணியை நாடாளுமன்ற நிலைக்குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. வழக்கமாக ஆண்டுதோறும் செப்டம்பர்மாதம் இக்குழுக்கள் மாற்றி அமைக்கப்படும். அதன்படி, 24 நாடாளுமன்ற நிலைக்குழுக்களில் மாற்றம் செய்து மாநிலங்களவை தலைமைச் செயலகம் அறிக்கை வெளியிட்டது. இதில், பணியாளர், சட்டத்துறை நிலைக்குழுவின் தலைவராக சுஷில்குமார் மோடி நியமிக்கப்பட்டுள்ளார்.

இது அரசியல் கட்சிகளின் நிதி தொடர்பான அறிக்கை அளிக்கும் முக்கிய குழுவாகும். பீகார் மாநில முன்னாள் துணை முதல்வரான சுஷில் குமாருக்கு அமைச்சரவையில் இடம்தரப்படாததால், முக்கியமான இக்குழுவின் தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

**7. மாநகராட்சி உற்பத்தி செய்யும் இயற்கை உரத்தை – 'உரம்' என்ற பிராண்டில் விற்பனை:**

சென்னை மாநகராட்சி உற்பத்தி செய்யும் இயற்கை உரம், சுமார் 1,750 டன் அளவில் கையிருப்பில் உள்ளது. அதை 'உரம்' என்ற பிராண்ட் பெயரில் விற்பனை செய்ய மாநகராட்சி நிர்வாகம் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகள் முறையாக திடக்கழிவு மேலாண்மை செய்வதற்காக மத்திய அரசு, தூய்மை இந்தியா இயக்கத்தை தொடங்கி, அதன்மூலம் நிதி ஒதுக்கி வருகிறது. சென்னையில் தினமும் சராசரியாக 5,200 டன் குப்பைகள் உருவாகின்றன. இதுநாள் வரை அவை அனைத்தும் அப்படியே கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வந்தன. அதனால் அப்பகுதிகளில் கடும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்பட்டன.

இதனிடையே தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சிக்கு போதிய நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. அதன்மூலம் மக்கும் குப்பை, மக்காத குப்பை என வகை பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பை–கள் இயற்கை உரமாகவும், உயிரி எரிவாயு தயாரிக்கவும் பயன்படுத்தப்–பட்டு வருகிறது.

மக்காத குப்பைகளில் உள்ள உலோகங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மறு சுழற்சிக்கு கொண்டு செல்லப்படுகின்றன. மாநகராட்சியின் இத்தகைய நடவடிக்கைகளால் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு செல்லும் குப்பைகளின் அளவு தினமும் 1,000 டன்னுக்கு மேல் குறைந்துள்ளது. மேலும், மாநகராட்சி தயாரிக்கும் இயற்கை உரங்களுக்கு பிராண்ட் பெயர் உருவாக்கி, அதை விவசாயிகளுக்கு விற்க வேளாண் துறையில் அனுபவம் பெற்ற மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி திட்டமிட்டுள்ளார்.

இது தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

மாநகராட்சி சார்பில் 160 அமைவிடங்களில் செயல்படும் 208 மையங்களில், மக்கும் குப்பைகளில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கு–ம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இயற்கை உரம் தயாரிக்கும் திட்டத்தில் தினமும் 583 டன் குப்பைகள் இயற்கை உரமாக மாற்றப்படு–கின்றன. இவை மாநகராட்சி பூங்காக்கள் மற்றும் மாநகரப் பகுதியில் மரக்கன்றுகள் நடவும், நகர்ப்புற அடர் வனங்கள் அமைக்கவும் பயன்படு–த்தப்பட்டு வருகின்றன.

தற்போது மாநகராட்சியிடம் 1,750 டன் இயற்கை உரங்கள் கையிருப்பில் உள்ளன. இவற்றை வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விற்க மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஏற்பாடு செய்துள்ளார். அவரது அறிவுறுத்தலின்பேரில் மாநகராட்சியின் இயற்கை உரத்துக்கு 'உரம்' என்ற பிராண்ட் பெயர் வைக்கப்பட்டு, எழுத்–துருவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சி உற்பத்தி செய்யும் இயற்கை உரம் இந்தப் பெயரில்தான் விற்பனை செய்யப்பட உள்ளது. இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

---

**8. இந்தியாவில் பிறந்து பாகிஸ்தான் அணு ஆயுதத்தின் தந்தையாக மாறிய அப்துல் காதிர் கான் காலமானார்**

இந்தியாவில் பிறந்து, பாகிஸ்தானுக்கு குடிபெயரந்து அந்நாட்டின் "அணு ஆயுதத்தின் தந்தை" எனப் போற்றப்பட்ட அப்துல் காதிர் கான் (85) காலமானார்.

---

**9. முத்திரை பதிக்காத முத்ரா திட்டம்!**

கடந்த 2015ஆம் ஆண்டு மத்திய அரசு 'முத்ரா' (சிறு தொழில்கள் மேம்பாடு – கடனளிப்பு நிறுவனம்) தொடங்கியபோது நாட்டில் வேலைவாய்ப்பில்லாமல் இருந்த இளைஞர்கள் தங்கள் வாழ்வுக்கான ஒளி விளக்கு ஏற்றப்பட்டுள்ளதாகக் கருதினர். 'பிரதமர் முத்ரா' திட்டம் மிகப்பெரிய வெற்றி என்று மத்திய அரசு மகிழ்ச்சியுடன் கூறுகிறது.

இத்திட்டம் 31 கோடி பேருக்கு உதவியுள்ளதாகவும் (இந்த எண்ணிக்கை ஏறக்குறைய அமெரிக்க மக்கள்தொகைக்கு இணையானது; கனடா மக்கள்தொகையைவிட எட்டு மடங்கு அதிகம்) இத்திட்டத்தில் ₹15.86 இலட்சம் கோடி கடன் அளிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது. இந்தத் தொகை நியூஸிலாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (ஜிடிபி) இணையானது. இது தவிர உலகின் வெவ்வேறு 160 நாடுகளின் ஜிடிபி–யைவிட அதிகமானது. இக்கடன் அனைத்தும் 2015 ஏப்ரல் முதல் 2021 செப்.10ஆம் தேதி வரை (சுமார் ஆறு ஆண்டுகளில்) அளிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறம், நகர்ப்புறங்களில் சிறிய அளவில் தொழில், வர்த்தகம் நடத்துவோருக்கு அதிக கெடுபிடிகள் இல்லாமல் ₹10 இலட்சம் வரை கடன் அளிக்கப்படும் என்பதே 'முத்ரா' திட்டத்தின் அடிப்படை. எவ்வித அடமானமும் இன்றி இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

இதில் சிஷு பிரிவின் கீழ் ₹50,000 வரை, கிஷோர் பிரிவின்கீழ் ₹50,000 முதல் ₹5,00,000 இலட்சம் வரை, தருண் பிரிவின் கீழ் ₹5,00,000 முதல் ₹10,00,000 இலட்சம் வரை என மூன்று வகை திட்டங்கள் இதில் உள்ளன. இதில் சிஷு கடன் திட்டத்துக்கு ஒரு பக்கம் மட்டுமே விண்ணப்பம் இருக்கும். மற்ற இரு கடன் திட்டங்களுக்கும் மூன்று பக்கங்கள் மட்டுமே கடன் விண்ணப்பம். இதன் மூலம் கடன் நடைமுறை மிகவும் எளிமையாக்கப்பட்டது.

இத்திட்டம் மிகப்பெரிய வெற்றி என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டு உள்ளது. ஆனால், உண்மையான களநிலவரம் அதனுடன் ஒத்துப் போகிா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு முன்பு முத்ரா திட்டத்தின் தேவை பற்றியும் அது உருவாக்கப்பட்ட விதம் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். கடந்த 2015 மார்ச் மாதத்தில், நிறுவனங்க–ள் சட்டம் 2013'இன்கீழ் முத்ரா ஒரு நிறுவனமாக தொடங்கப்பட்டது. மேலும், இது இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியின் (சிட்பி) துணை நிறுவனமாகும். தொடர்ந்து 2015 ஏப்ரல் 7ஆம் தேதி இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கி சாரா நிதி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது.

அதற்கு அடுத்த நாளில் (2015 ஏப்ரல் 8) பிரதமர் மோடி 'பிரதமர் முத்ரா' திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ₹1,000 கோடி என்றும் செயல்பாட்டு மூலதனம் ₹750 கோடி என்று அறிவிப்பு வெளியானது. முத்ரா ஒரு மறுநிதியளிப்பு நிறுவனம் என்பதால் அது நேரடியாகக் கடன் வழங்காது. அதே நேரத்தில் வங்கிகள், பிற கடனளிப்பு நிறுவனங்கள் மூலம் கடன் வழங்க உதவுகிறது. மேலும், தெளிவாக விளக்குவதென்றால் வங்கிகள் சிறு தொழில்களுக்குக் கடன் அளிக்கின்றன. அதற்கான நிதியை வங்கிகளுக்கு முத்ரா அளிக்கிறது.

வங்கிகள்மூலம் கடனளித்து சிறு தொழில்களை மேம்படுத்த வேண்டும்; சிறு தொழில்களுக்கு வங்கிக் கடன் கிடைப்பதை எளிதாக்க வேண்டும் என்பவையே முத்ரா திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள், கிராப்புற வங்கிகள், சிறுகடன் வங்கிகள், உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகள், சிறுகடன் நிறுவனங்கள், வங்கி சாரா கடன் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்தும் முத்ரா திட்டத்தின்கீழ் கடன் வழங்குகின்றன.

இந்தியப் பொருளாதாரத்தில் சிறுதொழில்கள் முக்கியப் பங்கு வகிப்பதால் அவற்றுக்குத் தேவையான நிதியாதாரத்தை, கடன் மூலம் அளிக்க முத்ரா கடன் திட்டம் போன்றவை அவசியம் என்று அறியப்படுகிறது. ஏனெனில், நாட்டில் வேளாண்மைத் துறைக்கு அடுத்து சிறு, குறு தொழில்களே பொருளாதாரக் கட்டமைப்பின் முக்கியப் படிநிலையாக உள்ளன. சிறு, குறு தொழில்கள் 11 கோடிக்கு மேற்பட்டோருக்கு நேரடியாகப் பணி வாய்ப்பு அளிக்கின்றன. மேலும், அதன் இதர படிநிலைகள் மூலம் மேலும் சுமார் 11 கோடி பேர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். 55 கோடி மக்களின் வாழ்க்கைக்கு உதவுவதாக உள்ளது. மேலும், சிறு, குறு தொழில் புரிபவர்களில் 97 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர்களாக உள்ளனர்.

நாட்டின் மொத்த மதிப்பு சேர்க்கையில் (GVA) சிறு, குறு நிறுவனங்களின் பங்களிப்பு மட்டும் 33 சதவீதமாகும். நாட்டின் ஏற்றுமதியில் சிறு, குறு நிறுவன உற்பத்திப் பொருள்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. 2018-19 நிதியாண்டில் நாட்டின் ஏற்றுமதியில் சிறு, குறு நிறுவனங்களின் பங்களிப்பு 48.10 சதவீதம் என அரசின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

குறுந்தொழில் நிறுவனங்களில் 54 சதவீதம் கிராமப்புறங்களில்தான் செயல்படுகின்றன. உற்பத்தி, உற்பத்திக்கு தயார்படுத்துதல், வர்த்தகம், வியாபாரிகளுக்கான சேவைகளை அளித்தல், பழங்கள், காய்கறி விற்பனையாளர், இயந்திரப்பணியாளர்கள், கைவினைக் கலைஞர்கள், குடிசைத்தொழில்கள், தெருவோர வியாபாரிகள் உள்ளிட்டோர் இந்த 54 சதவீதத்தில் அடங்குவர். இவற்றில் பல தொழில்கள் ஒருவரால் மட்டுமே, ஓரிடத்தில் மட்டுமே நடத்தப்படுபவையாக இருக்கும்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தபோதும் சிறுதொழிகளுக்கு கடனுதவி முறையாகக் கிடைப்பதில்லை என்பதே உண்மை. சிறுதொழில்கள் செய்வோர் கடன் வழங்கும் தனிநபர்களை நம்பியே உள்ளனர். இத் துறையின் அளவுக்கு ஏற்ப வங்கிக் கடன் வழங்கப்படுவதில்லை.

'இந்தியாவில் சிறு, குறு தொழில்களுக்கான மொத்த கடன் தேவை ₹3.7 இலட்சம் கோடியாக உள்ளது. ஆனால், ₹1.45 இலட்சம் கோடி வரை மட்டுமே வங்கி போன்ற அமைப்புகள் மூலம் கடன் அளிக்கப்படுகின்றன. சிறு, குறு நிறுவனங்களுக்கு ₹2 இலட்சம் முதல் 2.5 இலட்சம் கோடி வரை கடன் கிடைக்காத நிலை உள்ளது.

மேலும், இப்போது நமது பொருளாதாரக் கொள்கைகள் சிறு, குறு தொழில்களுக்கு தேவையான கடன்களைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தவில்லை. இந்த விவகாரத்தில் நவீன அணுகுமுறை தேவை. இல்லையென்றால் தேவையான வளர்ச்சியை நாம் எட்டமுடியாது' என ரிசர்வ் வங்கியின் நிபுணர் குழு (யுகே சின்ஹா குழு-2019) கூறியுள்ளது.

சிறு, குறு நிறுவனங்கள் தரப்பிலும் பிரச்னை உள்ளது. அவர்கள் நிறுவனங்களைப் பதிவு செய்வதுமில்லை, முறையாக கணக்கு விவரங்களைப் பேணுவதுமில்லை. இதன் காரணமாகவே வங்கிகள் அவர்களுக்குக் கடனளிக்கத் தயங்குகின்றன. இப்பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வாக இருக்கும் என்றே முத்ரா திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால், இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது தொடர்பாக தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் நிச்சயமாக கிராம, நகர்ப்புறங்களில் சிறு தொழில் நடத்தும் சாமானியர்களுக்கு திருப்தி அளிப்பதாக இல்லை. அதாவது, உணவு பரிமாறியதற்கு ஆதாரம் உள்ளது. ஆனால், அது எந்த அளவுக்கு அவர் உண்ணக் கூடியதாக, போதுமானதாக இருந்தது என்பதே கேள்வி.

சிறுதொழில் செய்வோர் போதுமான அளவு குறைந்த வட்டியில் கடன் பெற முடியவில்லை. எவ்வித அடமானமும் இல்லாமல் கடன் பெற முடியும் என்ற இந்தத் திட்டம் போதுமான அளவு விளப்பரப்படுத்தப்படவுமில்லை.

அரசு கூறும் புள்ளிவிவரங்கள் எப்போதும் முரண்பாடாகவே உள்ளன. முத்ரா திட்டத்தில் 31,02,82,823 பேருக்கு ₹15,86,081.69 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி சராசரியாக ஒரு நபருக்கு ₹51,117 வழங்கப்பட்டுள்ளது.

அப்படியென்றால் பெரும்பாலானவர்களுக்கு ₹50,000 வரையிலான சிஷு பிரிவில் மட்டும்தான் கடன் கிடைத்துள்ளது. ₹10 இலட்சம் வரை கடன் பெறுவது என்பது பலருக்கு எட்டாக்கனியாகவே உள்ளது.

இரண்டாவதாக, முத்ரா திட்டத்துக்கு முன்பும் குறுந்தொழில்களுக்கு வங்கிகள் கடன் வழங்கியே வந்தன. எனவே, அவர்கள் விவசாயம் அல்லாத அனைத்துக் கடன்களையும் முத்ரா திட்டக் கடன்கள் என்ற பெயரிலேயே முத்திரை குத்தலாம். இதுவே, இந்த புள்ளிவிவரத்தில் எதிரொலித்துள்ளது. மூன்றாவதாக, வங்கிகள் முத்ரா கடன்களுக்கும் அடமானம் கோரியதாக பரவலாக புகார்கள் உள்ளன.

இதன் மூலம் முத்ரா என்பது பிணையில்லாக் கடன் திட்டம் என்பது பொய்த்துப் போனது. மேலும், முத்ரா கடனுக்கு எவ்விதக் குறிப்பிட்ட வட்டி விகிதமும் பரிந்துரைக்கப்படவில்லை. வழக்கம்போல RBI விதிகளுக்கு உட்பட்ட நியாயமான வட்டி விகிதத்தைப் பின்பற்ற வேண்டும் என்றே வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. எனவே, முத்ரா திட்டத்தில் குறைவான வட்டி விகிதம் என்பதும் சாத்தியமில்லாமல் போனது.

இவை அனைத்தையும் ஆய்வு செய்து பார்க்கும்போது, முத்ரா திட்டத்தில் கிடைத்த பலன்கள் என்று அரசால் கூறப்படுவது மிகவும் மிகைப்படுத்தப்பட்டவை என்பது தெளிவாகிறது. முத்ரா திட்டத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டிய நேரம் இது. குறுந் தொழில்களுக்குக் கடன் கிடைப்பதில் உள்ள பிரச்னைகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு அவை தீர்க்கப்பட வேண்டும். அதைவிடுத்து, 'முத்ரா' போன்று பெயரளவில் மட்டுமே புதிய திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவது அரைத்த மாவையே அரைப்பதற்கு ஒப்பாகுமே தவிர, பிரச்னைக்கு சரியான தீர்வாக அமையாது.

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'பண்டோரா பேப்பர்ஸ்' என்றால் என்ன?**

அ) இத்தாலியில் தயாரிக்கப்பட்ட தாள்

ஆ) சுற்றுச்சூழலுக்குகந்த தாள்

**இ) வெளிப்படுத்தப்படாத சொத்து மற்றும் வரி தவிர்ப்பை வெளிப்படுத்தும் ஆவணங்கள் ☑**

ஈ) பிட்காயின் தொடர்பான ஆவணங்கள்

✓ 'பண்டோரா ஆவணங்கள்' என்பது உலகெங்கும் உள்ள பிரபலங்களால் மறைக்கப்பட்ட செல்வம், வரி ஏய்ப்பு & பணமோசடி பற்றிய ஆவணங்கள் ஆகும். இதுதொடர்பான தகவல்கள், பன்னாட்டு புலனாய்வு இதழியலாள –ர்கள் கூட்டமைப்பால் பெறப்பட்டது. மேலும், 140'க்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்கள் பணமோசடி செய்பவர்களின் வசம் உள்ளன.

---

**2. தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனத்தின் MD யார்?**

**அ) PM நாயர் ☑**



ஆ) அஜித் தோவல்

இ) உர்ஜித் படேல்

ஈ) UK சின்ஹா

✓ பாரத ஸ்டேட் வங்கியின் சொத்து நிபுணரான PM நாயர், தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்நிறுவனம் சமீபத்தில் தனது செயல்பாடுகளைத் தொடங்க ரிசர்வ் வங்கியின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. "பேட் பேங்க்" / NARCL'ஐ அமைப்பதற்கான முடிவு 2021–22 மத்திய வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

---

**3. "சுவாமித்வா" திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ) விவசாய அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) வீட்டுவசதி & நகர்ப்புற அமைச்சகம்

Panchayati Raj

**ஈ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ☑**

✓ "SVAMITVA – Survey of Villages Abadi and Mapping with Improvised Technology in Village Areas" என்பது பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், ட்ரோன்களைப் பயன்படுத்தி நிலப் பரப்புகளை வரைபடமாக்குவதன்மூலம் கிராமத்தினர் வசிக்கும் பகுதிக –ளில் சொத்தின் தெளிவான உரிமை நிலை நிறுத்தப்படுகிறது.

✓ சமீபத்தில், இந்தத் திட்டத்தின்கீழ், மத்திய பிரதேச மாநிலத்தின் 1,71,000 பயனாளிகளுக்கு பிரதமர் மின்–சொத்து அட்டைகளை விநியோகித்தார்.

---

**4. 2021–22ஆம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட "மித்ரா" திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?**

அ) பாதுகாப்பு



**ஆ) ஜவுளி ☑**

இ) ஆட்டோமொபைல்

ஈ) மருந்து

✓ PM Mega Integrated Textile Region and Apparel (MITRA) என்பது 2021–22 மத்திய வரவுசெலவுத் திட்டத்தில் ஜவுளித்துறையின் வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். ₹4,445 கோடி மதிப்பீட்டில் 7 மெகா ஜவுளிப்பூங்காக்களை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பூங்காக்கள் 21 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**5. சமீபத்தில் புவிசார் குறியீடு பெற்ற இந்திய உணவான 'மிகிதானா' சார்ந்த மாநிலம் எது?**

**அ) மேற்கு வங்கம் ☑**



ஆ) இராஜஸ்தான்

இ) ஹரியானா

ஈ) பஞ்சாப்

✓ 'மிகிதானா' என்பது மே வங்க மாநிலத்தின் ஒரு இனிப்பு வகையாகும். அண்மையில் இதற்கு GI (புவிசார் குறியீடு) கிடைக்கப்பெற்றது. பர்தமானில் செய்யப்பட்ட மிகிதானாவின் முதல் சரக்கு பஹ்ரைனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதை அடுத்து இது சமீப செய்திகளில் இடம்பெற்றது.

---

**6. வடகிழக்கு மாநிலங்களின் சமையலெண்ணெய்கள்–எண்ணெய் பனை தேசிய இயக்கம் குறித்த வணிக உச்சிமாநாடு நடந்த இடம் எது?**

**அ) கௌகாத்தி ☑**



ஆ) அகர்தலா

இ) இடாநகர்

ஈ) கேங்டாக்

✓ வடகிழக்கு மாநிலங்களின் சமையலெண்ணெய் – எண்ணெய் பனை தேசிய இயக்கம் குறித்த வணிக உச்சிமாநாடு சமீபத்தில் கௌகாத்தியில் நடைபெற்றது. இதற்கு மத்திய உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தலைமை வகித்தார்.

✓ சமையலெண்ணெய் – எண்ணெய் பனை மீதான தேசிய இயக்கமான –து 2025–26ஆம் ஆண்டுக்குள் மொத்தம் 6.5 இலட்சம் ஹெக்டேர்கள் கூடுதல் பரப்பளவில் எண்ணெய் பனை பயிரிடப்படுவதற்கான ஒரு மத்திய நிதியுதவி திட்டமாகும்.

---

**7. இயற்கை மற்றும் மக்களுக்கான உயர்ந்த இலட்சிய கூட்டணி, அதிகாரப்பூர்வமாக எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?**

அ) 1984

ஆ) 1992

2021

இ) 2000

**ஈ) 2021 ☑**

✓ இயற்கை மற்றும் மக்களுக்கான உயர்ந்த இலட்சிய கூட்டணி என்பது அரசாங்கங்களுக்கு இடையேயான ஒரு குழுவாகும். இக்குழு பிரான்ஸ் மற்றும் கோஸ்டாரிகாவுடன் இணைந்து செயல்படுகிறது. 2030'க்குள் புவியின் 30% நிலத்தையும் அதன் 30% பெருங்கடல்களையும் பாதுகாக்க ஓர் உறுதியை ஏற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

✓ இக்கூட்டணி, அதிகாரப்பூர்வமாக, கடந்த 2021'ஆம் ஆண்டில் நடந்த 'ஒன் பிளானட்' உச்சிமாநாட்டில் தொடங்கப்பட்டது. தற்போது சுமார் 70 உறுப்பினர்கள் இதிலுள்ளனர். புது தில்லியில் பிரெஞ்சு மற்றும் இந்திய அரசுகளுக்கு இடையே நடந்த விழாவில், இந்தியா, அதிகாரப்பூர்வமாக இக்கூட்டணியில் இணைந்தது.

---

**8. 'இந்திய வான்படை நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) அக்டோபர்.2




ஆ) அக்டோபர்.4

இ) அக்டோபர்.5

**ஈ) அக்டோபர்.8 ☑**

✓ ஆண்டுதோறும் அக்டோபர் 8 அன்று, இந்திய வான்படை நாளை நாடு கொண்டாடுகிறது. இந்த ஆண்டு, இந்திய வான்படை நாளின் 89ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. 1932ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய வான்படை (IAF) நிறுவப்பட்டது. இதன் முதல் செயற்பாட்டுப்படை 1933 ஏப்ரலில் நிறுவப்பட்டது. இந்த நாள், இந்திய விமானப்படைபற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, "பாரதிய வாயு சேனா" என்றும் அழைக்கப்படுகிறது.

---

**9. ரிசர்வ் வங்கியின் அக்டோபர் மாத பணவியல் கொள்கைக்குழு கூட்டத்திற்குப் பிறகு, ரெப்போ விகிதம் என்ன?**

அ) 4.5 %




ஆ) 4.25%

**இ) 4.00% ☑**

ஈ) 3.75%

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கைக்குழுவானது ரெப்போ விகிதத்தை தொடர்ச்சியாக 8ஆவது முறையாக 4 சதவீதமாக மாற்றாமல்

வைத்துள்ளது. தலைகீழ் ரெப்போ விகிதம் 3.5 சதவீதமாக அப்படியே உள்ளது. 2021–22 நிதியாண்டின் GDP வளர்ச்சி முன்கணிப்பை 9.5 சதவீதமாக இருக்கும் என RBI கூறியுள்ளது.

---

**10. நடப்பாண்டு (2021) உலக அஞ்சல் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Innovate to recover ☑**

ஆ) Post to Connect

இ) Communication during Covid

ஈ) Post across the World




✓ கடந்த 1874ஆம் ஆண்டு உலக அஞ்சல் தொழிற்சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு நாளை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 9ஆம் தேதி அன்று உலக அஞ்சல் நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியா, 1876 முதல் உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தில் உறுப்பினராக உள்ளது. "Innovate to recover" என்பது நடப்பு 2021ஆம் ஆண்டுக்கான கருப்பொருளாகும். மக்களின் வாழ்வில் அஞ்சல் துறையின் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே உலக அஞ்சல் நாளின் நோக்கமாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பொருளாதாரம்: அமெரிக்கா்கள் மூவருக்கு நோபல் பரிசு**

நிகழாண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சோ்ந்த பொருளாதார வல்லுநா்கள் டேவிட் காா்ட், ஜோஷுவாடி ஆங்கிரிஸ்ட், குயிடோ டபிள்யு இம்பென்ஸ் ஆகிய மூவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசுத் தொகையின் ஒரு பாதி டேவிட் காா்டிக்கும், மற்றொரு பாதி மற்ற இருவருக்கும் பகிா்ந்தளிக்கப்படும்.

குறைந்தபட்ச ஊதியம், குடியேற்றம், கல்வி ஆகியவற்றின் தொழிலாளா் சந்தை விளைவுகள் தொடா்பாக முன்னோடி ஆராய்ச்சியை மேற்கொண்டதற்காகவும், அறிவியல்பூா்வமான ஆய்வுகளை மேற்கொள்ள இயலாமல் போகும் சூழலில், இதுபோன்ற ஆய்வுகளிலிருந்து முடிவுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்ததற்காகவும் அவா்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நோபல் தோ்வுக் குழுவினா் தெரிவித்ததாவது: நோபல் பரிசுக்குத் தோ்ந்தெடுக்கப்பட்டுள்ள மூவரும் பொருளாதார அறிவியலில் முற்றிலும் மறுவடிவமைக்கப்பட்ட அனுபவரீதியான பணிகளை மேற்கொண்டுள்ளனா். சமூகத்தின் மையக் கேள்விகள் குறித்த டேவிட் காா்டின் ஆய்வும், ஆங்கிரிஸ்ட், இம்பென்ஸின் காரணிகள் அடிப்படையிலான பரிசோதனைகளும் அறிவின் வளமான ஆதாரம் எனக் காண்பிக்கின்றன. சமூகத்துக்கு சிறந்த பலனைத் தரக்கூடிய முக்கியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் திறனையும் மேம்படுத்தியுள்ளன.

அமெரிக்காவின் நியூ ஜொ்சி, கிழக்கு பென்சில்வேனியா ஆகிய இடங்களில் உள்ள உணவகங்களில் பணியாற்றுவோருக்கு குறைந்தபட்ச ஊதியத்தை உயா்த்துவதால் ஏற்படும் விளைவுகளை அறிவதற்காக டேவிட் காா்ட் ஆய்வுப் பணியில் ஈடுபட்டாா். அவரும், அவருடன் ஆய்வுப் பணியில் ஈடுபட்ட மறைந்த ஆலன் குரூகெரும் குறைந்தபட்ச ஊதிய அதிகரிப்பானது வேலைவாய்ப்பில் பாதிப்பை ஏற்படுத்தாது எனக் கண்டறிந்தனா். குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிப்பது வேலைவாய்ப்பைக் குறைக்கும் என்ற வழக்கமான கண்ணோட்டத்தை அது மாற்றியமைத்தது. மேலும், வெளிநாடுகளிலிருந்து குடியேறுபவா்களால் பூா்விக தொழிலாளா்களின் ஊதியம் குறையும் என்ற கருத்தையும் டேவிட் காா்டின் ஆய்வு மாற்றியமைத்தது. புதிதாகக் குடியேறுபவா்கள் மூலம் பூா்விக தொழிலாளா்களின் வருவாய் உயரக்கூடும் என அவா் கண்டறிந்தாா்.

அறிவியல் முறைகளின்படி ஆய்வு மேற்கொள்ள இயலாத நிலையிலும்கூட காரணம் மற்றும் விளைவு குறித்து பொருளாதார வல்லுநா்கள் உறுதியான முடிவெடுக்க உதவும் வகையிலான வழிமுறைகளைக் கண்டறிந்ததற்காக ஆங்கிரிஸ்ட், இம்பென்ஸுக்கு நோபல் பரிசுத் தொகையின் ஒரு பாதி பகிா்ந்தளிக்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ளனா்.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம் ஆகியவற்றுக்கான நோபல் பரிசுகள் வழங்கும் முறை வேதியியலாளா் ஆல்ஃபிரட் நோபலின் உயிலின்படி தொடங்கப்பட்டது. பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு மட்டும் அவரது நினைவாக ஸ்வீடன் மத்திய வங்கியால் 1968–இல் தொடங்கப்பட்டது.

டேவிட் காா்ட் (65): கனடாவில் பிறந்த டேவிட் காா்ட், கலிஃபோா்னியா (பொ்க்லி) பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத் துறைப் பேராசிரியராகப் பணிபுரிகிறாா். தேசிய பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவின் தொழிலாளா் திட்ட இயக்குநராகவும் உள்ளாா்.

ஜோஷுவாடி ஆங்கிரிஸ்ட் (61): இஸ்ரேல் அமெரிக்கரான இவா், மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (எம்ஐடி) பொருளாதார பேராசிரியராகப் பணிபுரிகிறாா்.

குயிடோ டபிள்யு இம்பென்ஸ் (58): நெதா்லாந்தில் பிறந்த குயிடோ டபிள்யு இம்பென்ஸ், ஸ்டான்ஃபோா்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதார பேராசிரியராகப் பணிபுரிகிறாா்.

---

**2. தமிழகத்தில் காசநோய் குணப்படுத்தும் விகிதம் 86 சதவீதமாக உயா்வு**

தமிழகத்தில் காசநோயாளிகளை குணப்படுத்தும் விகிதம் 86 சதவீதமாக அதிகரித்துள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய காசநோய் மையத்தின் இணை மேற்பாா்வை குழுவுடன் இணைந்து உலக சுகாதார அமைப்பின் தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளா் ரஞ்சனி ராமச்சந்திரன் தலைமையிலான குழுவினா் கடந்த 7–ஆம் தேதி முதல் 11–ஆம் தேதி வரை தென் சென்னை, திருவள்ளூா் மாவட்டங்களில் காசநோய் ஒழிப்பு திட்ட செயல்பாடுகள் தொடா்பான ஆய்வுகளை மேற்கொண்டனா். அதுதொடா்பான ஆய்வு அறிக்கையை தலைமைச் செயலகத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சா் மா.சுப்பிரமணியனை சந்தித்து அவா்கள் செவ்வாய்க்கிழமை வழங்கினா்.

அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

இந்தியாவில் காசநோய் அச்சுறுத்தலை முற்றிலும் வேரறுக்கும் நோக்கில் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டமானது 2020–ஆம் ஆண்டு முதல் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. 2025–ஆம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் பொருட்டு, நோய் கண்டறிதல் – சிகிச்சை – மருத்துவக் கட்டமைப்பு – நோய்த் தடுப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து மாநில அரசு செயல்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் தமிழகத்திலேயே முதன்மை மாவட்டமாக திருவள்ளூா் மாவட்டம் திகழ்ந்து வருகிறது. அங்கு காசநோய் தடுப்புத் திட்டங்கள் சிறப்புற மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில அளவில் எடுத்துக் கொண்டால் புதிதாகக் கண்டறியப்பட்ட காசநோயாளிகளை குணப்படுத்தும் விகிதம் 86 சதவீதத்தை எட்டியுள்ளது. கூட்டு மருந்து எதிா்ப்புக் காசநோய் திட்ட மேலாண்மையின் கீழ், உரிய நோயாளிகளை கண்டறிந்து தரமான சிகிச்சை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அனைத்து ஹெச்ஐவி நோயாளிகளுக்கும் காசநோய் பரிசோதனையும், அனைத்து காசநோயாளிகளுக்கும் ஹெச்ஐவி பரிசோதனையும் தமிழகத்தில் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழகம் முழுவதும் 39,222 காச நோயாளிகளுக்கு தேவைப்படும் காசநோய் மருந்துகள் காசநோய் களப்பணியாளா்கள் மூலம் அவா்களின் இருப்பிடங்களுக்கே சென்று வழங்கப்பட்டுள்ளது. சிகிச்சை நெறிமுறைகளின்படி அவா்களது வீட்டிலேயே சளி மாதிரி எடுக்கப்பட்டும், தேவைப்படுபவா்களுக்கு நடமாடும் ஊடுகதிா் கருவிகளை அவா்களின் இருப்பிடங்களுக்கே அனுப்பி ஊடுகதிா் படம் எடுக்கப்பட்டும் வருகிறது.

அதுமட்டுமல்லாது, மருந்துகளை உரிய வகையில் உட்கொள்வது, பக்கவிளைவுகள், காசநோயின் தன்மை போன்றவைகள் குறித்த ஆலோசனைகள் தொலைபேசி வாயிலாக வழங்கப்படுகின்றன. இணையதளம் மூலமாக அனைத்து மருந்தகங்களிலும் காசநோய் மருந்து விநியோகம் குறித்த தகவல் பெறுவதன் மூலம் தனியாா் அமைப்புகளிலும் காசநோய் சிகிச்சைகளை தொடா்ந்து கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021 ஆகஸ்ட் மாதம் முதல் காசநோய் கண்டறியும் முகாம்கள் மூலம் 42,797 பரிசோதனைகள் செய்யப்பட்டு 465 காசநோய் நோயாளிகள் அடையாளம்

காணப்பட்டுள்ளனா' என்று அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**3. கிர்கிஸ்தான் மேம்பாட்டுக்கு ரூ.1507 கோடி இந்தியா கடனுதவி**

கிர்கிஸ்தான் நாட்டின் மேம்பாட்டு திட்டங்களுக்காக ரூ.1507 கோடி கடனுதவி அளிப்பதாக இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய ஆசிய நாடுகளுடனான உறவை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், கிர்கிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் ஆர்மீனியா ஆகிய நாடுகளுக்கு ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் அமைச்சர் ஜெய்சங்கர் கிர்கிஸ்தான் சென்றார்.

இதனை தொடர்ந்து அந்நாட்டு வெளியுறவு துறை அமைச்சர் ருஸ்லான் கசாக் பேவை நேற்று அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இந்திய மாணவர்கள் பயணத்திற்கான பாரபட்சமற்ற விசா நடைமுறை உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. இரு நாடுகளுக்குமான ராணுவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும் மதிப்பாய்வு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து கிர்கிஸ்தான் நாட்டின் மேம்பாட்டு திட்ட பணிகளுக்காக இந்தியா ரூ.1507 கோடி கடன் உதவி வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**4. இன்று ஜி20 தலைவா்கள் மாநாடு: பிரதமா் மோடி பங்கேற்பு**

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடா்பாக விவாதிப்பதற்காக ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைவா்கள் மாநாடு செவ்வாய்க்கிழமை (அக்.12) நடைபெறுகிறது. இதில் பிரதமா் நரேந்திர மோடி காணொலி முறையில் பங்கேற்க இருக்கிறாா்.

இது தொடா்பாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மேலும் கூறியிருப்பதாவது:

ஆப்கானிஸ்தானில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது, மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க பரிசீலிப்பது, சா்வதேச பாதுகாப்பு, பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடா்பாக இந்த ஜி20 மாநாட்டில் விவாதிக்கப்பட இருக்கிறது.

இப்போதைய ஜி20 மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் இத்தாலியின் அழைப்பை ஏற்று பிரதமா் மோடியும் இந்த மாநாட்டில் பங்கேற்கிறாா். சா்வதேச அளவில் முக்கிய விஷயங்களில் ஒருமித்த கருத்தை எட்டுவதில் ஜி20 கூட்டமைப்பு முக்கியப் பங்கு வகித்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆப்கானிஸ்தான் தொடா்பாக விவாதித்த ஜி20 வெளியுறவு அமைச்சா்கள் மாநாட்டில் எஸ்.ஜெய்சங்கா் பங்கேற்றாா் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**5. 'போக்ஸோவில் பதிவான 99% வழக்குகள் சிறுமிகளுக்கு எதிரானவை**

கடந்த ஆண்டு போக்ஸோ சட்டத்தின் கீழ் பதிவான 99 சதவீதத்துக்கும் அதிகமான வழக்குகள் சிறுமிகளுக்கு எதிரானவையாக உள்ளன.

இதுதொடா்பாக மத்திய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி, 'சிறாா்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சட்டமான போக்ஸோவின் கீழ் கடந்த ஆண்டு மொத்தம் 28,327 வழக்குகள் பதிவாகி உள்ளன. இதில் 28,058 வழக்குகள் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் தொடா்பானவை. இதில் 14,092 வழக்குகள் 16 முதல் 18 வயதுக்குள்ள சிறுமிகள் தொடா்புடையவை. 10,949 வழக்குகள் 12 முதல் 16 வயதுக்குள்ளானவா்கள் தொடா்பானவை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புள்ளி விவரங்களை ஆய்வு செய்து 'கிரை' எனும் குழந்தைகள் உரிமைகளுக்கான அமைப்பின் திட்ட ஆய்வாளா் பிரீத்தி மஹாரா, சா்வதேச பெண் குழந்தைகள் தினமான திங்களன்று கூறியதாவது:

சமூகத்தில் பாலியல் வன்கொடுமைகளுக்கு சிறுமிகள்தான் தொடா்ந்து இரையாகி வருவது இந்த புள்ளி விவரங்கள் தெளிவு படுத்துகின்றன.

சிறுமிகளுக்கு பாதுகாப்பு மட்டுமன்றி கல்வி, சமூகப் பாதுகாப்பு, வறுமை போன்றவையும் அவா்களுக்கு அதிகாரமளிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. கரோனா கால கட்டத்தில் இந்த அம்சங்கள் அவா்களுக்கு எதிராக இருந்தன. இதனால் அவா்களின் கல்வி தடைபட்டு, குழந்தை திருமணத்துக்கு ஆளாகும் நிலை அதிகரித்தது. வன்முறைக்கும் பாலியல் துன்புறுத்தலுக்கும் உள்ளாகும் நிலையும் அதிகமாகியது.

பெண் குழந்தைகளின் கல்வியையும் பாதுகாப்பையும் வலுப்படுத்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறு வளா்ச்சி நடவடிக்கைகள் கரோனா பெருந்தொற்றால் சரிந்துவிட்டன. கல்வி பயில்வதில் இருந்து பெண் குழந்தைகள் விலகுவதும், அவா்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாவதும் அதிகரித்துவிட்டது. பதின்ம வயதில் உள்ள சிறுமிகள் மனிதாபிமானமற்ற நெருக்கடியில் பல்வேறு பாதுகாப்பு சவால்களை எதிா்கொள்கின்றனா். ஆகையால், அவா்களைப் பாதுகாக்க உடனடி மற்றும் நீண்ட கால திட்டங்களை முழுமையாக அமல்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்' என்றாா்.

---

**6. சேதி தெரியுமா?**

செப்.30 – அக்.3: இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா மகளிர் அணிகள் இடையே முதன் முறையாக பிங்க் பந்து பகலிரவு டெஸ்ட் போட்டி கோல்ட்கோஸ்ட் நகரில் நடைபெற்றது.

அக்.1: 2012 தேர்தலில் சட்டவிரோதமாக நிதி அளித்த புகாரில் பிரான்ஸ் முன்னாள் அதிபர் நிகோலஸ் சர்கோசிக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கியது.

அக்.2: காதித் துணியால் நெய்யப்பட்ட உலகின் மிகப் பெரிய இந்திய தேசியக் கொடி லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள லே பகுதியில் பறக்கவிடப்பட்டது.

அக்.4: 2021–ம் ஆண்டுக்கான மருத்துவ நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் பட்டாபுடியான் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

அக்.5: கருணை ஒன்றையே வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்த வள்ளலார் பிறந்த அக்டோபர் 5 இனி 'தனிப்பெருங் கருணை' நாளாகக் கொண்டாடப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அக்.5: இயற்பியலுக்கான நோபல் பரிசு ஜப்பானின் சியுகுரோ மனாபே, ஜெர்மனியின் கிளாஸ் ஹாசல்மேன் மற்றும் இத்தாலியின் ஜார்ஜியோ பாரிசி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

அக். 6: வேதியியலுக்கான நோபல் பரிசு ஜெர்மனியின் பெஞ்சமின் லிஸ்ட் மற்றும் பிரிட்டனின் டேவிட் டபுள்யு.சி மேக்மில்லன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

அக்.7: இந்தியப் பணக்காரர்களின் பட்டியலில் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரிஸ் நிறுவனத் தலைவர் முகேஷ் அம்பானி தொடர்ந்து பத்தாம் முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளார். இரண்டாமிடத்தில் அதானி குழுமத் தலைவர் கவுதம் அதானி உள்ளார்.

அக்.8: ஏர் இந்தியா நிறுவனத்தை ரூ.18 ஆயிரம் கோடிக்கு டாடா சன்ஸ் துணை நிறுவனமான தலேஸ் பிரைவேட் லிமிடெட் வாங்கியுள்ளதாக மத்திய அரசு அறிவித்தது. டாடா நிறுவனம் தொடங்கிய ஏர் இந்தியாவை 1953–ல் மத்திய அரசு நாட்டுடமையாக்கியது.

---

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, குரு காசிதாஸ் தேசிய பூங்கா & தமோர் பிங்லா வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) மேற்கு வங்கம்



ஆ) ஒடிசா

**இ) சத்தீஸ்கர் ☑**

ஈ) பீகார்


✓ சத்தீஸ்கர் மாநில அரசானது குரு காசிதாஸ் தேசிய பூங்கா & தமோர் பிங்லா வனவுயிரி சரணாலயம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதிகளை புலிகள் காப்பகமாக அறிவிக்கவுள்ளது. தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம், சத்தீஸ்கர் மாநில அரசின் இந்த முன்மொழிவை அங்கீகரித்துள்ளது. மத்திய பிரதேசம் மற்றும் ஜார்கண்ட் மாநிலத்தின் எல்லையில், வடக்குப் பகுதியில் இந்தப் புதிய காப்பகம் அமைந்துள்ளது.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற ஈர்ப்பிலாவெளி அணு கடிகாரத்துட –ன் தொடர்புடைய விண்வெளி ஆய்வு முகமை எது?**

அ) இஸ்ரோ

**ஆ) நாசா ☑**



இ) வர்ஜின் கேலக்டிக்

ஈ) ஸ்பேஸ் எக்ஸ்

✓ நாசாவின் ஈர்ப்பிலா விண்வெளி அணு கடிகாரமானது தனது பணியை வெற்றிகரமாக முடித்துள்ளது. இக்கடிகாரம் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள நாசாவின் ஜெட் உந்துவிசை ஆய்வகத்தால் கட்டப்பட்டதாகும்.

✓ ஈர்ப்பிலா விண்வெளி அணு கடிகாரம் என்பது மிகத்துல்லியமான பாதரச அயனி அணு கடிகாரமாகும். 2019 ஜூன் 25 அன்று பாதுகாப்புத் துறை விண்வெளி சோதனைத் திட்டம்–2 திட்டத்தில் இது தொடங்கப்பட்டது. புவி சுற்றுப்பாதையில் அதன் ஓராண்டு முதன்மைப் பணியை நிறைவு செய்த பின்னர், மேலும் தரவுகளைச் சேகரிப்பதற்காக, NASA இந்தப் பணியை விரிவுபடுத்தியது.

---

**3. துறைமுகம் தொடர்பான தகவல்களில் வெளிப்படைத்தன்மை –யை ஊக்குவிக்கும் நோக்கில் மத்திய கப்பல் அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட செயலியின் பெயர் என்ன?**

அ) AtmaNirbhar Port




**ஆ) MyPort ☑**

இ) Bharat Port


ஈ) Port in Hand

✓ துறைமுகநடவடிக்கைகளை கண்காணிக்கும் 'மை போர்ட்' செயலியை மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது. இச்செயலி, துறைமுக நடவடிக்கைகள் அனைத்தையும் டிஜிட்டல்மூலம் கண்காணிக்கிறது. வெளிப்படைத்தன்மையையும் மற்றும் தகவல்களை எளிதாக பெறுவதையும் இந்தச் செயலி ஊக்குவிக்கிறது. கப்பல் நிறுத்தம், கொள்கலன் நிலவரம், கட்டணம், துறைமுகத்தின் விடுமுறை நாட்கள் போன்ற தகவல்களையும் இந்தச்செயலியில் 24 ம. நேரமும் பெறலாம்.

---

**4. அண்மையில் இந்தியாவுக்கு வந்த மெட்டே பிரடெரிக்சன், எந்த நாட்டின் பிரதமராவார்?**

அ) பின்லாந்து



**ஆ) டென்மார்க் ☑**

இ) பிரான்ஸ்

ஈ) ஆஸ்திரேலியா

✓ ஹைதராபாத் மாளிகையில் பிரதமர் மோடியும் டேனிஷ் பிரதமர் மெட்டே பிரடெரிக்சனும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். மூன்று நாள் பயணமாக இந்தியா வந்த பிரடெரிக்சன், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மற்றும் பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். முன்னதாக, பிரடெரிக்சன், வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கரை சந்தித்தார். 200க்கும் மேற்பட்ட டேனிய நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன மற்றும் சுமார் 60 இந்திய நிறுவனங்கள் டென்மார்க்கில் உள்ளன.

---

**5. அடல் பிரகதி வழித்தடம் என்பது எந்த இந்திய மாநிலம் / UT'இல் அமைக்கப்படவுள்ள ஒரு விரைவு சாலை திட்டமாகும்?**

அ) குஜராத்



**ஆ) மத்திய பிரதேசம் ☑**

இ) உத்தரகண்ட்

ஈ) உத்தர பிரதேசம்

✓ அடல் பிரகதி வழித்தடத்திற்காக கையகப்படுத்தப்படும் தனியார் நிலத்திற்கு ஈடாக அரசு நிலம் வழங்கும் திட்டத்திற்கு மத்திய பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது பாரத்மாலா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் 313 கிமீ நீள 4 வழித்தட விரைவு சாலை திட்டமாகும். முன்மொழியப்பட்டுள்ள இந்த அடல் பிரகதி பாதை, மத்திய பிரதேசத்தின் ஷியோபூர், மொரேனா மற்றும் பிந்த் மாவட்டங்கள் வழியாக செல்லும். இத்திட்டத்திற்காக, மபி மாநில அரசு நிலத்தை இலவசமாக வழங்குகிறது.

---

**6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஜிம் கார்பெட் தேசிய பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) உத்தரகண்ட் ☑**



ஆ) பீகார்

இ) மேற்கு வங்கம்

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ ஜிம் கார்பெட் தேசிய பூங்காவானது உத்தரகண்டில் உள்ள உலகப்புகழ் பெற்ற புலிகள் காப்பகமாகும். மத்திய வன மற்றும் சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் அஷ்வினி குமார் சௌபே, எதிர்காலத்தில் ராம்கங்கா தேசிய பூங்கா என இந்தத் தேசிய பூங்கா பெயர் மாற்றஞ்செய்யப்படலாம் என அறிவித்தார். இது இந்தியாவின் முதல் தேசிய பூங்காவாகும். சுமார் 521 கிமீ பரப்பளவில் இது பரவி அமைந்துள்ளது. இது வங்கப்புலிகள், சிறுத்தைகள் மற்றும் காட்டு யானைகளுக்கு பெயர் பெற்றதாகும்.

---

**7. போர்ப்ஸ் செல்வந்தர்களின் பட்டியலில் தொடர்ந்து 14ஆவது ஆண்டாக முதலிடம் பிடித்த இந்தியர் யார்?**

அ) கௌதம் அதானி



**ஆ) முகேஷ் அம்பானி ☑**

இ) இரஜினிகாந்த்

ஈ) உதயநிதி ஸ்டாலின்

✓ ரிலையன்ஸ் தொழிற்துறைகளின் தலைவர் முகேஷ் அம்பானி, போர்ப்ஸ் செல்வந்தர்கள் பட்டியலில் தொடர்ந்து 14ஆவது ஆண்டாக முதலிடம் பிடித்துள்ளார். இந்தப் பட்டியலின்படி, அவரின் மொத்த சொத்து மதிப்பு $92 பில்லியன் டாலர்களாகும். 2021ஆம் ஆண்டில் மட்டும் அவர் தனது நிகர சொத்து மதிப்பில் 4 பில்லியன் டாலர்களைச் சேர்த்துள்ளார்.

✓ $74.8 பில்லியன் டாலர் செல்வத்துடன் கௌதம் அதானி, இந்தியாவின் 2ஆவது பணக்காரராக உள்ளார். HCL'இன் சிவ் நாடார் $31 பில்லியன் டாலர் செல்வத்துடன் இப்பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளார். அவென்யூஸ் சூப்பர்–மார்ட் நிறுவனர் ராதாகிருஷ்ணன் டாமனி மற்றும் சீரம் இன்ஸ்டிடியூட்டின் தலைவர் சைரஸ் பூனாவல்லா நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் உள்ளனர்.

---

**8. 'Shifting Gears: Digitization and Services–Led Development' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ) IMF

**ஆ) உலக வங்கி ☑**

THE WORLD BANK

இ) NITI ஆயோக்

ஈ) UNEP

✓ உலக வங்கியானது சமீபத்தில் 'Shifting Gears: Digitization & Services–Led Development' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 8.3% அளவுக்கு வளர்ச்சியுறும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, வாஷிங்டனில் அடுத்த வாரம் தொடங்கும் உலக வங்கியின் ஆண்டுக்கூட்டங்களுக்கு முன்னதாக வெளியிடப்பட்ட தெற்காசிய பொருளாதாரம் குறித்த அறிக்கையாகும்.

---

**9. ரிசர்வ் வங்கியின் 4ஆம் ஒழுங்குமுறை பயிற்சிக்கூட்டமைப்பின் கருப்பொருள் என்ன?**




அ) MSME கடனளித்தல்

ஆ) சில்லறை வணிக கடனளித்தல்

இ) பன்னாட்டு வங்கி

**ஈ) நிதிசார் மோசடிகள் ☑**

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ், ரிசர்வ் வங்கியின் 4ஆவது ஒழுங்குமுறை பயிற்சிக்கூட்டமைப்பு, "நிதிசார் மோசடிகளில்" தனது கவனத்தைச் செலுத்தும் என்று அறிவித்துள்ளார். "மோசடிகள் நிகழ்வதற்கும் கண்டறிதலுக்கும் இடையிலான பின்னடைவைக் குறைத்தல்" & "நிர்வாக அமைப்பை வலுப்படுத்துதல்" ஆகியவற்றில் முக்கிய கவனஞ்செலுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

---

**10. ஏர் இந்தியா நிறுவனத்தை கையகப்படுத்தும் முயற்சியில், எந்த இந்திய நிறுவனம் வெற்றிபெற்றது?**

**அ) டாடா சன்ஸ் ☑**

ஆ) ரிலையன்ஸ் தொழிற்துறைகள் நிறுவனம்

இ) அதானி குழுமம்

ஈ) மஹிந்திரா குழுமம்

✓ ஏர் இந்தியாவை நிறுவனத்தை கையாகப்படுத்தும் முயற்சியில் டாடா சன்ஸ் வெற்றிபெற்றுள்ளது. ஏர் இந்தியா நிறுவனத்தில் உள்ள இந்திய அரசின் 100% பங்குகளையும் டாடா வாங்கியுள்ளது. இதில் ₹2,700 கோடி அரசுக்கு பணமாகக் கிடைக்கும். மீதமுள்ள ₹15,300 கோடி ஏர் இந்தியாவின் கடனுக்காக டாடா சன்ஸ் பொறுப்பேற்றுக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏர் இந்தியாவின் மொத்த கடன் ₹65,562 கோடியாக உள்ளது. கடந்த 1932ஆம் ஆண்டில் JRD டாடாவால் தொடங்கப்பட்ட நிறுவனத்தை 1953'இல் நாட்டுடைமையாக்கியது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 4 புதிய நீதிபதிகள்: பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது**

சென்னை உயர் நீதிமன்றத்தில் 4 பேரை புதிய நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியுடன் சேர்த்து மொத்தம் உள்ள நீதிபதி பணியிடங்களின் எண்ணிக்கை 75. சமீபத்தில் குஜராத் உயர் நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக பணி யாற்றி வந்த நீதிபதி பரேஷ் ரவிசங்கர் உபாத்யா சென்னை உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு பொறுப்பேற்றுக்கொண்டார். அவருடன் சேர்த்து மொத்தம் 56 நீதிபதிகள் தற்போது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பதவி வகித்து வருகின்றனர்.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களாக பணியாற்றிவரும் • மதி சுந்தரம், டி பரத சக்ரவர்த்தி, ஆர் விஜயகுமார், முகமது ஷபி ஆகிய நால்வரையும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளாக நியமிக்க உச்சநீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. அதன்படி மத்திய அரசின் பரிந்துரையை ஏற்று இந்த நால்வரையும் சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக நியமித்து குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் 4 பேருக்கும் தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி விரைவில் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார். இவர்களுடன் சேர்த்து சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது.

ஏற்கெனவே கடந்தாண்டு டிசம்பரில் நீதிபதிகள் ஜி சந்திரசேகரன், ஏ ஏ நக்கீரன், வி சிவஞானம், ஜி இளங்கோவன், எஸ் ஆனந்தி, எஸ் கண்ணம்மாள், எஸ் சத்திகுமார் சுகுமார குருப், கே முரளி சங்கர், ஆர் என் மஞ்சுளா, டி வி தமிழ்ச்செல்வி ஆகிய 10 பேர் ஒரே நேரத்தில் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக பதவியேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது வழக்கறிஞராக பணியாற்றிவந்த ஸ்ரீமதி சுந்தரம் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதால், உயர்நீதிமன்றத்தில் உள்ள பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

---

**2. பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா: முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் அக்.12 அன்று தலைமைச் செயலகத்திலிருந்தும், காணொலிக்காட்சி வாயிலாக புது தில்லியில் இருந்து மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி, மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால் மற்றும் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை இணை அமைச்சர் ஜெனரல் வி கே சிங் ஆகியோர் முன்னிலையிலும், தமிழக அரசின் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் National Highway Logistics Management Ltd., சென்னை துறைமுகம் ஆகியவை இணைந்து, பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், திருவள்ளூர் மாவட்டம், மப்பேட்டில் ₹1,200 கோடி முதலீட்டில் 'பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா' தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழகத்தில் அமையும் முதலாவது பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காவாக இது அமைந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், 158 ஏக்கர் பரப்பளவில் ₹1,200 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

---

**3. மலபார் கூட்டு கடற்படை பயிற்சி: இரண்டாம் கட்டம் தொடக்கம்**

க்வாட் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் மலபார் கூட்டு கடற்படை பயிற்சி தொடங்கியது. க்வாட் கூட்டமைப்பில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகளின் கடற்படைகள் இணைந்து மேற்கொள்ளும் மலபார் கூட்டுப் பயிற்சியின் முதல் கட்டம் மேற்கு பசிபிக்கில் உள்ள குவாம் கடற்பகுதியில் ஆகஸ்ட் 26 முதல் 29ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தப்பயிற்சியின் இரண்டாம் கட்டம் வங்கக்கடல் பகுதியில் தொடங்கியது.

4 நாள்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் ரன்விஜய், ஐஎன்எஸ் சத்புரா போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல், கடற்பகுதியில் நீண்டதூரம் ரோந்துப்பணிகளை மேற்கொள்ளும் பி81 விமானங்கள் ஈடுபட்டுள்ளன. அமெரிக்கா தரப்பில் அணுசக்தியால் இயங்கும் விமானந்தாங்கிக் கப்பல் USS கார்ல் வின்சன், ஏவுகணை தாங்கி USS லேக் சாம்லேன், யுஎஸ்எஸ் ஸ்டாக்டேல் போர்க்கப்பல்கள் பங்கேற்றுள்ளன. ஜப்பான் சார்பில் ஹெலிகாப்டர் தாங்கி ஜேஎஸ் காகா, ஜேஎஸ் முராசமே போர்க்கப்பல்கள், ஆஸ்திரேலியா தரப்பில் எச்எம்ஏஎஸ் பலாரட், எச்எம்ஏஎஸ் சிரியஸ் போர்க்கப்பல்கள் பங்கேற்றுள்ளன.

மலபார் பயிற்சியின் இரண்டாம் கட்டத்தில் சிக்கலான பயிற்சிகள் மேற் கொள்ளப்படவுள்ளதாக இந்திய கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் தனது ராணுவ ஆதிக்கத்தை சீனா அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், மலபார் பயிற்சி நடைபெறுகிறது.

இந்தோ-பசிபிக் பிராந்தியம் சுதந்திரமாக இருப்பதை உறுதி செய்ய இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அவற்றுடன் ஒத்த கருத்துடைய நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

---

**4. தமிழக அஞ்சல் துறை சார்பில் மூன்று சிறப்பு அஞ்சல் உறை வெளியீடு**

தமிழக அஞ்சல் துறை சார்பில், கரோனா தடுப்பூசி குறித்த ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் வரைந்த ஓவியங்களில் 2 சிறப்பு அஞ்சல் உறைகளும், சுதந்திரப் போராட்ட வீராங்கனை கேப்டன் லஷ்மி சாஹலை கௌரவிக்கும் வகையில், சிறப்பு அஞ்சல் உறையும் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய அஞ்சல் வாரத்தை முன்னிட்டு, அஞ்சல்துறை சிறப்பு தபால்தலை சேகரிப்பை பள்ளி மாணவர்கள் மத்தியில் ஊக்கப்படுத்தும் விதமாக, கரோனா தடுப்பூசி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஓவியப் போட்டியை நடத்தியது. அதில் வெற்றி பெற்ற மாணவர்கள் வரைந்த ஓவியங்களில் இரண்டு சிறப்பு அஞ்சல் உறைகளும், சுதந்திரப் போராட்ட வீராங்கனை கேப்டன் லஷ்மி சாஹலை கௌரவிக்கும் வகையில், சிறப்பு அஞ்சல் உறையும் வெளியிடப்பட்டுள்ளது.

---

**5. வருவாய்த் துறையின் திட்டங்களை அறிய பிரத்யேக இணையதளம்: முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார்**

வருவாய்த் துறையின் திட்டங்கள், அரசாணைகள் உள்ளிட்டவற்றை அறிவதற்கான பிரத்யேக இணையதளத்தை முதல்வர் மு க ஸ்டாலின், தொடக்கி வைத்தார். மேலும், கிராம நிர்வாக அலுவலர்கள், துணை ஆட்சியர்கள் மாவட்ட மாறுதல் பெறுவதற்கென பிரத்யேக இணையதளத்–தை முதல்வர் முக ஸ்டாலின் தொடக்கி வைத்தார். மேலும், வருவாய் நிர்வாக ஆணையரகத்துக்கென பிரத்யேக இணையதளத்தையும் அவர் தொடங்கி வைத்தார். இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

மாநில அரசால் அறிவிக்கப்படும் வருவாய்த் துறையின் சமூக பாதுகாப்பு திட்டங்கள், முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டங்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயன்படும் சான்றிதழ்கள் வழங்கும் திட்டங்கள் போன்றவை வருவாய் நிர்வாக ஆணையரகம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டங்கள் குறித்த விவரங்கள் மற்றும் பயன்கள் மக்களை மக்கள் எளிதில் தெரிந்துகொள்ள வருவாய் நிர்வாக ஆணையரகத்தால் பிரத்யேக இணையதளம் (www.cra.tn.gov.in) தொடங்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் வருவாய்த்துறை தொடர்பான அரசு திட்டங்களி–ன் விவரங்கள், அரசாணைகள், பொதுமக்களின் பயன்பாட்டுக்கென பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் தங்களது இருப்–பிடத்திலிருந்தபடியே அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் பயன்கள் குறித்து அறிந்து கொள்ளலாம். தமிழக அரசின் குடிமைப் பணியின்கீழ் பணிபுரியும் அலுவலர்களின் நிர்வாகதேவைகளை பூர்த்தி செய்ய துணை ஆட்சியர்களுக்கான பிரத்யேக (www.cra.tn.gov.in/tnscs) இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசு விதிகள், சட்டங்கள், அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் உத்தரவுகள், வழிகாட்டு நெறிமுறைகள், சுற்றறிக்கைகள், பணிமாறுதல், பணி நியமனங்கள் குறித்த விவரங்கள் அறிந்துகொள்ளலாம்.

வருவாய்த் துறையின் திட்டங்களை கிராமங்கள்வரை கொண்டுசேர்க்க கூடிய பணியை செய்பவர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள். அவர்களின் பணியிட மாறுதல்கள் தொடர்பான கோரிக்கைகளைப் பரிசீலித்து செயல்படுத்தும் வகையில் தனி இணையதளம் (www.cra.tn.gov.in/vaotransfer) உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாறுதல்களை தாமதம் இல்லாமல் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்த முடியும். இந்த மூன்று புதிய இணையதளங்களையும் முதல்வர் முக ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

**1. இந்தியாவில் பிறந்த டாக்டர். அப்துல் காதர் கான் அண்மையில் காலமானார். அவர், எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?**



**அ) அணு மற்றும் அணு அறிவியல் ☑**

ஆ) மட்டைப்பந்து

இ) அரசியல்

ஈ) வேளாண்மை

✓ பாகிஸ்தானின் 'அணுவாயுதத்திட்டத்தின் தந்தை' என்றழைக்கப்படும் இந்தியாவில் பிறந்த Dr அப்துல் காதர் கான் சமீபத்தில் பாகிஸ்தானில் காலமானார். அவர் 1936ஆம் ஆண்டு போபாலில் பிறந்தார். 1947ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் பிரிவினையின்போது பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தார்.

---

**2. சர்வதேச பெண்குழந்தைகள் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ) அக்டோபர்.10

**ஆ) அக்டோபர்.11 ☑**

இ) அக்டோபர்.14

ஈ) அக்டோபர்.15

✓ ஆண்–பெண் சமத்துவ பாதிப்புகளை முன்னிலைப்படுத்துவதற்காக சர்வதேச பெண் குழந்தைகள் நாள் ஆண்டுதோறும் அக்டோபர்.11 அன்று அனுசரிக்கப்படுகிறது. 2011'இல், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிறுத்துவதற்காக அக்.11'ஐ சர்வதேச பெண் குழந்தைகளின் நாளாக அறிவித்தது.

✓ இந்த ஆண்டு, பலதரப்பட்ட பணிகளில் உள்ள பாலின டிஜிட்டல் பிளவை நீக்க உலகை ஐநா வலியுறுத்துகிறது.

---

**3. பாரத்பே நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய வங்கியாளர் யார்?**



அ) அருந்ததி பட்டாச்சார்யா

**ஆ) ரஜினிஷ் குமார் ☑**

இ) சந்தா கோச்சார்

ஈ) உர்ஜித் படேல்

✓ பாரத வங்கியின் முன்னாள் தலைவரான ரஜினிஷ் குமார், பின்டெக் நிறுவனமான பாரத்பே நிறுவனத்தின் தலைவராக சேர்ந்துள்ளார். 2020 அக்டோபரில் 40 ஆண்டுகால சேவைக்குப் பிறகு ரஜினிஷ் குமார் ஓய்வுபெற்றார். அவர் முன்னர், வங்கி நிறுவனமான HSBC'இன் ஆசிய பிரிவின் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

---

**4. கீழ்காணும் எந்த இடைப்பட்ட காலத்திற்கு, இந்திய உயிரியல் பூங்காக்களுக்கான தொலைநோக்கு திட்டத்தை மத்திய வனம் & சுற்றுச்சூழல் அமைச்சர் வெளியிட்டார்?**



**அ) 2021–2031 ☑**

ஆ) 2021–2025

இ) 2022–2032

ஈ) 2022–2026

✓ மத்திய வனவுயிரிச்சாலை ஆணையத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட மற்றும் குஜராத்தின் சர்தார் படேல் உயிரியல் பூங்காவில் நடத்தப்பட்ட உயிரியல் பூங்கா இயக்குநர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கான தேசிய மாநாட்டில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் முதன்மை வெளியீடுகளை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் வெளியிட்டார்.

✓ முதலில், இந்திய உயிரியல் பூங்காக்களை உலக தரத்திற்கு மேம்படுத்த –வும், மத்திய உயிரியல் பூங்கா ஆணயத்தை வலுப்படுத்தவும் தொலை நோக்குத்திட்டம் (2021–2031) வெளியிடப்பட்டது. இது வனவுயிரி பராமரி –ப்பு, ஆராய்ச்சி&பார்வையாளர் அனுபவங்களில் கவனஞ்செலுத்துகிறது. 2ஆவதாக, பணியாளர் மற்றும் பார்வையாளர்களுக்கான வளாகத்தில், WASH வசதிகளை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்குமான உயிரியல் பூங்காக்களுக்கான WASH கையேடு வெளியிடப்பட்டது. CZA அமைத்த 'பிராணி மித்ரா' விருதுகளையும் அவர் வழங்கினார்.

---

**5. இந்திய விண்வெளி சங்கத்தின் (ISPA) தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ) அனில் பட் ☑**

ஆ) அமித் ஷா

இ) அஜித் தோவல்

ஈ) ராஜ்நாத் சிங்

✓ பிரதமர் சமீபத்தில் இந்திய விண்வெளி சங்கத்தை (ISPA) தொடங்கினார். இது விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் நிறுவனங்களின் தொழில் சங்கமாகும். இதன் நிறுவன உறுப்பினர்களுள் லார்சன் அண்ட் டூப்ரோ, நெல்கோ (டாடா குழுமம்), ஒன்வெப், பார்தி ஏர்டெல், மேப் மை இந்தியா, வால்சந்த்நகர் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் அனந்த் டெக்னாலஜி லிமிடெட் ஆகியவை அடங்கும். கோத்ரெஜ், ஹியூஸ் இந்தியா உள்ளிட்டவை மற்ற முக்கிய உறுப்பினர்களாக உள்ளனர். லெப்டினன்ட் ஜெனரல் அனில் பட் (ஓய்வு), இச்சங்கத்தின் பொது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**6. '6S பரப்புரை' என்ற பெயரிலான பரப்புரையைத் தொடங்கியுள்ள பொதுத்துறை வங்கி எது?**

அ) பாரத வங்கி

**ஆ) பஞ்சாப் தேசிய வங்கி ☑**

இ) கனரா வங்கி

ஈ) பரோடா வங்கி

✓ நாட்டின் இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கியான பஞ்சாப் தேசிய வங்கி, ஸ்வபிமான், சம்ருத்தி, சம்பார்க் மற்றும் விகர், சங்கல்ப் மற்றும் ஸ்வாகத் போன்ற பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய '6S பரப்புரை திட்டத்தை'த் தொடங்கியுள்ளது. நாட்டில் நிதியியல் சேவைகளை மேம்ப –டுத்துவதற்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன்னெடுப்பதே இதன் நோக்கமாகும். கடன் வளர்ச்சி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் வங்கி உந்துதல், குறிப்பாக வேளாண் துறைக்கான கடனுதவி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**7. எந்த நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்காக, $200 மில்லியன் டாலர் கடன் வழங்குவதற்கு இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது?**



அ) நேபாளம்

ஆ) தஜிகிஸ்தான்

**இ) கிர்கிஸ்தான் ☑**

ஈ) இந்தோனேசியா

✓ பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு உறவுகளை மேம்படுத்து–வதற்காக வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் முன்னணி கிர்கிஸ்தான் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அந்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்காக, $200 மில்லியன் டாலர் கடன் வழங்குதற்கு இந்தியா ஒப்புக்கொண்டது. 3 மத்திய ஆசிய நாடுகளுடனான இருதரப்பு உறவை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், S ஜெய்சங்கர் தனது நான்கு நாள் பயணமாக கிர்கிஸ்தான், கஜகஸ்தான் & ஆர்மீனியாவுக்குச் செல்கிறார்.

---

**8. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற பிளாங்க் சிகரம் என்பது எந்த மலைத்தொடரின் மிகவுயர்ந்த சிகரமாகும்?**



அ) இமயமலை

**ஆ) ஆல்ப்ஸ் ☑**

இ) ஆண்டிஸ்

ஈ) எவரெஸ்ட் மலை சிகரம்

✓ பிளாங்க் சிகரமானது ஆல்ப்ஸ் மற்றும் மேற்கு ஐரோப்பாவின் மிக உயரமான சிகரமாகும். பிளாங்க் சிகரம், கடந்த இருபது ஆண்டுகளில் 2 மீ அளவுக்கு குறைந்துள்ளது. அண்மையில், வல்லுநர்கள் மற்றும் மலை வழிகாட்டிகள் உள்ளிட்ட அளவீட்டாளர்கள் அந்தச் சிகரத்தினை அளந்து அதன் புதிய அளவீடுகளை அறிவித்தனர். இது கடல்மட்டத்திலிருந்து 4,807.81 மீ உயரத்தில் உள்ளது. 2007'இல், அதிகபட்சமாக 4,810.9 மீட்டராக இதன் உயரம் இருந்தது.

---

**9.** **சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) செப்டம்பர்.30 ☑**

ஆ) அக்டோபர்.1

இ) அக்டோபர்.2

ஈ) அக்டோபர்.3




✓ ஆண்டுதோறும் செப்டம்பர்.30 அன்று சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்படுகிறது. மொழிபெயர்ப்பாளர்களின் தந்தையாகக் கருதப்படும் பைபிள் மொழிபெயர்ப்பாளர் புனித ஜெரோம் நினைவாக இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. கடந்த 2017'இல் ஐநா பொதுச்சபையால் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடுகளை இணைப்ப –திலும் அமைதியை மேம்படுத்துவதிலும் மொழி வல்லுநர்கள் வகிக்கும் பங்கை அங்கீகரிப்பதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

---

**10.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் படபூட்டியன் ஆகியோர் வென்ற பரிசு / பதக்கம் எது?**

அ) மேன்புக்கர் பரிசு

ஆ) ஆபெல் பரிசு

**இ) நோபல் பரிசு ☑**

ஈ) பீல்ட்ஸ் பதக்கம்



✓ 2021 உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசு, டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் படபூட்டியன் ஆகியோருக்கு கூட்டாக அறிவி –க்கப்பட்டுள்ளது. வெப்பநிலை மற்றும் தொடுதலுக்கான ஏற்பிகளைக் கண்டுபிடித்ததற்காக அவர்கள் இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள –னர். இது உயிர்வாழ்வதற்குத் தேவையான வெப்பம், குளிர் மற்றும் தொடுதலை உணரும் திறனை அளிக்கிறது.

✓ டேவிட் ஜூலியசு, சான்பிரான்சிசுகோவின் கலிபோர்னியா பல்கலையில் மருத்துவப்பள்ளியில் பேராசிரியராக உள்ளார். ஆர்டெம் படபூட்டியன், ஹோவர்ட் ஹியூஸ் மருத்துவ நிறுவனத்தில் நரம்பியல் துறையில் பேராசிரியராக உள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. புவிசார் குறியீடு பெற்ற – திருப்புவனம் பட்டுக்கு சிறப்பு அஞ்சல் உறை வெளியீடு:**

புவிசார் குறியீடு பெற்ற திருப்புவனம் பட்டுக்கு சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம் திருப்புவனம் பட்டுச்சேலைக்கு கடந்த 2019'இல் புவிசார் குறியீடு கிடைத்தது. இதன் தொடர்ச்சியாக, 75ஆவது ஆண்டு சுதந்திர நாள் விழா கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, புவிசார் குறியீடு பெற்ற பொருட்களுக்கு சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டு வருகிறது.

அதன்படி, புவிசார் குறியீடு பெற்ற திருப்புவனம் பட்டுக்கு ₹25'க்கான சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது.

---

**1. சமீபத்தில் குரோஷியாவுடன் இந்தியா எந்த துறையில் ஒப்பந்தம் செய்து கொண்டது?**

**அ) இந்திய பாரம்பரிய மருத்துவம் ☑**



ஆ) விளையாட்டு

இ) டிஜிட்டல் கல்வி

ஈ) பாதுகாப்பு

✓ இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஆராய்ச்சி & மேம்பாட்டுக்காக மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம், குரோஷியா அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் (AIIA) இந்திய சார்பாக கையெழுத்திட்டது. குரோஷியா தனது சுற்றுலாத் தொகுப்புகளுடன் இந்திய ஆயுர்வேதம் & யோகாவையும் சேர்க்க முன்வந்துள்ளது.

---

**2. இந்தியா உட்பட 136 நாடுகளின் குழு, பெரு நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச உலகளாவிய வரி விகிதத்தை எத்தனை சதவீதத்தில் நிர்ணயித்துள்ளது?**

அ) 5%

ஆ) 10%

**இ) 15% ☑**

15%

ஈ) 20%

✓ இந்தியா உட்பட 136 நாடுகளின் குழுமம், பெரிய நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச உலகளாவிய வரியை 15% ஆக நிர்ணயித்துள்ளது.

✓ இந்த நாடுகள் முதலீட்டை ஈர்ப்பதற்காக குறைந்தபட்ச வரி விகிதத்தை நிர்ணயக்கிறது. மேலும், பன்னாட்டு நிறுவனங்களுக்கு குறைந்த அளவில் நாடுகள் வரி விதிப்பதை இது தடுக்கிறது. அமெரிக்கா உட்பட பல நாடுகளால், இந்த நடவடிக்கை ஒரு சமநிலை நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது. மேலும் இந்த விகிதம், பல நாடுகளில் கார்ப்பரேட் வரி விகிதத்தைவிட 23.5% குறைவாக உள்ளது.

---

**3. துருக்கிய கிராண்ட் பிரிக்ஸ்–2021'ஐ வென்ற பந்தய ஓட்டுநர் யார்?**

அ) லூயிஸ் ஹாமில்டன்



**ஆ) வால்டேரி போட்டாஸ் ☑**

இ) மேக்ஸ் வெர்ஸ்டாபென்

ஈ) செர்ஜியோ பெரஸ்

✓ பின்னிஷ் பந்தய ஓட்டுநர் வால்டேரி பொட்டாஸ் துருக்கிய கிராண்ட் பிரிக்ஸ்–2021'இல் வெற்றிபெற்றார். மற்றொரு பந்தய ஓட்டுநர் மேக்ஸ் வெர்ஸ்டாபென் இரண்டாமிடத்திலும், செர்ஜியோ பெரெஸ் மூன்றாவது இடத்திலும் இருந்தார். முன்னணி ஓட்டுனர் லூயிஸ் ஹாமில்டன் 5ஆம் இடத்தில் பந்தயத்தை நிறைவுசெய்தார், சார்லஸ் லெக்லெர்க் நான்காம் இடத்தைப் பிடித்தார். 32 வயதான ஓட்டுநர் பொட்டாஸ் 2017 முதல் 2021 வரை பத்து பந்தயங்களில் வெற்றி பெற்றுள்ளார்.

---

**4. டெலிமேடிக்ஸ் மேம்பாட்டு மையத்தின் (C–DOT) தலைமையகம் எங்குள்ளது?**

அ) நியூயார்க்

**ஆ) புது தில்லி ☑**

இ) கொழும்பு

ஈ) ரோம்

சீ-டாட்
C-DOT

✓ டெலிமேடிக்ஸ் மேம்பாட்டு மையமென்பது இந்திய அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மேம்பாட்டு மையமாகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. 5G மற்றும் பிற எதிர்கால தொழில்நுட்பங்களைவிட 50 மடங்கு வேகமானதாகக் கூறப்படும் 6G தொழில்நுட்பங்களில் பணியாற்ற C–DOT கேட்கப்பட்டுள்ளது. யூனியன் டெலிகாம் செயலாளர் சமீபத்தில் C–DOT'இன் குவாண்டம் தொடர்பு ஆய்வகத்தைத் திறந்து வைத்து, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குவாண்டம் கீ டிஸ்ட்ரிபியூஷன் (QKD) தீர்வைத் தொடங்கினார்.

---

**5. ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு–2021'இல் இந்தியாவின் நிலை என்ன?**

**அ) 90 ☑**



ஆ) 82

இ) 70

ஈ) 65

✓ உலகின் மிகவும் பயணத்திற்கு ஏற்ற கடவுச்சீட்டுகளை பட்டியலிடும் ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில், இந்தியாவின் தரவரிசை கடந்த ஆண்டிலிருந்து 6 இடங்கள் சறுக்கி 90ஆவது இடத்தில் உள்ளது.

✓ ஒரு நாட்டின் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் எத்தனை வெளிநாடுக –ளுக்கு விசா இல்லாமல் செல்லமுடியும் என்பதை கணக்கிட்டு அதன் அடிப்படையில் இப்பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு வான் போக்குவரத்து சங்கம் வழங்கிய தரவுகளின் பகுப்பாய்வினடிப்படையில் இந்தத் தரவரிசை அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீட்டில் ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளன. தென்கொரியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துள்ளன.

---

**6. 2021 – பன்னாட்டு முதியோர் நாளின் கருப்பொருள் என்ன?**

**அ) Digital Equity for All Ages ☑**




ஆ) Respect and Love for Elders

இ) Empathy and Equity

ஈ) Fair Treatment to all Elders

✓ 'பன்னாட்டு முதியோர் நாளானது' ஒவ்வோர் ஆண்டும் அக்.1 அன்று கொண்டாடப்படுகிறது. முதியோருக்கான நலவாழ்வு வசதிகள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதே இந்த நாளின் நோக்கமாகும். 1990 டிச.14 அன்று, ஐநா பொதுச்சபை அக்டோபர்.1'ஐ சர்வதேச முதியோர் நாளாக அறிவித்தது. "Digital Equity for All Ages" என்பது நடப்பு 2021ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**7. எந்த மாநிலத்தின் மாநில தேர்தல் ஆணையம், இந்தியாவின் முதல், "திறன்பேசிமூலமாக வாக்களித்தல்" முறையை சோதனை செய்யவுள்ளது?**

அ) ஆந்திர பிரதேசம்



**ஆ) தெலுங்கானா ☑**

இ) கர்நாடகா

ஈ) கேரளா

✓ தெலுங்கானா மாநில தேர்தல் ஆணையமானது திறன்பேசிகளைப் பயன்படுத்தி சோதனை வாக்கெடுப்பை நடத்தவுள்ளது. இதற்கு மாநில அரசிடம் அனுமதி கிடைத்துள்ளது. 2021 அக்டோபர்.20 அன்று கம்மம் மாவட்டத்தில் இந்தச் சோதனை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இது திறன்பேசிகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் நாட்டின் முதல் மின்னணு வாக்குப்பதிவு ஆகும்.

---

**8. மலபார் பயிற்சியுடன் தொடர்புடைய இந்திய ஆயுதப்படை எது?**

அ) இந்திய இராணுவம்



**ஆ) இந்திய கடற்படை ☑**

இ) இந்திய கடலோர காவல்படை

ஈ) தேசிய பாதுகாப்புப் படை

✓ மலபார் பயிற்சி என்பது இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவின் கடற்படைகளின் ஒரு கடல்சார் பயிற்சியாகும். மலபார் பயிற்சியின் இரண்டாம் கட்டம், 2021 அக்டோபர் 12–15 வரை வங்காள விரிகுடாவில் நடத்தப்பட்டது. INS ரான்விஜய், INS சாத்புரா, P8I கடல் ரோந்து வானூர்தி மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் ஆகியவை இப்பயிற்சியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தின.

---

**9.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற சுனில் சேத்ரியுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) மட்டைப்பந்து

**ஆ) கால்பந்து ☑**

இ) கைப்பந்து

ஈ) கபடி

✓ இந்திய கால்பந்து வீரரும் இந்திய தேசிய கால்பந்து அணியின் அணித் தலைவருமான சுனில் சேத்ரி அண்மையில் தனது 77ஆவது சர்வதேச கோலை நேபாளத்திற்கு எதிரான ஆட்டத்தில் SAFF சாம்பியன்ஷிப்பில் அடித்தார். இதன்மூலம் அவர், முன்னாள் பிரேசிலிய கால்பந்து வீரரான பீலேவின் கோலை சமன்செய்துள்ளார். இந்தியாவுக்கான அவரது 123 ஆவது போட்டியில், அவர் இந்தச் சாதனையை படைத்துள்ளார்.

---

**10.** **பிரதமர் கதிசக்தி திட்டத்திற்கான உத்தேச நிதி செலவு என்ன?**



அ) ₹100 கோடி

ஆ) ₹1 இலட்சம் கோடி

இ) ₹10 இலட்சம் கோடி

**ஈ) ₹100 இலட்சம் கோடி ☑**

✓ 75ஆம் சுதந்திரநாள் உரையில், பிரதமர், உட்கட்டமைப்பு மேம்பாட்டை இலக்காகக்கொண்டு மொத்தமாக ₹100 இலட்சம் கோடி நிதி செலவில் 'PM கதிசக்தி மாஸ்டர் திட்டத்தை' அறிவித்தார். இத்திட்டம் 1000'க்கும் மேற்பட்ட தொழிற்துறை குழுமங்களுக்கு மாதிரி இணைப்பை வழங்க முன்மொழியப்பட்டது. மேலும் தற்போதுள்ள பாரத்மாலா, சாகர்மாலா, உடான்போன்ற திட்டங்களின்கீழ் திட்டங்களை உள்ளடக்கியது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1.பொன்னேரி, திருநின்றவூர் உட்பட 19 பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரமுயர்த்தி அரசாணை**

தமிழகத்தில் 19 பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழக அரசு வெளியிட்ட அரசாணை: தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2021-22ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை மானியக்கோரிக்கையின் போது, 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புற மக்கள் தொகை 48.45% ஆகும். 2021ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புற மக்கள்தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது.

தற்போது நகர்ப்புற உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புறமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகின்றன. அதன்படி, நாகர்கோவில் மாநகராட்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள தெங்கம்புதூர் பேரூராட்சி, ஆளூர் பேரூராட்சி, புத்தேரி ஊராட்சி, திருப்பதி சாரம் ஊராட்சி, பீமநகரி ஊராட்சி, தேரேகால் புதூர் ஊராட்சி, மேல சங்கரன்குழி ஊராட்சி, கணியாகுளம் ஊராட்சி ஆகியவை முழுமையாகவும், தர்மபுரம் ஊராட்சி, ராஜக்கமங்கலம் ஊராட்சி ஆகியவை பகுதியாகவும் இணைப்படுகிறது.

இதேபோல், திருவள்ளூர் மாவட்டம் – பொன்னேரி, திருநின்றவூர், கடலூர் மாவட்டம்– திட்டக்குடி, வடலூர், தஞ்சாவூர் மாவட்டம்– அதிராம்பட்டினம், தூத்துக்குடி மாவட்டம்– திருச்செந்தூர், கோவை மாவட்டம்– கருமத்தம்பட்டி, காரமடை, கூடலூர், மதுக்கரை, கரூர் மாவட்டம்– பள்ளப்பட்டி, திருப்பூர் மாவட்டம்– திருமுருகன்பூண்டி ஆகிய 12 பேரூராட்சிகள் நகராட்சிகளாக அமைத்துருவாக்கப்படும். சிவகங்கை மாவட்டம்– மானாமதுரை, திருச்சி மாவட்டம்– முசிறி, இலால்குடி, சேலம் மாவட்டம்– தாரமங்கலம், இடங்கணசாலை ஆகிய 5 பேரூராட்சிகள் நகராட்சிகளாக அமைத்துருவாக்கப்படும். மேலும், கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு, கரூர் மாவட்டம் புகளூர் ஆகிய 2 பேரூராட்சிகள் நகராட்சிகளாக அமைத்துருவாக்கப்படும். கும்பகோணம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு கும்பகோணம் நகராட்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள தாராசுராம் முதல்நிலை பேரூராட்சியை கும்பகோணம் நகராட்சியுடன் இணைக்கப்படலாம் என உத்தேச முடிவு மேற்கொண்டு ஆணையிடுகிறது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

---

**2. தேசிய புட்சால் போட்டியில் – தமிழக அணிக்கு சாம்பியன் பட்டம்:**

15 வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய புட்சால் சாம்பியன்ஷிப் போட்டி தருமபுரியில் சமீபத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற தமிழக அணி, லீக் சுற்றில் மும்பை, ஆந்திரா, புதுச்சேரி, கேரளா, புனேஆகிய அணிகளை தோற்கடித்து அரை இறுதிக்கு தகுதி பெற்றது.

அரை இறுதியில் தமிழக அணி, கர்நாடகாவை 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. தொடர்ந்துஇறுதிப் போட்டியில் மகாராஷ்டிராவை 2–1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து தமிழக அணி சாம்பியன்ஷிப் பட்டம் வென்றது. தமிழக அணியின் கோல் கீப்பர்ராகுல் கண்ணன் தொடரின் சிறந்தகோல் கீப்பராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்துடன் தமிழக அணியைச் சேர்ந்த 5 வீரர்கள், இந்திய புட்சால் அணிக்காக தேர்ந்தெடுக் –கப்பட்டுள்ளனர். இந்த அணி அடுத்த மாதம் பராகுவேயில் நடைபெற உள்ள 15 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கோப்பையில் கலந்து கொண்டு விளையாடுகிறது.

---

**3. செல்வ வள மேலாண் திட்ட சேவை: இந்தியன் வங்கி அறிமுகம்**

இந்தியன் வங்கி, தனது வாடிக்கையாளர்களுக்கு புதிதாக மின்னணு செல்வவள மேலாண்மை திட்டங்கள் வழங்கும் சேவையை அறிமுகப்படுத்தி உள்ளது. இதற்காக, பிஸ்டம் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில், இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் முன்னிலையில், இந்தியன் வங்கியின் பொதுமோளர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஏற்கனவே உள்ள மியூச்சுவல் ஃபண்ட் முதலீடு மற்றும் இ–என்பிஎஸ் மட்டுமின்றி புதியமின்னணு திட்டங்களான மியூச்சுவல் ஃபண்ட் அறிவுரை திட்டம், மின்னணு தங்கம், மின்னணு வரித்தாக்கல் சேவைகளும் வழங்கப்படும்.

---

**4. நீதிமன்றங்களில் இனி பச்சை நிற லீகல் சைஸ் பேப்பருக்கு வேலையில்லை; வெள்ளை நிற ஏ4 பேப்பரில் மனுக்களை தாக்கல் செய்தால் போதும்: உயர் நீதிமன்ற பதிவுத் துறை உத்தரவு**

நீதிமன்றங்களில் இனி மனுக்களை தாக்கல் செய்ய பச்சை நிற லீகல் சைஸ் பேப்பரை தேடி அலைய வேண்டியதில்லை. வெள்ளை நிறஏ4 பேப்பரில் மனுக்களை தாக்கல்செய்தால் போதும் என உயர் நீதிமன்ற பதிவுத் துறை உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றம், உயர் நீதிமன்ற மதுரை கிளை உள்ளிட்ட தமிழகம், புதுச்சேரியில் உள்ள அனைத்து கீழமை நீதிமன்றங்களிலும் பிரமாண பத்திரங்கள், பிராதுகள், ஆவணங்கள், உத்தரவுநகல்கள், வக்காலத்து நாமா மற்றும் பதில் மனுக்களை தாக்கல் செய்ய 100 ஜிஎஸ்எம் தரம் கொண்ட பச்சை நிற ஃபுல்–ஸ்கேப் லீகல் சைஸ் பேப்பர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது.

பொதுவாக நீதிபதிகள் படிப்பதற்காக தாக்கல் செய்யப்படும் பிரமாணப் பத்திரங்கள், மனுக்கள்மற்றும் ஆவணங்கள் அனைத்தும்பச்சை நிற லீகல் சைஸ் பேப்பர்களிலும், பிரதிவாதிகளுக்கான மனுக்கள் வெள்ளை நிற பேப்பர்களிலும் தாக்கல் செய்யப்படுவது வழக்கம். தற்போது இந்த நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதன்படி உரிமையியல் நடைமுறை சட்டம் – 1908, பிரிவு 122–ன்கீழ் உரிமையியல் விதிகளுக்கான தொழில் நெறி பயிற்சி மற்றும் சுற்றறிக்கைக்கான உத்தரவுகள் – விதி 6–ல் சில திருத்தங்களை தமிழக அரசின் அனுமதியுடன் சென்னை உயர் நீதிமன்றம் கொண்டுவந்துள்ளது. இந்த திருத்தங்கள் குறித்த அறிவிப்பாணை தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி உயர் நீதிமன்ற தலைமை பதிவாளர் பி தனபால் அனைத்து நீதிமன்றங்களுக்கும் பிறப்பித்த உத்தரவில், 'நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் அனைத்து பிராதுகள், எழுத்துப்பூர்வமான வாதங்கள், மனுக்கள், பிரமாணப் பத்திரங்கள், மேல்முறையீட்டு மனுக்கள் இனி 75 ஜிஎஸ்எம் கொண்ட வெள்ளை நிற ஏ4 பேப்பரில் தாக்கல் செய்தால் போதும். முன்பக்கம் மற்றும் பின்புற பக்கங்களில் மனுக்களை தாக்கல் செய்யும்போது அதற்கான பக்கங்களை நம்பர்களில் குறிப்பிட வேண்டும். மேல்முறையீட்டு மற்றும் அசல் வழக்குகளுக்கான ஆவணங்களை தாக்கல் செய்யும்போது ஏ4 சைஸ் பேப்பரில் மேல்புறம் மற்றும்

அடிப்பக்கத்தில் இருந்து 2.5 செமீ அளவுக்கும், இடது புறத்தில் 3 செமீ அளவுக்கும், வலது புறத்தில் 2.5 செமீ அளவுக்கும் மார்ஜின் விட வேண்டும்' என்று அறிவுறுத்தியுள்ளார்.

**5. 22 நாட்கள் தேடுதல் வேட்டைக்குப் பின்னர் – மயங்கிய நிலையில் பிடிபட்டது 'டி23' புலி: மயக்க ஊசிசெலுத்தி வனத்துறையினர் பிடித்தனர்**

நீலகிரி மாவட்டத்தில் 4 பேரை கொன்ற ஆட்கொல்லி புலியை 22 நாட்கள் தேடுதல் வேட்டைக்குப் பின்னர் நேற்று மயக்க ஊசி செலுத்தி வனத்துறையினர் உயிருடன் பிடித்தனர்.

நீலகிரி மாவட்டம் மசின குடியின்கவுரி, தேவன் எஸ்டேட் பகுதியில் குஞ்சு கிருஷ்ணன், சந்திரன், சிங்காரா வனப்பகுதியில் பசுவன் ஆகியோர் டி.23 என வனத்துறையினரால் அழைக்கப்படும் புலியால்அடித்துக் கொல்லப்பட்டனர். இதைஅடுத்து, புலியை சுட்டுக் கொல்ல வேண்டும் என்று பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். புலியை மயக்க ஊசி செலுத்தி பிடிக்க வனத்துறையினர் திட்டமிட்டனர்.

22 நாட்களாக புலியை பிடிக்க வனத்துறையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் இரவு புலியைப் பார்த்த வனத்துறையினர், புலிக்கு இரு முறை மயக்க ஊசி செலுத்தினர். ஆனால், புலி அடர்ந்த புதருக்குள் பதுங்கி தப்பியது. இந்நிலையில், நேற்று மதியம் மாயார் வனத்தில் கூற்றுப்பாறை பகுதியில் நடமாடிய புலியை வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி உயிருடன் பிடித்தனர்.

**6. பாகிஸ்தான், வங்கதேசத்தைவிட மோசம்: உலக பட்டினிக் குறியீட்டில் இந்தியா 101 இடத்துக்குச் சரிந்தது**

2021ஆம் ஆண்டுக்கான உலக பட்டினிக் குறியீட்டில் 116 நாடுகளில் இந்தியா 101ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம் ஆகியவற்றைவிட இந்தியாவில் பட்டினியால் வாடுவோர் அதிகரித்துள்ளனர். கடந்த 2020ஆம் ஆண்டு 107 நாடுகளுக்கான பட்டியலில், 94ஆவது இடத்தில் இருந்த இந்தியா, 116 நாடுகளுக்கான பட்டியலில் 2021ஆம் ஆண்டில் 101ஆவது இடத்துக்கு பின்தங்கியுள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடு, 5வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் சத்துணவு குறைபாட்டால் தங்கள் உயர்த்துக்கு ஏற்ற எடை இல்லாமல் இருத்தல், வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் இருத்தல், 5வயதுக்கு உட்பட்ட குழந்தை உயிரிழப்புகள் ஆகிய காரணிகளை அடிப்படையாக வைத்து உலக பட்டினி குறியீடு கணக்கிடப்படுகிறது.

உலகளவில் பட்டினிச் சாவு, சரிவிகித சத்துணவு மக்களுக்குக் கிடைப்பது ஆகியவற்றைக் கண்டறிந்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஐயர்லாந்தைச் சேர்ந்த கன்சர்ன் வேர்ல்ட்வைட் அமைப்பு மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த வெல்ட் ஹங்கர் ஹில்ப் ஆகிய அமைப்பும் சேர்ந்து தயாரித்த அறிக்கையில், இந்தியாவில் பட்டினியின் அளவு அபாயக்கட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அதேசமயம், சீனா, பிரேசில், குவைத் உள்ளிட்ட 18 நாடுகளில் பட்டினிக் குறியீடு என்பது 5–க்கும் குறைவாகவே இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்த 1998–2002ம் ஆண்டு இந்தியாவில் 5 வயதுக்குள் இருக்கும் குழந்தைகள் சத்துணவு குறைபாட்டால் தங்கள் உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாமல் இருத்தல் சதவீதம் 17.1 ஆக இருந்த நிலையில் 2016 முதல் 2020ம் ஆண்டில் இது 17.3 ஆகஅதிகரித்துள்ளது.

கரோனா வைரஸ் பரவலால் இந்தியாவில் உள்ள மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும், இந்தியாவில் உள்ள குழந்தைகள் சத்துணவுக் குறைபாடு பிரச்சினைகளால் மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளனர். குழந்தைகளுக்கு சத்துணவு, சரிவிகித உணவு வழங்குவதிலும், உலக பட்டினிக் குறியீட்டிலும் இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளம் 76வது இடம், வங்கதேசம் (76), மியான்மர் (71), பாகிஸ்தான் (92) ஆகிய இடங்களில் உள்ளனர்.

இருப்பினும் இந்தியாவைவிட முன்னேறியிருந்தாலும், சத்துணவு, சரிவிகித உணவுகளை வழங்குவதில் இன்னும் முன்னேற்றம் தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், இந்தியாவில் 5 வயதுக்குள் இருக்கும் குழந்தைகள் உயிரிழப்பு பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், சத்துணவு, சரிவிகித உணவு உணவு கிடைப்பதில்தான் இன்னும் சிக்கல் நீடிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டினிக்கு எதிராக உலக நாடுகள் போராடும் பாதையில் 47 நாடுகள் 2030ம் ஆண்டுக்குள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய முடியாது. குறைந்த அளவு பட்டினிக் குறியீட்டை எட்டமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான உணவுப் பாதுகாப்பு பல்வேறு முனைகளில் இருந்து தாக்குதலுக்கு ஆளாகிறது. உள்நாட்டுக் குழப்பம், பிரச்சினைகள், பருவநிலை மாறுபாடு, பொருளாதார, சுகாதார சிக்கல்கள், கரோனா வைரஸ் போன்றவற்றால் பட்டினிக் குறியீட்டின் அளவை அதிகரிக்கிறது. அதுமட்டுமல்லாமல் நாடுகளுக்கு இடையே வளர்ச்சியில் வேறுபாடு, உள்நாட்டில் பிராந்தியங்களில் சமநிலையின்மை, மாவட்டங்கள், சமூகங்களிடையே சமத்துவமின்மை போன்றவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் பட்டினிக் குறியீடு அதிகரித்துள்ளது.

இந்தியாவை விட மோசமாக 15 நாடுகள் உள்ளன. பப்புவா நியூ கினியா (102), ஆப்கானிஸ்தான் (103), நைஜிரியா (103) காங்கோ (105), மொசாம்பிக் (106), சியா லியோன் (106), தைமூர் லெஸ்டி (108), ஹெய்தி (109), லைபீரியா (110), மடகாஸ்கர் (111), காங்கோ ஜனநாயகக் குடியரசு (112), சாட் (113), மத்திய ஆப்ரிக்க குடியரசு (114), ஏமன் (115), சோமாலியா (116) நாடுகள் உள்ளன.

**7. ஐ.நா. மனித உரிமை கவுன்சிலுக்கு இந்தியா மீண்டும் தேர்வு**

ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் 2022–24ஆம் ஆண்டுகளுக்கான உறுப்பினர் பதவிக்கு இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 3 ஆண்டுகள் பதவிக் காலம் கொண்ட ஐ.நா. மனித உரிமை கவுன்சில் உறுப்பினர் பொறுப்புக்கான தேர்வு 76ஆவது ஐ.நா. பொது சபைக் கூட்டத்தில் நடைபெற்றது.

2022–2024ஆம் ஆண்டு வரை நீடிக்கவிருக்கும் அந்தப் பொறுப்புக்கு 18 புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், பெருவாரியான வாக்குகள் பெற்று இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது. 193 உறுப்பினர்களைக்கொண்ட ஐ.நா. பொது சபையில், இந்தியாவுக்கு ஆதரவாக 184 வாக்குகள் பதிவாகின.

**8. அண்ணா மேலாண்மை நிலையம் இனி நிர்வாகப் பணியாளர் கல்லூரி என அழைக்கப்படும்**

அண்ணா மேலாண்மை நிலையம், இனி அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி என்ற பெயரில் அழைக்கப்படும் என தலைமைச் செயலாளர் வெ இறையன்பு அறிவித்துள்ளார். தலைமைச் செயலாளரும், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் இயக்குநருமான வெ இறையன்பு, வெளியிட்ட அறிவிப்பு:

அண்ணா மேலாண்மை நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள் முதல் இந்திய ஆட்சிப் பணியாளர்கள் வரை அனைவருக்குமான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவ்வப்போது துறை அலுவலர்களுக்கு அலுவலக நடைமுறை, தகவல் பெறும் உரிமைச் சட்டம், ஒழுங்கு நடவடிக்கை விதிகள், மன அழுத்த மேலாண்மை, குழு மேலாண்மை, ஓய்வுக்கு முந்தைய ஆலோசனை, நேர மேலாண்மை, பேரிடர் மேலாண்மை, தலைமைப்பண்புகள் போன்ற பல தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஆதிதிராவிட மாணவர் விடுதியின் காப்பாளர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் அலுவலக நடைமுறைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அரசுத் துறைகள் நீதிமன்ற வழக்குகளை உரிய முறையில் அணுகுவதற்கு வழக்குகள் மேலாண்மை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பெயர் மாற்றம்: இந்த நிறுவனம் இதுவரை, 'அண்ணா மேலாண்மை நிலையம்' என்றே அழைக்கப்பட்டு வந்தது. 'மேலாண்மை நிலையம்' என்று அழைக்கப்படுவதால், இந்த நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து தெளிவின்மை ஏற்பட்டது. நிர்வாகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிறுவனம்தான் என்பதைக் கருத்தில் கொண்டு இதன் பெயர், 'அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி' என்று அழைக்கப்படும். இதற்கான அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தனது அறிவிப்பில் தலைமைச் செயலாளர் வெ இறையன்பு தெரிவித்துள்ளார்.

**9. 2021 அக்.16** – உலக உணவு நாள்

**கருப்பொருள்:** Safe Food Now for a Healthy Tomorrow

**10. இந்தியா–ரஷியா இடையே எஃகு, நிலக்கரித் துறை ஒப்பந்தம்**

இந்தியா–ரஷியா இடையே எஃகு தயாரிப்பு, நிலக்கரி துறையில் முக்கிய ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

ரஷிய எரிசக்தி வார நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இரு நாள் பயணமாக மத்திய எஃகு துறை அமைச்சர் ராம் சந்திர பிரசாத் சிங் மாஸ்கோ சென்றுள்ளார். அங்கு அந்நாட்டு எரிசக்தி துறை அமைச்சர் நிகோலாய் சுல்கிநோவை அவர் சந்தித்து பேசினார்.

அப்போது எஃகு தயாரிப்பில் பயன்படுத்தப்படும் கோகிங் நிலக்கரி, அதன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் ஒத்துழைப்பு தொடர்பாக முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்மூலம் கூட்டு திட்டங்கள், எஃகு தயாரிப்பு நிலக்கரியில் வர்த்தக செயல்பாடுகள், இந்தியாவிற்கு நல்ல தரமான கோகிங் நிலக்கரியை நீண்டகாலத்திற்கு விநியோகம் செய்வது, கோகிங் நிலக்கரியின் சேமிப்பு வசதிகள், போக்குவரத்து தளவாட மேம்பாடு, நிலக்கரி உற்பத்தி மேலாண்மையில் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளுதல், சுரங்க தொழில்நுட்பங்கள் & பயிற்சிகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்த வகை செய்யப்பட்டு உள்ளது.

---

**11. கும்பகோணம் மாநகராட்சியாகிறது: தமிழகத்தில் புதிதாக 19 நகராட்சிகள் உதயம்**

தமிழகத்தில் புதிதாக 19 நகராட்சிகளை உருவாக்குவதற்கான உத்தரவுகளை நகராட்சி நிர்வாகத்துறை வெளியிட்டது. இந்த உத்தரவுகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா பிறப்பித்தார். கும்பகோணம் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுகிறது. தமிழகத்தில் தற்போது 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் என மொத்தம் 664 நகர்ப்புற உள்ளாட்சிகள் உள்ளன.

மக்கள் தொகையின் அளவு, பரப்பளவு ஆகியவற்றுக்கு ஏற்ப பேரூராட்சிகள் நகராட்சியாகவும், நகராட்சிகள் மாநகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தாத காரணத்தால், தனி அலுவலர்களின்மூலமாக தீர்மானங்கள் பெறப்பட்டு அரசுக்கு வரப்பெறப்படுகின்றன.

அந்த வகையில் தமிழகத்தில் ஒரு சில பேரூராட்சிகளை ஒன்றிணைத்தும், சில பேரூராட்சிகள் முழுமையாக நகராட்சிகளாகவும் தரம் உயா்த்தப்பட்டுள்ளன. அதன் விவரம்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லங்கோடு மற்றும் ஏழுதேசம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள் இணைக்கப்பட்டு கொல்லங்கோடு நகராட்சியாக தரமுயர்த்தப்படுகிறது. இதேபோன்று, கரூர் மாவட்டத்தில் புஞ்சை புகளூர் மற்றும் தமிழ்நாடு காகித ஆலை புகளூர் ஆகிய பேரூராட்சிகள் இணைக்கப்பட்டு புகளூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்படுகிறது. இதேபோன்று, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருச்சி மாவட்டம் முசிறி, லால்குடி, சேலம் மாவட்டம் தாரமங்கலம், இடங்கணசாலை, திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர், பொன்னேரி, கடலூர் மாவட்டம் திட்டக்குடி, வடலூர், தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினம், தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர், கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி, காரமடை, கூடலூர், மதுக்கரை, கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி, திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி ஆகிய பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படுகின்றன.

**தேர்தல் எப்போது?** உத்தேச நகராட்சிகளின் வாா்டு எல்லைகளை வரையறை செய்த பிறகு சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு அடுத்த சாதாரண தேர்தல் நடத்தப்படும்.

**கும்பகோணம் மாநகராட்சி:** தமிழகத்தின் 16ஆவது மாநகராட்சியாக கும்பகோணம் நகராட்சி, தரமுயர்த்தப்படுகிறது. கும்பகோணம் நகராட்சி மற்றும் தாராசுரம் பேரூராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய உத்தேச கும்பகோணம் மாநகராட்சிக்கான வார்டுகள் வரையறை செய்யப்பட்டு, அடுத்த சாதாரணத் தேர்தல் நடத்தப்படும். இதன் அடிப்படையில் கும்பகோணம் மாநகராட்சி அமைத்து உருவாக்கப்படும்.

நாகர்கோவில் மாநகராட்சி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மாநகராட்சிப் பகுதியுடன் கன்னியாகுமரி மாவட்டத்தின் தெங்கம்புதூர், ஆளூர் பேரூராட்சிகள் முழுமையாக இணைக்கப்படுகின்றன என்று தனது உத்தரவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா தெரிவித்துள்ளார்.

எண்ணிக்கை எவ்வளவு: அரசின் உத்தரவு காரணமாக, தமிழகத்தில் நகராட்சிகளின் எண்ணிக்கை 139 ஆக அதிகரிக்கும். மாநகராட்சிகளின் எண்ணிக்கை 15-லிருந்து 16ஆக உயரும்.

**புதிய நகராட்சிகள் விவரம்:**

1. கொல்லங்கோடு, 2. புகளூர், 3. மானாமதுரை, 4. முசிறி, 5. லால்குடி, 6. தாரமங்கலம், 7. இடங்கணசாலை, 8. திருநின்றவூர், 9. பொன்னேரி, 10. திட்டக்குடி, 11. வடலூர், 12. அதிராம்பட்டினம், 13. திருச்செந்தூர், 14. கருமத்தம்பட்டி, 15. காரமடை, 16. கூடலூர், 17. மதுக்கரை, 18. பள்ளப்பட்டி, 19. திருமுருகன்பூண்டி.

**புதிய மாநகராட்சி:** கும்பகோணம்.

---

**12. சென்னை சாம்பியன்: கொல்கத்தாவை வீழ்த்தியது**

ஐபிஎல் போட்டியின் 14ஆவது சீசன் இறுதி ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் 27 ரன்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸை வீழ்த்தி சாம்பியன் ஆனது. சென்னை கோப்பை வெல்வது இது 4ஆவது முறையாகும். இதற்குமுன் 2010, 2011, 2018 ஆகிய ஆண்டுகளில் சென்னை சாம்பியனாகியுள்ளது. கடந்த சீசனில் மிகமோசமான வகையில் தோற்ற நிலையில், அதிலிருந்து மீண்டு தற்போது சாம்பியனாகி சாதித்திருக்கிறது சென்னை.

டூ பிளெஸ்ஸிஸ் ஆட்டநாயகன் ஆனார். இந்த ஆட்டம், டி20 பாரா்மட்டில் கேப்டனாக எம் எஸ் தோனியின் 300ஆவது ஆட்டமாகும். இதன்மூலம் கிரிக்கெட் உலகில் கேப்டனாக 300 டி20 ஆட்டங்களில் களம் கண்ட ஒரே வீரர் என்ற சாதனையை தோனி எட்டியுள்ளார். ஐபிஎல் போட்டியின் 14 சீசன்களில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை 12 சீசன்களில் 214 ஆட்டங்களில் வழி நடத்தியிருக்கிறார் தோனி. அது தவிர ஒரு சீசனில் ரைசிங் புனே சூப்பர் ஜயன்ட்ஸ் அணிக்கு 14 ஆட்டங்களில் தலைமை தாங்கியிருக்கிறார். லீக் போட்டிகள் தவிர்த்து, இந்திய அணியை 72 டி20 ஆட்டங்களில் வழி நடத்தியிருக்கிறார் தோனி. இதில் 6 டி20 உலகக்கோப்பை போட்டிகளும் அடங்கும்.

---

**13. நாட்டின் ஏற்றுமதி 23% அதிகரிப்பு: வரலாற்று உச்சத்தில் வர்த்தக பற்றாக்குறை**

இந்தியாவின் ஏற்றுமதி கடந்த செப்டம்பர் மாதத்தில் 22.63 சதவீத வளா்ச்சியை எட்டியுள்ளது. இந்த நிலையில், நாட்டின் வா்த்தக பற்றாக்குறை இதுவரை இல்லாத வரலாற்று உச்சத்தை பதிவு செய்துள்ளது கவலைக்குரிய அம்சமாக மாறியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறியுள்ளதாவது:

நாட்டின் ஏற்றுமதி நடப்பாண்டு செப்டம்பரில் 22.63 சதவீதம் அதிகரித்து 3,379 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமாரர் ₹2.53 லட்சம் கோடி) வளா்ச்சி கண்டுள்ளது.

**வரலாற்று உச்சம்:** அதேசமயம், கச்சா எண்ணெய் மற்றும் தங்கம் இறக்குமதி வெகுவாக அதிகரித்ததையடுத்து நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறையானது அந்த மாதத்தில் இதுவரை இல்லாத வரலாற்று உச்சமாக முதன் முறையாக 2,259 கோடி டாலரை (₹1.69 லட்சம் கோடி) எட்டியுள்ளது. இதற்கு முன்பு வர்த்தக பற்றாக்குறையானது 2012 அக்டோபரில் 2,020 கோடி டாலரைத் தொட்டதே அதிகபட்ச அளவாக கருதப்பட்டு வந்தது. செப்டம்பரில் இறக்குமதியானது 5,639 கோடி டாலராக இருந்தது. இது, கடந்தாண்டு இதே மாத இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் 84.77 சதவீதம் அதிகமாகும்.

தங்கம் இறக்குமதி விறுவிறு: நடப்பாண்டு செப்டம்பரில் தங்கம் இறக்குமதி 511 கோடி டாலராக கணிசமாக அதிகரித்துள்ளது. இதன் இறக்குமதி கடந்தாண்டு செப்டம்பரில் 60.1 கோடி டாலா் அளவுக்கே இருந்தது. 2021 ஏப்ரல் முதல் செப் வரையிலான ஆறு மாத காலத்தில் தங்கத்தின் இறக்குமதி 680 கோடி டாலரிலிருந்து 2,400 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

கச்சா எண்ணெய் இறக்குமதி உயர்வு: இதேபோன்று, கச்சா எண்ணெய் இறக்குமதியும் கடந்த செப்டம்பரில் 1,744 கோடி டாலராக கணிசமாக அதிகரித்துள்ளது. அதேசமயம், 2020 செப்டம்பரில் இதன் இறக்குமதி 583 கோடி டாலராக மட்டுமே காணப்பட்டது. அதன்படி, 2021 ஏப்ரல்–செப் காலகட்டத்தில் நாட்டின் கச்சா எண்ணெய் இறக்குமதியானது 3,201 கோடி டாலரிலிருந்து 7,299 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

நிலக்கரி: அதேபோன்று, நிலக்கரி இறக்குமதியும் கடந்த செப்டம்பரில் 119 கோடி டாலரிலிருந்து 218 கோடி டாலராக அதிகரித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டு காலத்தில் நிலக்கரி இறக்குமதி ஒட்டுமொத்த அளவில் 1,193 கோடி டாலரை எட்டியுள்ளது. இது, 2020–21 ஆம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 670 கோடி டாலராக இருந்தது.

2021 ஏப்ரல்–செப்டம்பரில் இறக்குமதி கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் 3,201 கோடி டாலரிலிருந்து 7,299 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

**சாதக வளர்ச்சி:** நடப்பாண்டு செப் மாதத்தில், காபி, முந்திரி, பெட்ரோலிய பொருள்கள், கைத்தறி, பொறியியல், ரசாயனம், நூல்/ துணி வகைகள், நவரத்தினங்கள்–ஆபரணங்கள், பிளாஸ்டிக் & கடல் உணவுப் பொருள் துறைகளின் ஏற்றுமதி நேர்மறை வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. 2021 ஏப்ரல்–செப்டம்பா் வரையிலான ஆறு மாத காலத்தில் நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 19,789 கோடி டாலரைத் தொட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியான 12,562 கோடி டாலருடன் ஒப்பிடுகையில் 57.53 சதவீதம் அதிகம் என்பது கவனிக்கத்தக்கது

இறக்குமதி: அதேபோன்று, இதே காலகட்டத்தில் நாட்டின் இறக்குமதியும் 15,194 கோடி டாலரிலிருந்து 81.67 சதவீதம் அதிகரித்து 27,600 கோடி டாலரை எட்டியுள்ளது. ஏற்றுமதியை காட்டிலும் இறக்குமதி அதிகரித்த –தையடுத்து நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்தில் நாட்டின் வர்த்தக பற்றாக்குறை 2,631 கோடி டாலரிலிருந்து 7,813 கோடி டாலராக உயர்ந்துள்ளது என மத்திய அரசு புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

---

**14. தெற்காசிய கால்பந்து: 8ஆவது முறையாக இந்தியா சாம்பியன்**

5 அணிகள் இடையிலான 13ஆவது தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி மாலத்தீவில் நடந்தது. இதில் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி, நேபாளத்தை எதிர்கொண்டது. பந்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும், ஷாட் அடிப்பதிலும் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 3–0 என்ற கோல்கணக்கில் நேபாளத்தை வீழ்த்தி சாம்பியன் கோப்பை –யை கைப்பற்றியது. இந்திய கேப்டன் சுனில் சேத்ரி 49ஆவது நிமிடத்தில் முதலாவது கோல் அடித்தார்.

மொத்தத்தில் இது அவரது 80ஆவது சர்வதேச கோலாகும். இதன்மூலம் அதிக கோல் அடித்தவர்களின் பட்டியலில் 5ஆவது இடத்தில் உள்ள அர்ஜென்டினாவின் லயோனல் மெஸ்சியை (80 கோல்) சமன் செய்தார்.

சேத்ரியை தொடர்ந்து சுரேஷ் வாங்ஜாம் (50ஆவது நிமிடம்), சஹால் சமாத் (90ஆவது நிமிடம்) ஆகியோரும் கோல் போட்டு அசத்தினர். 1993ஆம் ஆண்டு முதல் நடந்து வரும் இந்த போட்டியில் இந்திய அணி இந்தக் கோப்பையை வெல்வது இது 8ஆவது முறையாகும்.

---

**1. தேசிய தன்னார்வ குருதிக்கொடை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) அக்டோபர்.1 ☑**

ஆ) அக்டோபர்.2

இ) அக்டோபர்.3

ஈ) அக்டோபர்.4



✓ தேசிய தன்னார்வ குருதிக்கொடை நாளானது ஒவ்வோர் ஆண்டும் அக்.1 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது குருதிக்கொடை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், தன்னார்வ குருதிக் கொடையை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ "Give Blood and keep the world beating" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். நம் நாட்டிற்கு ஒவ்வோறர் ஆண்டும் சுமார் 1.45 கோடி யூனிட் இரத்தம் தேவைப்படுகிறது. நாடு முழுவதும் 3500 உரிமம் பெற்ற இரத்த வங்கிகள்மூலம் இந்த இரத்தம் சேகரிக்கப்படுகிறது.

---

**2. நிலையான நிதி குறித்து, பன்னாட்டு நிதிச் சேவை மையங்கள் ஆணையத்தால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் யார்?**

அ) உர்ஜித் படேல்

**ஆ) C K மிஸ்ரா ☑**

இ) அபிஜித் பானர்ஜி

ஈ) ஜீன் ட்ரோஸ்



✓ பன்னாட்டு நிதிச் சேவை மையங்கள் ஆணையமானது (IFSCA) முன்னாள் சுற்றுச்சூழல் & வனச்செயலர் C K மிஸ்ரா தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அமைத்து, உலகத்தரம்வாய்ந்த நிலையான நிதி மையத்தை IFSCA'இல் உருவாக்கவுள்ளது. IFSCA, கடந்த ஆண்டு ஏப்ரலில், IFSC அதிகாரச் சட்டம், 2019'இன்கீழ் நிறுவப்பட்டது. இது GIFT நகரமான காந்திநகரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

✓ IFSCA என்பது இந்தியாவிலுள்ள பன்னாட்டு நிதிச்சேவை மையத்தின் (IFSC) நிதி தயாரிப்புகள், நிதிச்சேவைகள் மற்றும் நிதி நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் அதனை ஒழுங்குபடுத்தும் ஓர் அதிகாரமாகும்.

---


**3. குலாப் புயலைத் தொடர்ந்து ஓமானைத் தாக்கிய புயலின் பெயர் என்ன?**

**அ) ஷாஹீன் ☑**

ஆ) பகித்

இ) குல்முகர்

ஈ) தேஜ்



✓ வெப்பமண்டல புயலான ஷாஹீன் ஓமான் கடற்கரையை தாக்கியது. இப்புயல் குலாப் புயலின் ஒரு வழித்தோன்றலாகும். அது, 2021 செப்டம்பர் மாதத்தின் பிற்பகுதியில் இந்தியாவின் கீழைக்கடற்கரையில் பேரழிவை ஏற்படுத்தியது. குஜராத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக இருந்த குலாப் புயல், புதிய ஷாஹீன் புயலாக உருமாறியது.

---

**4. 'நல்ல சமாரியன்' என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) நிதி அமைச்சகம்

**ஆ) சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் ☑**

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

MoRTH
Ministry of Road Transport and Highways

✓ இந்திய அரசின் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், 'நல்ல சமாரியன்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோரை, "பொன்னான மணிநேரத்திற்குள்" மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அவரது உயிரைக்காப்பாற்றும் எவரும் ₹5000/- ரொக்கம் மற்றும் சான்றிதழுட -ன் கௌரவிக்கப்படுவார்கள். மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் தனிநபர் ஒருவருக்கு, ஓர் ஆண்டுக்கு, அதிகபட்சம் 5 முறை இது வழங்கப்படும்.

---

**5. "Keeping cybercriminals out: #JustOneClick" என்பது எந்த அமைப்பால் நடத்தப்படுகிற ஓர் இணையவழி பாதுகாப்புப் பிரச்சாரமாகும்?**

அ) NASSCOM

ஆ) RBI

இ) இந்திய தரவு பாதுகாப்பு கவுன்சில்

**ஈ) இன்டர்போல் ☑**

INTERPOL

✓ அக்.4-22 வரை "Keeping cybercriminals out: #JustOneClick" என்ற இணையவழி பாதுகாப்புப் பிரச்சாரத்தை இன்டர்போல் நடத்துகிறது; இது, சமூக ஊடகங்களில் நடத்தப்படுகிறது. இந்தப் பிரச்சாரத்தின் நோக்கம், இணைய அச்சுறுத்தல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, மக்கள் தங்கள் கணினிகள், வலையமைப்புகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை சைபர் குற்றவாளிகளிடமிருந்து பாதுகாக்க உதவுவதாகும்.

---

**6. அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மரியா ரெஸ்ஸா & டிமிட்ரி முரடோவ் ஆகியோர் சார்ந்த தொழில் எது?**

அ) அரசியல்

**ஆ) பத்திரிகை ☑**

இ) பாதுகாப்பு

ஈ) சமூக சேவை



✓ மரியா ரெஸ்ஸா மற்றும் டிமிட்ரி முரடோவ் ஆகியோர் பிலிப்பைன்ஸ் & ரஷ்யாவில் கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மேற்கொண்ட முயற்சிகளுக்காக 2021ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

✓ ஒரு பிலிப்பினோ – அமெரிக்க பத்திரிகையாளரும் எழுத்தாளருமான மரியா ரெஸ்ஸா, ராப்ளர் என்ற ஊடக நிறுவனத்தின் இணை நிறுவனர் ஆவார். டிமிட்ரி முரடோவ் என்பார் ஒரு ரஷ்ய பத்திரிகையாளர் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளர் ஆவார்.

---

**7. குழந்தைகளுக்கான (2-18 வயது) எந்தத்தடுப்பூசிக்கு, COVID-19 பற்றிய நிபுணர் குழு, அவசர பயன்பாட்டு ஒப்புதலை வழங்கியது?**

அ) கோவிஷீல்ட்

**ஆ) கோவாக்சின் ☑**

இ) ஸ்புட்னிக்

ஈ) பைசர்



✓ 2 முதல் 18 வயது வரையிலான சிறார்களுக்கு கோவாக்சின் தடுப்பூசி செலுத்துவதற்கு நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது. ஐதராபாத்தை சார்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கான கோவக்ஸின் கட்டம்-2 மற்றும் கட்டம்-3 சோதனைகளை முடித்து, அதன் சோதனைத் தரவை இந்திய மருந்துகள் மற்றும் கட்டுப்பாட்டு இயக்குநரகத்திடம் (DCGI) சமர்ப்பித்தது.

✓ பரிசோதிக்கப்பட்ட வயதுக் குழுக்கள்: 12-18 வயதுடையவர்கள்; 6-12 வயதுடையவர்கள் மற்றும் 2-6 வயதுடையவர்கள்.

---


**8. சமீப செய்திகளில் இடம்பெற்ற CRISP-M கருவி, எந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில், காலநிலை தகவலை உட்பொதிக்கிறது?**

**அ) MGNREGS ☑**

ஆ) பிரதமர் ஆவாஸ் யோஜனா

இ) சௌபாக்யா

ஈ) பிரதமர் உஜ்வாலா யோஜனா



✓ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் புவிசார் தகவல் அமைப்பு சார்ந்த நீர்நிலை திட்டமிடலுக்கான பருவநிலை தகவல்களை ஒருங்கிணைப்பதற்கான காலநிலை தகவல் அமைப்பு மற்றும் திட்டமிடல் உபகரணம் அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் மற்றும் இங்கிலாந்து வெளிநாட்டு, காமன்வெல்த் மற்றும் வளர்ச்சி அலுவலகத்தின் தெற்காசிய மற்றும் காமன்வெல்த் இணையமைச்சர் லார்ட் தாரிக் அகமது ஆகியோர் இணைந்து காணொலி நிகழ்ச்சி ஒன்றில் இதை தொடங்கிவைத்தனர்.

---

**9.** **மத்திய உள்துறை அமைச்சகமானது அண்மையில் எந்த மத்திய ஆயுதமேந்திய காவல்படையின் அதிகாரங்களை மேம்படுத்தியது?**

அ) ITBP

**ஆ) BSF ☑**

இ) CRPF

ஈ) CISF

- ✓ மத்திய உள்துறை அமைச்சகமானது அஸ்ஸாம், மேற்கு வங்கம் மற்றும் பஞ்சாபில் உள்ள பன்னாட்டு எல்லையிலிருந்து 50 கிலோமீட்டருக்குள் கைது செய்யவும், தேடவும், கைப்பற்றவும் எல்லைப் பாதுகாப்புப் படைக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.
- ✓ BSF என்பது நடுவணரசின்கீழ் உள்ள ஒரு மத்திய ஆயுதமேந்திய காவல்படையாகும். இந்த அதிகாரம், புதிதாக உருவாக்கப்பட்ட ஜம்மு–காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும். இதற்கு முன்னர்வரை, BSF'இன் வரம்பு, குஜராத்தில் உள்ள பன்னாட்டு எல்லையிலிருந்து 80 கிமீ வரையும் இராஜஸ்தான், பஞ்சாப், மே வங்கம் மற்றும் அஸ்ஸாமில் 15 கிமீ வரையும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

---

**10.** **உலக எஃகு சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?**

**அ) சஜ்ஜன் ஜிண்டால் ☑**



ஆ) ஆதித்யா மிட்டல்

இ) அனிர்பன் தாஸ்குப்தா

ஈ) கௌதம் அதானி

- ✓ JSW ஸ்டீலின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான சஜ்ஜன் ஜிண்டால், 2021-22 காலத்திற்கு உலக எஃகு சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடு–க்கப்பட்டார். இதன்மூலம் இந்தச் சங்கத்தின் தலைவராக பணியாற்றிய இந்தியாவின் முதல் பிரதிநிதியாகவும் ஜிண்டால் ஆனார். இவருக்கு முன் யூ யோங் அச்சங்கத்தின் தலைவராக இருந்தார். இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள், உலகின் எஃகு உற்பத்தியில் சுமார் 85 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். கடந்த 1967'இல் நிறுவப்பட்ட இதன் தலைமையகம் பிரஸ்ஸல்ஸில் அமைந்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இ–ஷ்ரம் இணையதளத்தில் – 4 கோடி அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு:**

கரோனா காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் முடங்கியதில் அமைப்புசாரா தொழிலாளர்கள் அதிக பாதிப்புக்குள்ளாயினர்.

ஆனால் இவர்கள் குறித்த முறையான புள்ளிவிவரங்கள் இல்லாததால் அவர்களுக்கு நலத்திட்டங்களை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. இதை அடுத்து அமைப்புசாரா தொழிலாளர்களின் விவரங்களை திரட்டவும், அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தவும் மத்திய அரசு இ–ஷ்ரம் திட்டத்தை ஆகஸ்ட் 26ஆம் தேதி அறிமுகப்படுத்தியது.

இதற்கென பிரத்யேக இணையதளம் தொடங்கப்பட்டு தொழிலாளர்கள் தங்களின் விவரங்களை பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த இணையதளம் தொடங்கப்பட்டு 2 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் 4.15 கோடி தொழிலாளர்கள்இதுவரை இ–ஷ்ரம் இணையதளத்தில் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சர் பூபேந்திர யாதவ் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறும்போது, "இ–ஷ்ரம் இணையதளத்தில் பதிவு செய்து உள்ள அமைப்புசாரா தொழிலாளர்கள் தங்களுக்கான நலத்திட்ட உதவி–களை எளிதில் நேரடியாகப் பெற முடியும். இதுவரை பதிவு செய்துள்ள 4.15 கோடி தொழிலாளர்களில் 50.6% பேர் பெண்கள். அதிகமான தொழி–லாளர்கள் வேளாண் & கட்டுமானத்துறை சார்ந்தவர்களாக உள்ளனர்.

மேலும் பதிவானவர்களில் 65.68 சதவீதத்தினர் 16–40 வயதினராவர். 34.32 சதவீதத்தினர் 40 வயதுக்கு மேலானவர்கள் ஆவர்" என்றார்.

---

**2. இந்தியாவில் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளவும்**

இந்தியாவில் தொழில் தொடங்குவதற்குள்ள வாய்ப்புகளை இஸ்ரேல் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டார்.

வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் ஐந்து நாள் பயணமாக இஸ்ரேல் சென்றுள்ளார். அங்கு அந்நாட்டின் முக்கிய தொழில் நிறுவனத் தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

இந்தியாவில் மிகப்பெரிய மாற்றத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்–டு வருகின்றன. அதுதொடர்பான அனைத்து புள்ளிகளையும் இணைத்தால், உலகப்பொருளாதாரத்தில் அதிக போட்டித்தன்மையுள்ள வலுவான இடத்தை நோக்கி இந்தியா முன்னேறிச் செல்வது குறித்த பார்வை இஸ்ரேல் தொழில் நிறுவனங்களுக்கு புலப்படும். அந்த வலுவான இடம்மூலம்தான் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்ந்து வரும் நிலையில், கரோனா தொற்று பரவத் தொடங்கிய இந்த 2 ஆண்டு காலத்தில் மாற்றத்துக்கான நடவடிக்கை துரிதமாகியுள்ளது. எனவே இஸ்ரேலில் பாதுகாப்புத் துறை சார்ந்து இயங்கி வரும் நிறுவனங்கள் உள்பட அனைத்து நிறுவனங்களும் இந்தியாவில் தொழில் தொடங்குவ–தற்கு உகந்த விதத்தில் உள்ள கொள்கைகளை பயன்படுத்தி அங்கு முதலீடு செய்ய வேண்டும். இந்தியாவில் மிகப்பெரிய அளவில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டமும் ஒன்று. இந்தியாவு–க்கு புதிய உற்பத்தி திறன்களை கொண்டு வந்து சேர்ப்பவர்களை ஈர்த்து, அவர்களுக்கு உரிய முறையில் ஊக்கத்தொகை அளிப்பதே அந்த திட்டத்தின் நோக்கம். இதுவரை 13 துறைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்–டுள்ளன. அவற்றில் பேட்டரி உற்பத்தி, மின்னணு போன்றவை இஸ்ரேல் நிறுவனங்களுக்கு ஆர்வமுள்ள துறைகளாகும்.

இந்தியாவில் புதிதாக இயற்றப்பட்டுள்ள மூன்று வேளாண் சட்டங்கள் வேளாண்மையை நிலையான வளர்ச்சி கொண்டதாக்குகின்றன. அச் சட்டங்கள் வேளாண்மைத் துறையில் மிகப்பெரிய அளவில் தொழில்க–ளைத் தொடங்கவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அடித்தளம் இடுகின்றன. இதுபோன்ற மாற்றங்கள் வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தியில் அதிக முதலீடுகளை ஊக்குவிக்கும் என இந்தியா கருதுகிறது. இந்தியாவில் தற்போது எண்மம், சுகாதாரம், நீர், உழவு, பாதுகாப்புத் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று தெரிவித்தார். வெளியுறவு அமைச்சராக S ஜெய்சங்கர் இஸ்ரேல் சென்றுள்ளது இதுவே முதல்முறை.

---

**3. 'ஈரான் எரிவாயு உற்பத்தியில் இந்தியாவுக்கான உரிமை தொடரும்'**

ஈரானின் ஃபர்ஸாத்–பி எரிவாயு வயலில் உற்பத்திப் பணிகள் உள்நாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டாலும், அந்தப் பணியில் 30 சதவீத உரிமை இந்திய எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்புக்கு இப்போதும் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அந்த அமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறியதாவது:

ஃபர்ஸாத்–பி பகுதியில் எரிவாயு இருப்பதை ஓஎன்ஜிசி தலைமையிலான இந்திய எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்புதான் கண்டறிந்தது. எனவே, அந்தப் பகுதியில் எரிவாயு உற்பத்தி செய்ய கூட்டமைப்பு இயல்பாகவே விரும்புகிறது. இதுதொடர்பான செயல்திட்டத்தையும் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ளது. எனினும், எரிவாயு உற்பத்திக்கான ஒப்பந்தத்தை உள்நாட்டு நிறுவனத்துக்கு ஈரான் அரசு வழங்கியுள்ளது.

இதன்விளைவாக, இந்தத் திட்டம் இந்தியாவின் கைகளிலிருந்து முழுமையாக நழுவிவிடவில்லை. அடிப்படை ஒப்பந்தத்தின் கீழும் அசல் உரிமத்தின் அடிப்படையிலும் ஃபர்ஸாத்–பி எரிவாயு உற்பத்தியில் இந்தியாவுக்கு 30 சதவீதம் உரிமை உள்ளது.

எரிவாயு உற்பத்தித் திட்டத்தை எந்த நிறுவனம் செயல்படுத்தினாலும், அதில் இந்திய எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்புக்கு 30% உரிமை உள்ளதாக அடிப்படை ஒப்பந்தத்தில் தெளிவாக தெரிவிக்கப்பட்டு உள்ளது என்றார் அவர்.

---

**4.2023ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து 4 வீரர்களை விண்வெளிக்கு அனுப்ப திட்டம் – இஸ்ரோ அதிகாரி தகவல்**

துபாயில் நடந்து வரும் எக்ஸ்போ 2020 கண்காட்சி வளாகத்தில் நேற்று விண்வெளி வார நிகழ்ச்சிகள் தொடங்கின. இதில் பல்வேறு நாட்டு அரங்குகளில் அந்தந்த நாடுகளின் விண்வெளி தொழில்நுட்பங்கள் மற்றும் வளர்ச்சித்திட்டங்கள் குறித்த சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தது.

இந்திய அரங்கிலும் விண்வெளி வார நிகழ்ச்சிகள் நேற்று தொடங்கியது. இதில் முதல் நாளில் நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக இஸ்ரோவின் அறிவியல் செயலாளர் டாக்டர் ஆர் உமாமகேஷ்வரன் கலந்துகொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

கடந்த ஆண்டில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று காரணமாக அடுத்த ஆண்டில் (2022) விண்வெளிக்கு இந்திய வீரர்களை அனுப்பும் திட்டம் தற்போது தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மற்றதொழில்களை போலல்லாமல் விண்வெளித்துறையில் கட்டுமானங்கள் மற்றும் கருவிகளை தயாரிக்க நேரடியாக களத்தில் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இதனை வீட்டிலிருந்து செய்ய முடியாத நிலை உருவானதால், இஸ்ரோ சார்பில் பல்வேறு உதிரி பாகங்கள் மற்றும் தொழில்நுட்ப கருவிகளை தொடர்ந்து தயாரிக்க இயலவில்லை. நமது பிரதமர் மோடி அடுத்த ஆண்டு (2022) ஆகஸ்டில் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தில் ஆர்வமாக இருந்தார்.

ஆனால் தற்போது அதனை நாங்கள் தவறவிட்டு விட்டோம். எனவே வருகிற 2023ஆம் ஆண்டில் இந்திய விண்வெளி வீரர்களை விண்ணுக்கு அனுப்ப முயற்சி செய்து வருகிறோம். மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்த திட்டத்தில் ககன்யான் என்ற விண்கலம் முழுக்க முழுக்க இந்தியாவிலேயே உருவாக்கப்பட்டு அதன் மூலம் 4 இந்திய விண்வெளி வீரர்களை 2023ஆம் ஆண்டு விண்ணுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியா சார்பில் மனிதர்கள் அல்லாத விண்கலன்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமானது 2 கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளது. ஒன்று வருகிற டிசம்பர் மாதத்திலும், மற்றொன்றை அடுத்த ஆண்டிலும் விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் விண்வெளி திட்டங்களில் அடுத்ததாக சந்திரயான்–3 என்ற விண்கலம் அடுத்த ஆண்டு நிலவுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டு உள்ளது. அதேபோல் வீனஸ் கிரகத்தை (வெள்ளி) 4 ஆண்டுகளுக்கு அதன் சுற்றுவட்டப்பாதையில் சுற்றி வந்து ஆய்வு செய்யும் 'சுக்ராயன்–1 ஆர்பிட்டர் விண்கலம்' வருகிற 2024ஆம் ஆண்டு விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

---

**5. அக்.17 – சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்**

**கருப்பொருள்:** Building forward together: Ending Persistent Poverty, Respecting all People and our Planet (ஒன்றாக முன்னேறுதல், தொடர்ந்து கொண்டிருக்கும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல், நமது கிரகத்தையும் அனைத்து மக்களையும் மதித்தல்).

---

**6. அக்.13 – சர்வதேச பேரிடர் அபாய குறைப்பு தினம்**

**கருப்பொருள்:** International cooperation for developing countries to reduce their disaster risk and disaster losses (வளரும் நாடுகளின் பேரிடர் அபாயம் மற்றும் பேரிடர் இழப்புகளைக் குறைப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பு)

---

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற "நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு" என்பதுடன் தொடர்புடையது எது?**



**அ) நெகிழிக்கழிவு மேலாண்மை ☑**

ஆ) ஆட்டோமொபைல் உற்பத்தி

இ) இறைச்சி உற்பத்தி

ஈ) வேளாண் ஏற்றுமதி

✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமானது நெகிழிக்கழிவு மேலாண்மை விதிகள்-2016'இன்கீழ் "நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு – Extended Producer Responsibility"ஐ ஒழுங்குபடுத்துவதற்கான வரைவு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது, திடமான நெகிழிப்பொதியல் என 3 வகை நெகிழிகளை உள்ளடக்கியுள்ளது: ஒற்றை அடுக்கு / பல அடுக்கு நெகிழிகளின் நெகிழ்வான நெகிழிப் பொதியல். இந்த வரைவின்படி, உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களால் நிர்வகிக்கப்பட வேண்டிய கழிவுகளின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**2. 'உலகின் கைத்தூய்மை' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

**அ) WHO மற்றும் UNICEF ☑**

ஆ) NITI ஆயோக்

இ) பெல் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை

ஈ) இந்திய மருத்துவ சங்கம்

✓ உலக நலவாழ்வு நிறுவனமும் (WHO) மற்றும் UNICEFஉம் இணைந்து 2021ஆம் ஆண்டு 'உலகின் கைத்தூய்மை' அறிக்கையை வெளியிட்டன. இந்த அறிக்கையின்படி, உலகம் ஒவ்வோர் ஆண்டும் ஒரு நபருக்கு $1'க்கும் குறைவான தொகையை கைத்தூய்மையில் முதலீடு செய்தால், உலகின் 46 குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள அனைத்து வீடுகளும் 2030'க்குள் கைத்தூய்மை வசதிகளைக் கொண்டிருக்கும்.

✓ வீட்டில் சோப்புகொண்டு கையைக் கழுவுவதை ஊக்குவிப்பதற்காக, இந்த நாடுகளின் அரசாங்கங்கள் தங்களது சுகாதார செலவில் 2.5% அளவுக்கு செலவிடுகின்றன.

---

**3. இந்திய இரயில்வேயால் நடத்தப்படும் இந்திய வேலையில்லாத இளையோருக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் பெயர் என்ன?**

அ) சிறந்த இந்தியா சிறந்த உலகம்

ஆ) திறன் இந்தியா

இ) ரயில் திருஷ்டி

**ஈ) இரயில் கௌஷல் விகாஸ் யோஜனா ☑**

✓ இரயில் கௌஷல் விகாஸ் யோஜனா என்பது 18–35 வயதுடைய வேலையில்லா இளையோருக்கு இந்திய இரயில்வேயால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் ஒரு தொழில்நுட்ப திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆகும். இத்திட்டம் அவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனை -வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ சமீபத்தில், இரயில் கௌஷல் விகாஸ் யோஜனாவின்கீழ் முதல் பிரிவில் வெற்றிபெற்ற பயிற்சியாளர்களுக்கு சுய வேலைவாய்ப்பு கருவிகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்திய ரயில்வேயின் உற்பத்தி அலகான பனாரஸ் லோகோமோட்டிவ் வொர்க்ஸ் அதன் முதல் தொகுதி பயிற்சியாளர்களுக்கு வெற்றிகரமாக பயிற்சியை நடத்தியது.

---

**4. "தி நேவல் இன்டராக்ஷன்-2021" என்பது எவ்விரு நாடுகளுக்கு இடையேயான கூட்டு கடற்படைப் பயிற்சியாகும்?**



அ) இந்தியா மற்றும் அமெரிக்கா

ஆ) இந்தியா மற்றும் சீனா

**இ) சீனா மற்றும் ரஷ்யா ☑**

ஈ) ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா

✓ சீனா & ரஷ்யாவின் கடற்படைப் படைகள் "தி நேவல் இன்டராக்ஷன் – 2021" கூட்டு கடற்படைப் பயிற்சியைத் தொடங்கியுள்ளன. இந்தப் பயிற்சி இருநாட்டின் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதோடு கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை கூட்டாக சமாளிக்கும் திறனை வளர்த்துக்கொள்கிறது. இப்பயிற்சி ஜப்பான் கடலில் உள்ள ரஷ்யாவின் பீட்டர் தி கிரேட் வளைகுடாவில் நடக்கிறது.

**5. 2021-உலகப் பார்வை நாளுக்கான கருப்பொருள் என்ன?**



**அ) Love Your Eyes ☑**

ஆ) Donate Eyes; Donate Life

இ) Eye Health matters

ஈ) Sight First

✓ உலக பார்வை நாளானது ஆண்டுதோறும் அக்டோபர் இரண்டாவது வியாழனன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2021) அக்டோபர். 14 அன்று இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது. இது குருட்டுத்தன்மை மற்றும் பார்வை குறைபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு உலகளாவிய நிகழ்வாகும். இது முதலில் பன்னாட்டு அரிமா சங்கத்தின் 'Sight First' பிரச்சாரத்தால் கடந்த 2000'இல் தொடங்கப்பட்டது.

✓ "உங்கள் கண்களை நேசியுங்கள்" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**6. இந்தியா-அமெரிக்க பொருளாதார மற்றும் நிதிக் கூட்டாண்மை உரையாடலின் எட்டாவது அமைச்சர்கள் கூட்டம் சமீபத்தில் எங்கு நடைபெற்றது?**



அ) புது தில்லி

**ஆ) வாஷிங்டன் DC ☑**

இ) புனே

ஈ) நியூயார்க்

✓ இந்தியா-அமெரிக்கா பொருளாதார & நிதிக் கூட்டாண்மைக்கான அமைச்சர்கள் அளவிலான எட்டாவது கூட்டம் வாஷிங்டன் டிசி'இல் நடைபெற்றது. மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் அமெரிக்க கருவூல செயலாளர் டாக்டர் ஜானெட் யெல்லென் இதற்குத் தலைமையேற்றனர்.

✓ பரந்த பொருளாதாரக் கண்ணோட்டம், COVID-19 பெருந்தொற்றில் இருந்து மீட்சி, நிதி ஒழுங்குமுறை, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, பலதரப்பு ஈடுபாடு, பருவநிலை நிதி, பண மோசடி எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

---

**7. விண்வெளியில் எடுக்கப்பட்ட உலகின் முதல் திரைப்படமான 'தி சேலஞ்ச்' சார்ந்த நாடு எது?**



அ) அமெரிக்கா

**ஆ) ரஷ்யா ☑**

இ) சீனா

ஈ) இஸ்ரேல்

✓ விண்வெளியில் எடுக்கப்பட்ட உலகின் முதல் திரைப்படம் "தி சேலஞ்ச்". கஜகஸ்தானில் உள்ள பைகோனூர் ஏவுதளத்திலிருந்து சோயுஸ் MS – 19 ஏவுகலம்மூலம் படக்குழு விண்வெளிக்குச்சென்றது. அங்கு 12 நாட்கள் படப்பிடிப்பு நடத்தியபின், இயக்குனர் கிளிம் ஷிபென் கோவும், நடிகை யுலியா பெரெஸில்ட்டும் பூமிக்கு திரும்பினர்.

---

**8. UCO வங்கியின் MD & CEOஆன A K கோயல், அண்மையில் எந்த அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ) பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா

ஆ) IBPS

**இ) இந்திய வங்கிகள் சங்கம் ☑**

ஈ) RBI சேவை வாரியம்

✓ UCO வங்கியின் தற்போதைய நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான AK கோயல், 2021-22ஆம் ஆண்டிற்கான இந்திய வங்கிகள் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2021 அக்.14 அன்று நடந்த அமைப்பின் நிர்வாக குழுக்கூட்டத்தில் இதற்கான தேர்தல் நடைபெற்றது. அவர் யூனியன் வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ராஜ்கிரண் ராய் ஜியைத் தொடர்ந்து இப்பதவிக்கு வந்துள்ளார்.

---

**9.** சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 'ஹாமில்டன் பொருள்' என்பதுடன் தொடர்புடைய எது?

அ) இயற்பியல்

**ஆ) விண்வெளி அறிவியல் ☑**

இ) தீநுண்மவியல்

ஈ) பொருளாதாரம்



✓ NASA/ESA ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியால் எடுக்கப்பட்ட படங்களிலிருந்து, திமோதி ஹாமில்டன் தலைமையிலான வானியலாள –ர்கள் குழு, அசாதாரண ஈர்ப்பு லென்சிங் கட்டமைப்பை கண்டறிந்து உள்ளது. 'ஹாமில்டனின் பொருள்' என அது பெயரிடப்பட்டுள்ளது.

**10.** சமீப செய்திகளில் இடம்பெற்ற *Amoria thorae* என்பது பின்வரும் எந்த வகை சார்ந்த ஒரு புதிய உயிரினமாகும்?

**அ) கடல் நத்தை ☑**

ஆ) ஆமை

இ) சிலந்தி

ஈ) நண்டு



✓ *Amoria* என்பது கடல் வயிற்றுக்காலிகளின் (கடல் நத்தைகள் மற்றும் கடலட்டைகள்) ஓர் இனமாகும். இந்த வேட்டையாடும் உயிரினங்கள் ஆஸ்திரேலியாவின் முழு கடற்கரையைச்சுற்றியும் (கடற்கரை மற்றும் கடல்நீரில்) காணப்படுகின்றன. இதன் சில இனங்கள் தெற்கு இந்தோ –னேசியா வரை பரவியுள்ளன. *Amoria thorae* எனப் பெயரிடப்பட்ட இந்த இனம் மிகவும் அரிதானது ஆகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சேதி தெரியுமா?**

அக்.8: அமைதிக்கான நோபல் பரிசு பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் மரியா ரெஸா, ரஷ்ய பத்திரிகையாளர் திமித்ரி முராதஃப் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

அக்.8: தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராக ஐசரி கணேஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், இந்தச் சங்கத்தில் 15 ஆண்டுகள் துணைத் தலைவராக இருந்தார்.

அக்.9: புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான நல வாரியம் அமைக்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்தது. இது, 'புலம்பெயர் தமிழர் நல வாரியம்' என அழைக்கப்படும்.

அக்.10: 2022ஆம் ஆண்டில் பிரிட்டனின் பர்மிங்காம் நகரில் நடைபெற உள்ள காமன்வெல்த் ஹாக்கிப் போட்டியிலிருந்து விலகுவதாக ஹாக்கி இந்தியா அமைப்பு அறிவித்தது.

அக்.13: தமிழகத்தில் நவம்பர் 1 முதல்ஒன்பதாவதற்குக் கீழ் உள்ள வகுப்பு களைத் திறக்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. வாரத்தில் 7 நாட்களும் வழிபாட்டுத் தலங்களை திறக்கவும் தமிழக அரசு உத்தரவிட்டது.

அக்.14: 'டி23' என்று பெயரிடப்பட்ட புலியை 23 நாட்கள் தேடுதலுக்குப் பிறகு முதுமலை புலிகள் காப்பகப் பகுதியில் உயிருடன் வனத்துறைப் பிடித்தது.

அக்.13: சர்வதேசக் கால்பந்துப் போட்டிகளில் அதிக கோல்கள் அடித்திருந்தவர்களின் பட்டியலில் பீலேவின் (77 கோல்) சாதனையை இந்தியாவின் சுனில் சேத்ரி முறியடித்தார். 79 கோல் அடித்திருக்கும் சுனில் சேத்ரி 3ஆம் இடத்தில் உள்ளார்.

அக்.15: துபாயில் நடைபெற்ற ஐபிஎல் இறுதிப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, கொல்கத்தா நைட் ரைட்டர்ஸ் அணியை 27 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்துக் கோப்பையை வென்றது. இது சென்னை அணி வெல்லும் 4–வது கோப்பை.

பிரபல பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் (அக்.8), புகழ்பெற்ற மலையாள நடிகர் நெடுமுடி வேணு (அக்.11), பழம்பெரும் தமிழ்த் திரைப்பட நடிகர் ஸ்ரீகாந்த் (அக்.12) ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள்.

**2. கதைப்போமா அறிவியல் 5: நோபல் நாயகர்கள்!**

அக்டோபர் வந்தாலே அறிவியல் ஆராய்ச்சி சமூகத்திற்கு பரபரப்பு தொற்றிக் கொள்வது வழக்கம். நோபல் அமைப்பு அந்த வருடத்திற்கான விருது பெற்றவர்கள் யார் என்பதை முதல் இரண்டு வாரங்களில் அறிவிப்பதை வழக்கமாக வைத்திருப்பதால் வரும் பரபரப்பு அது.

வேதியியல் பொறியாளராகவும், தொழில்முனைவருமாக இருந்த ஆல்ஃப்ரட் நோபல் 1896ல் இறப்பதற்கு முன்னால் எழுதி வைத்த உயிலில், வாழ்நாள் முழுக்க தான் சேர்த்த சொத்துக்களை வைத்து குறிப்பிட்ட துறைகளில் சிறப்பாக பணியாற்றவர்களுக்கு வருடந்தோறும் கொடுக்கப்பட வேண்டும் என எழுதிவைத்துவிட்டுப் போக நோபல் அமைப்பு தொடங்கப்பட்டது. வெடிகுண்டுகளில் பயன்படுத்தப்படும் டைனமைட்டை கண்டறிந்தவர் நோபல் என்பது கிளைச் செய்தி. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து ஆறு துறைகளில் இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

இயற்பியல், வேதியியல், மருத்துவம் என மூன்று அறிவியல் துறைகளுக்கும், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் அமைதி என மற்ற துறைகளுக்குமாக பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருடமும் அதிக பட்சம் மூன்று பேர் ஒரு துறைக்கான விருதை பகிர்ந்துகொள்ளலாம். 975 பேர் இதுவரை நோபல் பரிசு வென்றிருக்கிறார்கள் என்றாலும் அதில் 58 பேர் மட்டுமே பெண்கள் என்பது கவனத்துடன் உற்று நோக்க வேண்டிய புள்ளியியல் தகவல். இது அறிவியல் தொடர் என்பதால், அறிவியல் துறைகளுக்கான இந்த வருட பரிசு வெற்றியாளர்களின் ஆராய்ச்சி பணிகளைப் பார்த்துவிடலாம்.

இயற்பியல்

இத்தாலி, ஜெர்மனி மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த மூவர் இந்த வருட பரிசை பகிர்ந்து கொள்கிறார்கள். மூவருமே கோட்பாடு இயற்பியலாளர்கள் (Theoretical physicists). அதென்ன கோட்பாடு இயற்பியல் என்ற கேள்வி எழலாம். நம்மைச் சுற்றியிருக்கும் நிகழ்வுகளை விளக்குவதுதான் இயற்பியலின் அடிப்படை நோக்கம். குளிப்பதற்காக தொட்டியில் அமர்ந்த ஆர்கிமிடீஸ் தன் எடைக்கேற்ற தண்ணீர் வெளியேறியதைப் பார்த்து, அதிலிருந்து மிதவை (Buoyancy) என்பதைக் கணித வழியாக செய்த வரையறை மூலமாகத்தான் கப்பல் போக்குவரத்து என்பது தொடங்கியது. ஆப்பிள் மரத்தில் கீழ் அமர்ந்திருக்கையில் தலையில் ஆப்பிள் விழுந்ததில் இருந்து தொடங்கிய சிந்தனைதான், நியூட்டனின் புவியீர்ப்பு விசை பற்றிய கணித வடிவாக மாறியது. ஆர்கிமிடீஸ், நியூட்டன் போன்றவர்கள் நேரடி இயற்பியலாளர்கள்.

ஆனால், அறிவியல் ஆராய்ச்சிகளில் இப்படி நேரடியாகவே பணி புரிவது கடினம். இதைத் தீர்க்க, பெறப்படும் தகவல்களைக் கொண்டு மாதிரிகளை (Model) உருவாக்கி, அந்த மாதிரிகள் மாற்றங்களுக்கு எப்படி உட்படும் என்பதை கணித வடிவில் கொண்டுவரும் முறைமையை கோட்பாடு இயற்பியல் என சொல்லலாம். இந்த வருடம் நோபல் பரிசு வென்ற – க்ளாஸ் ஹேசல்மன், ஜியார்ஜியோ பரீசி மற்றும் சியக்கூரோ மனாபி – ஆகிய மூவரின் ஆராய்ச்சி முயற்சிகள் இன்றைய காலத்திற்கு ஏற்ற சூழலியலின் அடிப்படை அறிவியல் சம்பந்தப்பட்டது. கடலுக்கு கீழ் இருக்கும் பனிப்பாறைகள் உருகும் தன்மை முதல் பறவைகள் ஒன்றாக பறப்பதன் பின்னிருக்கும் காரணிகள் வரை ஆழமாகச் செல்கின்றன இவர்களது ஆராய்ச்சிகள். இந்த வருட இயற்பியல் வெற்றியாளர்கள் பற்றிய நோபல் அமைப்பின் அறிக்கை – https://www.nobelprize.org/prizes/physics/2021/press-release/

வேதியியல்

பெஞ்சமின் லிஸ்ட் மற்றும் டேவிட் மேக்மில்லன் என்ற இரண்டு ஆராய்ச்சியாளர்கள் வேதியியலுக்கான பரிசை சரிசமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள். இருவருக்கும் நேரடியான அறிமுகம் இல்லை என்றாலும், தனித்தனியாக மேற்கொண்ட இவர்களது ஆராய்ச்சிகளில் இருந்து பெறப்பட்ட புதுமையான கண்டுபிடிப்பிற்குத்தான் நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. வினையூக்கம் (Catalysis) என்பது நம் உடலில் தொடங்கி நம்மைச் சுற்றி நடக்கும் பல நிகழ்வுகளின் அடிப்படை. உதாரணத்திற்கு, நாம் உண்ணும் உணவை நம் உடல் நொதிகள் (Enzymes) மூலம் வேதிமாற்றம் செய்து சத்துக்களை எடுத்துக்கொள்கிறது. நீங்கள் கையில் வைத்திருக்கும் அலைபேசியின் உள்ளிருக்கும் பேட்டரி உலோகத்தால் ஆன மூலக்கூறுகளால் கட்டப்பட்டது.

அடிப்படையில் இது வரை, நொதிகள் மற்றும் உலோகம் என்ற இரண்டு மட்டுமே வினையூக்கம் செய்ய பயன்படும் என்றுதான் வேதியியல் ஆராய்ச்சி உலகம் நினைத்திருந்தது.

மேற்கண்ட இரண்டு ஆராய்ச்சியாளர்களும் இதற்கு மாற்றாக இயங்கும் வினையூக்கியை கண்டறிந்திருக்கிறார்கள். கரிம வினையூக்கம் (Organocatalysis) எனப்படும் இந்த முறைமை கரிம அணுக்களை (Carbon atoms) பயன்படுத்துகிறது. ஆக்சிஜன், நைட்ரஜன் என பலவற்றுடன் கரிமம் எப்போதும் இணைய விரும்பும் கரிமத்தின் தன்மை இதற்கு அடிப்படை. இந்த கண்டுபிடிப்பு புதிய மருந்து ஆராய்ச்சிகளுக்கு வெகுவாக பயன்படுவதோடு, மாசு உண்டாக்காத விதத்தில் வினையூக்கத்தை பயன்படுத்தலாம் என்பது கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. இவர்களது ஆராய்ச்சிகளைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள, நோபல் வெளியிட்டிருக்கும் அறிக்கைக்கு செல்லுங்கள் – https://www.nobelprize.org/prizes/chemistry/2021/press-release/

மருத்துவம்

வேதியியல் போலவே மருத்துவத்திற்கான நோபல் பரிசை இருவர் பகிர்ந்து கொள்கிறார்கள். இருவரும் அமெரிக்கர்கள். நரம்பியல் ஆராய்ச்சியாளரான ஆர்டம் பாட்டபூடியன், உடல்கூறு நிபணரான டேவிட் ஜூலியஸ் இருவரது ஆராய்ச்சிகளும் தொடுதலின் அறிவியல் சார்ந்தவை. சூடாக இருக்கும் தட்டின் மீது கையை வைத்தால், தோல் சென்சாராக மாறி, மூளையில் இருக்கும் நியூரான்களுக்கு தகவல் அனுப்பி கையை இழுத்துக் கொள்வதற்கு இடையில் நடக்கும் தகவல் பரிமாற்றம் படித்தறிய பிரமிப்பூட்டுவது. நாம் அறிந்து நடக்கும் இந்த நிகழ்வுகளைத் தாண்டி அனிச்சையாக உடலுக்குள் இப்படி பல்லாயிரம் நிகழ்வுகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. இதை முழுக்க புரிந்து கொள்வதன் மூலம், நோய் காரணிகளை மட்டுமல்லாமல், சிறந்த வகையில் வலி மேலாண்மை செய்வதற்கும் இவர்களின் ஆராய்ச்சிகள் உதவிகரமாக இருக்கும் என்பதால் இந்த பரிசு. நோபல் அமைப்பு வெளியிட்டிருக்கும் அறிக்கை இதோ – https://www.nobelprize.org/prizes/medicine/2021/prize-announcement/

### 3. ஒசூரில் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம்: காணொலியில் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

மீன்வளம், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ரூ.19 கோடியே 5லட்சத்தில் கட்டப்பட்டுள்ள நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம், மீன்வளத் துறை கட்டிடங்களை காணொலி காட்சி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

நாட்டு கோழிக்குஞ்சு உற்பத்தியை அதிகரிக்கவும், கிராமங்களில் இத்தொழிலை ஊக்குவித்து தொழில் முனைவோரை உருவாக்கவும், பயிற்சி அளிக்கவும் ஒசூரில்உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் ரூ.6 கோடியே 74 லட்சத்து 87 ஆயிரத்து 500 மதிப்பீட்டில் குஞ்சுபொரிப்பகத்துடன் கூடிய நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இதைசென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்துவைத்தார்.

இந்த வளாகத்தில் 5,100 வளரும்கோழிகள், 9,150 முட்டையிடும் கோழிகளைப் பராமரிக்க முடியும். வாரத்துக்கு 20 ஆயிரம் வீதம் ஆண்டுக்கு 10 லட்சம் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காட்டில் நபார்டு திட்ட நிதியில் ரூ.8 கோடியே 80 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள மீன்வளர்ப்பு தொழில்நுட்ப தொழில்சார் கல்வி நிலைய கட்டிடத்தையும் முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்தார். மீன்வளர்ப்பு தொழில் நிறுவனத்துக்கு தேவையான 2–ம் நிலை தொழில்நுட்ப உதவியாளர்களை உருவாக்குவது இதன் நோக்கமாகும். மேலும், திருச்சி ஜீயபுரத்தில் ரூ.3 கோடியே 50 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மைய கட்டிடத்தையும் முதல்வர் திறந்துவைத்தார். விலைஉயர்ந்த நன்னீர் அலங்கார மீன்களை வளர்ப்பவர்களுக்கு சிறந்த தரமான சினை மீன்களை உற்பத்தி செய்வது இம்மையத்தின் நோக்கமாகும்.

### 4. கற்றல் இடைவெளியை குறைக்க 'இல்லம் தேடி கல்வி' புதிய திட்டம் அறிமுகம்

பள்ளிக் குழந்தைகளின் கற்றல் இடைவெளியை குறைக்கும் பொருட்டு 'இல்லம் தேடி கல்வி' என்ற புதிய திட்டம் காஞ்சிபுரம், விழுப்புரம் உட்பட 12 மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளதாக பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்தார்.

கரோனா காரணமாக பள்ளிகள் நீண்ட காலமாக மூடப்பட்டதால் பள்ளிக் குழந்தைகளின் கற்றல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஒன்று முதல் 8–ம் வகுப்பு வரையிலான குழந்தைகளின் கற்றல் இடைவெளியைக் குறைக்கும் நோக்கில் பள்ளிக்கல்வித் துறை 'இல்லம் தேடி கல்வி' என்ற புதிய திட்டத்தை கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நீலகிரி, தஞ்சாவூர், திருச்சி, விழுப்புரம் ஆகிய 12 மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த திட்டத்தின்படி, தன்னார்வலர்கள் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக் குழந்தைகளுக்கு மாலை நேரத்தில் ஆடல், பாடல், பொம்மலாட்டம் மூலம் பாடம் மற்றும் பாடம் சார்ந்த விஷயங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்.

அதேபோல், இந்தத் திட்டத்தில் இணைந்து தன்னார்வலர்களாக பணியாற்ற illamthedikalvi.tnschools.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவு மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த புதிய இணையதளத்தையும், விழிப்புணர்வு வாகன பிரசாரத்தையும் சென்னை டிபிஐ வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் தொடங்கி வைத்தார்.

வயதுவரம்பு தளர்வு

பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா கூறும்போது, "ஆசிரியர் பணிக்கு வயது வரம்பு 5 ஆண்டுகள் தளர்த்தப்பட உள்ளது. வெகு விரைவில் அரசாணை வெளியாகும்" என்று குறிப்பிட்டார். இந்நிலையில், இதுதொடர்பான அரசாணை நேற்று வெளியானது.

### 5. தமிழக அரசு, ஐரோப்பிய தமிழர்கள் நிதியால் கொலோன் பல்கலை. தமிழ் பிரிவு நீட்டிப்பு

மூடும் நிலையில் இருந்த தமிழ்ப் பிரிவை 2023–ம் ஆண்டு வரை நீட்டிப்பதாக கொலோன் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

ஜெர்மனியில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் இந்தியவியல் மற்றும் தமிழ்க் கல்விப் பிரிவில் தமிழுக்கானக் கல்வி கடந்த 58 ஆண்டுகளாக போதிக்கப்படுகிறது. ஆனால், நிதி நெருக்கடியால் கடந்த நவம்பர் 2020 முதல் தமிழ்ப் பிரிவை மூடுவதாக கொலோன் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது. அதன்பின், தமிழ்ப் பிரிவை காக்க ஜெர்மனி வாழ் தமிழர்கள் மற்றும் ஐரோப்பியத் தமிழர் கூட்டமைப்பு முயற்சி எடுத்தது. இதற்காக, தமிழக அரசிடமும் நிதி உதவி கேட்கப்பட்டிருந்தது.

இதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு ரூ.1.25 கோடியும், ஐரோப்பியத் தமிழர் கூட்டமைப்பு சார்பில் ரூ.23 லட்சமும் நிதி வழங்கப்பட்டது. இதையடுத்து, கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பிரிவை மார்ச் 2023–ம் ஆண்டு வரை நீட்டிப்பதாக பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

### 6. கொரோனா தடுப்பூசி: உத்தரகாண்ட் மாநிலம் சாதனை – பிரதமர் மோடி பாராட்டு

உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முழுமையாக முதல் டோஸ் கொரோனா தடுப்பு ஊசி செலுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே ஹிமாச்சல் பிரதேஷ், கோவா உள்ளிட்ட மாநிலங்கள் தங்கள் மாநிலத்தில் உள்ள தகுதியுள்ள அனைவருக்கும் முதல் டோஸ் தடுப்பூசி செலுத்தி முடித்துள்ளனர். இதுகுறித்து ட்விட்டரில் பதிவிட்டுள்ள பிரதமர் மோடி தேவ பூமியில் வாழும் மக்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார். கொரோனாவுக்கு எதிரான தேசத்தின் போரில் உத்தரகாண்டின், சாதனை மிக முக்கியமானது என குறிப்பிட்டுள்ளார். பெருந்தொற்றுக்கு எதிரான போரில் இந்தியாவின் தடுப்பூசி திட்டம் மிக சிறப்பானதாக திகழப் போகிறது என்கிற நம்பிக்கை தமக்கு இருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி பதிவிட்டுள்ளார்.

### 7. இந்திய கடற்படைக்கு போயிங் 11–ஆவது பி–81 போர் விமானம்

அமெரிக்க விமானத் தயாரிப்பு நிறுவனமான போயிங்கிடமிருந்து 11–ஆவது பி–81 நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு போர் விமானத்தை இந்திய கடற்படை பெற்றுக்கொண்டது.

கடந்த 2009–ஆம் ஆண்டு போயிங் நிறுவனத்திடம் இருந்து 8 பி–81 விமானங்களை வாங்க பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டது. அந்த விமானங்கள் இந்திய கடற்படையிடம்

ஒப்படைக்கப்பட்ட நிலையில், மேலும் 4 பி-81 விமானங்களை வாங்க 2016-ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின்படி மூன்றாவது பி-81 விமானம் இந்திய கடற்படையிடம் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை 11 பி-81 விமானங்களை இந்திய கடற்படையிடம் போயிங் ஒப்படைத்துள்ளது. மேலும் ஒரு விமானம் வழங்கப்பட வேண்டியுள்ளது. நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்க்கும் போர்த் திறன்களைக் கொண்ட பி-81 விமானங்கள் கடல்சார் உளவுப் பணியிலும் ஈடுபடுத்தப்படுகின்றன. அத்துடன் பேரிடர் காலங்களில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் உதவவும் பயன்படுத்தப்படுகின்றன.

---

**8. நோரி, படோசா முதல் முறை சாம்பியன்**

அமெரிக்காவில் நடைபெற்ற பிஎன்பி பாரிபாஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்தின் கேமரூன் நோரி, மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் பௌலா படோசா ஆகியோர் சாம்பியன் ஆகினர்.

இப்போட்டியில் இவர்கள் இருவரும் சாம்பியன் ஆனது இது முதல் முறையாகும். அதேபோல் அவர்கள் இதுவரை வென்ற பட்டங்களிலே இதுதான் மிகப்பெரிதும் கூட.

கரோனா சூழல் காரணமாக தாமதமாக நடத்தப்பட்ட இந்தப் போட்டியை பல நட்சத்திர போட்டியாளர்கள் தவிர்த்து விட, போட்டியில் பங்கேற்ற இதர முக்கிய வீரர், வீராங்கனைகளும் தோற்கடிக்கப்பட்டனர். இதனால் சர்வதேச தரவரிசையில் முதல் 25 இடங்களில் இல்லாத இருவர் சாம்பியன் ஆகியிருக்கின்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் போட்டித்தரவரிசையில் 21-ஆம் இடத்திலிருந்த கேமரூன் நோரி 3-6, 6-4, 6-1 என்ற செட்களில் 29-ஆம் இடத்திலிருந்த ஜார்ஜியாவின் நிகோலஸ் பாசிலாஷ்விலியை தோற்கடித்தார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் போட்டித்தரவரிசையில் 21-ஆம் இடத்திலிருந்த பௌலா படோசா 7-6 (7/5), 2-6, 7-6 (7/2) என்ற செட்களில் 27-ஆவது இடத்திலிருந்த பெலாரஸின் விக்டோரியா அஸரென்காவை வீழ்த்தினார்.

பிஎன்பி பாரிபாஸ் ஓபன் போட்டியில் முதல் முறையாக களம் காணும் சீசனிலேயே சாம்பியன் ஆன 3-ஆவது வீராங்கனை என்ற பெருமையை படோசா பெற்றுள்ளார். முன்னதாக அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் (1999), கனடாவின் பியான்கா ஆண்ட்ரிஸ்கு (2019) ஆகியோர் இவ்வாறு பட்டம் வென்றனர்.

உலகத்தரவரிசையில் 26-ஆவது இடத்தில் இருக்கும்போது இப்போட்டி -யில் சாம்பியன் ஆகியிருக்கும் 4-ஆவது வீரர் நோரி. முன்னதாக குரோஷியாவின் இவான் ஜுபிசிச் (2019), ஸ்பெயின் வீரர் அலெக்ஸ் காரெட்ஜா (2000), அமெரிக்காவின் ஜிம் கொரியர் (1991) ஆகியோர் அவ்வாறு சாம்பியன் ஆகியிருந்தனர்.

₹9 கோடி பரிசு

சாம்பியன் ஆகியிருக்கும் நோரி மற்றும் படோசாவுக்கு தலா ரூ.9 கோடி ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

---

**9. அமெரிக்காவின் முதல் கருப்பின வெளியுறவு அமைச்சர் காலமானார்**

அமெரிக்காவின் முதல் கருப்பின வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்த காலின் பவெல் (84) திங்கள்கிழமை காலமானார். அவரின் மறைவுக்கு முன்னாள் அதிபர் ஜார்ஜ் டபிள்யு புஷ் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர், பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்டோருக்கு பாதுகாப்பு சார்ந்த ஆலோசனைகளை வழங்கும் அமைப்பின் தலைவராக கடந்த 1989ஆம் ஆண்டு காலின் பவெல் பொறுப்பேற்றார். 1991ஆம் ஆண்டு பனாமாவிலும் குவைத்திலும் இருந்து இராக் ராணுவத்தை வெளியேற் -றும் பணிகள் அவரின் மேற்பார்வையில் நடைபெற்றது. இதனால் அவர் மீது நன்மதிப்பு ஏற்பட்டது.

எனினும் இராக்குக்கு எதிராக அமெரிக்க போர் தொடுத்தது தொடர்பாக 2003-ஆம் ஆண்டு ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் விளக்கமளித்த பவெல், பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை சதாம் ஹுசேன் ரகசியமாக பதுக்கி வைத்திருந்ததாக தவறான தகவலை தெரிவித்தார். இது அவரின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியது.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை அமெரிக்க வெளியுறவு அமைச்சராக அவர் பதவி வகித்தார். இவரே அந்நாட்டின் முதல் கருப்பின வெளியுறவு அமைச்சர்.

---

**10. மாஸ்கோவில் நேட்டோ அலுவலகங்கள் மூடப்படும்: ரஷியா அறிவிப்பு**

மாஸ்கோவில் உள்ள நேட்டோ அலுவலகங்கள் மூடப்படும் என ரஷியா அறிவித்துள்ளது.

ரஷிய தலைநகர் மாஸ்கோவில் NATO கூட்டமைப்பின் அலுவலகங்கள் உள்ளன. நேட்டோ நாடுகளுடனான உயர்நிலை கூட்டங்களுக்காக அந்த அலுவலகங்களில் ரஷியா சார்பில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர். அவர்களில் 8 பேரை நேட்டோ கடந்த வாரம் நீக்கியது. அவர்கள் ரஷியாவின் உளவுத்துறை அதிகாரிகளாக ரகசியமாக செயல்பட்டதால் நீக்கியதாக நேட்டோ தெரிவித்தது.

---

**1.** **சமீபத்தில் "மகாரத்னா" அந்தஸ்து கிடைக்கப்பெற்ற பொதுத்துறை நிறுவனம் எது?**

**அ) பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ☑**

ஆ) இந்திய விமான நிலையங்கள் ஆணையம்

இ) பாரத் டைனமிக்ஸ் லிட்

ஈ) BEML லிட்

✓ பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷனுக்கு (PFC) மத்திய அரசு "மகரத்னா" அந்தஸ்தை வழங்கியுள்ளது. ஓஎன்ஜிசி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், SAIL போன்ற உயரடுக்கு குழுவில் சேர்ந்து, இவ்வந்தஸ்தைப் பெறும் 11 ஆவது பொதுத்துறை நிறுவனம் PFC மாறியுள்ளது. 3 ஆண்டுகளுக்கு ₹5,000 கோடிக்கு மேல் நிகர இலாபத்தை பதிவு செய்த ஒரு நிறுவனத்திற்கு "மகரத்னா" அந்தஸ்து வழங்கப்படுகிறது.

---

**2.** **2021 – உலக கீல்வாத நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ) Don't Delay, Connect Today: Time2Work ☑**

ஆ) Leaving No one behind

இ) Misdiagnosis in Arthritis

ஈ) 25 years of Arthritis Day

✓ வாத மற்றும் தசைக்கூட்டு நோய்களின் இருப்பு மற்றும் தாக்கம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.12 அன்று உலக கீல்வாத நாள் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாள், முதன்முதலில் கடந்த 1996'இல் அனுசரிக்கப்பட்டது. "Don't Delay, Connect Today: Time2Work" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**3.** **மத்திய உள்துறை அமைச்சகமானது கூர்கா பிரதிநிதிகள் மற்றும் எந்த மாநில அரசுடன் முத்தரப்பு பேச்சுவார்த்தையை தொடங்கியது?**

அ) ஒடிஸா



**ஆ) மேற்கு வங்கம் ☑**

இ) அஸ்ஸாம்

ஈ) ஜார்க்கண்ட்

✓ மத்திய உள்துறை அமைச்சகமானது டார்ஜிலிங் குன்றுகள், டெர்ராய் மற்றும் தூர்ஸ் பிராந்தியத்தின் கூர்கா பிரதிநிதிகள் மற்றும் மே. வங்க மாநில அரசாங்கத்துடன் முத்தரப்பு பேச்சுவார்த்தையைத் தொடங்கியது.

✓ வட வங்கப் பிராந்தியத்தில் மாநில அந்தஸ்து கோரிக்கைக்கு தீர்வு காணும் நோக்கத்தில் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது. மேற்கு வங்க மாநில அரசாங்க அதிகாரிகளுடனான இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை, 2021 நவம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

---

**4.** **'செந்நாய்' என்றும் அழைக்கப்படுகிற விலங்கினம் எது?**

**அ) ஆசிய காட்டு நாய் ☑**



ஆ) கழுதைப்புலி

இ) தென்னாப்பிரிக்க ஓநாய்

ஈ) ஆப்பிரிக்க யானை

✓ 'செந்நாய்' (Cuon alpinus) என்பது மத்திய, தெற்கு, கிழக்கு & தென்கிழக்கு ஆசியாவை பூர்வீகமாகக் கொண்ட ஒரு விலங்கு ஆகும். ஆசிய காட்டு நாய், இந்திய காட்டு நாய், விசில் நாய், சிவப்பு நாய் மற்றும் மலை ஓநாய் ஆகியவை இவ்வினங்களுக்கான பிறபெயர்களாகும். இது வனவுயிரிச் (பாதுகாப்பு) சட்டம், 1972'இன்கீழ் உள்ள அட்டவணை–II இனமாகும்.

✓ சமீபத்திய ஆய்வில், 114 முன்னுரிமைகொண்ட வட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அங்கு செந்நாய் அல்லது ஆசிய காட்டு நாயின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக வாழ்விடங்களை ஒருங்கிணைக்க முடியும். இவ்விலங்குகள் இந்தியா முழுவதும் காணப்படுகின்றன.

---

**5.** **புதிய நோய்க்கிருமிகளின் தோற்றுவாய் (SAGO) குறித்த அறிவியல் ஆலோசனைக் குழுவை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

அ) UNICEF

**ஆ) உலக நலவாழ்வு நிறுவனம் ☑**

இ) உணவு & உழவு அமைப்பு

ஈ) ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம்

✓ உலக நலவாழ்வு அமைப்பின் தலைமை இயக்குநர் புதிய நோய்க்கிருமிகளின் தோற்றுவாய் (SAGO) குறித்த WHO அறிவியல் ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளார். வளர்ந்துவரும் & மீண்டும் தோன்றுகின்ற நோய்க்கிருமிகள்பற்றிய தொழில்நுட்ப மற்றும் அறிவியல் பரிசீலனைகள் குறித்து SAGO, செயலகத்திற்கு ஆலோசனை வழங்கும். ஓர் இந்திய தொற்றுநோயியல் நிபுணரான Dr இராமன் கங்காகேட்கர், COVID–19 தொற்றுநோயின் தோற்றுவாயை தீர்மானிப்பதற்கான உலக நலவாழ்வு அமைப்பின் அறிவியல் ஆலோசனைக்குழுவின் ஒருபகுதியாக இருப்பார்.

---

**6.** **மலபார் தொடர் பயிற்சிகளானது இந்தியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையிலான இருதரப்பு கடற்படை பயிற்சியாக, கடந்த 1992ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது?**

**அ) அமெரிக்கா ☑**



ஆ) பிரான்ஸ்

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்

✓ மலபார் தொடர்பயிற்சிகள் என்பது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஆண்டுதோறும் நடத்தப்படும் இருதரப்பு கடற்படை பயிற்சியாக கடந்த 1992'இல் தொடங்கியது. ஜப்பானிய கடல்சார் சுய பாதுகாப்பு படை, இராயல் ஆஸ்திரேலியா கடற்படை மற்றும் அமெரிக்க கடற்படை உடன் பலதரப்பு கடல்சார் பயிற்சியான மலபாரின் இரண்டாம் பகுதியில் இந்திய கடற்படை பங்கேற்கும்.

✓ வங்காள விரிகுடாவில் 2021 அக்.12–15 வரை இப்பயிற்சி நடைபெறும். பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் 2021 ஆகஸ்ட்.26–29 வரை முதல் கட்ட பயிற்சி நடைபெற்றது.

---

**7.** **'Fiscal Monitor' அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

**இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம் ☑**

ஈ) உலக வர்த்தக அமைப்பு

✓ பன்னாட்டுச் செலவாணி நிதியத்தின் 'Fiscal Monitor' அறிக்கையின்படி, உலகளாவிய கடன் $226 டிரில்லியன் டாலர் என்ற புதிய உச்சத்திற்கு உயர்ந்துள்ளது. 2020ஆம் ஆண்டில் உலகளாவிய கடன் குவிப்பில், மேம்பட்ட பொருளாதாரங்களும் சீனாவும் 90 சதவீதத்திற்கும் மேலாக பங்களித்தன. இந்தியாவின் கடன், 2016ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 68.9 சதவீதத்திலிருந்தது.

✓ அது, 2020ஆம் ஆண்டில் 89.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. அது, 2021 ஆம் 90.6 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**8.** **2021'இல் வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் சமீப அறிவிப்பின்படி, கருக்கலைப்பிற்கான அதிகபட்ச கால வரம்பு என்ன?**

அ) 12 வாரங்கள்




ஆ) 18 வாரங்கள்

இ) 20 வாரங்கள்

**ஈ) 24 வாரங்கள் ☑**

✓ அரசாங்கத்தின் புதிய விதிகளின்படி, இந்தியாவில் கர்ப்பத்தை கலைப்பதற்கான அதிகபட்ச காலவரம்பு 24 வாரங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வரம்பு, முன்பு 20 வாரங்களாக இருந்தது.

✓ கர்ப்ப (திருத்தம்) விதிகள், 2021'இன்கீழ், பாலியல் வன்கொடுமை, பாலியல் வன்புணர்வு அல்லது தகாத உடலுறவு, 18 வயதெய்தா சிறார்கள் உள்ளிட்ட பெண்கள், கர்ப்ப காலத்தில் மணநிலை மாறும் பெண்கள் (கைம்பெண் & மணமுறிவு) மற்றும் உடல் குறைபாடுகள் உள்ளவர்கள் இந்தப் புதிய வரம்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**9.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற சேலா சுரங்கப்பாதை அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) உத்தரகாண்ட்

ஆ) சிக்கிம்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) அஸ்ஸாம்

- ✓ பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் சமீபத்தில் அருணாச்சல பிரதேசத்தில் உள்ள சேலா சுரங்கப்பாதையின் இறுதிக்கட்டத்தை மெய்நிகராக வெளிக்காட்டினார். சுரங்கப்பாதையின் கட்டுமானம் 2022 ஜூனுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ சேலா சுரங்கப்பாதை உலகின் மிகப்பெரிய இருவழிச்சுரங்கப்பாதையாக 13,000 அடிக்கும் மேலான உயரத்தில் வீற்றிருக்கும் என்று எதிர்பார்க்க–ப்படுகிறது. இதன் கட்டுமானம் எல்லைப்புறச்சாலைகள் அமைப்பால் (BRO) மேற்கொள்ளப்படுகிறது. இந்தச் சுரங்கப்பாதை சேலா கணவாய் வழியாக செல்கிறது. அருணாச்சல பிரதேச மாநிலம் வழியாக சீன எல்லைக்கான தூரத்தை 10 கிமீ வரை இது குறைக்கும்.

**10.** **'WHO தலைமை இயக்குநர்' விருதுபெற்ற ஹென்றிட்டா லாக்ஸ் சார்ந்த நாடு எது?**



**அ) அமெரிக்கா ☑**

ஆ) ஆஸ்திரேலியா

இ) இந்தியா

ஈ) ஜெர்மனி

- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் தலைவர், காலஞ்சென்ற ஹென்றிட்டா லாக்சிற்கு 'WHO'இன் தலைமை இயக்குநர் விருது வழங்கி கௌரவித்–தார். அமெரிக்கப் பெண்மணியான லாக்சிற்கு தெரியாமல், 1950'களில் அவரிடமிருந்து புற்றுநோய் செல்கள் பெறப்பட்டன. கொரோனா வைரஸ் பற்றிய ஆராய்ச்சி உட்பட பரந்த அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு அந்தச் செல்கள் ஓர் அடித்தளத்தை வழங்கின. ஹென்றிட்டா லாக்ஸின் முதல் 2 எழுத்துகளிலிருந்து பெறப்பட்ட 'HeLa' செல்கள், மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசிகளின் உருவாக்கத்திற்கு உதவின.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மகப்பேறு நிதியுதவி கிடைப்பதில் தாமதமா? – '104'ஐ தொடர்பு கொள்ளலாம்: பொது சுகாதார இயக்குநர் தகவல்**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால் '104' மருத்துவ சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்று பொது சுகாதாரத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட வீடியோ பதிவில் கூறியதாவது:

மத்திய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தில் தற்போது ₹18,000 வழங்கப்படுகிறது. 5 தவணைகளாக இந்த நிதி வழங்கப்படும்.

19 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இதை பெற தகுதியுடையவர்கள். இலங்கைத் தமிழர்கள் முழுமையாகவும், வெளி மாநிலத்தவர்கள் 2 தவணையில் பெற்றும்பயனடையலாம். ஆரோக்கியமான குழந்தை பிறப்புக்காக, ஆண்டுக்கு ₹950 கோடியை அரசு வழங்குகிறது. இதில் ₹10 இலட்சம் பேர் பயனடைகின்றனர். ஆனாலும், முறையாக நிதியுதவி கிடைக்கவில்லை என 100'க்கும் மேற்பட்ட புகார்கள் மாதந்தோறும் வருகின்றன. நிதியுதவி பெற முடியாதவர்கள், அந்தந்த ஆரம்ப சுகாதார நிலைய அதிகாரிகளிடம் இதுபற்றி தெரிவிக்கலாம்.

**2. மத்திய கிழக்கு, ஆசிய விவகாரங்கள்: 4 நாடுகள் பேச்சுவார்த்தை**

அமெரிக்கா, இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், மத்திய கிழக்கு, ஆசிய விவகாரங்கள் குறித்து வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

இஸ்ரேலில் அமைச்சர் ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். சுற்றுப்பயணத்தின் 2ஆவது நாளில் நான்கு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு காணொலி வாயிலாக நடைபெற்றது. அதில் அமைச்சர் ஜெய்சங்கர், அமெரிக்க அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், இஸ்ரேல் அமைச்சர் யாயிர் லபீட், ஐக்கிய அரபு அமீரக அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் ஜயீத் அல் நயன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தப் பேச்சுவார்த்தை குறித்து அமைச்சர் ஜெய்சங்கர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'பொருளாதார வளர்ச்சி, சர்வதேச விவகாரங்கள் ஆகியவற்றில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்குப் பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்பேச்சுவார்த்தை சார்ந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும் ஒப்புக்கொள்–ளப்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒத்துழைப்பு மேம்பாடு: பேச்சுவார்த்தை தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் வெளியிட்ட அறிக்கையில், 'மத்திய கிழக்கு, ஆசிய விவகாரங்களில் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக வெளியுறவு அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர்.

வர்த்தகம், பருவநிலைமாற்றத்தை எதிர்கொள்வது, எரிசக்தி ஒத்துழைப்பு, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தினர். அறிவியல்–தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் நான்கு தரப்பு நாடுகளின் மக்களுக்கு இடையேயான நல்லுறவை வளர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் விவா–தித்தனர். கரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் ஒத்துழைத்து செயல்படுவது தொடர்பாகவும் அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய விமானப்படை வீரர்களுடன் சந்திப்பு

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கிரீஸ், இஸ்ரேல் ஆகிய 8 நாடுகளின் விமானப் படைகள் பங்கேற்கும் 'புளூ ஃப்ளாக்' (நீலக்கொடி) கூட்டுப் பயிற்சி ஜெருசலேம் நகரில் நடைபெற்று வருகிறது. அதில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த 85 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். அவர்களை அமைச்சர் ஜெய்ங்கர் சந்தித்துப்பேசினார்.

'மிராஜ் 2000' போர் விமானங்கள் உள்ளிட்டவையும் இந்தியா சார்பில் கூட்டுப்பயிற்சியில் பங்கேற்றுள்ளன. இக்கூட்டுப் பயிற்சியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**3. உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீடு: இந்தியாவுக்கு 71ஆவது இடம்**

உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீட்டில் இந்தியா 71ஆவது இடம் பிடித்துள்ளது. மலிவாக உணவு கிடைக்கும் நாடுகளில் இந்தியாவை பாகிஸ்தான் பின்னுக்குத் தள்ளியுள்ளது.

பிரிட்டனின் தி எகனாமிஸ்ட் ஊடகக் குழுமத்தைச் சேர்ந்த அமைப்பு உணவின் தரம், பாதுகாப்பு, மலிவான விலை உள்ளிட்டவற்றின் அடிப்படையில் 113 நாடுகளில் உணவு பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டது. அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, உணவுப் பாதுகாப்பு குறியீட்டில் இந்தியா 71ஆம் இடத்தில் இடம்பெற்றுள்ளது. சீனா 34ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 75ஆவது இடத்தில் பாகிஸ்தான், 77ஆவது இடத்தில் இலங்கை, 79ஆவது இடத்தில் நேபாளம், 84ஆவது இடத்தில் வங்கதேசம் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

மலிவாக உணவு கிடைக்கும் நாடுகளின் பிரிவில், இந்தியாவை பாகிஸ்தான் பின்னுக்குத் தள்ளியுள்ளது. அந்தப் பிரிவில் பாகிஸ்தான் 52.6 புள்ளிகளையும் இந்தியா 50.2 புள்ளிகளையும் பெற்றுள்ளன.

எனினும் உணவு உற்பத்திக்காக இயற்கை வளங்களை பாதுகாப்பது, உணவு எளிதாகக் கிடைப்பது, அதன் தரம், பாதுகாப்பு ஆகியவற்றில் பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம், இலங்கை நாடுகளை இந்தியா விஞ்சியுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் பட்டினி என்பதே இல்லாத நிலை என்ற ஐநா'ன் இலக்கை எட்டுவதில் உள்ள அமைப்பு ரீதியிலான இடைவெளிகள், அந்த இலக்கை எட்டுவதற்கு துரிதப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தும் நோக்கில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான ஆய்வின்போது உலகளாவிய உணவுப் பாதுகாப்பு தொடர்ந்து 2ஆவது ஆண்டாகக் குறைந்துள்ளது தெரியவந்துள்ளது. ஐநா'இன் பட்டினி என்பதே இல்லாத நிலையை உருவாக்கும் இலக்கில் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக முன்னேற்றம் ஏற்பட்டு வந்த நிலையில், தற்போது பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

**4. கீழடியில் 8ஆம் கட்ட அகழாய்வு குறித்து இன்னும்முடிவு எடுக்கவில்லை: அமைச்சர் தங்கம் தென்னரசு**

கீழடியில் 8ஆம் கட்ட அகழாய்வு நடத்துவது குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை என தமிழக தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

அகழாய்வில் கண்டறியப்பட்ட உறைகிணற்றில் மீன் சின்னம்

கீழடியில் நடைபெற்ற 7ஆம் கட்ட அகழாய்வில் பல அடுக்குகள் கொண்ட கை வேலைப்பாடுகளால் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்ட சுடுமண் உறைகிணறு கண்டறியப்பட்டது. இந்த உறைகிணற்றில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது தற்போது தெரியவந்துள்ளது. அந்த உறை கிணற்றின் விளிம்பு பகுதியில் கழுத்துக்கு கீழ் வால் மட்டுமே தெரியும்படி அந்த மீன் சின்னம் காணப்படுகிறது. அமைச்சர் தங்கம் தென்னரசு தனது முகநூல் பக்கத்தில் மீன் சின்னம் பொறிக்கப்பட்ட சுடுமண் உறை கிணற்றின் நிழற்படத்தை பதிவிட்டு, கீழடியில் முதன்முறையாக மீன் சின்னம் பொறிக்கப்பட்ட உறைகிணறு கிடைத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

**1. பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுகளை கண்காணிப்பதற்காக, உயிரி தொழிலுட்ப துறையால் தொடங்கப்பட்டுள்ள கூட்டமைப்பின் பெயரென்ன?**

அ) பாரத் ஹெல்த்

**ஆ) ஒன் ஹெல்த் ☑**

இ) COVID வாரியர்

ஈ) ஹெல்த் ஹீரோஸ்

✓ தொற்றுநோய்களை எதிர்கொள்வதில் ஒரே மாதிரியான சுகாதார முயற்சிகளின் முக்கியத்துவத்தை COVID பெருந்தொற்று வலியுறுத்தியது.

✓ இவ்வவசரத்தேவையை கருத்தில்கொண்டு, COVID-19'க்கும் பின்பான நாட்டின் முதல் 'ஒன் ஹெல்த்' கூட்டமைப்பை இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறையால் தொடங்கப்பட்டுள்ளது. நாட்டில் முக்கிய பாக்டீரியா, வைரஸ் மற்றும் இதர தொற்றுகளை கண்காணித்து, அவற்றின் போக்கை புரிந்துகொண்டு, அவற்றை எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதே இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாகும்.

✓ ஹைதராபாத்தில் உள்ள உயிரி தொழில்நுட்பத் துறை – விலங்குகள் உயிரி தொழில்நுட்பத்திற்கான தேசிய நிறுவனம் தலைமையிலான இந்தக் கூட்டமைப்பில் 27 அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற தவாங் கந்தன் நம்க்யல் லாட்ஸே (தவாங் மடாலயம்) அமைந்துள்ள நாடு எது?**



**அ) இந்தியா ☑**

ஆ) நேபாளம்

இ) தாய்லாந்து

ஈ) தென் கொரியா

✓ திபெத்திய பௌத்தத்தின் இரண்டாவது பெரிய மடமான தவாங் கந்தன் நம்க்யல் லாட்சே (தவாங் மடாலயம்) ஆனது அருணாச்சல பிரதேசத்தின் தவாங் மாவட்டத்தில் அமைந்துள்ளது. துணைக் குடியரசுத்தலைவர் M வெங்கையா, சமீபத்தில் அருணாச்சல பிரதேச மாநிலத்திற்கு சென்றதற்கு சீனாவின் ஆட்சேபனையை இந்தியா கடுமையாக நிராகரித்தது.

✓ அருணாச்சல பிரதேசத்திற்கு இந்தியத்தலைவர்கள் வருகைதருவதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அது தெற்கு திபெத்தின் ஒருபகுதி ஆகும். தவாங், இந்தியாவின் வடகிழக்கு பிராந்தியத்திற்கு ஓர் உத்தி சார் நுழைவை வழங்குகிறது. திபெத்துக்கும் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கிற்கும் இடையிலான வழித்தடத்தில் இது ஒரு முக்கியப்புள்ளியாகும்.

---

**3. பின்வரும் எந்த ஆயுதப்படைக்கு, குடியரசுத்தலைவரின் தத்ரக்ஷக் பதக்கம் வழங்கப்படுகிறது?**



**அ) கடலோர காவல்படை ☑**

ஆ) எல்லைப் பாதுகாப்பு படை

இ) இந்திய கடற்படை

ஈ) மத்திய சேமக்காவல் படை

✓ இந்திய கடலோர காவல்படையின் வீரர்களுக்கு குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், குடியரசுத்தலைவரின் தத்ரக்ஷக் பதக்கம் மற்றும் தத்ராக்ஷக் பதக்கத்தை வழங்கினார். 1990 ஜனவரி 26 முதல் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் மற்றும் சுதந்திர நாளன்று இந்திய கடலோர காவல்படை வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

---

**4. "தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய பங்களிப்புக்கான லோகப்ரியா கோபிநாத் போர்டோலோய் விருது", எந்த மாநிலத்தால் வழங்கப்படுகிறது?**



அ) தமிழ்நாடு

ஆ) மகாராஷ்டிரா

இ) ஒடிஸா

**ஈ) அஸ்ஸாம் ☑**

✓ 'லோகப்ரியா கோபிநாத் போர்டோலோய் விருது' என்பது தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய பங்களிப்புக்காக அசாம் மாநில அரசால் வழங்கப்படும் மிகவுயரிய குடிமக்கள் விருது ஆகும்.

✓ விடுதலைப்போராளியான கோபிநாத் போர்டோலோய், சுதந்திரத்திற்குப் பிறகு அஸ்ஸாமின் முதல் முதலமைச்சராக இருந்தார். இந்த விருது ₹5 இலட்சம் ரொக்கப்பரிசு, சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த ஆண்டுக்கான விருதை துணைக்குடியரசுத்தலைவர் M வெங்கையா வழங்கினார்.

---

**5. அபி அகமது, எந்த நாட்டின் பிரதமராக பதவியேற்றார்?**



அ) இஸ்ரேல்

ஆ) ஈரான்

**இ) எத்தியோப்பியா ☑**

ஈ) வெனிசுலா

✓ அபி அகமது, மீண்டும் எத்தியோப்பியாவின் பிரதமராக பதவியேற்றார். டிக்ரேயின் வடக்கு பகுதியில் நிகழ்ந்து வரும் நீண்ட மோதல்கள் உட்பட நிறைய சவால்களை அவ்வரசாங்கம் எதிர்கொள்கிறது. அபி அகமதின் பிராஸ்பர்டி கட்சி, இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அண்டை நாடான எரித்ரியாவுடனான உறவை மீட்டெடுத்ததற்காக, 2019ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அபி அகமதுக்கு வழங்கப்பட்டது.

---

**6. 40ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியை நடத்தவுள்ள நகரம் எது?**




அ) மும்பை

**ஆ) புது தில்லி ☑**

இ) வாரணாசி

ஈ) அகமதாபாத்

✓ இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பானது (ITPO) நவம்பர் 14 முதல் 27 வரை புது தில்லி பிரகதி மைதானத்தில் 40ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியை நடத்தவுள்ளது. பொருளாதாரம், ஏற்றுமதி திறன், உட்கட்டமைப்பு விநியோகச் சங்கிலி, தேவை மற்றும் துடிப்பான மக்கள் தொகை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் 'ஆத்மநிர்பார் பாரத்' என்ற கருப்பொருளின்கீழ் இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

✓ இந்த நிகழ்வு "ஆசாதிகா அம்ருத் மகோத்சவின்" ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**7. உலக வாழ்விட நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) அக்டோபர் முதல் திங்கள் ☑**

ஆ) அக்டோபர் முதல் ஞாயிறு

இ) செப்டம்பர் கடைசி ஞாயிறு

ஈ) செப்டம்பர் கடைசி சனிக்கிழமை

✓ ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமை, ஐநா அவையால், "உலக வாழ்விட நாள்" என அனுசரிக்கப்படுகிறது.

✓ அனைவருக்கும் போதுமான தங்குமிடத்தை வலியுறுத்தி இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, அக்டோபர்.4 அன்று அனுசரிக்கப்பட்டது. "Accelerating urban action for a carbon-free world" என்பது இந்த ஆண்டு (2021) உலக வாழ்விட நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**8. 'அஜெயா வாரியர்' என்ற பாதுகாப்புப் பயிற்சி, இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடத்தப்படுகிறது?**



**அ) இங்கிலாந்து ☑**

ஆ) பிரான்ஸ்

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்

✓ இந்தியாவும் பிரிட்டனும் உத்தரகண்டின் சௌபாத்தியாவில் 2 வாரகால இராணுவப் பயிற்சியான 'அஜெயா வாரியரை' தொடங்கின. இது, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்திய இராணுவத்தின் கூற்றுப்படி, 'அஜெயா வாரியர்' பயிற்சியின் இப்பதிப்பானது, இயங்குதிறன் மற்றும் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்கிறது.

---

**9.** புவிசார் குறியீடு (GI) பெற்றுள்ள கருப்பூர் கலம்காரி ஓவியங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி மரச்சிற்ப வேலைப்பாடுகள் சார்ந்த மாநிலம் எது?

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஹரியானா




✓ தமிழ்நாட்டைச்சார்ந்த கருப்பூர் கலம்காரி ஓவியங்கள் & கள்ளக்குறிச்சி மரச்சிற்ப வேலைப்பாடுகட்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. குறிப்பிட்ட புவிசார் தோற்றங்கொண்ட தயாரிப்பு –களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. அது அந்தத் தயாரிப்புக்கு முக்கியத்துவத்தை சேர்க்கிறது. இது பொருட்களுக்கான புவிசார் குறியீ –டுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

---

**10.** மரணதண்டனைக்கு எதிரான உலக நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர்.8

**ஆ) அக்டோபர்.10 ☑**

இ) அக்டோபர்.12

ஈ) அக்டோபர்.14




✓ அக்.10 அன்று மரணதண்டனைக்கு எதிரான உலக நாள் அனுசரிக்கப்ப –டுகிறது. இந்த ஆண்டு (2021) உலகெங்கிலுமுள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஆரோக்கியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதில் இதன் கருப்பொருள் கவனஞ்செலுத்துகிறது. பன்னாட்டு மன்னிப்பு அவையின் 2020–மரணதண்டனை அறிக்கையின்படி, உலகின் 2/3 பங்கு நாடுகள், சட்டம் அல்லது நடைமுறையின்மூலம் மரணதண்டனையை ரத்துசெய்துள்ளன. 108க்கும் மேற்பட்ட நாடுகள் அனைத்து விதமான குற்றங்களுக்கும் மரணதண்டனையை முற்றிலும் இரத்துசெய்துள்ளன. இவ்வறிக்கையின்படி, குறைந்தது கடந்த 2020ஆம் ஆண்டில் மட்டும் 483 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முதல்கட்டமாக 6,429 கிராமப் பஞ்சாயத்துகளில் – பாரத்நெட் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்: அமைச்சர் முன்னிலையில் கையெழுத்தானது**

பாரத்நெட் திட்டத்தை முதல்கட்டமாக 6,429 கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

நாட்டிலுள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிவேக அலைக் கற்றைமூலம் இணைய சேவை வழங்க பாரத்நெட் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. தமிழகத்தில் 12,525 கிராம பஞ்சாயத்துகளுக்கு இணையச்சேவை வழங்க ₹1815.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

அதன்படி, தகவல் தொழில்நுட்பத்துறையின் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (பைபர்நெட் கழகம்) பாரத்நெட் திட்டத் –தைச் செயல்படுத்துவதற்காக A, B, C, D என்ற நான்கு தொகுப்புகளாக மாநிலத்தைப் பிரித்துள்ளது.

இந்நிலையில், C தொகுப்பில் உள்ள நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாமக்கல், கரூர், கோவை, திருப்பூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள 3,326 கிராம பஞ்சாயத்துகளும் D தொகுப்பில் கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள 3,103 கிராம பஞ்சாயத்துகளுக்கும் பாரத்நெட் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இதற்காக L&T, ஐடிஐ, பிஇசிஜஎல் ஆகிய நிறுவனங்களுடன் பைபர்நெட் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

---

**2. குஷி நகர் விமான நிலையத்தை தொடங்கி வைத்தார் பிரதமர்:**

உத்தரப் பிரதேச மாநிலத்தில் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்துவைத்து பேசியதாவது:

ஏர் இந்தியா – டாடா நிறுவனம் இடையிலான ஒப்பந்தம் இத்துறையில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவரும், விமானப் போக்குவரத்தில் இது முக்கிய மைல்கல்லாக அமையும். இந்த நடவடிக்கையானது விமான போக்குவரத்துத் துறைக்கு புதிய புத்துணர்வை அளிக்கும்.

இந்தப் புதிய விமான நிலையம் தொடங்கப்பட்டதன்மூலம் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், கடை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் பயனடைவர். இந்தப் பகுதியில் தொழில்வளம் பெருக இது உதவியாக இருக்கும். சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு இது வழிவகுக்கும். இதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அடுத்த 4 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் 200 விமான நிலையங்கள், ஹெலிகாப்டர் இறங்குதளங்கள் மற்றும் தண்ணீரில் ஹெலிகாப்டர் இறங்கும் வசதிகளை உருவாக்குவதே அரசின் இலக்கு.

குஷிநகர் பகுதிதான் மகான் கவுதம புத்தர் மகாபரிநிர்வாண நிலை (உயிர்நீத்தல்) எட்டிய இடமாகும். புத்தமதத்தைப் பின்பற்றுவோருக்கு இப்பகுதி மிகவும் முக்கியமான புனித தலமாகும். உலகெங்கும் உள்ள புத்த மதத்தினர் இறுதியில் இப்பகுதியை வந்து தரிசிக்க இந்த சர்வதேச விமான நிலையம் உறு துணையாக இருக்கும் என்றார்.

குஷிநகர் சர்வதேச விமான நிலையத்துக்கு முதலாவது விமானமாக லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் வந்ததாக இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர் நமல் ராஜபக்ஸ தெரிவித்தார். இந்த சர்வதேச விமான நிலையம் ₹260 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

---

**3. அருணாச்சல் எல்லையில் பீரங்கிகளைக் குவித்த இந்தியா**

சீனா உடனான அருணாச்சல் எல்லைப் பகுதியில் பீரங்கிகளை மத்திய அரசு குவித்துள்ளது. இந்தியா–சீனா இடையே நீண்டகாலமாக எல்லைப் பிரச்னை நிலவிவருகிறது. இருதரப்பினரிடையே அவ்வப்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தாலும் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகின்றது. இந்நிலையில் கடந்த வாரம் அருணாச்சலப் பிரதேசத்திற்கு அரசுமுறைப் பயணமாக துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா சென்றிருந்தார். இடாநகரில் உள்ள சட்டப்பேரவையிலும் அவர் உரையாற்றினார். இதற்கு சீனா கடுமையான எதிர்ப்பு தெரிவித்தது.

சீனாவின் இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த இந்திய வெளியுறவுத் துறை அந்நாட்டின் வெளியுறவுத் துறையின் கருத்தை நிராகரிப்பதாக கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில் அருணாச்சலப் பிரதேசத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப்பகுதியான தாவங் பகுதியில் இந்திய ராணுவம் பீரங்கிகளைக் குவித்துள்ளது. இதனால் இருதரப்பு எல்லைப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை சீனா–இந்தியா இடையே 13 கட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

---

**4. மெரீனாவில் மூழ்குவதைத் தடுக்க தனி பிரிவு தொடக்கம்**

சென்னை: சென்னை மெரீனா கடற்கரையில் மூழ்குதல் தடுப்புப் பிரிவு புதன்கிழமை தொடங்கப்பட்டது.

இது குறித்த விவரம்:

சென்னை மெரீனா கடற்கரையில் பொதுமக்களின் உயிரைப் பாதுகாக்க 'பல்வகை குழு அடங்கிய மூழ்குதல் தடுப்புப்பிரிவு' தொடங்கப்பட்டது.

மீட்புக்கு 3 திட்டங்கள்:

சம்பவத்துக்கு முன், சம்பவத்தின் போது, சம்பவத்துக்கு பின் என தடுப்புக் குழுவானது மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிலையிலும் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

'சம்பவத்துக்கு முன்' திட்டத்தில் கடலில் இறங்குவதற்கு தடை விதித்தல், கடற்கரையில் அறிவிப்புப் பலகைகள் வைத்தல், சமூக ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், உயிர்காக்கும் உபகரணங்களைத் தயார் நிலையில் வைத்திருத்தல், கடற்கரையில் ஒலிபெருக்கிமூலம் எச்சரிக்கை செய்தல் ஆகிய பணிகளில் இந்தப் பிரிவு ஈடுபடும்.

'சம்பவத்தின்போது' என்ற நிலையில், உடனடியாக மீட்புக் குழுவினர் தக்க இயந்திரங்கள், உபகரணங்களுடன் மீட்புப்பணியில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டவர்களை மீட்பர். 'சம்பவத்துக்கு பின்' என்ற நிலையில் மீட்புக்குழுவினரால் மீட்கப்பட்டவர்களுக்கு தயார்நிலையில் வைக்கப்பட் –டுள்ள மருத்துவக் குழுவினர் உடனடியாக முதலுதவி சிகிச்சையளித்து காப்பாற்றுவர். இந்தத் தடுப்புப் பிரிவில் காவல்துறை, கடலோரப் பாதுகாப்புக் குழுமம், தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர், மீனவர்கள்,

முதலுதவிக் குழுவினர் ஆகியோர் இடம்பெறுகிறார்கள். மீட்புப்பணிக்காக கட்டுமரம், உயிர்காக்கும் உடைகள், அதிவேக படகுகள், மிதவைப் படகுகள், கயிறுகள் போன்ற பல்வேறு இயந்திரங்கள், உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடல் அலைகளின் தன்மை ஆய்வு:

கடல் அலைகளின் தன்மை, அலைகளில் தீவிரம் ஏற்படும் நாள்கள், ஆபத்து நிறைந்த ஆழமான பகுதிகள் போன்றவற்றை பற்றி ஒரு விரிவான ஆராய்ச்சியை தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம், கடல்சார் பல்கலைக்கழகத்தின் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள்மூலம் மேற்கொண்டு அறிக்கை பெறப்படவுள்ளது. இந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில் காவல்துறை அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

---

**5. கரோனா தடுப்பூசிகளுக்கு பரஸ்பர அங்கீகாரம்: 11 நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம்**

கரோனா தடுப்பூசிகளுக்கு பரஸ்பர அங்கீகாரம் அளிக்கும் வகையில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட 11 நாடுகளுடன் இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம், தடுப்பூசியை முழுமையாக செலுத்திக்கொண்ட பயணிகள் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி இந்த நாடுகளுக்கு சென்றுவர முடியும்.

இந்தத் தகவலை தெரிவித்த மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம், அதன் அடிப்படையில் இந்தியா வரும் சர்வதேச பயணிகளுக்கான புதிய வழிகாட்டுதலையும் வெளியிட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து வழிகாட்டுதலுக்கும் மாற்றாக இந்தப் புதிய வழிகாட்டுதல் செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய வழிகாட்டுதலின்படி, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, நேபாளம், பெலாரஸ், லெபனான், ஆர்மீனியா, உக்ரைன், பெல்ஜியம், ஹங்கேரி, செர்பியா ஆகிய 11 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் அந்தந்த நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது உலக சுகாதார அமைப்பு சார்பில் அங்கீகரிக்க–ப்பட்ட கரோனா தடுப்பூசிகளை முழுமையாக (அனைத்து தவணைக–ளையும்) செலுத்தியிருக்கும் நிலையில், எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி விமான நிலையத்திலிருந்து செல்ல முடியும். அதாவது, கரோனா பரிசோதனைக்கு உட்படவோ அல்லது வீட்டு தனிமைப்படுத்தலில் இருக்கவோ தேவையில்லை.

அதே நேரம், கரோனா பாதிப்பு இல்லை என்பதற்கான விரைவுப் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், இந்தியா வந்திறங்கிய நாளிலிருந்து 14 நாள்களுக்கு தாங்களாகவே உடல் நிலையை சுய கண்காணிப்பு செய்துகொள்ள வேண்டும்.

அதுபோல, தடுப்பூசி செலுத்தாத அல்லது முழு தவணைகளையும் செலுத்திக் கொள்ளாத சர்வதேச பயணிகள் விமான நிலையத்தில் கரோனா பரிசோதனைக்கு இரத்த மாதிரிகளை அளிப்பது உள்ளிட்ட கட்டுப்பாடுகளுக்கு உள்படுத்தப்பட்ட பின்னரே விமான நிலையத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவர். மேலும், அவர்கள் முதல் 7 நாள்கள் கட்டாய வீட்டுத் தனிப்படுத்தலில் இருக்க வேண்டும். பின்னர், 8ஆம் நாளில் அவர்களுக்கு மறுபரிசோதனை மேற்கொள்ளப்ப–டும். அப்போது, அவர்களுக்கு கரோனா பாதிப்பு இல்லை என்று முடிவு வந்தால், அடுத்த 7 நாள்களுக்கு அவர்களின் உடல்நிலையை சுய கண்காணிப்பு செய்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமின்றி, தென்னாப்பிரிக்கா, பிரேஸில், வங்கதேசம், போட்ஸ் வானா, சீனா, மோரீஷஸ், நியூசிலாந்து, ஜிம்பாப்வே உள்ளிட்ட கரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளிலிருந்து வரும் பயணிகள் கூடுதல் கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வேண்டியது புதிய வழிகாட்டுதலில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

---

**6. இந்தியா – பிரேஸிலில் உயர் வெப்பத்தால் அதிக உயிரிழப்புகள்: லான்செட் அறிக்கை**

உயர் வெப்பநிலை தாக்கத்தால் ஏற்படும் உயிரிழப்புகள் உலக அளவில் இந்தியா, பிரேஸில் நாடுகளில் மிக அதிக அளவில் பதிவாகியிருப்பது லான்செட் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

உலக வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வருவது தொடர்பான 'சுகாதாரமான எதிர்காலத்துக்கான சிவப்புக் குறியீடு' என்ற தலைப்பில் 2021ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கையை லான்செட் ஆய்வு நிறுவனம் அண்மையில் வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது:

உயர் வெப்பத்தால் ஏற்கெனவே பல்வேறு உடல் பாதிப்புகள் ஏற்பட்டு வருவதோடு, உணவு மற்றும் தண்ணீர் பாதுகாப்பு இல்லாத நிலையை சமூகம் சந்திக்கும் நிலை உருவாகியுள்ளது.

மேலும், இந்த ஆய்வில் உயர் வெப்ப தாக்கம் காரணமாக 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் உயிரிழப்பு விகிதம் அதிகரித்திருப்பதும் தெரியவந்துள்ளது. வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக கடந்த 2019ஆம் ஆண்டு முன்னெப்போதும் இல்லாத அளவில் 3,45,000 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இது கடந்த 2000–05ஆம் ஆண்டு சராசரியைவிட 80.6 சதவீதம் கூடுதலாகும். மேலும், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் வெப்பம்சார்ந்த உயிரிழப்புகள் உலகிலேயே இந்தியா மற்றும் பிரேஸிலில் மிக அதிகமாக பதிவாகியுள்ளது.

1986–2005 ஆண்டுகளில் பதிவான சராசரியைவிட கடந்த 2020ஆம் ஆண்டு அதிக நாள்கள் வெப்ப அலை தாக்கம் பதிவானது. அதன் காரணமாக கடந்த ஆண்டில் 65 வயதுக்கு மேற்பட்ட 31 லட்சத்துக்கும் அதிகமான முதியவர்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். குறிப்பாக, சீனா, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், இந்தோனேசியா நாடுகளைச் சேர்ந்த மூத்த குடிமக்கள் மிக அதிக அளவில் பாதிக்கப்பட்டனர். மேலும், உயர் வெப்பநிலை நேரடி உடல் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு மக்களின் பணித்திறனையும் பாதிக்கும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டிலிருந்து வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வருவதன் காரணமாக, கடந்த 2020ஆம் ஆண்டு உலகம் முழுவதும் 29,500 கோடி பணி நேரம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது ஒரு தொழிலாளி–க்கு 88 மணி நேர பணித்திறன் குறைந்ததற்கு சமமானதாகும். இதில், குறிப்பாக பாகிஸ்தான், வங்கதேசம், இந்தியா ஆகிய நாடுகள் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளன. உலக சராசரி பாதிப்பில் 3 மடங்கு பாதிப்பை இந்த மூன்று நாடுகளும் ஒட்டுமொத்தமாகச் சந்தித்துள்ளன.

அதுபோல, உயர் வெப்பநிலை காரணமாக உலக அளவில் 19 சதவீத நிலப்பரப்பு மிகக்கடுமையான வறட்சியை சந்தித்துள்ளது என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**1. நடப்பாண்டில் (2021) வரும் கிராமப்புற பெண்களுக்கான உலக நாளின் கருப்பொருள் என்ன?**



**அ) Rural women cultivating good food for all ☑**

ஆ) Gender Equality

இ) Empowering Rural Women

ஈ) Good Village; Good Country

✓ ஆண்டுதோறும் அக்.15 அன்று 'கிராமப்புற பெண்களுக்கான உலக நாள்' கொண்டாடப்படுகிறது. இந்த நாள் பாலின சமத்துவம் மற்றும் கிராமப் புறங்களில் பெண்களை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்துகிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள், "Rural women cultivating good food for all" என்பதாகும். ஐநா பொது அவை, கடந்த 2007 டிச.18 அன்று இந்நாளை நிறுவியது. ஐநா சபையின் அறிக்கையின்படி, வளரும் நாடுகளில் உள்ள மொத்த வேளாண் தொழிலாளர் படையில் 40 சதவீதம், பெண்களையும் உள்ளடக்கியது.

---

**2. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற LORROS என்பது பின்வரும் எதனுடன் தொடர்புடைய ஓர் அமைப்பாகும்?**



அ) வேளாண்மை

**ஆ) கண்காணிப்பு ☑**

இ) செயற்கை நுண்ணறிவு

ஈ) நிதி

✓ Long Range Reconnaissance and Observation System என்பதன் சுருக்கந்தான் LORROS. இது நீண்ட தொலைவு கண்காணிப்பு அமைப்பைக் குறிக்கிறது; இது, நீண்ட தூர பகல்நேர மற்றும் இரவு நேர கண்காணிப்பை வழங்குவதற்கான உணரி அமைப்பாகும். இது இந்திய இராணுவம் போன்ற தேசிய பாதுகாப்புப் படையினரால் ஊடுருவலை எதிர்கொள்ள பயன்படுத்தப்படுகிறது.

---

**3. G சத்தியன், ஹர்மீத் தேசாய் மற்றும் A சரத் கமல் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



**அ) டேபிள் டென்னிஸ் ☑**

ஆ) டென்னிஸ்

இ) துப்பாக்கிச்சுடுதல்

ஈ) குத்துச்சண்டை

✓ கத்தாரின் தோகாவில் நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ஆடவர் டேபிள் டென்னிஸ் அணி (சத்தியன், ஹர்மீத் தேசாய் மற்றும் சரத் கமல்) ஆகியோர் வெண்கலம் வென்றுள்ளது. அந்த அணி அரையிறுதியில் 0–3 புள்ளிகளுடன் தென்கொரியாவிடம் தோற்றது. இதில், இந்திய மகளிர் அணி 5ஆவது இடத்தைப் பிடித்தது.

---

**4. பன்னாட்டு அகிம்சை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ) அக்டோபர் 1

**ஆ) அக்டோபர் 2 ☑**

இ) அக்டோபர் 4

ஈ) அக்டோபர் 5

✓ இந்தியாவின் 'தேசத்தந்தை' மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாள், ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர்.2 அன்று பன்னாட்டு அகிம்சை நாளாக அனுசரிக்கப்படுகிறது. கல்வி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வுமூலம் அகிம்சையை பரப்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. 2004ஆம் ஆண்டில், நோபல் பரிசு பெற்ற ஈரானியர் ஷிரின் எபாடி, இந்த நினைவேந்தல் யோசனையை முன்மொழிந்தார்.

---

**5. காஷ்மீர் வால்நட்டுகளின் முதல் சரக்கைப் பெறவுள்ள மாநிலம் எது?**



அ) மகாராஷ்டிரா

**ஆ) கர்நாடகா ☑**

இ) கேரளா

ஈ) பஞ்சாப்

✓ இறக்குமதியை குறைக்கும் முயற்சியாக, வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு (ODOP) திட்டத்தின்கீழ் காஷ்மீரின் புத்காம் மாவட்டத்திலிருந்து பெங்களூருக்கு 2,000 கிலோ வால்நட் அனுப்பிவைக்கப்பட்டது.

✓ இந்தியாவில் வால்நட் உற்பத்தியில் 90% காஷ்மீரில் நடைபெறுகிறது. ODOP திட்டத்தின்கீழ் காஷ்மீரில் உற்பத்தியாகும் வால்நட்டை பிற இடங்களுக்கு அனுப்பும் முயற்சியில் மத்திய வர்த்தக & தொழில்துறை அமைச்சகம் முயற்சி மேற்கொண்டது. இதையடுத்து காஷ்மீரில் புத்காம் மாவட்டத்திலிருந்து, 2000 கி வால்நட் பெங்களூருக்கு அனுப்பப்பட்டது. இது முதல் தரமானது, சுவை மற்றும் ஊட்டச்சத்துமிக்கது.

---

**6. இந்தியாவின் முதல் இ–மீன் சந்தை செயலியான 'பிஷ்வாலே' தொடங்கப்பட்டுள்ள மாநிலம் / UT எது?**

அ) மேற்கு வங்கம்

ஆ) ஆந்திர பிரதேசம்

**இ) அஸ்ஸாம் ☑**

ஈ) கேரளா

✓ அஸ்ஸாம் மாநில மீன்வள அமைச்சகம் சமீபத்தில் ஒரு செயலியை அறிமுகப்படுத்தியது. அது இந்தியாவின் முதல் மின்னணு–மீன் சந்தை செயலியான 'பிஷ்வாலே' ஆகும். வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் இருவரும் ஆர்டர் கொடுக்க மற்றும் மீன், மீன் வளர்ப்பு உபகரணங்கள் மற்றும் மருந்து, மீன் தீவனம் மற்றும் மீன் குஞ்சுகளை ஆன்லைனில் விற்க இச்செயலி உதவும். நன்னீர் மற்றும் உவர்நீர் உறைந்த மீன், உலர்மீன் மற்றும் பதப்படுத்தப்பட்ட மீன்பொருட்கள்போன்ற பொருட்கள் விற்கப்படும். இச்செயலியை மாநில மீன்வளத்துறையுடன் இணைந்து, அக்வா புளூ குளோபல் மீன் வளர்ப்பு தீர்வுகள் உருவாக்கியுள்ளது.

---

**7.இந்தியாவில் 'மாதாந்திர பொருளாதார' ஆய்வினை வெளியிடுகிற நிறுவனம் எது?**




அ) இந்திய ரிசர்வ் வங்கி

**ஆ) நிதி அமைச்சகம் ☑**

இ) ASSOCHAM

ஈ) FICCI

✓ நிதி அமைச்சகத்தின் 'மாதாந்திர பொருளாதார மதிப்பாய்வின்படி', பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் விரைவான மீட்புக்கான பாதையில் உள்ளன. செப் மாதத்தில், பொருளாதார நடவடிக்கைகள் மேலும் வேகமடைந்து வருவதாகவும் நிதி அமைச்சர் கூறினார். 2021–22 நிதியாண்டில் தொடர்ச்சியாக 6ஆம் மாதமாக இந்தியப்பொருட்களின் ஏற்றுமதி 30 பில்லியன் டாலர்களைத் தாண்டியது. 2021 செப்டம்பர்.10 உடன் முடிவடையும் 15 வாரங்களில் வங்கிக்கடனின் வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாக இருந்தது; இது, முந்தைய ஆண்டின் இதே காலத்தில் 5.3 சதவீதமாக இருந்தது.

---

**8. உலகின் முதல் தானியங்கி, ஓட்டுநரில்லா இரயிலை அறிமுகம் செய்துள்ள நாடு எது?**




**அ) ஜெர்மனி ☑**

ஆ) ரஷ்யா

இ) நெதர்லாந்து

ஈ) சுவீடன்

✓ ஜெர்மன் இரயில் ஆபரேட்டர் டாய்ச் பான் மற்றும் சீமென்ஸ் குழுமம் இணைந்து உலகின் முதல் தானியங்கி, ஓட்டுநரில்லா இரயிலை ஹாம்பர்க் நகரத்தில் அறிமுகப்படுத்தினர். இந்தத் திட்டம் 60 மில்லியன் யூரோ (70 மில்லியன் டாலர்) மதிப்புடைய ஹாம்பர்க்கின் விரைவான

✓ நகர்ப்புற இரயிலமைப்பு நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒருபகுதியாகும். இந்தத் திட்டம் 30% அதிக பயணிகளை அந்நாட்டுக்கு வரவழைக்கும். இதன்மூலம், 30 சதவீதத்திற்கும் அதிகமான ஆற்றலை சேமிக்க முடியும்.

---

**9. IMF'இன் சமீபத்திய உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்-கையின்படி, 2021-22'க்கான இந்தியாவின் வளர்ச்சிக் கணிப்பு என்ன?**

அ) 7.5 %

**ஆ) 9.5 % ☑**

இ) 10.0 %

ஈ) 12.0 %

✓ பன்னாட்டுச் செலவாணி நிதியம் தனது சமீபத்திய உலகப் பொருளாதார கண்ணோட்ட அறிக்கையில், 2021-22ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சிக் கணிப்பை 9.5%ஆக வைத்துள்ளது. மேலும், இந்தியாவின் பொருளாதாரம் 2022-23 நிதியாண்டில் 8.5% வளர்ச்சியடையும் என்று கணித்துள்ளது. உலகளாவிய வளர்ச்சித் திட்டத்தை 6%'லிருந்து 5.9% ஆக IMF குறைத்துள்ளது. முன்னேறிய பொருளாதாரங்களில் விநியோக இடையூறுகள் மற்றும் வளரும் நாடுகளில் தொற்றுநோய் தாக்கம் மோசமடைவதே இதற்கான காரணங்களாக கூறப்பட்டுள்ளன.

**10. "U Fill" என்னும் தொழில்நுட்ப தீர்வை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?**

அ) இந்தியன் ஆயில்

ஆ) NTPC

**இ) BPCL ☑**

ஈ) டாடா பவர்




✓ பாரத் பெட்ரோலிய நிறுவனமானது (BPCL) எரிபொருள் விற்பனை நிலையங்களில் தானியங்கி எரிபொருள் தொழில்நுட்பமான 'U Fill'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தொழில்நுட்பம், வாகனத்தில் எரிபொருளை நிரப்பும்போது மனிதத்தலையீட்டை அகற்றி வாடிக்கையாளர் அனுபவத்-தை மேம்படுத்தும் எனக்கூறப்படுகிறது. இந்நிறுவனம் 65 நகரங்களில் இத்தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ராணுவ தளவாட ஏற்றுமதியில் 25 முன்னணி நாடுகள் பட்டியலில் இந்தியா: அமைச்சர் ராஜ்நாத் சிங் தகவல்**

ராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி செய்யும் 25 முன்னணி நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இடம்பெற்றுள்ளதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி மையம் 2020-ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் இவ்விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார். இந்த மையத்தின் பட்டியலில் இந்தியா முதல் முறையாக இடம்பெற்றுள்ளது மிகவும் மகிழ்ச்சியான விஷயம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ராணுவ தளவாட ஏற்றுமதி என்பது நமது பாதுகாப்பு திறன்அதிகரித்துள்ளது மற்றும் சர்வதேச தரத்துக்கு இணையான பொருட்களை தயாரிக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளது என்பதைக் காட்டுவதாகும். ராணுவ தளவாட ஏற்றுமதியை ஊக்குவிக்க பல நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

விமானப்படை பாதுகாப்பு தளவாட ஏற்றுமதிமூலம் ₹35 ஆயிரம் கோடி ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கு 2024-25-க்குள் எட்டப்படும் என்றும் அமைச்சர் ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார். வளர்ந்த நாடுகள் மட்டுமே ராணுவதளவாட ஏற்றுமதியில் முன்னணியில் இருந்த நிலையில், இந்தியாவும் அதில் சேர்ந்துள்ளது.

**2. கரோனா தடுப்பூசி போடும் பணி தொடங்கி 9 மாதத்தில் – 100 கோடி டோஸ் செலுத்தி இந்தியா சாதனை: பிரதமர் மோடிக்கு உலக சுகாதார நிறுவனம் வாழ்த்து**

திட்டம் தொடங்கப்பட்ட 9 மாதங்களில் 100 கோடிக்கும் மேற்பட்ட கரோனா தடுப்பூசி டோஸ்களை செலுத்தி இந்தியா சாதனை படைத்துள்ளது. இதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு உலக சுகாதார நிறுவனம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கரோனா தடுப்பூசி போடும் பணி கடந்த ஜனவரி 16-ம் தேதி தொடங்கியது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கோவிஷீல்டு தடுப்பூசியும், பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவேக்சின் தடுப்பூசியும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டன. முதல்கட்டமாக, சுகாதாரப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசிகள் செலுத்தப்-பட்டன. பின்னர், முன்களப் பணியாளர்களுக்கும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, கடந்த மே 1ஆம் தேதி முதல் 18 வயதை கடந்த அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொடக்கத்தில், தடுப்பூசி தொடர்பான அச்சம் காரணமாக, அதை செலுத்திக் கொள்வோரின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்தது.

இதையடுத்து, தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களை மத்திய, மாநில அரசுகள் தீவிரமாக முன்னெடுத்தன. இதன் பயனாக, கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வோரின் எண்ணிக்கை கணிசமாக உயரத் தொடங்கியது. நாட்டில் முதல் 10 கோடி தடுப்பூசி டோஸ்களை செலுத்த 85 நாட்கள் தேவைப்பட்டது. ஆனால், அடுத்த 10 கோடி டோஸ் களை 45 நாட்களிலேயே இந்தியாவால் செலுத்த முடிந்தது. இவ்வாறு அடுத் தடுத்த 10 கோடி தடுப்பூசி டோஸ் இலக்குகளை மிகக் குறுகிய நாட்களிலேயே மத்திய, மாநில அரசுகள் அடைந்தன.

அதன்படி, கடந்த ஆகஸ்ட் 6-ம் தேதி 50 கோடி டோஸ்களை செலுத்தி மிகப்பெரிய மைல்கல்லை இந்தியா தொட்டது. டிசம்பர் இறுதிக்குள் 100 கோடி டோஸ்கள் என்ற இலக்கினை மத் திய அரசு நிர்ணயித்தது. நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரந்தோறும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன. அவ்வப்போது நாடு தழுவிய அளவில் சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன.

இந்நிலையில், நேற்று (அக்.21) 100 கோடி தடுப்பூசி டோஸ்களை கடந்து மிகப்பெரிய சாதனையை இந்தியா படைத்திருக்கிறது. நிர்ணயிக் கப்பட்ட இலக்கை 2 மாதங்களுக்கு முன்பாகவே இந்தியா எட்டியிருப்பது உலக நாடுகள் அனைத்தையும் ஆச் சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அமெ ரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் போன்ற தொழில்நுட்பத்தில் அசுர வளர்ச்சி அடைந்த நாடுகள்கூட, தங்கள் மக்களுக்கு இவ்வளவு வேகமாக தடுப்பூசிகளை செலுத்த முடியவில்லை என கூறப்படுகிறது.

இதனிடையே, நாட்டிலேயே அதிக அளவில் கரோனா தடுப்பூசி செலுத்திய மாநிலமாக உத்தர பிரதேசம் திகழ்கிறது. இதற்கு அடுத்தடுத்த இடங்களில் மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், குஜராத், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

**3. கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்கின்றன**

கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான அவசரச் சட்டத்தை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. இதன்மூலம், தமிழகத்தில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 20-ஆக உயர்கிறது.

தமிழகத்தில் மொத்தம் 15 மாநகராட்சிகள் உள்ளன. கும்பகோணத்தை மாநகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு பரிந்துரைகள் ஏற்கப்பட்டு அதற்கான உத்தரவு அரசால் அண்மையில் பிறப்பிக்கப்பட்டது. இதனால் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 16-ஆக உயர்ந்தது.

4 நகராட்சிகள்: தற்போது நகராட்சிகளாக உள்ள கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகியவற்றையும் மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்துவதற்கான பணிகளை மாநில அரசு தொடங்கியது. இதற்கான பரிந்துரைகள் நகராட்சி தனி அதிகாரிகள் மூலமாக நகராட்சி நிர்வாகத் துறைக்கு வரப்பெற்றது. இந்தப் பரிந்துரைகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்தப் பரிந்துரைகளை ஏற்று கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகிய நான்கு நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரமுயர்த்துவதற்கான அவசர சட்டத்தை, தமிழக சட்டத் துறை செயலாளர் (சட்டம்) சி கோபி ரவிகுமார், பிறப்பித்தார். இதையடுத்து, நான்கு நகராட்சிகளும் மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான உத்தரவு அரசிதழில் வெளியிடப்படும். இந்த உத்தரவு அரசிதழில் வெளியிடப்பட்டவுடன் அது நடைமுறைக்கு வரும்.

சட்டம் இயற்றப்படும்: சட்டப்பேரவை கூட்டத்தொடர் முடித்து வைக்கப்பட்-டதால், அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பேரவைக் கூட்டத் தொடரில் இதற்கான சட்ட மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிறைவே-ற்றப்படும். தமிழகத்தில் கும்பகோணம் மாநராட்சி உத்தரவுடன் சேர்த்து, 16 மாநகராட்சிகளும், 121 நகராட்சிகளும், 528 பேரூராட்சிகளும் என மொத்தம் 664 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன.

இப்போது நான்கு நகராட்சிகள் தரம் உயர்த்தப்பட்டதால், தமிழகத்தில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 20ஆக உயர்ந்துள்ளது.

சென்னை, கோவை, திண்டுக்கல், ஈரோடு, நாகர்கோவில், மதுரை, சேலம், தஞ்சாவூர், ஆவடி, தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி, திருப்பூர், வேலூர், ஒசூர் ஆகிய மாநகராட்சிகள் உள்ளன. அவற்றுடன் கும்பகோ –ணம், கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகிய 5 நகராட்சிகளையும் மாநகராட்சிகளாக தரம் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

---

**4. சுற்றுலா வளர்ச்சிக்கென தனித்த கொள்கை: இரண்டு இடங்களில் ஹெலிகாப்டர் சுற்றுலா: தமிழக அரசு அறிவிப்பு**

தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென தனித்த கொள்கை வெளியிடப்படு –ம் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. மேலும், ஹெலிகாப்டர் சுற்றுலா –வை ஏற்படுத்துவதற்கான நிலங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து, சுற்றுலாத்துறை வெளியிட்ட செய்தி:

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தங்கும் விடுதிகள் உள்ளன. இந்த விடுதிகள் முன்னணி இணையதள பயண நிறுவனங்களில் இடம்பெறச் செய்யப்பட்டன. இதன்மூலம் கடந்த மாதத்தில் மட்டும் 137 முன்பதிவுகள் பெறப்பட்டன. கன்னியாகுமரியில் அமைந்துள்ள திருவள் –ளுவர் சிலையை சுற்றுலாப் பயணிகள் இரவிலும் கண்டுகளிக்கும் விதமாக லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் செய்வதற்கு நடவ –டிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பிச்சாவரம் படகு குழாம் பகுதியில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஹெலிகாப்டர் சுற்றுலா: முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்கும் விதமாக கொடைக்கானல், ராமேசுவரம் ஆகிய இடங்களில் ஹெலிகாப்ட –ர் சுற்றுலா தொடங்கப்பட உள்ளன. இதற்காக ஹெலிகாப்டர் இறங்கு தளம் அமைக்க ராமேசுவரத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கொடைக்கானலில் ஆய்வுப் பணிகள் நடைபெறவுள்ளன. அணைக்கட்டு பகுதிகளில் படகு சவாரி, உணவகம் போன்றவற்றை ஏற்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு வரும் பயணிகளை ஈர்க்க பார்வையாளர் மாடம் உள்ளிட்ட பிற வசதிகளை ஏற்படுத்த பெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலாத் துறையில் அந்நிய செலாவணியை ஈட்டுதல் உள்பட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது, பிரபலம் அடையாத தலங்களை மேம்படுத்துவது ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சுற்றுலாத் துறையின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. உள்நாட்டில் உருவாக்கப்பட்ட முதல் ராக்கெட்டை விண்ணில் ஏவியது, தென்கொரியா**

தென் கொரியாவில் முதன்முதலாக உள்நாட்டில் நூரி என்ற ராக்கெட்டை அங்குள்ள கொரியா விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் விஞ்ஞானிகளும், என்ஜினீயர்களும் உருவாக்கினர். இந்த ராக்கெட் 47 மீட்டர் (154 அடி) நீளம் கொண்டது. இந்த ராக்கெட் 1.6 பில்லியன் டாலர் மதிப்பில் (சுமார் ₹12 ஆயிரம் கோடி) உருவாக்கப்பட்டடது. இந்த ராக்கெட், சியோலில் இருந்து 310 மைல் தொலைவில் உள்ள கோஹுங் என்ற இடத்தில் உள்ள நாரோ விண்வெளி மையத்தில் இருந்து நேற்று விண்ணில் செலுத்தப்பட்டது.

1990–களின் முற்பகுதியில் இருந்து தனது செயற்கைக்கோள்களை ஏவுவதற்கு தென்கொரியா பிற நாடுகளை நம்பி வந்தது.

10ஆவது நாடு

இந்தநிலையில் இப்போதுதான் தனது சொந்த தொழில்நுட்பத்தில் விண்வெளிக்கு செயற்கைக்கோளை அனுப்பும் 10ஆவது நாடாக மாறுவதற்கு தென் கொரியா முயற்சிக்கிறது. அடுத்த ஆண்டு மே மாதம் மற்றொரு ராக்கெட்டையும் விண்ணில் ஏவி சோதிக்க தென்கொரியா முடிவு செய்துள்ளது. தென்கொரியா கடைசியாக 2013ஆம் ஆண்டு ஒரு ராக்கெட்டை விண்ணில் செலுத்தியது. ஆனால் இது ரஷிய தொழில் நுட்பத்தில் உருவானது ஆகும்.

---

**1. சமீபத்தில் கொம்பாசு என்ற வெப்பமண்டல புயலால் பாதிக்கப்பட்ட நாடு எது?**



**அ) பிலிப்பைன்ஸ் ☑**

ஆ) அமெரிக்கா

இ) இந்தோனேசியா

ஈ) ஜெர்மனி

✓ 'கொம்பாசு' என்ற வெப்பமண்டல புயல் பிலிப்பைன்ஸை தாக்கியதில் குறைந்தது 19 பேர் பலியாகினர். இப்புயல் ஆசிய-பசிபிக் தீவுகளின் வட முனையைக்கடந்தபோது நிலச்சரிவுகள் மற்றும் திடீர் வெள்ளத்தை ஏற்படுத்தியது. 'கொம்பாசு', சீனத் தீவான ஹைனான் மாகாணத்தில் நிலச்சரிவை ஏற்படுத்திய பின் வெப்பமண்டலப்புயலாக மாறியது. இது ஹாங்காங் மற்றும் வியட்நாமையும் கடந்து சேதங்களை ஏற்படுத்தியது.

---

**2. விண்வெளிக்குச் சென்றவர்களுள் மிகவும் வயதானவரான நடிகர் வில்லியம் ஷாட்னர், எந்த முகமையின் ஏவுகலத்தில் பயணம் செய்தார்?**



அ) விர்ஜின் கேலக்டிக்

**ஆ) புளூ ஆர்ஜின் ☑**

இ) ஸ்பேஸ் எக்ஸ்

ஈ) யுனைடெட் லாஞ்கூட்டணி

✓ நடிகர் வில்லியம் ஷாட்னர், புளூ ஆர்ஜின் ஏவுகலத்தில் துணை-சுற்றுப் பாதைக்கான பயணத்தில் பறந்து டெக்சாஸ் பாலைவனத்தில் தரை இறங்கினார். இதன்மூலம் விண்வெளிக்குச் சென்றவர்களுள் மிகவும் வயதான நபராக (90 வயது) ஆனார் நடிகர் வில்லியம் ஷாட்னர்.

✓ முழுவதும் தானியங்கு தன்மைகொண்ட நியூ ஷெப்பர்ட் விண்கலத்தில் பயணித்த நான்கு பயணிகளுள் ஷாட்னரும் ஒருவர். அவர்கள், பூமியில் இருந்து சுமார் 100 கிமீ உயரத்தில் உள்ள கர்மன் கோடு எனப்படும் பன்னாட்டளவில் அங்கீகரிக்கப்பட்ட விண்வெளி எல்லைவரை பயணம் செய்தனர்.

---

**3. Dr APJ அப்துல் கலாம் பிரேரனா மையமானது பின்வரும் எந்த நகரத்தில் அமைந்துள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தில் திறக்கப்பட்டது?**



அ) கொச்சி

**ஆ) விசாகப்பட்டினம் ☑**

இ) சென்னை

ஈ) புவனேஷ்வர்

✓ முன்னாள் குடியரசுத்தலைவர் 'பாரத இரத்னா' Dr APJ அப்துல் கலாமின் 90ஆவது பிறந்தநாளை முன்னிட்டும், நாட்டின் 75ஆவது ஆண்டு விடுதலையைக் கொண்டாடும் விடுதலையின் அம்ரித் மகோத்சவத்தை குறிக்கும் விதமாகவும், விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தில் அக்டோபர் 15 அன்று 'டாக்டர் ஏபிஜே அப்துல்கலாம் பிரேரனா மையம்' திறக்கப்பட்டது.

✓ கடற்படை அறிவியல்மற்றும் தொழினுட்ப ஆய்வகத்தின் தயாரிப்புகளான வருணாஸ்திரா, டோர்பேடோ அட்வான்ஸ்ட் லைட் மற்றும் மாரீச் டெகாய் ஆகியவை வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.

---

**4. "Our Future is at Hand – Let's Move Forward Together" என்பது அக்.15 அன்று அனுசரிக்கப்பட்ட எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருள் ஆகும்?**




**அ) உலக கை கழுவும் நாள் ☑**

ஆ) உலக விலங்குவழி நோய்கள் நாள்

இ) உலக ஊட்டச்சத்துக் குறைபாடு நாள்

ஈ) உலக சுகாதார நாள்

✓ சுகாதாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவத -ற்காக, 2021ஆம் ஆண்டின் உலக கை கழுவுதல் நாள் அக்.15 அன்று அனுசரிக்கப்படுகிறது. "Our Future is at Hand – Let's Move Forward Together" என்பது 2021ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாகும். உலக கை கழுவுதல் கூட்டாண்மைமூலம் இந்த நாள் நிறுவப்பட்டது.

**5. சமீபசெய்திகளில் இடம்பெற்ற பிரக்ஞானந்தாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) மட்டைப்பந்து

**ஆ) சதுரங்கம் ☑**

இ) கால்பந்து

ஈ) கைப்பந்து

✓ பிரக்ஞானந்தா, இந்திய சதுரங்க வீரரும் நாட்டின் இளம் கிராண்ட்மாஸ்ட -ர்களில் ஒருவருமாவார். சமீபத்தில், அவர் அமெரிக்க வீரரான கிறிஸ் -டோபர் யூவை வென்றதன்மூலம் ஜூலியஸ் பேர் சேலஞ்சர்ஸ் செஸ் சுற்றுப்பயணத்தை வென்றார். இந்த வெற்றியின்மூலம், பிரக்ஞானந்தா $12,500 பரிசுத்தொகையையும், 2022ஆம் ஆண்டு மெல்ட்வாட்டர் சாம்பி -யன்ஸ் சுற்றுப்பயணத்தில், செஸ் சாம்பியன்களின் உயரடுக்கு அணி உடன் விளையாடும் உரிமையையும் வென்றுள்ளார்.

---

**6. அரசுக்கு இடையேயான ஓர் இராணுவ கூட்டணியான, "கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பில்", எத்தனை முழுநேர உறுப்பினர்கள் உள்ளனர்?**

அ) 17

ஆ) 13

இ) 11

**ஈ) 6 ☑**

✓ கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு (Collective Security Treaty Organisation – CSTO) என்பது 6 முழுநேர உறுப்பினர்கள் (ஆர்மேனியா, பெலாரஸ், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான்) மற்றும் 2 உறுப்பினரல்லாத பார்வையாளர்களைக் கொண்ட (ஆப்கானிஸ்தான் & செர்பியா) ஓர் அரசுகளுக்கிடையேயான இராணுவக் கூட்டணியாகும்.

✓ சமீபத்தில், CSTO, அக்.22-23 வரை தஜிகிஸ்தானில், ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகில் இராணுவ ஒத்திகையை நடத்த முன்வந்துள்ளது.

---

**7. NATO'இன் தலைமையகம் எங்குள்ளது?**

**அ) பெல்ஜியம் ☑**

ஆ) அமெரிக்கா

இ) ரஷ்யா

ஈ) பிரான்ஸ்

✓ வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organisation – NATO) என்பது 30 உறுப்புநாடுகளைக்கொண்ட அரசுகளுக்கிடையே -யான ஒரு இராணுவக் கூட்டணியாகும். இதில் 28 ஐரோப்பிய நாடுகள் மற்றும் 2 வட அமெரிக்க நாடுகள் உள்ளன. NATO'இன் தலைமையகம் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் உள்ளது.

✓ சமீபத்தில், நேட்டோவுக்கான தனது திட்டங்களை இடைநிறுத்துவதாக -வும், மாஸ்கோவில் உள்ள நேட்டோவின் இராணுவ தொடர்பு மற்றும் தகவல் அலுவலகங்கள் மூடப்படும் என்றும் ரஷ்யா அறிவித்தது.

---

**8. எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர்பற்றிய குழுமம் நடத்திய ஆய்வின்படி, மின்சமையலில் முதலிடத்திலுள்ள மாநிலம்/UT எது?**

அ) தில்லி மற்றும் ஹரியானா

ஆ) மகாராஷ்டிரா மற்றும் கோவா

இ) மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசம்

**ஈ) தில்லி மற்றும் தமிழ்நாடு ☑**

✓ எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர்பற்றிய குழுமத்தின் ஆய்வறிக்கையின் படி, தில்லி மற்றும் தமிழ்நாட்டில் உள்ள 17 சதவீத குடும்பங்கள், சில வகையான மின்சமையல் முறைகளைப் பயன்படுத்துகின்றன.

✓ இவ்வீதம் தெலுங்கானாவில் 15% மற்றும் கேரள மாநிலத்தில் 12% ஆகும். ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் குழுமமானது பொதுவாக CEEW என அழைக்கப்படுகிறது. இது, தில்லியை தளமாகக் கொண்ட ஒரு இலாப நோக்கற்ற கொள்கை ஆராய்ச்சி நிறுவனமாகும்.

---

**9. வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், எந்த நாட்டில் உள்ள "பூதன் சோலையில்" ஒரு தகட்டினை திறந்துவைத்தார்?**



அ) அமெரிக்கா

ஆ) இங்கிலாந்து

இ) பிரான்ஸ்

**ஈ) இஸ்ரேல் ☑**

✓ இந்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், இஸ்ரேலின் ஜெருசலேம் வனப்பகுதியில் "பூதன் சோலை" என்ற தகட்டை திறந்து வைத்தார். இது, 1958'இல் ஜெயப்பிரகாஷ் நாராயணின் இஸ்ரேல் வருகையையும், 1960'இல் இஸ்ரேலின் வகுப்புவாத மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் சமூகக்கட்டமைப்பை ஆய்வுசெய்வதற்காக இஸ்ரேலுக்கு வருகைதந்த 27 பேர்கொண்ட சர்வோதயா குழுவின் வருகையையும் அங்கீகரிக்கின்றது.

---

**10. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற பாம்பன் இரயில்வே பாலம் அமைந்துள்ள மாவட்டம் எது?**



**அ) இராமநாதபுரம் ☑**

ஆ) தூத்துக்குடி

இ) சிவகங்கை

ஈ) புதுக்கோட்டை

✓ இராமேஸ்வரத்தை தமிழ்நாட்டின் நிலப்பரப்புடன் இணைக்கும் புதிய 2.05 கிமீ பாம்பன் ரயில் பாலத்தை மண்டபத்தில் அமைக்கும் பணியை இந்திய இரயில்வே தொடங்கியது. இந்தப் பாலம், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் செயல்பாட்டுக்கு வரும் என இரயில்வே அமைச்சகம் அறிவித்துள்ளது. வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள இராமேஸ்வரம் தீவை பிரதான நிலப்பரப்புடன் இணைக்கும் இப்புதிய 2 கிமீ நீள பாலம், தற்போதுள்ள 104 ஆண்டுகள் பழமையான பாலத்திற்கு பதிலாக அமைக்கப்படுகிறது. இது, 63 மீட்டர் நீளத்தைக் கொண்டிருக்கும். சிறிய கப்பல்கள் கடக்க வசதியாக செங்குத்தாக இது உயர்த்தப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மேம்படுத்தப்பட்ட கணினி விசைப்பலகைக்கு கீழடி பெயர்**

தமிழக அரசின் மேம்படுத்தப்பட்ட கணினி விசைப்பலகைக்கு கீழடி என பெயா் சூட்டப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட புதிய வசதியை முதல்வா் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தாா். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:-

தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் ஏற்கெனவே கணினி விசைப் பலகை, தமிழிணையம்-ஒருங்குறி மாற்றி ஆகிய இரு தமிழ் மென்பொருள்கள் பயன்பாட்டில் உள்ளன. இவை பல புதிய வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு கீழடி-தமிழிணைய விசைப்பலகை மற்றும் தமிழி-தமிழிணைய ஒருங்குறி மாற்றி எனப் பெயா் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கீழடி-விசைப் பலகை மென்பொருளானது, தமிழ் 99 விசைப் பலகை, ஒலிபெயா்ப்பு விசைப் பலகை, பழைய தட்டச்சு விசைப் பலகை ஆகிய மூன்று விதமான கணினி விசைப் பலகைகளின் அமைப்பில் செயல்படும். தமிழிணைய ஒருங்குறி மாற்றி மென்பொருளானது, பிற தமிழ் எழுத்துருக்களில் தட்டச்சு செய்யப்பட்டவைகளை தமிழ் ஒருங்குறிக்கு மாற்றும் தன்மை கொண்டது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள்களை கட்டணம் ஏதுமின்றி தமிழ் இணையக் கல்விக் கழக இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். மேம்படுத்தப்பட்ட புதிய வசதிகளை தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வா் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தாா்.

---

**2. எண்ம சுகாதார இயக்கம்: ஒரு பார்வை**

இந்திய பிரதமா் நரேந்திர மோடி, 'எண்ம சுகாதார அடையாள அட்டை' திட்டத்தை அண்மையில் தொடங்கி வைத்தாா். ஒருவா் நோயாளியாக சிகிச்சை பெறும்போது அவரின் நோய் குறித்த மருத்துவ வரலாறு, அவா் எடுத்துக்கொண்ட சிகிச்சைகள், சோதனைகள் ஆகியவை தரவுத்தளத்தில் எண்ம முறையில் பதிவு செய்து சேமிக்கப்படும். நாடு முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவா்கள் இதை அணுக முடியும்.

தேசிய எண்ம சுகாதார இயக்கம் இந்திய நாட்டின் சுகாதாரம், நோய்களின் கண்காணிப்பிற்கு ஒரு நல்ல தரவுத்தளமாக இருக்கும். இது இந்தியாவின் சுகாதாரக் கட்டமைப்பிலும், பொது சுகாதார ஆய்விலும் பெரும் புரட்சியை ஏற்படுத்தும். நோய், அதற்கு வழங்கப்பட்ட சிகிச்சை பற்றி தெரிந்து கொள்ளவும் நோய்ப் பரவலுக்கும் சமூகதிற்கும் உள்ள தொடா்புகளைப் புரிந்துகொள்ளவும் இது உதவும்.

தேசிய எண்ம சுகாதார இயக்கம், ஒரு குறிப்பிட்ட நோய்க்கு வெவ்வேறு மருத்துவா்களிடம் சிகிச்சை பெற்றிருந்தாலும் ஒரு முறை மட்டுமே எந்தவொரு நோயறிதல் பரிசோதனையையும் மேற்கொள்ள வேண்டும் எனத் தெளிவாக கூறுகிறது.

இது மருத்துவா்களுக்குப் பிடித்த ஆய்வகங்களுக்கு நோயாளிகள் செல்ல கட்டாயப்படுத்தப்படுவதையும், குறிப்பிட்ட நோய்க்கு ஒரே பரிசோதனையினை மீண்டும் செய்வதையும் தவிா்க்கிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுகாதாரத்திற்கான மொத்த செலவான 3.6% இல், பொதுத்துறை செலவு வெறும் 1% மட்டுமே. இது எண்ம சுகாதார அமைப்புகளைக் கொண்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவு.

உலகின் சிறந்த சுகாதார அமைப்புகளில் முதலிடத்தில் உள்ள கனடாவிலும், எட்டாவது இடத்தில் உள்ள ஆஸ்திரேலியாவிலும் சுகாதாரத்துக்கான பொதுத்துறை செலவு முறையே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதம், 6.3 சதவீதம் ஆகும்.

இந்தியாவில் தேசிய எண்ம சுகாதார இயக்கத்திற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது மிகச்சிறிய சுகாதார வரவு செலவுத் திட்டம். தற்போதைய சுகாதார வரவு செலவு தடைகளையும், பொது சுகாதார உள்கட்டமைப்பையும் மாற்றியமைக்காமல் இவ்வியக்கம் அனைவருக்கும் சுகாதாரத்தை எவ்வாறு வழங்கும் என்று இத்துறை வல்லுநா்கள் கேள்வி எழுப்புகின்றனா்.

இந்திய அரசின் புள்ளிவிவரம் - திட்ட அமலாக்க அமைச்சகம், 2017-18-ஆம் ஆண்டில் வெளியிட்ட சுகாதாரத்திற்கான கணக்கீடு நம் நாட்டில் வழங்கப்படும் சிகிச்சையில் 66% தனியாா் மருத்துவமனைகளால் வழங்கப்படுவதாகக் கூறுகிறது. மூன்றில் இருபங்கு கொண்ட தனியாா் சுகாதாரத் துறையை தேசிய எண்ம சுகாதார இயக்கத்தின் கீழ் கொண்டு வருவது மிகப்பெரும் சவால்.

மருத்துவ வள பற்றாக்குறை கொண்ட நமது இந்திய சுகாதார உள்கட்டமைப்பு பிரத்யேக அடையாள எண் (ஹெல்த் ஐடி), மின்னணு மருத்துவா் (டிஜி டாக்டா்), சுகாதார வசதி பதிவு, தனிநபா் மருத்துவப் பதிவுகள், மின் மருந்தகம் (இ-பாா்மசி) மற்றும் தொலை மருத்துவம் (டெலிமெடிசின்) ஆகிய ஆறு முக்கிய எண்ம அமைப்புகளைக் கொண்ட தேசிய எண்ம சுகாதார இயக்கத்தினை தற்போதைய நிலையில் நிா்வகிப்பது சிரமமே.

தனியாா் மருத்துவத்துறையினரின் எதிா்ப்பால் பல மாநிலங்களில், சிகிச்சை கட்டணங்களை நிா்ணயிக்கும் மருத்துவ நிறுவனங்கள் பதிவு ஒழுங்குமுறை சட்டத்தினை செயல்படுத்த முடியாத சூழல் உள்ளது. இந்நிலையில் மத்திய அரசால் உருவாக்கப்பட்ட தேசிய எண்ம சுகாதார இயக்கத்தை செயல்படுத்துவதில் மாநில அரசுகள் பிரச்னைகளை எதிா்கொள்ளலாம்.

தொலைமருத்துவ சேவை மூலம் கணினி வழி ஒரு நோயாளியுடன் கலந்தாலோசிக்க குறைந்தபட்ச இணைய வேகம் ஒரு வினாடிக்கு 2 மெகா பிட்கள் (2 எம்பிபிஎஸ்) தேவை. 159 இணைய சேவை வழங்குநா்களால் இந்தியாவில் வழங்கப்படும் அகன்ற அலைக்கற்றையின் (பிராட்பேண்ட்) ஊடுருவல் 2% க்கும் குறைவு என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

குறைந்த அளவு இணைய வசதியும், சுகாதாரக் கட்டமைப்பும் கொண்ட இந்திய கிராமங்களில் சுகாதாரத்துறையின் செயல்பாடுகளை முழுமையாக மாற்றும் திறன் கொண்ட தொழில்நுட்ப அடிப்படையிலான தேசிய எண்ம சுகாதார திட்டத்தை செயல்படுத்துவது தற்போதைய சூழலில் கடினம்.

அரசு மருத்துவமனைகளிலும் மருந்தகங்களிலும் தகவல் தொடா்பு தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதி மிகக் குறைவாக உள்ளது என்றும், இந்தியாவின் பொது சுகாதார வசதிக்கான வன்பொருள், மென்பொருள் தேவைக்கான முதலீட்டு தேவை அதிகம் என்றும் 2018-ஆம் ஆண்டில்

வெளியான 'எலக்ட்ரானிக் ஹெல்த் ரெக்காா்ட்ஸ்' என்ற இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிக்கை கூறுகிறது.

தேசிய எண்ம சுகாதார இயக்கத்தின் அடித்தளமான மின்னணு சுகாதார பதிவேட்டினை சா்வதேச நோய் வகைப்பாடு (இன்டா்நேஷனல் கிளாஸிஃபிகேஷன் ஆஃப் டிஸிஸ் – ஐசிடி)–10–இன் அடிப்படையில் நிா்வகித்தல் சுகாதாரப் பணியாளா்களுக்கு சவாலாக இருக்கக்கூடும்.

உலகெங்கிலும் தரவு தனியுரிமை மீறல்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சூழலில், இந்திய சுகாதாரப் பதிவுகளைக் காப்பதற்கான திட்டங்கள் மிக அவசியம். தரவுப் பாதுகாப்பை, தனியுரிமை மீறல்களைத் தவிா்க்க இந்திய தேசிய எண்ம சுகாதார இயக்கம் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டும்.

நோயாளியின் நோய் குறித்த ரகசியத்தன்மையை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே மருத்துவ நெறிமுறைகளின் முக்கிய கூறு. தனியாா் மருத்துவத் துறையில் பதிவுசெய்யப்பட்ட தகவல்களின் நம்பகத்தன்மையை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதும் மிகப்பெரிய கேள்வியாகும்.

இந்திய பொது சுகாதாரக் கட்டமைப்பினை மேம்படுத்தி, சவால்களை எதிா்கொண்டு வெற்றி பெற்றால் தேசிய எண்ம சுகாதார இயக்கத்தை செயல்படுத்துவது எளிதில் சாத்தியமாகும்.

---

### 3. உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணிக்க தனி இணையதளம்: முதல்வா் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தாா்

உள்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்காணித்து வளா்ச்சிகளை ஆய்வு செய்வதற்கென உருவாக்கப்பட்டுள்ள தனி இணையதளத்தை முதல்வா் மு.க.ஸ்டாலின், வெள்ளிக்கிழமை தொடக்கி வைத்தாா். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

தமிழகத்தில் ரூ.1 லட்சம் கோடிக்கான 200 முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் தலைமைச் செயலாளா் தலைமையில் அமைக்கப்பட்ட உயா்நிலைக் குழுவின் மூலமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களின் வளா்ச்சிகளை ஆய்வு செய்து அவற்றை தொடா்ந்து கண்காணிக்க 'இ–முன்னேற்றம்' என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த இணையதளத்தில், ஒவ்வொரு திட்டம் குறித்த விவரங்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும், பணி ஒப்பந்தமான நாள், தொடங்கப்பட்ட தினம், நடைபெறும் இடம், நிதி நிலைமை, மாதாந்திர அடிப்படையில் திட்டத்தின் வளா்ச்சி, நிதிநிலைமையின் வரையறை, பணிவளா்ச்சி குறித்த புகைப்படம் ஆகியன இடம்பெற்றிருக்கும். இந்த இணையதளத்தின் மூலம் முக்கிய அரசுத் துறைகளின் செயல்பாடுகளை கண்காணித்திடவும் முடியும். துறைத் தலைமை அலுவலகங்கள் அவ்வப்போது திட்டங்களின் வளா்ச்சியைத் தெரிவிக்கவும், நெருக்கடியான விஷயங்கள் மற்றும் தாமதத்துக்கான காரணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைத் தெரிவிக்கவும் வசதியாக இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப நண்பன்: தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் தகவல் தொழில்நுட்ப நண்பன் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் தொழில்கள் குறித்த கருத்துக் கேட்புத்தளமாக இது விளங்கும். மேலும், மாநிலத்தில் உள்ள அனைத்து தொழில்நுட்பம் சாா்ந்த குழுமங்கள் நேரடியாக இதில் இணைந்து கொள்கைகளை உருவாக்கிடவும் அவா்களது பங்களிப்பை அளிக்கவும் உதவும்.

தகவல் தொழில்நுட்பவியல் துறையால் வெளியிடப்படும் அனைத்து கொள்கைகள், அரசு உத்தரவுகள், ஒப்பந்தப் புள்ளிகள் ஆகியவற்றையும் பாா்வையிட முடியும். தகவல் தொழில்நுட்பவியல் துறை எதிா்நோக்கும் முக்கிய பிரச்னைகள், இப்போதைய கொள்கைகள் குறித்து கருத்துகளைப் பதிவிடவும், அதற்குரிய தீா்வுகளைப் பெற்றிடவும் வழி செய்யப்படும். இது எளிதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் இருப்பதால் வா்த்தகத்தைப் பெருக்க பெரிதும் துணைபுரியும் என்று அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 4. ஏவுகணை சோதனைக்கு வான் இலக்காக பயன்படும் விமானம் வெற்றிகர சோதனை

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆா்டிஓ) சாா்பில் உருவாக்கப்பட்ட அதிவேக 'அப்யாஸ்' இலக்கு விமானம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. வான் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளின் சோதனையின்போது இலக்காக இந்த விமானம் பயன்படுத்தப்படும்.

ஒடிஸா மாநிலம், சண்டிபூா் அருகே வங்காள விரிகுடா கடல் பகுதியில் டிஆா்டிஓ–வின் ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனைத் தளத்தில் (ஐடிஆா்) இந்த இலக்கு விமானத்தின் சோதனை வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. அப்யாஸ் சோதனை வெற்றி பெற்றதைத் தொடா்ந்து டிஆா்டிஓ அதிகாரிகளுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சா் ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்தாா்.

இதுகுறித்து டிஆா்டிஓ அதிகாரிகள் கூறியதாவது: பெங்களூருவில் உள்ள டிஆா்டிஓ அமைப்பின் விமான மேம்பாட்டுப் பிரிவு (ஏடிஇ) மூலமாக இந்த இலக்கு விமானம் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. இந்த இலக்கு விமானம் வேகமாகச் செல்லும் வகையில் உந்துதல் அளிப்பதற்காக அதில் இரட்டை பூஸ்டா்கள் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன. மேலும், இலக்கு விமானம் நீண்ட தூரம் மற்றும் நீடித்த வேகத்தில் செல்ல வேண்டும் என்பதற்காக அதில் கேஸ் டா்பைன் என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, இதை கட்டுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுவதற்காக கட்டுப்பாட்டு கணினியுடன் கூடிய வழிகாட்டுதல் தொழில்நுட்பமும் இந்த இயந்திரத்தில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இச்சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மேலும் மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனை தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்தபடி ரேடாா் மற்றும் எல்க்ட்ரோ ஆப்டிகல் கணிகாணிப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு தொலையுணா்வு மற்றும் சென்சாா் கணிப்பு தொழிநுட்பங்கள் உதவியுடன் மடிக்கணினி மூலமாக கண்காணிக்கப்பட்டது. இந்தச் சோதனை வெற்றியடைந்துள்ளது என்று அவா்கள் கூறினா்.

---

### 5. நீா்மூழ்கிக் கப்பலைத் தாக்கும் ஏவுகணைகள்: அமெரிக்காவுடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம்

அமெரிக்காவிடம் இருந்து ரூ.423 கோடி செலவில் எம்.கே.–54 ரக நீா்மூழ்கிக் கப்பலைத் தாக்கும் ஏவுகணைகளை இந்தியா கொள்முதல் செய்கிறது. இதுதொடா்பான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

இந்த தகவலை பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடா்பாளா் தனது ட்விட்டா் பக்கத்தில் வெள்ளிக்கிழமை வெளியிட்டாா்.

இந்த ஏவுகணைகள், இந்திய கடற்படையில் உள்ள பி–81 ரக கண்காணிப்பு விமானத்தில் பயன்படுத்தக்கூடியவை. இவை நீா்மூழ்கிக் கப்பல்களைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை.

இந்திய கடற்படையிடம் படையிடம் தற்போது 11 'பி–81' ரக கண்காணிப்பு விமானங்கள் உள்ளன. இந்த விமானங்கள் அமெரிக்காவின் ஏரோஸ்பேஸ் நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டவையாகும்.

---

### 6. ரூ.4,445 கோடியில் 7 மெகா ஜவுளிப் பூங்காக்கள்: மத்திய அரசு அறிவிப்பு

மத்திய அரசின் 'பிம்–மித்ரா' திட்டத்தின் கீழ் ரூ. 4,445 கோடியில் 7 மெகா ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் கடந்த வியாழக்கிழமை இந்த அறிவிக்கையை வெளியிட்டது. ஒவ்வொரு ஜவுளிப் பூங்காவிலும் ஒரு லட்சம் நேரடி வேலைவாய்ப்புகள் மற்றும் 2 லட்சம் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நேக்கத்தில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் மத்திய அரசு சாா்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய ஜவுளித் துறை அமைச்சக அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

2021–22 மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மத்திய அரசின் ஒப்புதலுடன் இந்த 7 ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆயத்த ஆடை உற்பத்திக்குத் தேவையான நூற்பு ஆலை, நெசவு, சாய ஆலை, பிரிண்டிங் என அனைத்தும் ஒரே இடத்தில் அமையும் வாய்ப்பை இந்த பூங்காக்கள் ஏற்படுத்தித் தரும். இந்த பூங்காக்களில் உலகத் தரத்திலான உள்கட்டமைப்புகள் வசதிகள் இடம்பெறுபோது, உள்நாட்டு

முதலீடுகள் மட்டுமின்றி வெளிநாட்டு நேரடி முதலீடும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும்.

இந்தப் பூங்காவை தொடங்குவதற்காக, ஜவுளித் துறை சார்ந்த வசதிகளுடன் கூடி தொடர்ச்சியாக அமையப்பெற்றிருக்கும் 1,000 ஏக்கருக்கும் அதிகமான எந்தவித வில்லங்கமும் இல்லாத இடவசதியை தயார் நிலையில் பெற்றிருக்கும் மாநிலங்களிடமிருந்து பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன. இந்த ஜவுளி பூங்காவை அமைக்கும் மாநிலத்துக்கு மத்திய அரசின் மேம்பாட்டு மூலதன ஆதரவாக மொத்த திட்டச் செலவில் 30 சதவீதம் அளிக்கப்படும். அதோடு, இந்தப் பூங்காக்களில் ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள் விரைந்து ஆரம்பிக்கப்படுவதை ஊக்குவிக்கும் வகையில் 'போட்டித்தன்மை ஊக்குவிப்பு ஆதரவு (சிஐஎஸ்) நிதியாக பி.எம். மித்ரா ஜவுளி பூங்காக்களுக்கு தலா ரூ.300 கோடி வழங்கப்படும்.

இந்தத் திட்டம் அதிக முதலீடுகளை ஈர்க்கும் என்பதோடு, அதிக அளவில் வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தரும்.

தமிழகம், பஞ்சாப், ஒடிஸா, ஆந்திரம், குஜராத், ராஜஸ்தான், அஸ்ஸாம், கர்நாடகம், மத்திய பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்கள் ஆர்வம் தெரிவித்துள்ளன என்று அமைச்சகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**7. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா–பிரிட்டன் ஒப்புதல்**

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியாவும் பிரிட்டனும் ஒப்புக்கொண்டுள்ளன.

இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் எலிசபெத் டிரஸ் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இடையேயான பேச்சுவார்த்தையின்போது இதற்கான உடன்பாடு ஏற்பட்டது. ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஆலோசிக்கப்பட்டது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்த பேச்சுவார்த்தையின்போது, கடந்த மே மாதம் இரு நாட்டு பிரதமர்களிடையேயான காணொலி வழி மாநாட்டின் போது இரு நாடுகளிடையேயான புதிய வர்த்தகம், பாதுகாப்பு, பருவநிலை மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட துறைகளிலான ஒத்துழைப்புக்காக அறிமுகம் செய்யப்பட்ட 'லட்சியத் திட்டம் 2030' திட்ட செயல்பாடு குறித்து இரு வெளியுறவு அமைச்சர்களும் ஆய்வு செய்தனர். பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

இந்தோ–பசிபிக் மற்றும் மேற்கு ஆசிய பிராந்தியங்களில் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இணைய, விண்வெளி பயங்கரவாதங்கள் போன்ற வளர்ந்துவரும் சவால்களை எதிர்கொள்வதில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இந்த பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் முழு அளவில் பாதுகாப்பான மற்றும் தடையற்ற மனிதாபிமன உதவிகளுக்கு அனுமதிக்கப்படுவது மற்றும் ஆப்கன் நாடு பயங்கரவாதிகளுக்கு தஞ்சம் கொடுக்கவோ அல்லது மற்ற நாடுகள் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்துவதற்கோ பயன்படுத்தப்படக் கூடாது என்பது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

இரு நாடுகளிடையேயான திட்டங்கள் மற்றும் நிபுணர்களிடையேயான ஆலோசனைகளை விரைவுபடுத்தும் விதமாக இந்தியா – பிரிட்டன் இடையே புதிதாக 1.5 பேச்சுவார்த்தை திட்டத்தை அறிமுகம் செய்வதற்கும் உடன்பாடு ஏற்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, 'ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் வரும் அக்டோபர் 31 முதல் நவம்பர் 12–ஆம் தேதி வரை நடைபெற உள்ள 'கோப் 26' என்ற 2021 ஐக்கிய நாடுகள் பருவநிலை மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க வரவுள்ளதை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம் என்று கூறிய டிரஸ், 'இந்த மாநாடு தொடர்பாக நிபுணத்துவத்தை பகிர்ந்துகொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு ஒத்துழைப்புகளை இரு நாடுகளும் மேற்கொள்வது அவசியம்' என்று குறிப்பிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலிசபெத் டிரஸ் தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகள் எதிர்காலத்துக்கான நமது பகிரப்பட்ட திட்டங்கள் மீது ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

---

**8. மானூர் ஒன்றியக்குழு தலைவராக 22 வயது பெண் என்ஜினீயர் தேர்வு**

நெல்லை மாவட்டம் மானூர் யூனியனில் உள்ள 25 ஊராட்சி ஒன்றிய வார்டுகளில் நடந்த தேர்தலில் தி.மு.க.வைச் சேர்ந்த 16 பேரும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த 3 பேரும், அ.ம.மு.க., பா.ஜ.க.வைச் சேர்ந்த தலா ஒருவரும், சுயேச்சைகள் 4 பேரும் ஒன்றிய கவுன்சிலர்களாக வெற்றி பெற்றனர்.

இதில் 19–வது வார்டில் தி.மு.க.வை சேர்ந்த 22 வயதான பெண் என்ஜினீயர் ஸ்ரீலேகா வெற்றி பெற்றார். இவருடைய தந்தை அன்பழகன், மானூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளராக உள்ளார்.

போட்டியின்றி தேர்வு

இந்த நிலையில் மானூர் யூனியன் அலுவலகத்தில் நேற்று தலைவர், துணை தலைவர் பதவிகளுக்கான முறைமுக தேர்தல் நடந்தது. இளம் வயதிலேயே ஒன்றிய கவுன்சிலராக வென்ற ஸ்ரீலேகா, மானூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்து இருந்தார். அவரை எதிர்த்து தலைவர் பதவிக்கு வேறு யாரும் வேட்புமனு தாக்கல் செய்யாததால், ஸ்ரீலேகா போட்டியின்றி தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் அவர் கூறுகையில், அடிப்படை வசதிகளை மேம்படுத்த பாடுபடுவேன் என்றார்.

விக்கிரவாண்டியில்...

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஒன்றியக்குழு தலைவராக தி.மு.க.வை சேர்ந்த 21 வயதான கல்லூரி மாணவி சங்கீதா அரசி போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். அவர் நடப்பு கல்வி ஆண்டு இறுதியில் தான் பி.எஸ்.சி. கணிதம் படித்து முடித்தார்.

---

**9. அரசு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கான வலைதளங்கள், தமிழ் மென்பொருட்கள்: முதல்வர் தொடங்கி வைத்தார்**

தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் உருவாக்கப்பட்டுள்ள வலைதளங்கள் மற்றும் மென்பொருட்களைத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்துத் தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

"தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (22.10.2021) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள "இ–முன்னேற்றம்" மற்றும் "தகவல் தொழில்நுட்ப நண்பன்" ஆகிய இரண்டு வலைத்தளங்களையும், "கீழடி– தமிழிணைய விசைப்பலகை" மற்றும் "தமிழி – தமிழிணைய ஒருங்குறி மாற்றி" ஆகிய இரு தமிழ் மென்பொருள்களையும் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு, சுமார் ஒரு லட்சம் கோடிக்கான 200 முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இத்திட்டங்களின் வளர்ச்சிகளை மீளாய்வு செய்து அவற்றைக் கண்காணிப்பதற்காக "இ–முன்னேற்றம்" என்ற வலைத்தளம் (https://emunnetram.tn.gov.in/) தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு திட்டம் குறித்த விவரங்களான பணி ஒப்பந்தமான நாள், தொடங்கப்பட்ட நாள், நடைபெறும் இடம், நிதி நிலைமை, மாதாந்திர அடிப்படையில் திட்டத்தின் வளர்ச்சி, நிதிநிலைமையின் வரையறை, பணிவளர்ச்சியின் தொடர் புகைப்படம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மேலும், முக்கிய அரசுத் துறைகளின் செயல்பாடுகளை இதன் வழியே கண்காணித்திடவும் இயலும். துறைத்தலைமை அலுவலகங்கள் அவ்வப்போது திட்டங்களின் வளர்ச்சியினைத் தெரிவிப்பதற்கும், நெருக்கடியான பொருண்மைகள் மற்றும் தாமதத்திற்கான காரணங்கள் ஏதேனும் இருப்பின், அவற்றைத் தெரிவிப்பதற்கும் ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளின் ஏற்றுமதி ஆண்டுதோறும் 10 சதவீதம் என்ற அளவில் வளர்ந்து வருகிறது. இது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தமிழ்நாடு மின்னாளுமை முகமையால்

உருவாக்கப்பட்டுள்ள "தகவல் தொழில்நுட்ப நண்பன்" என்ற வலைத்தளம், தகவல் தொழில்நுட்பவியல் தொழில்கள் குறித்த கருத்துக்கேட்புத் தளமாக விளங்குவதுடன், மாநிலத்தில் உள்ள அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த குழுமங்கள் நேரடியாக இதில் இணைந்து கொள்கைகளை உருவாக்கிடவும் அவர்களின் பங்களிப்பினை நல்கிடவும் உதவும்.

இத்தளத்தின் வாயிலாக உள்நுழையும் குழுமங்கள், தகவல் தொழில்நுட்பவியல் துறையால் வெளியிடப்படும் அனைத்து கொள்கைகள், அரசாணைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை எளிதில் பார்வையிட இயலும். மேலும், எதிர்நோக்கும் முக்கியப் பிரச்சினைகள் மற்றும் தற்போதைய கொள்கைகள் குறித்து தமது கருத்துரைகளைப் பதிவிடும் வசதியும், அதற்குத்தக்க தீர்வுகளைப் பெற்றிடவும், தகவல்களை மின்னஞ்சல் வழியாகப் பெற்றிடவும் உதவும்.

இதன்மூலம் குழுமங்களின் கொள்கைகள், திட்டங்களின் வரைமுறைகள் மற்றும் மிக வேகமான வளர்ச்சிக்கு வித்திடும் திட்டங்கள் போன்றவற்றைக் கண்காணிக்க முடியும். மேலும், இது எளிதாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் உள்ளதால் வர்த்தகத்தைப் பெருக்கப் பெரிதும் துணைபுரியும்.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள "கணினி விசைப்பலகை" மற்றும் "தமிழிணையம்–ஒருங்குறி மாற்றி" ஆகிய இரு தமிழ் மென்பொருள்களையும் பல புதிய வசதிகளுடன் மேம்படுத்தி, "கீழடி– தமிழிணைய விசைப்பலகை" மற்றும் "தமிழி– தமிழிணைய ஒருங்குறி மாற்றி" (Keezhadi – Keyboard and Tamizhi – Unicode Converter) எனப் பெயர் மாற்றம் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

கீழடி– விசைப்பலகை மென்பொருளானது, தமிழ்' 99 விசைப்பலகை (Tamil'99 Keyboard), ஒலிபெயர்ப்பு விசைப்பலகை (Phonetic Keyboard), பழைய தட்டச்சு விசைப்பலகை (Old Typewriter Keyboard) ஆகிய மூன்று விதமான கணினி விசைப்பலகைகளின் அமைப்பில் செயல்படும்.

தமிழி–தமிழிணைய ஒருங்குறி மாற்றி மென்பொருளானது, வானவில் மற்றும் பிற தமிழ் எழுத்துருக்களில் (Fonts) தட்டச்சு செய்யப்பட்ட .doc, .docx, .rtf, .xls, .xlsx, .ods, .ppt, .pptx போன்ற அமைப்புகளில் உள்ள உரைநடை (Text), கோப்பு (File) மற்றும் கோப்புறை (Folder) ஆவணங்களை "தமிழ் ஒருங்குறி"க்கு மாற்றும் தன்மையுடையது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள இம்மென்பொருட்களைக் கட்டணமின்றி தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்திலிருந்து (www.tamilvu.org/unicode) பதிவிறக்கம் செய்திட இயலும்". இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

**10. நியாயவிலைக் கடைகளில் பனைவெல்லம் விற்பனை: தொடக்கி வைத்தார் ஸ்டாலின்**

தமிழகத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் பனைவெல்லம் விற்பனை செய்யும் திட்டத்தை தொடக்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்.

நியாய விலை கடைகள் மூலம் பனை வெல்லம் விற்பனை செய்யும் திட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, பனைத் தொழிலில் ஈடுபட்டு வரும் பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு "கற்பகம்" என்ற பெயரில் நியாய விலை கடைகள் மூலம் பனை வெல்லம் விற்பனை செய்யும் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

பல்பொருள் அங்காடிகளில் கரும்பனை எனும் பெயரில் பனைவெல்லம் விற்பனை செய்யும் திட்டத்தையும் முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பொருட்களை கொள்முதல் செய்திட புதிய கைபேசி செயலி வணிகக் களத்தில் ஏற்பட்டு வரும் அபரிமிதமான மின்னணு தொழில் நுட்ப வளர்ச்சியினை கருத்தில் கொண்டு இளம் தலைமுறையினர் எளிதில் இணையதள சேவையினை பயன்படுத்தி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பொருட்களை கொள்முதல் செய்திட டிஎன்காதி (tnkhadi) எனும் செல்லிடப்பேசி செயலியை முதல்வர் ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்.

பனை வெல்லம் மற்றும் பனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையம் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஊராட்சி ஒன்றியம் சாயல்குடியில் "இராமநாதபுரம் – சிவகங்கை" மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு விற்பனை சம்மேளனத்திற்கு சொந்தமான இடத்தில், பனைத் தொழிலை மேம்படுத்திடும் நோக்கில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் ரூ.53.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பனை வெல்லம் மற்றும் பனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்கள்.

துணிநூல் துறை என்ற புதிய துறை உருவாக்கம்

2021–22ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு, கைத்தறி மற்றும் துணிநூல் துறையினைப் பிரித்து, தனியாக துணிநூல் துறை என்ற துறை உருவாக்கப்பட்டு, முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

சிறந்த நெசவாளர்கள் விருது

புதிய மற்றும் கண்கவர் வடிவமைப்புகளை புகுத்துதல் மற்றும் தற்போதைய சந்தையில் அதிக தேவையுள்ள பட்டு, கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசால் சிறந்த நெசவாளர் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மாநில அளவிலான தேர்வுக்குழு மூலம் தெரிவு செய்யப்பட்ட 6 கைத்தறி நெசவாளர்களுக்கு முதல் பரிசாக 1 இலட்சம் ரூபாய், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய் மற்றும் மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய் முறையே பட்டு மற்றும் பருத்தி ஆகிய இரண்டு இரகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2020–21ஆம் ஆண்டிற்கான பட்டு இரகத்திற்கான சிறந்த நெசவாளர் விருதிற்கான முதல் பரிசு கே.ஜி. கண்ணன், இரண்டாம் பரிசு வி. சரவணன், மூன்றாம் பரிசு கே. சுமதி, பருத்தி இரகத்திற்கான சிறந்த நெசவாளர் விருதிற்கான முதல் பரிசு இ.ஆர். நாகலம்மாள், இரண்டாம் பரிசுஎஸ். ரவி, மூன்றாம் பரிசு என். நெடுஞ்சேரலாதன் ஆகியோருக்கு முதல்வர் இன்று பரிசுத் தொகைக்கான காசோலைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார்.

சிறந்த ஏற்றுமதியாளர் விருது

கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டு சந்தையில் கைத்தறி துணி விற்பனையினை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசு சிறந்த கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2020–21ஆம் ஆண்டிற்கான சிறந்த ஏற்றுமதியாளர் விருதிற்கான முதல் பரிசு சென்னை – திருவாளர் அம்பாடி எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும், இரண்டாம் பரிசு ஈரோடு – சென்னிமலை தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் மற்றும் மூன்றாம் பரிசு ஈரோடு – திருவாளர் ஃபைவ் பி வென்சர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் முதல்வர் வழங்கி, பாராட்டினார்.

காஞ்சிபுரம் – தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தின் பங்கு ஈவுத் தொகை காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சரிகை ஆலை, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1974–ஆம் ஆண்டு முதல் வணிக ரீதியிலான உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது . இந்நிறுவனம் ஐஎஸ்ஓ:9001:2015 தரச்சான்று பெற்ற, மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.

இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவைப்படும் 60 சதவீத சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றது.

காஞ்சிபுரம் – தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தின் 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஈவுத் தொகையான 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை முதல்வரிடம் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி அவர்கள் வழங்கினார்.

---

**11. ஆஸ்கா் விருதுக்கு தமிழ் திரைப்படமான 'கூழாங்கல்' பரிந்துரை**

ஆஸ்கா் விருதுக்கு பரிந்துரைக்க இந்தியா சாா்பில் தமிழ் திரைப்படமான 'கூழாங்கல்' தோ்வு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மாா்ச் 27–ஆம் தேதி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் 94–ஆவது ஆஸ்கா் விருதுகள் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. அதில் சிறந்த வெளிநாட்டு படம் பிரிவில் இந்தியா சாா்பில் பரிந்துரைக்க தமிழ் திரைப்படங்களான 'கூழாங்கல்' , 'மண்டேலா' , மலையாளத் திரைப்படமான 'நாயாட்டு' , ஹிந்தி திரைப்படங்களான 'சா்தாா்'

உத்தம்’ ,'ஷோ’ஷா’ உள்பட 14 திரைப்படங்களை இந்திய திரைப்பட சம்மேளனம் பரிசீலித்தது. இதில் 'கூழாங்கல்’ திரைப்படத்தை பரிந்துரைக்க அந்த சம்மேளனம் முடிவு செய்தது.

மதுவுக்கு அடிமையான தந்தையின் துன்புறுத்தலால் வீட்டைவிட்டு வெளியேறிய தாயை, தந்தையுடன் தேடிச் செல்லும் சிறுவனை கதைக்களமாக கொண்ட இந்த திரைப்படத்தை வினோத்ராஜ் இயக்கியுள்ளாா். விக்னேஷ் சிவன், நயன்தாரா இணைந்து தயாரித்துள்ளனா். யுவன்சங்கா் ராஜா இசையமைத்துள்ளாா்.

ஏற்கெனவே நெதா்லாந்தின் ரோட்டா்டாம் நகரில் நடைபெற்ற 50-ஆவது சா்வதேச திரைப்பட விழாவில் (ஐஎஃப்எஃப்ஆா்) 'கூழாங்கல்’ திரைப்படத்துக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை எந்தவொரு இந்திய திரைப்படமும் ஆஸ்கா் விருது பெற்றதில்லை. அந்த விருதுக்கான சிறந்த சா்வதேச திரைப்பட பிரிவின் இறுதிப் பட்டியலில் கடைசியாக ஹிந்தி நடிகா் ஆமிா் கான் நடித்த 'லகான்’ திரைப்படம் 2001-ஆம் ஆண்டில் இடம்பெற்றது. அதற்கு முன்பு 1958-ஆம் ஆண்டு 'மதா் இந்தியா’ , 1989-ஆம் ஆண்டு 'சலாம் பாம்பே’ திரைப்படங்கள் ஆஸ்கா் விருதின் இறுதிப் பட்டியலில் இடம்பெற்றன.

ஏ.ஆா்.ரஹ்மான், ரோஹிணி ஹத்தங்கடி உள்ளிட்டோா் பெற்ற ஆஸ்கா் விருதுகள் வெளிநாட்டு தயாரிப்புகளாக போட்டியிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. வங்கமொழி இயக்குநா் சத்யஜித் ரேக்கு வாழ்நாள் சாதனைக்காக சிறப்பு ஆஸ்கா் விருது அளிக்கப்பட்டது.

---

**12. சமூக நீதிக் கண்காணிப்புக் குழு தலைவராக சுப.வீரபாண்டியன் நியமனம்: உறுப்பினர்களையும் நியமித்து முதல்வர் ஸ்டாலின் உத்தரவு**

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவுக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, தமிழக அரசு இன்று (அக். 23) வெளியிட்ட செய்திக்குறிப்பு:

"சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக தமிழக அரசால் 'சமூகநீதிக் கண்காணிப்புக் குழு' அமைக்கப்படும் எனவும், இக்கண்காணிப்புக் குழு, கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும், வழிகாட்டும், செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்வதோடு, இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை செய்யும் எனவும், இக்குழுவில் அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம் பெறுவார்கள் எனவும், சமூகநீதி அரசாணையின் நூற்றாண்டு நாளினையொட்டி தமிழக முதல்வர் ஏற்கெனவே அறிவித்துள்ளார். அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, கீழ்க்காணும் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து, 'சமூகநீதிக் கண்காணிப்புக் குழுவினை' அமைத்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

1. பேராசிரியர் சுப. வீரபாண்டியன் – தலைவர்
2. முனைவர் கே. தனவேல், ஐஏஎஸ் (ஓய்வு) – உறுப்பினர்
3. பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ் – உறுப்பினர்
4. கவிஞர் மனுஷ்யபுத்திரன் – உறுப்பினர்
5. ஏ.ஜெய்சன் – உறுப்பினர்
6. பேராசிரியர் முனைவர் ஆர். ராஜேந்திரன் – உறுப்பினர்
7. கோ. கருணாநிதி – உறுப்பினர்

சமூகநீதி கண்காணிப்புக் குழுவானது, சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, அவை முழுமையாக பின்பற்றப்படாவிட்டால், உரிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசுக்கு அவ்வப்போது தமது பரிந்துரைகளை வழங்கும். இக்குழுவில் சமூகச் சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலாளர் உறுப்பினர்-செயலாளராக அங்கம் வகிப்பார்.

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர் பற்றிய விவரங்கள்

* சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் சுப. வீரபாண்டியன், சிறுவயது தொடங்கி, சாதி ஒழிப்பு, ஆதிக்க எதிர்ப்பு, தாய்மொழிப் பற்று, பெண் விடுதலை, பகுத்தறிவு முதலான கருத்துகளைத் தமிழகம் முழுவதும் பரப்பி, அரை நூற்றாண்டுக்கும் மேலாக சமூகநலன் குறித்து, பேசியும் எழுதியும் வருபவர்.

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளவர்களைப் பொறுத்தவரையில்

* முனைவர் கே.தனவேல் ஒய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஆவார். மத்திய அரசிலும், மாநில அரசிலும் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் பணியாற்றிய நீண்ட அனுபவம் கொண்டவர்.

* பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ் கடந்த 40 ஆண்டுகளாக பல்வேறு பொதுத் துறை நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் தன்னாட்சி பெற்ற நிறுவனங்களில் பணிபுரிந்த நீண்ட அனுபவம் பெற்றவர்; மேலும் பெரியார் மணியம்மை நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் இணைத் துணைவேந்தராகப் பணிபுரிந்தவர்.

* கவிஞர் மனுஷ்யபுத்திரன் வரலாறு மற்றும் ஊடகத்துறையில் இரண்டு முதுகலை பட்டங்கள் பெற்றவர். இந்தியாவின் உயரிய தேசிய விருதுகளில் ஒன்றான சன்ஸ்கிருதி சம்மான் விருதினைப் பெற்றவர். 'இந்தியா டுடே' இவரை தமிழகத்தின் செல்வாக்குமிக்க 10 மனிதர்களில் ஒருவராக இரண்டாண்டுகள் தொடர்ச்சியாக தேர்ந்தெடுத்ததும், 'ஆனந்தவிகடன்' தமிழகத்தின் 'டாப் 10' மனிதர்களில் ஒருவராக தேர்வு செய்ததும் குறிப்பிடத்தக்கது.

* ஜெய்சன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் பற்றி நன்கு அறிந்தவர் மற்றும் அதில் நீண்ட அனுபவம் கொண்டவர்.

* பேராசிரியர் முனைவர் ஆர். ராஜேந்திரன் கடந்த 36 ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றியவர். பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றவர்.

* திரு. கோ. கருணாநிதி அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்று, சமூகநீதியை பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று அறிமுகம் செய்தவர்".

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**13. தூய்மையான எரிசக்தியை வலுப்படுத்த மின்துறையின் புதிய விதிமுறைகள்**

பருவநிலை மாற்றத்திற்கான உறுதிப்பாட்டை பூா்த்தி செய்ய நிலைத்த தூய்மையான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் எரிசக்தியை வலுப்படுத்த மத்திய எரிசக்தித் துறை அமைச்சகம் மின் உற்பத்தியாளா்களுக்கு புதிய விதிகளை அறிவித்துள்ளது.

இது குறித்து மத்திய எரிசக்தி துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மின்சாரத் துறையில் முதலீட்டாளா்கள் மற்றும் பிற பங்குதாரா்கள் ஆகியோா், மின்சார சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றம், புதுப்பிக்கத்தக்க மின்சாரம் மற்றும் இதனுடன் தொடா்புடைய விஷயங்கள் காரணமாக தங்கள் முதலீடுகளை சரியான நேரத்தில் மீட்டெடுப்பது பற்றி கவலைப்பட்டனா். இதையொட்டி, மின்சார நுகா்வோா்கள் மற்றும் இதர பங்குதாரா்களின் நலனைக் கருத்தில் கொண்டு மின்துறைச் சட்டம் 2003-ன் கீழ் மின்துறை அமைச்சகம் கீழ்கண்ட விதிமுறைகளை அறிவித்துள்ளது. மின்சார (சட்டம் மாற்றம் காரணமாக செலவினங்களை சரியான நேரத்தில் மீட்பது) விதிமுறைகள் 2021; மின்சார (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதார மின் உற்பத்தியை அதிகரிப்பது) விதிமுறைகள் 2021 ஆகியவையாகும்.

மின்துறையில் முதலீடு, பெரும்பாலும் சரியான நேரத்தில் செலவினங்களை மீட்பதில் சாா்ந்துள்ளது. தற்போது சட்டங்கள் நிறைவேற காலதாமதம் ஆகிறது. இது இந்தத் துறையின் நம்பகத் தன்மையைப் பாதிக்கிறது. மேலும், முதலீட்டாளா்களும் நிதி ரீதியாக நெருக்கடியைச் சந்திக்கின்றனா். இதனால், அரசு புதிய விதிமுறைகளை கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் நாட்டில் முதலீட்டுக்கான உகந்த சூழல் ஏற்படும். உலகம் முழுவதும் எரிசக்தித் துறையில் மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எரிசக்தி மாற்றத்தைக் கொண்டுவர இந்தியாவும் உறுதி அளித்துள்ளது.

வருகின்ற 2022-ஆம் ஆண்டுக்குள் 175 ஜிகாவாட், 2030-ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை அமைப்பதற்கான உறுதிப்பாட்டை இந்தியா அறிவித்துள்ளது. இந்த விதிமுறைகள் தூய்மையான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்குகளை அடைய உதவும். நுகா்வோருக்கு பசுமை எரிசக்திக் கிடைப்பதையும் இந்த அரசு உறுதி செய்யும். எதிா்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான

சூழலை உருவாக்கி பாதுகாப்பை உறுதி செய்யும். சட்டத்தில் மாற்றம் செய்யப்படும் போது, அதனால் ஏற்படும் தாக்கத்தை சரி செய்ய மாதாந்திர மின் கட்டணத்தில் சரி செய்யக் கூடிய கணக்கிடுவதற்கான வழிமுறைகளும் வழங்கப்படுள்ளது. ஏதேனும் வணிகக் கருத்தில், மின் உற்பத்தி அல்லது விநியோகத்தை கட்டுப்படுத்துதல் அல்லது ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படக்கூடாது.

மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு நிறுவனம், இடைத்தரகராக இருந்து மின் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படும். மின் உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், மின்சாரக் கட்டமைப்பில் ஏதேனும் தொழில்நுட்பத் தடைகள் ஏற்பட்டால் அல்லது மின் தொகுப்பு பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டுமே குறைக்கப்படலாம் அல்லது கட்டுப்படுத்தப்படலாம். மின்சாரம் குறைப்பு அல்லது ஒழுங்குபடுத்தலுக்கு, இந்திய மின் தொகுப்பு குறியீட்டின் விதிகள் பின்பற்றப்பட வேண்டும் போன்ற பல விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

---

**14. செயற்கை கருத்தரிப்பு மூலம் இந்தியாவின் முதல் எருமை பிறப்பு**

செயற்கை கருத்தரிப்பு (ஐவிஎஃப்) முறையின் மூலம் இந்தியாவின் முதல் 'பான்னி' வகை எருமைக் கன்று பிறந்துள்ளது. இதன் மூலம், நாட்டின் கால்நடை செயற்கை இனப்பெருக்க தொழில்நுட்ப முறை அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது.

குஜராத்தின் சோம்நாத் மாவட்டத்தில் இருக்கும் தனேஜில் அமைந்துள்ள சுசீலா அக்ரோ ஃபார்ம்ஸைச் சேர்ந்த வினய் எல்.வாலா என்ற விவசாயியின் வீட்டில் இது நிகழ்ந்துள்ளது.

2020, டிசம்பர் 15–ஆம் தேதி குஜராத்தின் கட்ச் பகுதிக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி, பண்ணி எருமை வகை குறித்துப் பேசியிருந்தார். அதற்கு மறுநாளே, 'பான்னி' வகை எருமைகளின் ஐவிஎஃப் கருத்தரித்தல் முயற்சிக்கு திட்டமிடப்பட்டது.

வினய் எல்.வாலாவின் சுசீலா அக்ரோ ஃபார்ம்ஸை சேர்ந்த 3 பண்ணி எருமைகளை ஐவிஎஃப் கருத்தரித்தல் முயற்சிக்கு உட்படுத்த விஞ்ஞானிகள் திட்டமிட்டனர். பல்வேறு கட்டங்களுக்குப் பிறகு முதல் எருமைக் கன்று தற்போது பிறந்துள்ளது.

எருமைகளின் செயற்கைக் கருத்தரிப்பு முறையில் மிகப்பெரிய சாத்தியக்கூறுகளை அரசு மற்றும் விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். இதன் மூலம் கால்நடைகளின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**1. பருத்தி பொருளாதாரத்தில் நிலைத்தன்மை மற்றும் மதிப்பு கூட்டலுக்காக, இந்தியா, எந்த நாட்டோடு கைகோர்த்துள்ளது?**

அ) பிரான்ஸ்

**ஆ) ஜெர்மனி ☑**

இ) டென்மார்க்

ஈ) பின்லாந்து



✓ ஜெர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான மத்திய அமைச்சகம், விவசாயம் & விவசாயிகள் நல அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் ஜவுளி அமைச்சகத்துடன் கூட்டிணைந்துள்ளது. 'பருத்திப் பொருளாதாரத்தில் நிலைத்தன்மை மற்றும் மதிப்பு கூட்டப்பட்டது' என்ற இந்தோ–ஜெர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் அமலாக்க ஒப்பந்தத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

✓ இந்தியாவில் நிலையான பருத்தி உற்பத்தியிலிருந்து மதிப்பு கூட்டலை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 4 பெரிய பருத்தி உற்பத்தி மாநிலங்களில் (தமிழ்நாடு, மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் மத்திய பிரதேசம்) இது கவனம் செலுத்துகின்றது.

---

**2. சமீபத்தில் உத்தரபிரதேசத்தில் தொடங்கப்பட்ட, "நதிநீர் வளர்ப்பு திட்டமானது" எந்தத் திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது?**

அ) PM கிரிஷி சஞ்சய் யோஜனா

**ஆ) PM மத்ஸ்ய சம்பதா யோஜனா ☑**

இ) ஒரு சொட்டு அதிக பயிர்

ஈ) PM பசல் பீமா யோஜனா



✓ "மீன்வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு & பால்வள அமைச்சகத்தின்கீழ் பிரதமர் மத்ஸ்ய சம்பதா யோஜனாவின்கீழ் ஒரு சிறப்பு நடவடிக்கையாக வடிவமைக்கப்பட்ட "ஆற்றுநீர் பண்ணை திட்டம்", மீன் உற்பத்தியை பெருக்குவதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத்திட்டத்தை உத்தரபிரதேச மாநிலம் கர் முக்தேஷ்வர் பிரிஜ்காட்டில் மத்திய அமைச்சர் ஸ்ரீ பர்ஷோத்தம் ரூபாலா தொடங்கிவைத்தார்.

---

**3. நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையின் பொருளாதார பிரிவின் தலைவர் யார்?**

அ) இந்தியப் பிரதமர்

ஆ) நிதி அமைச்சர்

இ) நிதி செயலாளர்

**ஈ) தலைமைப் பொருளாதார ஆலோசகர் ☑**



✓ தலைமைப்பொருளாதார ஆலோசகர் நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையின் பொருளாதார பிரிவின் தலைவர் ஆவார். கடந்த 2018 டிசம்பரில் இருந்து இந்தியாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக இருந்த கே வி சுப்ரமணியன், அந்தப் பதவியில் இருந்து விலகி, கல்வித்துறைக்குத் திரும்பியுள்ளார். FY19, FY20 & FY21'க்கான பொருளாதார ஆய்வுகளை வெளியிடுவதில் அவர் முக்கியபங்கு வகித்தார்.

---

**4. உலக மனநல நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) அக்டோபர் 10 ☑**

ஆ) அக்டோபர் 15

இ) அக்டோபர் 17

ஈ) அக்டோபர் 20

✓ ஒவ்வோர் ஆண்டும், அக்.10ஆம் தேதி உலக மனநல நாளாக உலக சுகாதார அமைப்பால் அனுசரிக்கப்படுகிறது. மனநலப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அது தொடர்பாக ஆதரவைத் திரட்டவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு அக்டோபர் 10 அன்று, "Mental health care for all: let's make it a reality" என்ற கருப் பொருளின்கீழ் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

**5. பன்னாட்டு எரிசக்தி முகமையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) ஜெனீவா **ஆ) பாரிஸ் ☑**

இ) தோகா ஈ) காத்மாண்டு

✓ பன்னாட்டு எரிசக்தி முகமை என்பது 1974ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். இது பிரான்சின் பாரிஸை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டமைப்பின் (OECD) கட்டமைப்பில் நிறுவப்பட்டது. IEA தனது முழுநேர உறுப்பினராக இந்தியாவை அழைத்துள்ளது. இந்த மன்றத்தில் முழுநேர உறுப்பினராக இருக்கும் பட்சத்தில், இந்தியா, 90 நாட்களுக்கு எண்ணெய் இருப்புக்களை பராமரிக்க வேண்டும்.

---

**6. மொத்த விலை குறியீட்டிற்கு கூடுதலாக, பொருளாதார ஆலோசக –ர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட பிறிதொரு தரவு எது?**

அ) நுகர்வோர் விலைக் குறியீடு (அகில இந்தியா)

ஆ) நுகர்வோர் விலைக் குறியீடு (நகர்ப்புறம்)

**இ) முக்கிய தொழில்கள் உற்பத்தியின் மாதாந்திர குறியீடு ☑**

ஈ) உணவு பணவீக்கம்

✓ பொருளாதார ஆலோசகர் அலுவலகம் என்பது மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின்கீழ் உள்ள தொழிற்துறை மற்றும் உள் நாட்டு வணிக ஊக்குவிப்பு துறையுடன் இணைக்கப்பட்ட அலுவலகம் ஆகும். மாதாந்திர மொத்த விற்பனை விலை குறியீடுகளைத் தொகுத்தல் மற்றும் வெளியிடுதல் மற்றும் முக்கிய தொழில்துறை உற்பத்தியின் மாதாந்திர குறியீட்டைத் தொகுத்தல் மற்றும் வெளியிடுதல் ஆகியவை இவ்வலுவலகத்தின் முக்கிய செயல்பாடு ஆகும்.

✓ மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம், 2021 செப்டம்பரில் ஆறு மாதங்களில் இல்லாத அளவிற்கு 10.66%ஆக குறைந்துள்ளது.

---

**7. இளவரசர் வில்லியமின் முதல் எர்த்ஷாட் பரிசை வென்ற இந்திய தொழிலதிபர் யார்?**

அ) ரத்தன் டாடா

ஆ) அனில் அம்பானி

**இ) வித்யுத் மோகன் ☑**

ஈ) தீபிந்தர் கோயல்



✓ இந்திய தொழிலதிபரான வித்யுத் மோகன், வேளாண் கழிவுகளை மறு –சுழற்சிசெய்து, விற்கக்கூடிய உயிரித் தயாரிப்புகளாக மாற்றியதற்காக, இளவரசர் வில்லியமின் முதல் எர்த்ஷாட் பரிசை, "எங்கள் காற்றை தூய்மைப்படுத்து" பிரிவின்கீழ் வென்றுள்ளார். இந்தப் பரிசு, 'சுற்றுச்சூழல் ஆஸ்கர்' என்றும் அழைக்கப்படுகிறது. பூமியைக் காப்பாற்ற பாடுபடும் கண்டுபிடிப்பாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

---

**8.உற்பத்தி இடைவெளி அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) WEF

**ஆ) UNEP ☑**

இ) FAO

ஈ) NITI ஆயோக்

✓ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP), முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து 2021 – உற்பத்தி இடைவெளி அறிக்கையை வெளியிட்டது. அரசாங்கத்தின் நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் திட்டமிட்ட உற்பத்தி மற்றும் பாரிஸ் ஒப்பந்த வரம்புகளை பூர்த்தி செய்யும் உலகளாவிய உற்பத்தி நிலைகளு –க்கு இடையிலான இடைவெளியை இவ்வறிக்கை அளவிடுகிறது.

✓ புதிய அறிக்கையின்படி, புவி வெப்பமடைதலை 1.5 டிகிரி செல்சியஸாகக் கட்டுப்படுத்த, 2030ஆம் ஆண்டில் நிலையான அளவைவிட 2 மடங்கு அதிகமாக புதைபடிவ எரிபொருட்களை உற்பத்தி செய்ய அரசாங்கங்கள் திட்டமிட்டுள்ளன.

---

**9. இராணுவ பொறியாளர் சேவைகளுக்கான 'வலைத்தள அடிப்ப –டையிலான திட்ட கண்காணிப்பு வலைத்தளத்தை' உருவாக்கிய நிறுவனம் எது?**

அ) DRDO

**ஆ) BISAG–G ☑**

இ) CDAC

ஈ) NIELIT

- ✓ இராணுவப் பொறியாளர் சேவைகளுக்கான திட்ட கண்காணிப்பு இணையதளத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தில்லியில் தொடங்கிவைத்தார். டிஜிட்டல் இந்தியா திட்டப்படி இந்த இணையதளத் –தை விண்வெளிப் பயன்பாடுகள் மற்றும் புவி தகவல்களுக்கான பாஸ்கராச்சார்யா தேசிய மையம் (BISAG–G) உருவாக்கியது.
- ✓ புதிதாகத் தொடங்கப்பட்ட இந்த ஒருங்கிணைந்த தளம், இராணுவப் பொறியாளர் சேவைகள் அமல்படுத்திய முதல் திட்ட மேலாண்மை – நிர்வாகம் ஆகும். இதன்மூலம் இராணுவத் திட்டப்பணிகளை ஆரம்பம் முதல் முடிவு வரை அவ்வப்போது கண்காணிக்க முடியும்.

---

**10.பின்வரும் எம்மாநிலத்துடன் இணைந்து, கலாச்சார அமைச்சகம், அபிதம்ம நாளை ஏற்பாடு செய்கிறது?**

அ) பீகார்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) சிக்கிம்

ஈ) மேகாலயா



- ✓ கலாச்சார அமைச்சகம், பன்னாட்டு பௌத்த கூட்டமைப்பு ஆகியவை உத்தர பிரதேச மாநில அரசுடன் இணைந்து அபிதம்ம நாளை அஸ்வின் பூர்ணிமா நன்னாளில் ஏற்பாடு செய்கிறது. பிரதமர் நரேந்திர மோடியும் மகாபரிநிர்வாண கோவிலில் அபிதம்ம நாளின் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இலங்கை, தாய்லாந்து, மியான்மர், தென்கொரியா, நேபாளம், பூடான், கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற துறவிகள் மற்றும் பல நாடுகளின் தூதுவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அக்.24 – உலக போலியோ விழிப்புணர்வு நாள்**

---

**2. இந்திய கடற்படையின் முதல் பயிற்சிப் பிரிவு இலங்கை பயணம்**

இந்திய கடற்படையில் முதல் பயிற்சிப் பிரிவில் உள்ள கப்பல்களான சுஜாதா, மகா், சா்துல், சுதா்ஷினி, தாரங்கினி மற்றும் கடலோர பாதுகாப்புப் படைக் கப்பல் விக்ரம் ஆகியவை ஞாயிற்றுக்கிழமை (அக். 24) முதல் 28–ஆம் தேதி வரை இலங்கைக்கு 4 நாள் பயணம் மேற்கொண்டுள்ளன.

வெளிநாட்டில் கடற்படை அதிகாரிகளின் 100 மற்றும் 101–ஆவது ஒருங்கிணைந்த பயிற்சிக்காக இந்தக் கப்பல்கள் சென்றுள்ளன.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு நாடுகளின் சமூக–அரசியல் மற்றும் கடல்சாா் அம்சங்களை தெரியப்படுத்துவதன் மூலம் இளம் அதிகாரிகளின் அனுபவங்களை விரிவுபடுத்துவதை இந்தப் பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் வெளிநாடுகளுடன் நட்புறவு மேம்படும்.

இந்திய கடற்படையின் தெற்கு கட்டுப்பாட்டு மைய தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் ஏ.கே.சாவ்லா தலைமையில் இந்தக் கப்பல்கள் பயிற்சிக்கு செல்கின்றன. வெளிநாடுகளைச் சோ்ந்த கடற்படையினருக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய கடற்படை பயிற்சி அளித்து வருகிறது. தற்போதுவரை இலங்கையைச் சோ்ந்த கடற்படை அதிகாரிகள் மற்றும் வீரா்கள், இந்திய கடற்படையின் தெற்கு கட்டுப்பாட்டு மையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனா்.

இந்திய கடற்படையின் மகா் மற்றும் சா்துல் ஆகிய கப்பல்கள் 101–ஆவது பயிற்சிப் பிரிவினருடன் கொழும்பு செல்கின்றன. சுஜாதா, சுதா்ஷினி, தாராங்கினி மற்றும் கடலோர பாதுகாப்புப் படைக் கப்பல் விக்ரம் ஆகியவை 100–ஆவது பயிற்சிப் பிரிவினருடன் திருகோணமலை செல்கின்றன. இருநாட்டு கடற்படைகளின் செயல்திறனை அதிகரிக்கும் வகையில், பலவித பயிற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. பயிற்சியில் ஈடுபடும் அனைவருக்கும் இரண்டு தவணை கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன மற்றும் கரோனா பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளன.

---

**3. 2014–க்குப் பிறகு கங்கை நதியின்தரம் உயா்வு: என்எம்சிஜி தகவல்**

2014–ஆம் ஆண்டுக்குப் பிறகு கங்கை நதி நீரின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயா்ந்துள்ளது என்று தேசிய கங்கை தூய்மை இயக்கத்தின் (என்எம்ஜிசி) இயக்குநா் கூறியுள்ளாா். இதுகுறித்து அவா் மேலும் கூறியதாவது:

கடந்த 2014–இல் கங்கை நதியில் 53 இடங்களில் அதன் தரம் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. அதில், 32 இடங்களில் குளிப்பதற்கு உகந்த தரத்தில் தண்ணீா் இருந்தது. தண்ணீரில் கரைந்திருக்கும் ஆக்சிஜனின் அளவை வைத்து அதன் தரம் நிா்ணயம் செய்யப்படுகிறது.

அதைத் தொடா்ந்து, 2021–ஆம் ஆண்டில் கண்காணிப்பு இடங்களின் எண்ணிக்கை 97–ஆக அதிகரிக்கப்பட்டது. அவற்றில் 68 இடங்களில் குளிப்பதற்கு உகந்த தரத்தில் தண்ணீா் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த 2014–இல் இருந்து 2021–ஆம் ஆண்டுக்குள் கங்கை நதியில் தண்ணீரின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயா்ந்துள்ளது.

கங்கை நதி நீரின் தரத்தை உயா்த்த கங்கையும், அதன் கிளை ஆறுகளும் பாயும் நகரங்களில் நீா் சுத்திகரிப்பு நிலையங்களை நவீனப்படுத்தியது, சடலங்களை எரிக்கும் இடங்கள் கட்டுவது, ஆற்றங்கரைகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துவது, நீரின் மேற்பரப்பில் தேங்கும் குப்பைகளை அகற்றுவது, நதியில் கலக்கும் நீரின் வழியாக குப்பைகள் வந்து சோ்வதைத் தடுப்பது, அரண்கள் கட்டுவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின் மூலமாக, நீரின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயா்ந்துள்ளது. இன்னும் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட இருப்பதால், கங்கை நீரின் தரம் மேலும் அதிகரிக்கும் என்றாா் அவா்.

கங்கை நதியைத் தூய்மைப்படுத்துவதற்காக, தேசிய கங்கை தூய்மை இயக்கத்தை மத்திய அரசு ரூ.20,000 கோடியில் கடந்த 2015–ஆம் ஆண்டு தொடங்கியது.

---

**1.** சமீப செய்திகளில் இடம்பெற்ற *Allium negianum* கண்டுபிடிக்கப்பட்ட இந்திய மாநிலம்/UT எது?



அ) அஸ்ஸாம்

**ஆ) உத்தரகாண்ட் ☑**

இ) அருணாச்சல பிரதேசம்

ஈ) கோவா

✓ 2019ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் மாநிலத்தில் *Allium negianum* என்ற தாவரமானது கண்டுபிடிக்கப்பட்டதாக, PhytoKeys இதழில் வெளியிடப்பட்டது. இது, அல்லியத்தின் புதிய இனமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

✓ அல்லியம் என்பது உலகளவில் வெங்காயம் மற்றும் பூண்டுபோன்ற 1,100 இனங்களை உள்ளடக்கிய ஓர் இனமாகும். இது உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள சாமோலி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இது கடல் மட்டத்திலிருந்து 3,000 முதல் 4,800 மீ உயரத்தில் வளர்கிறது. *Allium negianum* என்ற அறிவியல் பெயர், ஆய்வாளர் மற்றும் அல்லியம் சேகரிப்பாளரான மறைந்த டாக்டர் குல்தீப் சிங் நேகியைப் போற்றுகிறது.

---

**2.** 2021 அக்டோபர் நிலவரப்படி, T20 சர்வதேச கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டை வீழ்த்தியவர் யார்?



அ) R அஸ்வின்

ஆ) ஜஸ்பிரித் பும்ரா

**இ) ஷகிப் அல் ஹசன் ☑**

ஈ) டிம் சௌத்தி

✓ வங்காளதேச வீரர் ஷகிப் அல் ஹசன் சர்வதேச T20 கிரிக்கெட்டில் லசித் மலிங்காவின் விக்கெட்டுகளை முறியடித்ததன்மூலம் அதிக விக்கெட்டுகளை (107ஆவது) வீழ்த்தினார். ஷாகிப், 89 T20 சர்வதேச போட்டிகளில் விளையாடி 108 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவ்வடிவத்தில், 100 விக்கெட்டுகள் மற்றும் 1000+ ரன்களை எடுத்த ஒரே கிரிக்கெட் வீரர். 99 விக்கெட்டுகளுடன் நியூசிலாந்தின் டிம் சௌத்தி 3ஆவது இடத்திலுள்ளார்.

---

**3.** சமீப செய்திகளில் இடம்பெற்ற நெச்சிபு சுரங்கப்பாதை அமைந்துள்ள மாநிலம் எது?



**அ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஆ) உத்தரகாண்ட்

இ) சிக்கிம்

ஈ) பீகார்

✓ அருணாச்சல பிரதேசத்தில் உள்ள நெச்சிபு கணவாய் அருகே 500 மீ நீள சுரங்கவழியை எல்லைப்புறச்சாலைகள் அமைப்பு அமைத்து வருகிறது. இது சீன எல்லைக்கருகே, முன்னோக்கி தளத்தை நோக்கிச்செல்லும் வாகனங்களின் பயணநேரத்தைக் குறைப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. நெச்சிபு சுரங்கப்பாதை 5,600 அடி உயரத்தில் BRO'வின் வர்டக் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.

---

**4.** ஆயுர்வேத மூலிகைகளுக்கான பிரத்தியேக வனப்பகுதியான 'ஆயுஷ் வனம்' திறக்கப்பட்டுள்ள மாநிலம்/UT எது?



அ) இராஜஸ்தான்

**ஆ) குஜராத் ☑**

இ) பஞ்சாப்

ஈ) சண்டிகர்

✓ மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை மற்றும் ஆயுஷ் அமைச்சரான சர்பானந்தா சோனோவால், குஜராத்தின் காந்திதாமில் ஆயுர்வேத மூலிகைகளுக்கான பிரத்தியேக வனமான 'ஆயுஷ் வனத்தைத்' திறந்துவைத்தார்.

✓ தீனதயாள் துறைமுக அறக்கட்டளை வழங்கிய 30 ஏக்கர் நிலத்தில் 'ஆயுஷ் வனம்' அமைக்கப்பட்டது. நகர்ப்புறத்தில் பசுமையை மேம்படுத்தவும், கட்ச் பகுதியில் மரங்களின் அடர்த்தியை அதிகரிக்கவும் மரக்கன்று நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

---

**5.** சமீப செய்திகளில் இடம்பெற்ற தல்பியோட் இடுகாடு அமைந்துள்ள நாடு எது?



அ) ரஷ்யா

**ஆ) இஸ்ரேல் ☑**

இ) இத்தாலி

ஈ) அமெரிக்கா

✓ வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் தனது 5 நாள் இஸ்ரேல் பயணத்தின்போது, தல்பியோட் இடுகாட்டுக்குச் சென்றதை அடுத்து இவ்விடம் சமீப செய்திகளில் இடம்பெற்றது. ஜெருசலேமில் உள்ள தல்பியோட்டில் அமைந்துள்ள இது, முதல் உலகப்போரின்போது தங்கள் இன்னுயிரை தியாகஞ்செய்த இந்தியவீரர்களின் இடுகாடு ஆகும். இஸ்ரேல் முழுவதும் ஜெருசலேம், ராம்லே மற்றும் ஹைஃபாவில் உள்ள இடுகாடுகளில் சுமார் 900 இந்திய வீரர்கள் புதைக்கப்பட்டுள்ளனர். இந்திய இராணுவம், ஒவ்வோர் ஆண்டும் செப்.23'ஐ ஹைபா நாளாக நினைவுகூருகிறது.

---

**6.** ICC எலைட் பேனல் மேட்ச் ரெப்ரியுமான எந்த இந்திய கிரிக்கெட் வீரர், மேரிலெபோன் கிரிக்கெட் கிளப்பின் வாழ்நாள் உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ளார்?



அ) ஹர்பஜன் சிங்

**ஆ) ஜவகல் ஸ்ரீநாத் ☑**

இ) ராகுல் டிராவிட்

ஈ) VVS லட்சுமணன்

✓ இந்தியாவின் ஹர்பஜன் சிங் மற்றும் ஜவகல் ஸ்ரீநாத் ஆகியோர் மெரிலிபோன் கிரிக்கெட் கிளப்பின் வாழ்நாள் உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு 16 கிரிக்கெட் வீரர்களுக்கு இந்தத் தகுதி கொடுக்கப்பட்டது. ஹர்பஜன், டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவின் 3ஆவது அதிக விக்கெட்டுகள் (417 விக்கெட்டுகள்) வீழ்த்திய வீரராவார். மேலும், 700'க்கும் மேற்பட்ட சர்வதேச விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

✓ ஸ்ரீநாத், தற்போது ICC எலைட் பேனல் போட்டி நடுவராக உள்ளார். 315 ஒருநாள் விக்கெட்டுகளையும், 236 டெஸ்ட் விக்கெட்டுகளையும் வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளராவார்.

---

**7.** 'ஆதார் ஹேக்கத்தான் – 2021'ஐ நடத்தவுள்ள அமைப்பு எது?




அ) NITI Aayog

ஆ) NRDC

**இ) UIDAI ☑**

ஈ) RBI

✓ இந்திய தனித்துவ அடையாள ஆணையமானது (UIDAI) 2021 'ஆதார் ஹேக்கத்தானை' நடத்தவுள்ளது. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையின்படி, ஆதார் ஹேக்கத்தான்–2021 2 தலைப்புகளை மையமாகக் கொண்டது. "பதிவு மற்றும் புதுப்பித்தலை" மையமாகக்கொண்டு முதல் கருப்பொருள் அமைந்துள்ளது.

✓ முகவரியைப் புதுப்பிக்கும் போது குடியிருப்பாளர்கள் எதிர்கொள்ளும் சில நிஜ வாழ்க்கையின் சவால்களை இது உள்ளடக்கியதாக இருக்கும். ஹேக்கத்தானின் 2ஆவது கருப்பொருள் UIDAI வழங்கும் "அடையாளம் மற்றும் அங்கீகாரம்" தீர்வை மையமாகக் கொண்டுள்ளது. இந்தக்கருப்பொருளின்கீழ், ஆதார் எண் அல்லது அந்த தனிநபரின் இதர தனிப்பட்ட தகவலையும் பகிராமல் அடையாளத்தை நிரூபிக்க புதுமையான தீர்வுகளை UIDAI கோருகிறது.

---

**8.** 'தேசிய சாலை பாதுகாப்பு வாரியத்தின்' தலைமையகம் உள்ள இந்திய நகரம் எது?



அ) மும்பை

**ஆ) புது தில்லி ☑**

இ) ஔரங்காபாத்

ஈ) கொல்கத்தா


✓ சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது தேசிய சாலைப் பாதுகாப்பு வாரியத்தின் கட்டமைப்பை அறிவித்துள்ளது. சாலைப் பாதுகாப்பு, புதுமைகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்

கொள்வது, போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுக்கு வாரியம் பொறுப்பாகும்.

✓ இவ்வாரியத்தின் தலைமை அலுவலகம் தேசிய தலைநகர பகுதியில் இருக்கவேண்டும். இந்தியாவில் மற்ற இடங்களில் அலுவலகங்களை வாரியம் நிறுவலாம். மத்திய அரசால் நியமிக்கப்பட வேண்டிய தலைவர் மற்றும் மூவருக்கு குறையாமல் எழுவருக்கு மிகாமல் உறுப்பினர்கள் வாரியத்தில் இருக்கவேண்டும்.

---

**9. 2021ஆம் ஆண்டிற்கான வேதியியலுக்கான நோபல் பரிசு, மூலக் கூறுகளை உருவாக்குவதற்கான பின்வரும் எந்தப் புதிய வழியை உருவாக்கியதற்காக வழங்கப்பட்டுள்ளது?**



**அ) சமச்சீரற்ற ஆர்கனோகாடலிசிஸ் ☑**

ஆ) மாற்றப்பட்ட DNA'க்கள்

இ) மாற்றப்பட்ட mRNA'க்கள்

ஈ) இவற்றில் ஏதுமில்லை

✓ 2021ஆம் ஆண்டிற்கான வேதியியலுக்கான நோபல் பரிசு, பெஞ்சமின் லிஸ்ட் மற்றும் டேவிட் டபிள்யூசி மேக்மில்லனுக்கு வழங்கப்பட்டுள்ளது. மூலக்கூறுகளை உருவாக்குதற்கான "சமச்சீரற்ற ஆர்கனோகாடலிசிஸ்" எனப்படும் புதிய வழியை உருவாக்கியதற்காக இப்பரிசு வழங்கப்பட்டு உள்ளது. நோபல் பரிசுக்குழுவின்படி, லிஸ்ட் & மேக்மில்லன் ஆகியோர் சுயாதீனமாக ஒரு புதிய வினையூக்க வழியை உருவாக்கினர்.

---

**10. 2021 – உலக பருத்தி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




**அ) There's more to cotton than you think ☑**

ஆ) Sustainable Cotton

இ) e-commerce in Cotton

ஈ) White Gold: Cotton

✓ பன்னாட்டு பருத்தி ஆலோசனைக் குழு (ICAC) மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) ஆகியவை இணைந்து உலக பருத்தி நாளை நிறுவின. இது, கடந்த 2019ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அக்.7 அன்று கொண்டாடப்படுகிறது. "There's more to cotton than you think" என்பத் நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

✓ பருத்தியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை பரப்புவது இந்த நாளின் நோக்கமாகும். உலகில் உள்ள பருத்திப் பொருளாதாரங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் இது வலியுறுத்துகிறது. 2019ஆம் ஆண்டில், ஜெனிவாவில், முதல் உலக பருத்தி நாள் கொண்டாடப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 5 ஆண்டுகளில் பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி 334% அதிகரிப்பு**

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்புத் தளவாடங்கள் ஏற்றுமதி 334% அதிகரித்துள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு சார்பில் குஜராத் தலைநகர் காந்திநகரில் அடுத்த ஆண்டு மார்ச் 11-13ஆம் தேதி வரை பாதுகாப்பு கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியை பிரபலப்படுத்தும் நோக்கில் பல நாடுகளுக்கான தூதர்களை அமைச்சர் ராஜ்நாத்சிங் சந்தித்துப்பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்புத் தளவாடங்கள் ஏற்றுமதி 334% அதிகரித்துள்ளது. 75'க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு போர்த் தளவாடங்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருகிறது. அதிக தரம், போட்டியிடும் திறன் ஆகியவற்றின் காரணமாக இந்திய போர்த் தளவாடங்கள் அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பாதுகாப்பு கண்காட்சி, போர்த் தளவாடங்கள் உற்பத்தியில் காணப்படும் நவீன தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தும். பாதுகாப்பு ஆராய்ச்சி-மேம்பாட்டில் இந்தியா படைத்துள்ள சாதனைகளையும் எதிர்கால வாய்ப்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் அந்தக் கண்காட்சி இருக்கும்.

குறுகிய காலகட்டத்தில் பாதுகாப்புத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த கொள்கைகள் ஆகியவற்றையும் கண்காட்சி எடுத்துரைக்கும். பாதுகாப்பு கண்காட்சியில் பங்கேற்கும் நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவு மேம்படும் என்பதால், கண்காட்சியில் பங்கேற்க நாடுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

பாதுகாப்பு உற்பத்திசார்ந்த விவகாரங்களில் மற்ற நாடுகளுக்குப் போதிய ஒத்துழைப்பை நல்கி ஒருங்கிணைந்து பணியாற்ற இந்தியா தயாராக உள்ளது. கலாசாரம், கலை, உணவுப் பழக்கவழக்கம் உள்ளிட்டவற்றில் குஜராத் சிறந்து விளங்கி வருகிறது. அங்கு நடைபெறவுள்ள பாதுகாப்பு கண்காட்சியில் பங்கேற்கும் நாடுகளுக்கு சிறந்த வாய்ப்புகள் உருவாகும்.

சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டை இந்தியா கொண்டாடி வரும் சூழலில், பாதுகாப்புக் கண்காட்சியை சிறப்புடன் நடத்துவதற்கான நடவடிக்கை -களை அனைத்துநாடுகளுடனும் இணைந்து இந்தியா மேற்கொள்ளும் என்றார் அவர்.

---

**2. பசுமைஇல்ல வாயுக்கள்வெளியேற்றம் புதிய உச்சம்: ஐ.நா. அமைப்பு அறிக்கை**

வெப்பமயமாதல் உள்ளிட்ட பருவநிலை மாற்றத்துக்கு முக்கியக் காரணியாக விளங்கும் பசுமைஇல்ல வாயுக்கள் வெளியேற்றம் கடந்த ஆண்டு புதிய உச்சத்தைத் தொட்டதாக ஐ.நா.வின் உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக உலக வானிலை அமைப்பின் ஆண்டறிக்கையை வெளியிட்டு அதன் பொதுச்செயலர் பெட்டரி டாலஸ் கூறியதாவது:

முக்கியமான பசுமை இல்ல வாயுவான கார்பன் டைஆக்ஸைடின் (கரிய -மிலவாயு) வெளியேற்றமானது உலக சராசரி அளவானது 10 இலட்சத்து -க்கு 413.2 பாகங்கள் என்ற புதிய உச்சத்தை 2020'இல் எட்டியது. பொதுமுடக்கம் உள்ளிட்ட கரோனா கட்டுப்பாடுகளால் புதைபடிவ எரிபொருள்களிலிருந்து வெளியாகும் கார்பன் டைஆக்ஸைடின் வெளி -யேற்றம் குறைந்தபோதும், இந்த உச்சமானது கடந்த 10 ஆண்டுகளில் அதிகமாகும். இதன்மூலம் வெப்பமயமாதல் அதிகரிக்கும். அமேசான் மழைக்காடுகள் அழிப்பும் இதற்கு ஒரு முக்கியமான காரணம் ஆகும்.

இதற்கு முன்னர் 2015'இல் 10 இலட்சத்துக்கு 400 பாகங்கள் என்ற அளவை எட்டியிருந்தது. இது, நமது அன்றாட வாழ்க்கை, நமது குழந்தை -களின் எதிர்காலத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள் -ளது. மனிதர்களால் வெளியேற்றப்படும் கரியமிலவாயுவானது எண்ணெய், வாயு போன்ற புதைபடிவ எரிபொருள்களை எரிப்பதால் அல்லது சிமெண்ட் உற்பத்தி செய்வதிலிருந்து ஏற்படுகிறது. பருவ நிலையில் மூன்றில் இரு பங்கு மாற்றத்தை இது ஏற்படுகிறது.

கரோனா தொற்றால் கடந்த ஆண்டு தொழில்கள் முடங்கி, பொருளாதார தேக்கநிலை ஏற்பட்டு தற்காலிகமாக கரியமிலவாயு வெளியேற்றம் குறைந்திருந்தாலும், பசுமைஇல்ல வாயுக்கள் வெளியேற்றத்தில் அது வெளிப்படையான எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்காட்லாந்தில் ஐ.நா.வின் பருவநிலை மாற்ற மாநாடு அக்.31-ஆம் தேதி தொடங்கி நவம்பர்.12 வரை நடைபெறவுள்ள நிலையில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

---

**1. இந்தியாவில் உள்ள 51 புலிகள் காப்பகங்களிலும் அக்.2ஆம் தேதி தொடங்கிய புலிப்பேரணியின் கருப்பொருள் என்ன?**




அ) Amrut Bharat

**ஆ) India for Tigers – A Rally on Wheels ☑**

இ) Atma Nirbhar Tigers

ஈ) Tiger on Wheels

✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ், "India for Tigers – A Rally on Wheels" என்ற கருப்பொருளின்கீழ், நாட்டில் உள்ள 51 காப்பகங்களில் ஒரு பேரணியைத் தொடங்கினார். 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இது தொடங்கப்பட்டுள்ளது.

---

**2. 'The State of Climate Services 2021: Water' என்ற பெயரிலான அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

**அ) WMO ☑**

ஆ) FAO

இ) NITI ஆயோக்

ஈ) NABARD

✓ உலக வானிலை அமைப்பானது (WMO) சமீபத்தில் 'The State of Climate Services 2021: Water' என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

✓ இந்த அறிக்கை உலக வானிலை அமைப்பால் ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் இருபதுக்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள், மேம்பாட்டு முகமைகள் மற்றும் அறிவியல் நிறுவனங்களின் உள்ளீடுகளை உள்ளடக்கியது. இவ்வறிக்கையின்படி, 2018ஆம் ஆண்டில் உலகளவில் சுமார் 3.6 பில்லியன் மக்களுக்கு ஓர் ஆண்டில் ஒருமாதகாலத்திற்கு போதுமான அளவு தண்ணீர் கிடைப்பதில்லை. இந்த நிலை, 2050ஆம் ஆண்டில், ஐந்து பில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'Mosquirix' என்பது எந்த நோய்க்கு எதிராக WHO'ஆல் அங்கீகரிக்கப்பட்ட முதல் தடுப்பூசியாகும்?**



அ) டெங்கு

**ஆ) மலேரியா ☑**

இ) ஜிகா

ஈ) மேற்கு நைல் வைரஸ்

✓ உலக நலவாழ்வு அமைப்பானது குழந்தைகளுக்கான முதல் மலேரியா தடுப்பூசியைப் பயன்படுத்த பரிந்துரைத்துள்ளது. WHO குழு RTS, S/AS01 மலேரியா அல்லது Mosquirix – பிரித்தானிய மருந்து தயாரிப்பாளரான கிளாக்ஸோஸ்மித்கிளைன் உருவாக்கிய தடுப்பூசியை அங்கீகரித்தது. உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி (WHO), மலேரியா, ஒவ்வோர் ஆண்டும் சுமார் 500,000 மக்களைக் கொல்கிறது; அவர்களுள் பாதி பேர் ஆப்பிரிக்காவில் உள்ள சிறார்களாவர்.

---

**4. சமீபத்தில் புவிசார் குறியீடு பெற்ற, 'ஜூடிமா' என்ற ஒருவகை மதுவானது பின்வரும் எந்த மாநிலத்தில், வீட்டிலேயே தயாரிக்கப்ப –டுகிறது?**




**அ) அஸ்ஸாம் ☑**

ஆ) மணிப்பூர்

இ) மேகாலயா

ஈ) மேற்கு வங்காளம்

✓ அஸ்ஸாம் மாநிலத்தின் திமாசா ஹசாவ் மாவட்டத்தைச் சேர்ந்த திமாசா பழங்குடியினரால் வீட்டிலேயே தயாரிக்கப்படும் அரிசி மதுவான 'ஜூடிமா' என்ற ஒருவகை மதுவுக்கு சமீபத்தில் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இது வெளிர் மஞ்சள் (அ) சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது. மெல்லிய நறுமணத்தில் அரிசிகொண்டு தயாரிக்கப்படும் புளிக்கவைக்கப்பட்ட பானமாகும் இது. இப்பானம் அவர்களின் பாரம்பரியத்தின் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது.

---

**5. 2021ஆம் ஆண்டு நோபல் பரிசை வென்ற அப்துல்ரசாக் குர்னா சார்ந்த நாடு எது?**



அ) இஸ்ரேல்

**ஆ) தான்சானியா ☑**

இ) அமெரிக்கா

ஈ) ஆஸ்திரேலியா

✓ தான்சானிய நாவலாசிரியர் அப்துல்ரசாக் குர்னா, காலனித்துவம் மற்றும் அகதிகள் மீதான தனது இலக்கியப் படைப்புகளுக்காக 2021ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசை வென்றார். 1948'இல் பிறந்த அப்துல்ரசாக் குர்னா, இந்தியப் பெருங்கடலில் உள்ள சான்சிபார் தீவில் வளர்ந்தார். 1960'களின் இறுதியில் அகதியாக இங்கிலாந்து நாட்டுக்குச் சென்றார்.

---

**6. 2021 – உலக போலியோ நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ) Leaving No one behind

**ஆ) Delivering on a Promise ☑**

இ) Inclusive and Inspirational

ஈ) No Polio World

✓ போலியோ சொட்டு மருந்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், போலியோவை ஒழிக்கவுமாக ஒவ்வோராண்டும் அக்டோபர்.24 அன்று உலக போலியோ நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Delivering on a Promise" என்பது 2021ஆம் ஆண்டு உலக போலியோ நாளுக்கானக் கருப்பொருளாகும். போலியோமைலிட்டிஸுக்கு எதிரான தடுப்பூசியை உருவாக்கிய முதல் குழுவை வழிநடத்திய ஜோனாஸ் சால்க் பிறந்ததை நினைவுகூரும் வகையில், ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பால் உலக போலியோ நாள் நிறுவப்பட்டது.

---

**7. ஐக்கிய நாடுகள் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) அக்டோபர் 21

**ஆ) அக்டோபர் 24 ☑**

இ) அக்டோபர் 25

ஈ) அக்டோபர் 27

✓ கடந்த 1945ஆம் ஆண்டில் ஐநா சாசனம் அமலுக்கு வந்ததன் நினைவாக ஒவ்வோராண்டும் அக்.24 அன்று ஐநா நாள் அனுசரிக்கப்படுகிறது. ஐநா, அதிகாரப்பூர்வமாக 24 அக்டோபர் 1945 அன்று நடைமுறைக்கு வந்தது. 2021ஆம் ஆண்டு, ஐநா'இன் 76ஆவது ஆண்டு நிறைவைக்குறிக்கிறது. ஐநா சாசனம் என்பது உலகளாவிய அமைதி மற்றும் சமத்துவத்தை நோக்கிச் செயல்பட்டு வரும் ஐநா'இன் நிறுவன ஆவணமாகும்.

---

**8. 2021 – ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகளுக்கான உயரிய விருதான சாகரோவ் பரிசு, யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**



அ) விளாடிமிர் புதின்

**ஆ) அலெக்ஸி நவல்னி ☑**

இ) கோத்தபய இராஜபக்ச

ஈ) நரேந்திர மோடி

✓ சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னிக்கு, ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகளுக்கான உயரிய விருதான சாகரோவ் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அபாரமான தனிப்பட்ட துணிச்சலைப்பாராட்டி, ஐரோப்பிய நாடாளுமன்றம் அவருக்கு இந்தப் பரிசை வழங்கியுள்ளது. ரஷ்யாவின் ஆளும் அரசாங்கத்தின் ஊழலுக்கு எதிராக அவர் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறார்.

---

**9. தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில், 'சிறந்த திரைப் பட'த்திற்கான விருதை வென்ற திரைப்படம் எது?**




**அ) மரைக்காயர்: அரபிக்கடலின் சிங்கம் ☑**

ஆ) சிச்சோர்

இ) அசுரன்

ஈ) கேசரி

- ✓ தில்லியிலுள்ள விஞ்ஞான் பவனில் வைத்து 67ஆவது தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா வழங்கினார். சிறந்த திரைப்படத்திற்கான விருது பிரியதர்ஷனின் மலையாளத்திரைப் படமான "மரைக்காயர்: அரபிக்கடலின் சிங்கத்திற்கு" வழங்கப்பட்டது.
- ✓ மணிகர்னிகா மற்றும் பங்கா படங்களில் நடித்ததற்காக ஹிந்தி நடிகை கங்கனா ரனாவத், 'சிறந்த நடிகை'க்கான விருதை வென்றார். சிறந்த நடிகருக்கான விருதை 'போன்ஸ்லே' படத்திற்காக மனோஜ் பாஜ்பாய் மற்றும் 'அசுரன்' படத்திற்காக தனுஷ் ஆகியோர் பெற்றனர்.

**10.** **2021 – கொங்கன் சக்தி என்பது இந்தியாவிற்கும் பின்வரும் எந்நாட்டிற்கும் இடையிலான முதல் முப்படைகளின் கூட்டுப்பயிற்சி ஆகும்?**

**அ) இங்கிலாந்து (UK) ☑**



ஆ) அமெரிக்கா

இ) பிரான்ஸ்

ஈ) ஜப்பான்

- ✓ 2021 – கொங்கன் சக்தி என்பது இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் (UK) இடையிலான முதல் முப்படைகளின் கூட்டுப் பயிற்சியாகும். ஒருவார காலம் நடக்கும் இப்பயிற்சி சமீபத்தில் தொடங்கியது. இப்பயிற்சியானது பரஸ்பர அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வெளிப்படுத்துவதற்கும் ஒரு தளமாக இருக்கும். இப்பயிற்சியின் கடல்சார் பயிற்சிப் பகுதி இந்தியாவின் மேற்கு கடற்கரையில் நடத்தப்படும் மற்றும் துறைமுகம்சார் பயிற்சி மும்பையில் நடைபெறும். இப்பயிற்சியின் தரைசார் பயிற்சி உத்தரகாண்டில் உள்ள சௌபதியாவில் நடைபெறும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மாணவர்களின் கற்றல் இடைவெளியை சரிசெய்ய ரூ.200 கோடியில் – 'இல்லம் தேடி கல்வி' திட்டம் இன்று தொடக்கம்:**

'இல்லம் தேடி கல்வி' திட்டத்தை மரக்காணத்தில் முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

தமிழகத்தில் கரோனா பரவல் காரணமாக பள்ளிக்குழந்தைகளின் கற்றலில் ஏற்பட்டுள்ள இடைவெளியை சரிசெய்யும் நோக்கில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம் (எஸ்எஸ்ஏ) சார்பில் 'இல்லம் தேடி கல்வி' என்ற திட்டம் ₹200 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது.

குழந்தைகளின் கற்றல் இடைவெளியை குறைக்கவும், இடைநிற்றலை தவிர்க்கவும் 'இல்லம் தேடி கல்வி' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டம்மூலம் பள்ளிக்குழந்தைகளுக்கு தினமும் மாலை வேளையில் ஆடல், பாடல், நாடகம், பொம்மலாட்டம் போன்றவைமூலம் மகிழ்ச்சியான முறையில் தன்னார்வலர்கள் கற்றுக்கொடுப்பார்கள்.

சோதனை அடிப்படையில் முதல்கட்டமாக காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நீலகிரி, மதுரை, கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**2. சிறப்பாக பணியாற்றும் போலீஸாருக்கு நட்சத்திர காவலர் விருது: காவல் ஆணையர் அறிவிப்பு**

சிறப்பாக பணியாற்றும் போலீஸாருக்கு இனி கூடுதலாக ஒவ்வொரு மாதமும் விருது வழங்கப்படும். கூடுதல் காவல் ஆணையர் (தலைமையிடம்) தலைமையிலான குழு, சென்னை பெருநகரகாவல் துறையில் சிறப்பான போலீஸாரை கண்டறிந்து அவர்களது பணியைமதிப்பிட்டு 'மாதத்தின் நட்சத்திர காவலர்' என்றவிருதை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

'மாதத்தின் நட்சத்திரகாவலர்' விருதை பெறதேர்ந்தெடுக்கப்படும் காவல –ருக்கு ₹5000 பண வெகுமதியுடன், தனிப்பட்ட செயல் திறன் பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்படும்.

**3. அமெரிக்கா: ஹிந்து பாரம்பரிய மாதமாக அக்டோபர் அறிவிப்பு**

இந்த மாதத்தை ஹிந்து பாரம்பரிய மாதமாகக் கொண்டாட அமெரிக்க ஹிந்துக்கள் முடிவு செய்துள்ளனர். இதுகுறித்து அமெரிக்க ஹிந்து அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அக்டோபர் மாதவாக்கில்தான் நவராத்திரி, தசரா, துர்கா பூஜை, தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளை உலகம் முழுவதும் உள்ள ஹிந்துக்கள் கொண்டாடுகின்றனர். எனவே, அமெரிக்காவில் ஹிந்து பாரம்பரிய மாதமாகக் கொண்டாட அக்டோபர்தான் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று ஹிந்து அமைப்பினர் முடிவு செய்தனர்.

**4. இந்தியாவில் அவதாரம் எடுத்துள்ள புதிய உருமாற்ற கொரோனா: அடுத்த பயங்கரமா ஏஒய் 4.2? வேகமாக பரவும் தன்மை கொண்டதால் பீதி**

இங்கிலாந்தைத் தொடர்ந்து இந்தியாவில் பரவியிருக்கும் ஏஒய் 4.2 எனும் புதிய வகை டெல்டா வைரஸ், கொரோனாவின் அடுத்த ஆதிக்கம் செலுத்தும் உருமாற்ற வரிசையா என மக்கள் மத்தியில் கவலை எழுந்துள்ளது. இது குறித்து இங்கிலாந்து மருத்துவ நிபுணர்கள் விளக்கம் அளித்துள்ளனர். உலகையே வாட்டி வதக்கிய கொரோனா வைரஸ் ஒருவழியாக ஓய்ந்துவிட்டது என மக்கள் நிம்மதி அடைந்துள்ள நிலையில், இங்கிலாந்தில் ஏஒய் 4.2 எனும் புதிய வகை டெல்டா வைரஸ் சமீபத்தில் கண்டறியப்பட்டது. தற்போது அதிகளவில் இந்த வைரஸ் வேகமாக பரவி வருகிறது.

இங்கிலாந்தில் தினசரி கொரோனா பாதிப்பு தற்போது அதிகரிக்க, ஏஒய் 4.2 வைரசே காரணம் என ஆய்வு முடிவுகள் கூறி உள்ளன. இதனால் டெல்டா வைரசை போல, அதிகளவில் மக்களை தொற்றும் அடுத்த ஆதிக்கம் செலுத்தும் உருமாற்ற வகை வைரசாக ஏஒய் 4.2 இருக்குமா? என மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. தற்போது இந்தியாவிலும் இந்த வகை வைரஸ் பரவி இருக்கிறது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளில் 17 மாதிரிகள் ஏஒய் 4.2 வகை வைரஸ் பாதிப்புக்குள்ளான –வை என உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே டெல்டாவின் மற்றொரு வீரியம்மிக்க ஏஒய்–4 வகை வைரசும் பரவத் தொடங்கியிருக்கிறது. எல்லாம் முடிந்துவிட்டது என எண்ணிக் கொண்டிருக்கும் நிலையில், இந்தப் புதிய பிறழ்வுகள் குறித்து நாம் கவலைகொள்ளவேண்டுமா என்பது குறித்து இங்கிலாந்து ஆய்வாளர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

கொரோனாவின் மரபணு மாற்றங்கள் மற்றும் புதிய வகை வைரஸ்களை கண்காணிப்பதற்கான எடின்பர்க் மற்றும் ஆக்ஸ்போர்டு ஆய்வாளர்களை கொண்ட கூட்டுக் குழு கூறியதாவது:

ஏஒய் 4.2 என்பது டெல்டா வைரசின் பரம்பரையாகும். தற்போது, இதே மரபணுவில் பல்வேறு உருமாற்றங்களுடன் 75 ஏஒய் பரம்பரை வைரஸ்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் ஏஒய் 4.2 வகை வைரஸ் இங்கிலாந்தில் வேகமாக பரவி வருகிறது. கடந்த 28 நாட்களில் 63% மாதிரிகளில் ஏஒய் 4.2 வரை வைரஸ் தொற்று கண்டறியப்பட்டு உள்ளது. இந்த வைரசில் ஒய்145எச் மற்றும் ஏ222வி ஆகிய இரு மரபணு உருமாற்றங்கள் காணப்படுகின்றன.

இதில், ஒய்145எச் உருமாற்றம் நோய் எதிர்ப்பிலிருந்து தப்பித்து தாக்கக் கூடிய திறன் கொண்டது. ஆனாலும், ஏஒய் 4.2 வகை வைரஸ் இங்கிலாந்து தவிர ஜெர்மனி, அயர்லாந்து, டென்மார்க்கிலும் பரவி இருக்கிறது. அங்கு பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. இதன் பரவல் படிப்படியாக மட்டுமே இருப்பதால், இது டெல்டா வைரஸ் அளவுக்கு வீரியமிக்கதாக இருக்காது என நம்பலாம். எனவே, ஏஒய் 4.2 வகை வைரஸ் கொரோனாவின் அடுத்த பயங்கரமாக இருக்குமா என இப்போதே கணிக்க முடியாது. இதற்கு இன்னும் அதிகப்படியான ஆய்வுகள் தேவை. இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

**5. 90,000 டன் யூரியா ஒதுக்கீடு: வேளாண்மைத் துறை தகவல்**

வேளாண்மைத் துறை சார்பில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் தற்போது நிலவி வரும் சாதகமான பருவமழை காரணமாக 13.75 லட்சம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளத் திட்டமிட்டு, இதுவரை 7.82 லட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. நடப்பு சம்பா (ராபி) பருவத்தில் நெல் மற்றும் இதர பயிர்களான சிறுதானியம், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி ஆகியவற்றின் சாகுபடி ஒட்டுமொத்தமாக 24.83 லட்சம் ஹெக்டேர் பரப்பில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் யூரியா மற்றும் டிஏபிஉள்ளிட்ட அனைத்து வகை உரங்களின் தேவை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு மத்திய ரசாயனத் துறைஅமைச்சருக்கு முதல்வர் கடிதம் எழுதினார். அதில், 20 ஆயிரம் டன்டிஏபி, 10 ஆயிரம் டன் பொட்டாஷ் உரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதையடுத்து, காரைக்கால் துறைமுகத்துக்கு வரவுள்ள 90ஆயிரம் டன் இறக்குமதி யூரியாவை, தமிழகத்துக்கு ஒதுக்கீடு செய்வதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இம்மாத இறுதிக்குள் ஸ்பிக் நிறுவனம் 10 ஆயிரம் டன், எம்எஃப்எல் உர நிறுவனம் 8,000 டன் யூரியா வழங்கத் திட்டமிட்டு உள்ளன. காரைக்கால் துறைமுகத்தில் தற்போதுள்ள 4,400 டன்யூரியா, பல்வேறு மாவட்டங்களுக்கு இரயில்மூலம் அனுப்பப்படும்.

தமிழகத்தில் தனியார் மற்றும் சில்லறை உர விற்பனை நிலையங்களில் யூரியா 64,111 டன், டிஏபி 23,654 டன், பொட்டாஷ் 35,590 டன், காம்ப்ளக்ஸ் 1,17,575 டன் உரங்கள் இருப்பில் உள்ளன. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**6. பெகாசஸ் விவகாரம்; உளவுபார்த்த குற்றச்சாட்டை விசாரிக்க வல்லுந –ர்கள் குழு அமைப்பு; மத்திய அரசிடம் தெளிவான விளக்கம் இல்லை: உச்ச நீதிமன்றம் தீர்ப்பு**

பெகாசஸ் மென்பொருள்மூலம் பத்திரிகையாளர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலரின் செல்போன் ஒட்டுக் கேட்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் வல்லுநர்களைக் கொண்ட விசாரணைக் குழு அமைத்து உச்ச நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த வல்லுநர்களைக் கொண்ட விசாரணைக் குழு, உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பில் செயல்படும்.

இந்த வல்லுநர்கள் குழுவுக்குத் தலைவராக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர் வி ரவிந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக, முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி அசோக் ஜோஷி, டாக்டர் சந்தீப் ஓப்ராய், குஜராத் காந்தி நகர் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் டீன் டாக்டர் நவீன் குமார் சவுத்ரி, கேரளாவில் உள்ள அமிர்தா விஷ்வ வித்யாபீடத்தின் பேராசிரியர் Dr பி பிரபாகரன், மும்பை ஐஐடி பேராசிரியர் Dr அஸ்வின் அனில் குப்தே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் நாட்டின் பெகாசஸ் உளவு மென்பொருள்மூலம் அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்களின் கைபேசிகள் ஒட்டுக்கேட்கப்படுவதாகத் தகவல் வெளியானது. இதுகுறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் முழுவதும் முடங்கியது.

இதனிடையே, பெகாசஸ் விவகாரம் தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் பத்திரிகையாளர் என் ராம், எடிட்டர் கில்ட் ஆஃப் இந்தியா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்பி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் சார்பில் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என் வி ரமணா, நீதிபதிகள் சூர்யகாந்த், ஹிமா ஹோலி ஆகியோர் கொண்ட அமர்வு விசாரித்து கடந்த செப்டம்பர் 13–ம் தேதி தீர்ப்பை ஒத்திவைத்தது.

இந்த வழக்கின் வாதத்தின்போது மத்திய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா அளித்த பிரமாணப் பத்திரத்தில், "பெகாசஸ் விவகாரத்தில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. பெகாசஸ் ஒட்டுக் கேட்பு விவகாரம் என்பது உயர்ந்த தொழில்நுட்பம் சார்ந்த விஷயம். ஆதலால், வல்லுநர்கள் குழுவின்மூலம் ஆய்வு செய்வது அவசியம். பெகாசஸ் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி உபாத்யாயா ஏற்கெனவே தெளிவுபடுத்தியுள்ளார்.

மனுதாரர்கள் கோரியபடி, பிரமாணப் பத்திரத்தில் தகவல்களை வெளியிடுவது நாட்டின் பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும். நாட்டின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை வெளியிட முடியாது. பெகாசஸ் விவகாரம் தொடர்பாக விரிவான பதில் பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்ய மத்திய அரசு விரும்பவில்லை. மத்திய அரசு சார்பில் எதையும் மறைக்க விரும்பவில்லை. அதனால்தான் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழுவை அமைத்து, குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த உத்தரவிடுகிறோம்.

குறிப்பிட்ட மென்பொருளைப் பயன்படுத்தி மத்திய அரசு கண்காணிப்பில் ஈடுபட்டதா, இல்லையா என்று வெளிப்படையாக விவாதிக்க அரசு விரும்பவில்லை. இந்தத் தகவல்கள் நாட்டின் நலனுக்கும் உகந்ததாக இருக்காது. ஆனால், வல்லுநர்கள் குழு ஆய்வு செய்து அளிக்கும் அறிக் –கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படும்" எனத்தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என் வி ரமணா, நீதிபதிகள் சூர்யகாந்த், ஹிமா ஹோலி ஆகியோர் கொண்ட அமர்வு இன்று தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பில் நீதிபதிகள் கூறியதாவது:

"சமூகத்தில் பல்வேறு வகையான மக்களைக் கண்காணிக்க இஸ்ரேலைச் சேர்ந்த பெகாசஸ் மென்பொருளை வைத்து மத்திய அரசு உளவு பார்த்ததாக எழுந்த குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க வல்லுநர்கள் குழுவை ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் அமைக்கிறோம்.

இந்த விவகாரத்தில் உளவு பார்க்கப்பட்டதா, இல்லையா என்பது குறித்த தெளிவான நிலைப்பாட்டை மத்திய அரசு எடுத்திருந்தால், இந்த உத்தரவை நாங்கள் பிறப்பித்திருக்க வேண்டிய கட்டாயம் இருந்திருக்காது. பெகாசஸ் குற்றச்சாட்டை மத்திய அரசு எந்தவிதத்திலும் மறுக்கவில்லை.

தேசியப் பாதுகாப்பு என்ற விஷயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வரும் மத்திய அரசுக்கு அனைத்திலும் விலக்கு அளிக்க முடியாது. நீதித்துறை மறு ஆய்வுக்கு எதிராக தேசியப் பாதுகாப்பைக் காரணம் கூறி சாதாரணமாகத் தடை விதிக்க முடியாது. இங்கு மத்திய அரசு தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தியிருக்க வேண்டும், நீதிமன்றத்தை வாய்மூடிப் பார்வையாளனாக ஆக்கிவிடக் கூடாது.

மக்களின் அந்தரங்க உரிமை, பேச்சு சுதந்திரம் உரிமை ஆகியவை உளவு பார்க்கும் விஷயத்தில் முழுமையாக மீறப்பட்டுள்ளன. உளவு பார்க்கப்பட்ட விவகாரம், அறிக்கை போன்றவை மற்ற நாடுகளில் தீவிரமாக எடுக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றன. மற்ற நாடுகளின் உளவு மென்பொருள் மூலம் கண்காணிப்புக்குப் பயன்படுத்துவது தேசியப் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும்.

என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை விரிவாகத் தெரிவிக்க பல வாய்ப்புகளை மத்திய அரசுக்கு நாங்கள் அளித்தோம். ஆனால், மத்திய அரசுக்கு வழங்கப்பட்ட அடுத்தடுத்த வாய்ப்புகளில் பிரமாணப் பத்திரத்தில் தெளிவான விளக்கம் இல்லை. இதைத் தெளிவுபடுத்தியிருந்தால் எங்களின் சுமை குறைந்திருக்கும்.

எந்தவிதமான விளக்கம் தராமல் மத்திய அரசு மறுப்பது என்பது போதுமானதாக இருக்காது. இந்தக் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட வேண்டும். அதனால்தான் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கிறோம்.

இந்த விவகாரத்தில் அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன, வெளிநாட்டு நிறுவனங்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அதைப் பாதுகாக்காமல், தடுக்காமல் நாங்கள் இருக்க முடியாது. அந்தரங்க உரிமை என்பது விவாதிக்கப்பட வேண்டியது. அந்தரங்க உரிமை என்பது அரசியல் தலைவர்கள் பத்திரிகையாளர்ளுக்கு மட்டுமல்ல, தனிநபர்களுக்கும் உரியது. அனைத்து முடிவுகளும் அரசியலமைப்புக்கு உட்பட்டு எடுக்கப்பட்டது".

இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பில் தெரிவித்தனர்.

---

**7. அக்னி–5 ஏவுகணை– இந்தியாவின் சோதனை வெற்றி!**

அக்னி 5 (Agni–V) ஏவுகணை ஒலியை விட வேகமாக செல்லும் ஆற்றல் படைத்தது. நொடிக்கு 8.16 கிமீட்டர் வேகத்திலும் ஒரு மணி நேரத்துக்கு 29,401 கிலோமீட்டர் வேகத்திலும் பாயும் திறன் கொண்டது.

ஆயிரம் கிமீட்டர் தொலைவில் உள்ள இலக்கை நிலப்பரப்பில் இருந்து துல்லியமாக தாக்கக்கூடிய அக்னி–5 ஏவுகணை சோதனையை இந்தியா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

அக்னி–5 என்னும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஒடிசாவில் உள்ள அப்துல்கலாம் தீவில் இந்தியா சோதித்து பார்த்தது. 5,000 கிமீட்டர் தொலைவில் உள்ள இலக்கை நிலப்பரப்பில் இருந்து துல்லியமாக தாக்கக்கூடிய இந்த அதிநவீன ஏவுகணை சோதனை வெற்றி பெற்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

3 பிரிவு திடமான எரிசக்தியுடன் கூடிய என்ஜின் பொருத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணை இலக்கை மிக துல்லியமாக தாக்குதல் திறன் கொண்டது. கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி–5 ஏவுகணையை இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் இணைந்து உருவாக்கியுள்ளன.

சுமார் 50 ஆயிரம் கிலோ எடைகொண்ட இந்த ஏவுகணை 1.7 மீட்டர் உயரத்தையும் 2 மீட்டர் விட்டத்தையும் கொண்டுள்ளது.

---

**8. முதுபெரும் காந்தியவாதி எஸ் என் சுப்பா ராவ் காலமானார்**

முதுபெரும் காந்தியவாதியான எஸ் என் சுப்பா ராவ் (92), ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உயிரிழந்தார்.

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் பிறந்த சுப்பா ராவ், பள்ளிப்பருவத்தி–லேயே மகாத்மா காந்திமீது பற்றுகொண்டவர். சக மாணவர்களை ஒன்று திரட்டி வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்கேற்றார். ர்களில் ஆங்கிலேய அரசுக்கு எதிரான போராட்ட வாசகங்களை எழுதியதற்காக கைது செய்யப்பட்டார். 13 வயது சிறுவன் என்பதால் அவரை பின்னர் போலீஸார் விடுவித்துவிட்டனர். எனினும், தொடர்ந்து விடுதலைப் போராட்ட கூட்டங்களில் பங்கேற்றார்.

மாணவர் காங்கிரஸில் பணியாற்றிய அவர், பின்னர் இளைஞர்களுக்கா–ன மகாத்மா காந்தி இயக்கத்தையும் நடத்தினார். சட்டப்படிப்பு முடித்த அவர், காங்கிரஸ் சேவாதளத்தில் பணியாற்றினார். ஜவாஹர்லால் நேரு, காமராஜர் உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவர். எனினும், நேரடியாக அரசியலில் ஈடுபடாமல் தொடர்ந்து பல்வேறு வழிகளில் நாட்டுக்கும், சமூகத்துக்கும் சேவையாற்றி வந்தார்.

---

**1. பன்றியின் சிறுநீரகத்தை மனிதனுக்கு வெற்றிகரமாக மாற்றிப் பொருத்தி சாதனை படைத்துள்ள நாடு எது?**

அ) இந்தியா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) ரஷ்யா

ஈ) சீனா



✓ முதன்முதலாக, நியூயார்க்கில் அமைந்துள்ள ஒரு சுகாதார மையத்தின் மருத்துவர்கள். பன்றியின் சிறுநீரகத்தை தற்காலிகமாக மனிதனுக்கு மாற்றிப்பொருத்தினர். இது 'Xeno-transplantations' எனப்படும் விலங்கு-மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான குறிப்பிடத்தக்க படிநிலை ஆக கருதப்படுகிறது. பன்றி உயிரணுக்களில் கிளைக்கான் எனப்படும் சர்க்கரை மூலக்கூறு இருப்பதால், மனித நோயெதிர்ப்பு மண்டலம் அதனை உடனடியாக நிராகரிப்பதைத் தவிர்ப்பதற்காக, மருத்துவர்கள் பன்றியின் மரபணுக்களை மாற்றியமைத்தனர்.

---

**2. நடப்பாண்டின் (2021) உலகளாவிய உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில், இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) 62

**ஆ) 71 ☑**

இ) 83

ஈ) 94



✓ 2021 – உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீட்டில், 113 நாடுகளில் 57.2 புள்ளிகளுடன் 71ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. இது, எகனாமிஸ்ட் இம்பாக்ட் மற்றும் கோர்டேவா அக்ரி–சயின்ஸ் ஆகியவற்றால் வெளியிடப்பட்ட ஓர் உலகளாவிய அறிக்கையாகும்.

✓ அயர்லாந்து, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பின்லாந்து, சுவிச்சர்லாந்து, நெதர்லாந்து, கனடா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகியவை 77.8 – 80 புள்ளிகளுடன் குறியீட்டின் முதலாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டன. வருமானம் மற்றும் பொருளாதார சமத்துவமின்மை உள்ளி–ட்ட 58 தனித்துவமான குறிகாட்டிகளின் அடிப்படையில் இது உள்ளது.

---


**3. இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 'காவலர் நினைவு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) அக்டோபர்.21 ☑**

ஆ) அக்டோபர்.23

இ) அக்டோபர்.24

ஈ) அக்டோபர்.26




✓ இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் அக்.21 அன்று 'காவலர் நினைவு நாள்' அனுசரிக்கப்படுகிறது. 1959ஆம் ஆண்டு சீனப்படைகளுடன் போரிட்டு லடாக்கில் உள்ள ஹாட் ஸ்பிரிங்ஸில் உயிரிழந்த 10 காவலர்களின் நினைவாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. நாடு முழுவதும் உள்ள காவல்துறை, காவல்துறை மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளைச் சார்ந்த 377 தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியது. COVID தொற்றின் போது உயிர்நீத்த வீரர்களுக்கும் அவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

---

**4. 2021 – உலகளாவிய வேளாண் உற்பத்தி அறிக்கையின்படி, மொத்த காரணி உற்பத்தித்திறனின் ஆண்டு விகிதம் என்ன?**

அ) 0.50 %

**ஆ) 1.36 % ☑**

இ) 2.50 %

ஈ) 4.00 %



✓ 2021 – உலகளாவிய வேளாண் உற்பத்தித்திறன் அறிக்கையின்படி, மொத்த காரணி உற்பத்தித்திறனானது (TFP) ஆண்டு விகிதத்தில் 1.36% வளர்ந்து வருகிறது. 2050ஆம் ஆண்டில் உணவு மற்றும் உயிர் ஆற்றலுக்கான நுகர்வோரின் தேவைகளை நிலையாகப் பூர்த்தி செய்ய, 1.73 சதவீதம் வளர்ச்சியை ஆண்டு இலக்காகக் கொண்ட உலகளாவிய வேளாண் உற்பத்தித்திறனைவிட இது குறைவாக உள்ளது.

✓ நிலம், உழைப்பு, உரம் மற்றும் இயந்திரங்கள் போன்ற வேளாண் உள்ளீடுகள் எவ்வளவு திறமையாக பயிர்கள் மற்றும் மீன் வளர்ப்பு பொருட்கள் போன்ற வெளியீடுகளாக மாற்றப்படுகின்றன என்பதை TFP கண்காணிக்கிறது.

---

**5. மாற்றப்படவுள்ள வனப் பாதுகாப்புச் சட்டமானது எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது?**

அ) 1972

**ஆ) 1980 ☑**

இ) 1992

ஈ) 2000



✓ இந்தியாவில் வன நிர்வாகத்தில் சில முக்கிய மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக வனப் பாதுகாப்புச் சட்டம் – 1980'ஐ திருத்துவது குறித்த ஆலோசனைக் கட்டுரையை மத்திய சுற்றுச்சூழல், வனம் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. வனப்பகுதிகளுக்கு வெளியிலிருந்து துளையிட்டு வனநிலப்பரப்பிற்கு அடியில், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை எடுப்பதற்கும், ஆய்வுசெய்வதற்கும் அல்லது பிரித்தெடுப்பதற்கும் தனியார் தோட்டங்களை செயல்படுத்துவதை இந்தப் புதிய சட்டம் உள்ளடக்கி உள்ளது. மாநில அரசுகள் தங்கள் கருத்துக்களை 15 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

---

**6. பதுகம்மா என்பது எந்த இந்திய மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு மலர் திருவிழாவாகும்?**

அ) கேரளா

**ஆ) தெலுங்கானா ☑**

இ) மேற்கு வங்காளம்

ஈ) பஞ்சாப்



✓ தெலுங்கானா மற்றும் ஆந்திராவின் சிலபகுதிகளில் கொண்டாடப்படும் மலர் திருவிழாவான பதுகம்மா 9 நாட்கள் கொண்டாடப்படுகிறது. 9 நாள் திருவிழாவின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், பெண்கள் பூக்கள் மற்றும் பத்திகள் அடங்கிய தாலிகளை ஏந்திச்செல்கின்றனர். ஒவ்வோர் ஆண்டும் அம்மன் சிலை படைக்கப்பட்டு, திருவிழாவின் 10ஆம் நாளில் உள்ளூர் நீர்நிலைகளில் கரைக்கப்படுகிறது.

---

**7. இந்திய குடிமைப் பணிகளைப் பொறுத்தவரை, அக்.9ஆம் தேதி அன்று கொண்டாடப்படுகிற நாள் எது?**

அ) இந்திய காவல்துறை சேவைகள் நாள்

ஆ) இந்திய நிர்வாக சேவைகள் நாள்

**இ) இந்திய வெளியுறவு சேவை நாள் ☑**

ஈ) இந்திய வருவாய் சேவைகள் நாள்



✓ இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் அக்.9 அன்று இந்திய வெளியுறவுச் சேவைகள் நாள் (IFS Day) அனுசரிக்கப்படுகிறது. 1946ஆம் ஆண்டு இதே தேதியில்தான், அயல்நாடுகளில், இந்தியாவின் அரசியல் ரீதியான & வணிக பிரதிநிதித்துவ நோக்கத்திற்காக இந்திய வெளியுறவுச் சேவை நிறுவப்பட்டது. IFS அதிகாரிகளின் முக்கிய பங்கை அங்கீகரிக்கும் வகையில், 2011ஆம் ஆண்டு முதல் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

**8. 'Safe food now for a healthy tomorrow' என்பது, அக்.16 அன்று அனுசரிக்கப்பட்ட எந்த நாளின் கருப்பொருளாகும்?**

**அ) உலக உணவு நாள் ☑**

ஆ) உலக உழவர்கள் நாள்

இ) உலக உழவு நாள்

ஈ) உலக நலவாழ்வு மற்றும் சுகாதார நாள்




✓ அனைவருக்கும் பசி மற்றும் ஆரோக்கியமான உணவுப்பழக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.16 அன்று உலக உணவு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது, 1979ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உணவு & உழவு அமைப்பின் நிறுவன நாளைக்குறிக்கிறது. இந்த ஆண்டு FAO, UNHCR, ஐநா அகதிகள் நிறுவனம் மற்றும் உலக உணவுத்திட்டம்போன்ற அமைப்புகளால் கூட்டாக இது நடத்தப்படுகிறது. 'Safe food now for a healthy tomorrow' என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக உணவு நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**9. மாலேயில் நடந்த SAFF கால்பந்து சாம்பியன்ஷிப்பை வென்ற நாடு எது?**

அ) நேபாளம்

**ஆ) இந்தியா ☑**

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்

✓ இந்தியா தனது எட்டாவது SAFF சாம்பியன்ஷிப் பட்டத்தை 3–0 என்ற கணக்கில் நேபாளத்தை தோற்கடித்து வென்றது. இப்போட்டியின்போது, சுனில் சேத்ரி தனது 80ஆவது சர்வதேச ஸ்டிரைக்மூலம் முன்னணி கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸியை சமன் செய்தார். இரண்டாவது பாதியில் சேத்ரி (49வது நிமிடம்), சுரேஷ் சிங் (50வது), சாஹல் அப்துல் சமத் (90வது) ஆகியோர் அடித்த கோல்கள் இந்தியா பட்டத்தை வெல்ல உதவியது. சர்வதேச கால்பந்தில் அதிக கோல்கள் அடித்த வீரர்களில், சேத்ரி, இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

---

**10. தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் புதிய தலைவர் & நிர்வாக இயக்குநர் யார்?**

**அ) அமித் ரஸ்தோகி ☑**



ஆ) கஸ்தூரி ரங்கன்

இ) மயில்சாமி அண்ணாதுரை

ஈ) K சிவன்

✓ தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக அமித் ரஸ்தோகி பொறுப்பேற்றார். இந்திய கடற்படையில் 34 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, அமித் ரஸ்தோகி இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். NRDC என்பது DSIR, அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஒரு நிறுவனமாகும். பல்வேறு தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களிலிருந்து தொழில்நுட்பங்களின் மேம்பாடு & பரிமாற்றத்தை மேம்படுத்துவதற்காக 1953'இல் இது நிறுவப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆசியான் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் இந்தியா: உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தகவல்**

ஆசியான் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கும், அதன் முன்னிலைக்கும் இந்தியா அதிக முக்கியத்துவம் அளிக்கிறது என்று பிரதமர் மோடி தெரிவித்தார். ஆசியான் எனப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு சார்பில் 18ஆவது ஆசியான் – இந்தியா உச்சி மாநாடு காணொலி முறையில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

ஆசியான் நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான உறவானது ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்டது. நமது கலாச்சாரம், பழக்க வழக்கம், மொழிகள், எழுத்துகள், கட்டிட வடிவமைப்பு ஆகியவற்றில் இருந்தே நாம் இதனை அறிந்து கொள்ளலாம். எனவேதான், ஆசியான் நாடுகளுடனான உறவுக்கு இந்தியா முன்னுரிமை வழங்குகிறது. அதேபோல, இந்தியாவின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஆசியான் கூட்டமைப்பு பெரும் உறுதுணையாக இருந்து வருகிறது.

குறிப்பாக, இந்தியாவின் கிழக்கை நோக்கிய கொள்கைக்கு ஆசியான் கூட்டமைப்பு ஆற்றி வரும் பங்களிப்பு அளப்பரியது. அதுமட்டுமின்றி, இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் மேம்பாட்டுக்கும் அக்கூட்டமைப்பு உதவியாக உள்ளது. இதற்காக, இந்த தருணத்தில் ஆசியான் நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வரும் 2022–ம் வருடமானது ஆசியான் நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான 30–வது ஆண்டு உறவை குறிக்கிறது. அதே வேளையில், இந்தியாவும் தனது 75–வது ஆண்டு சுதந்திர தினத்தில் அடியெடுத்து வைக்கவுள்ளது. இதனை நினைவுகூரும் விதமாக, 2022–ம் ஆண்டினை ஆசியான் – இந்தியா நட்பு ஆண்டாக கொண்டாட முடிவு செய்துள்ளோம்.

தற்போது கரோனா பரவலால் எழுந்துள்ள சவால்களை நாம் அனைவரும் எதிர்கொண்டு வருகிறோம். அதே சமயத்தில், இந்தியா – ஆசியான் கூட்டமைப்புக்கு இடையேயான உறவுக்கும் கரோனா சூழல் சில சவால்களை ஏற்படுத்தியுள்ளது. இதனை நாம் ஒன்றிணைந்து வெற்றிக் கொள்ள வேண்டும். நமது உறவை எதிர்காலத்திலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டும். ஆசியான் நாடுகளின் ஒற்றுமைக்கும், அதன் முன்னிலைக்கும் இந்தியா அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இவ்வாறு மோடி பேசினார்.

ஆசியான் கூட்டமைப்பில் புருனே, கம்போடியா, இந்தோனேசியா, மலேசியா, மியான்மர், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்தியா, அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்டவை இக்கூட்டமைப்பில் நட்பு நாடுகளாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**2. சரக்கு கையாளுதல், வேளாண் ஏற்றுமதியை மேம்படுத்த தலைமைச் செயலர் தலைமையில் குழு: அரசாணை வெளியிட்டது தமிழக அரசு**

சரக்கு கையாளுதல், வேளாண் மற்றும் சேவை ஏற்றுமதியை மேம்படுத்த மாநில அளவில் தலைமைச் செயலர் தலைமையில் புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

2019ஆம் ஆண்டு, மாநிலத்தின் அனைத்து சரக்குகளையும் கையாளுதல், வேளாண் மற்றும் சேவை ஏற்றுமதி தொடர்பானவற்றை கண்காணிக்கவும், வர்த்தகம் தொடர்பான விஷயங்களை ஆய்வு செய்யவும் தலைமைச் செயலர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த செப்டம்பரில், தமிழ்நாடு ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கை வெளியிடப்பட்டது. இதையடுத்து, மாநில ஏற்றுமதி வளர்ச்சிக் குழு அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தலைமைச் செயலர் வெ இறையன்பு தலைமையில் தற்போது குழு அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் குழுவில் தொழில், நிதி, கால்நடை பராமரிப்பு, கைத்தறி, குறு, சிறு நடுத்தரதொழில்கள், வேளாண்மை ஆகியதுறைகளின் செயலர்கள் மற்றும் ஏற்றுமதி கவுன்சில் அல்லது ஏற்றுமதியாளர்கள் சங்க பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் மேலாண் இயக்குநர் அமைப்பாளராகவும், அயல்நாடு வர்த்தக தென்மண்டல கூடுதல் இயக்குநர் ஜெனரல் துணை அமைப்பாளராக செயல்படுவர்.

மேலும், இந்திய ஏற்றுமதி சங்கத்தின் தலைவர் ஏ சக்திவேல், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் ராஜா சண்முகம், ஆட்டோமேட்டிவ் காம்போனன்ட் தயாரிப்பாளர்கள் சங்க மண்டல தலைவர் சுபகுமார், சிஐஐ தமிழ்நாடு துணைத் தலைவர் சத்யகம் ஆர்யா, மோகிப் ஷூ நிறுவன மேலாண் இயக்குநர் முகமது மொகிபுல்லா கொட்டாய், பாக்ஸ்கான் நிறுவன மேலாண் இயக்குநர் ஜோஷ் பவுல்கர், கேவிஎம் ஏற்றுமதி நிறுவன மேலாண் இயக்குநர் கேவிவி மோகனன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக் குழுவானது குறைந்தபட்சம் 6 மாதத்துக்கு ஒருமுறை கூடி, ஏற்றுமதி கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றம்குறித்து விவாதிக்கும். தேவைப்பட்டால் வேறு துறைகளையும் இந்தஆய்வின்போது சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளின் வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி சார்ந்த துறைகளிடையே ஏற்றுமதி தொடர்பான சிக்கல்களை பரிமாறி அவற்றுக்கு இக்குழு தீர்வு காணும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**3. வாலாஜாபாத் அருகே – 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சதி கற்கள் கண்டுபிடிப்பு: உத்திரமேரூர் வரலாற்று ஆய்வுமையத்தலைவர் தகவல்**

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டத்தில் உள்ள உள்ளாவூர் கிராமத்தில், 16–ம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகர மன்னர்கள் காலத்தை சேர்ந்த 4 சதி கற்களும், உடைந்த நிலையில் ஒரு சிலையும் உத்திரமேரூர் வரலாற்று ஆய்வு மையம் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று சதி கற்களில் ஒரு பெண், ஓர் ஆண் உருவமும், 4ஆவது சதிகல்லில் ஓர் ஆண், மூன்று பெண் உருவங்களும் உள்ளன.

இதுகுறித்து உத்திரமேரூர் வரலாற்று ஆய்வு மையத் தலைவர் கொற்றவை ஆதன் கூறியது:

காஞ்சிபுரத்தில் இருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் உள்ளது உள்ளாவூர் கிராமம். இந்த கிராமத்தில் தீப்பாஞ்சி அம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் 50 ஆண்டுகளாக வழிபாடு இல்லாமல் உள்ளது. இந்தக் கோயிலை உள்ளூர் இளைஞர்கள் உதவியுடன் சீரமைத்து பார்த்தபோது இந்த சதி கற்களைக் கண்டறிந்தோம். இவற்றில் சில கற்கள் மண்ணில் பாதி புதைந்த நிலையில் காணப்பட்டன.

ஒரு வீரன் இறந்தால் அந்த வீரனின் மனைவியும் தீயில் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொள்வார். இந்தப் பழக்கத்துக்கு சதி பழக்கம் என்று

பெயர். இதனைத் தொடர்ந்து இறந்த அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவர்கள் உருவம் பொதித்த கற்களை உருவாக்கி ஊர்பொது வெளியில் நட்டுவைத்து வழிபாடு நடத்துவர். இதற்கு 'சதிக்கல் வழிபாடு' எனறு பெயர்.

நாங்கள் கண்டறிந்த இந்த சதி கற்களில், 3 சதி கற்களில் கணவன் மனைவியும், ஒரு சதிக்கல்லில் ஒரு கணவன் 3 மனைவிமார்களும் உள்ளனர். தீயில் பார்ந்து உயிரை விட்ட இப்பெண்களின் நினைவைப் போற்றும் வகையில் தீப்பாஞ்சி அம்மனாக வழிபட்டுள்ளனர்.

இந்த கிராமத்தில் இப்படி ஒன்றுக்கும் மேற்பட்ட சதி கற்கள் உள்ளன. விஜயநகர மன்னர்கள் காலத்தில் இந்த கிராமம் முக்கிய ஊராக இருந்துள்ளது. அந்தக் காலத்தில் இந்த முறை பின்பற்றப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. கடந்த கால வரலாற்றை நிகழ்கால சமூகத்துக்கு பறைசாற்றும். இதுபோன்ற வரலாற்று ஆவணங்களைக் காப்பது காலத்தின் கட்டாயம் என்றார்.

---

**4. மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலராக தமிழகத்தை சேர்ந்த எம் ரவிச்சந்திரன் நியமனம்: இயற்கை பேரிடரால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்க நடவடிக்கை**

இயற்கை பேரிடர்களான மழை, வெள்ளம், புயல், சுனாமி, அதிக வெப்பத்தை கண்காணித்து மாநில அரசுகளுக்கு தெரிவித்து, இந்தப் பாதிப்புகளிலிருந்து மக்களை காக்கும் பணிகளில் மத்திய புவி அறிவியல் அமைச்சகம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அமைச்சகத்தின் செயலராக, தமிழகத்தைச் சேர்ந்த எம் ரவிச்சந்திரனை மத்திய அரசு நியமித்துள்ளது.

தேனி மாவட்டம், பத்திரகாளிபுரத்தில் பிறந்தவர் எம் இரவிச்சந்திரன். அழகப்பா பல்கலையில் இயற்பியலில் முதுநிலை பட்டமும், புனே பல்கலையின் இந்திய வெப்பமண்டல வானிலை மையத்தில் இயற்பியலில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

அதே மையத்தில் 1988–1997 காலகட்டத்தில் விஞ்ஞானியாக பணிபுரிந்தார். பின்னர் சென்னையில் தேசிய பெருங்கடல்சார் தொழில்நுட்ப நிறுவன (NIOT) முதுநிலை திட்ட பொறியாளராகவும், இந்திய தேசிய பெருங்கடல்சார் தகவல் மையத்தில் (INCOIS) விஞ்ஞானியாகவும், தேசிய துருவம் மற்றும் பெருங்கடல்சார் ஆராய்ச்சி மைய (NCPOR) இயக்குநராகவும் பதவி வகித்துள்ளார். இந்நிலையில் இவர் மத்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**5. ஜி–20 மாநாடு: ரோம் சென்றடைந்தார் பிரதமர் மோடி**

ஜி–20 மற்றும் சிஓபி–26 மாநாடுகளில் பங்கேற்பதற்காக இத்தாலி தலைநகர் ரோமிற்கு பிரதமர் மோடி இன்று சென்றடைந்தார்.

வருகிற அக்.30,31 தேதிகளில் நடைபெறும் ஜி–20 மாநாட்டில் பங்கேற்று விட்டு, கிளாஸ்கோவுக்கு சென்று உலக நாடுகளின் முக்கிய தலைவர்கள் பங்கேற்கும் சிஓபி–26 மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இந்தப் பயணத்தின்போது உலக நாடுகளின் முக்கியத் தலைவர்களை பிரதமர் மோடி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

முன்னதாக, பிரதமர் மோடி ரோமிற்கு புறப்படுவதற்கு முன்பு தில்லியில் நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அறிவிக்கையில், 'இத்தாலி பிரதமர் மேரியோ திராகியின் அழைப்பின் பேரில் அக்டோபர் 29 முதல் 31ஆம் தேதி வரையில் ரோம் நகரத்துக்கு பிரதமர் மோடி சென்று அங்கு நடைபெறும் 16ஆவது ஜி–20 மாநாட்டில் பங்கேற்கிறார்.

அப்போது, ஜி–20 மாநாட்டு தலைவர்களுடன் கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு சர்வதேச பொருளாதாரம், சுகாதார மீட்சி, பருநிலை மாற்றம் குறித்து பிரதமர் மோடி ஆலோசனை நடத்துகிறார். கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு ஜி–20 மாநாட்டுத் தலைவர்கள் நேரில் பங்கேற்கும் முதல் கூட்டம் இதுவாகும். இதில் பிறநாட்டுத் தலைவர்களுடன் இந்தியா மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து இச்சந்திப்பின் போது பிரதமர் மோடி ஆலோசிப்பார்.

---

**6. தமிழ் மரபு வழி வந்த கனடா நாட்டு பாதுகாப்பு அமைச்சருக்கு முதல்வர் மு க ஸ்டாலின் வாழ்த்து**

தமிழ் மரபு வழி வந்த அனிதா ஆனந்த், கனடா நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு முதல்வர் மு க ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

---

**7. சென்னை வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கு ரூ.1,877 கோடி கடன்: இந்தியா–ஆசிய வளர்ச்சி வங்கி இடையே ஒப்பந்தம் கையெழுத்து**

சென்னையில் வெள்ளத் தடுப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.1,877 கோடி (251 மில்லியன்டாலர்) கடனுதவி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் ஆசிய வளர்ச்சி வங்கியும் வியாழக்கிழம கையெழுத்திட்டன.

இதுகுறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பாதவது:

சென்னை நகரை வெள்ள பாதிப்பு ஏற்படுவதில் இருந்து தடுப்பதற்காக, கொசஸ்தலை ஆறு பாயும் பகுதிகளில் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட உள்ளன. இந்தத் திட்டப் பணிகளுக்கு ரூ.1,877 கோடி கடனுதவி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும், ஆசிய வளர்ச்சி வங்கியும் கையெழுத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் பொருளாதார விவகாரங்கள் துறையின் கூடுதல் செயலர் ரஜத்குமார் மிஸ்ராவும் ஆசிய வளர்ச்சி வங்கியின் இந்தியத்திட்ட இயக்குநர் டேக்கியோ கோஷினியும் கையெழுத்திட்டனர்.

சென்னையின் அசுரவேக நகரமய வளர்ச்சியால் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதால் நீர்நிலைகளில் கொள்ளளவு குறைந்துவிட்டது. இதனால், சென்னை நகரம் எளிதில் வெள்ள பாதிப்புக்குள்ளாகும் நிலையில் உள்ளது. இந்தத்திட்டத்தின்மூலம், வெள்ள பாதிப்பிலிருந்து நகரத்தைப் பாதுகாக்கும்வகையில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**8. ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் 'மெட்டா' என மாற்றம்**

ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் 'மெட்டா' என மாற்றப்படுவதாக அதன் தலைமைச் செயல் அதிகாரி மார்க் ஸக்கர்பெர்க் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகம் என்பதைத் தாண்டி 'மெட்டாவெர்ஸ்' என்னும் மெய்நிகர் உலகத்தை உருவாக்குவதில் ஃபேஸ்புக் நிறுவனம் தீவிரம்காட்டி வருகிறது. அதற்கு வசதியாக நிறுவனத்தின் பெயர் 'ஃபேஸ்புக் இன்கார்ப்பரேட்டட்' என்பதிலிருந்து 'மெட்டா–Meta' என மாற்றப்படுகிறது.

இனி, ஃபேஸ்புக் சமூக வலைதளத்துடன் இன்ஸ்டாகிராம், மெசஞ்சர், அதன் குவெஸ்ட் VR ஹெட்செட், VR பிளாட்ஃபார்ம் ஆகியவை இணைக்கப்படும். 'மெட்டா' என்ற சொல் 'அப்பால்' என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்ததாகும். இந்தப் பெயர்மாற்றம் ஃபேஸ்புக், வாட்ஸ்ஆப், இன்ஸ்டாகிராம் போன்ற தனித்தளங்களுக்குப் பொருந்தாது. அதன் தாய் நிறுவனத்தின் பெயர் மட்டுமே மாற்றப்பட்டுள்ளது.

---

**1. ஆர்டனன்ஸ் இயக்குநரகத்தின் முதல் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ) S வைத்தியநாதன்

**ஆ) ER ஷேக் ☑**

இ) M சத்யன்

ஈ) Dr C சைலேந்திர பாபு

✓ மூத்த IOFS அதிகாரி ER ஷேக், ஆர்டனன்ஸ் இயக்குநரகத்தின் முதல் தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார். ஆர்ட்னன்ஸ் டைரக்டரேட் என்பது ஆர்ட்னன்ஸ் ஃபேக்டரி போர்டுக்கு (OFB) பதிலாக புதிதாக உருவாக்கப்பட்ட ஓரமைப்பாகும். ER ஷேக், 1984 பேட்ச் இந்திய ஆயுதத் தொழிற்சாலை சேவை (IOFS) அதிகாரி ஆவார்; இவர் பல்வேறு ஆயுத தொழிற்சாலைகளில் பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

---

**2. NITI ஆயோக், அமேசான் வெப் சர்வீசஸ் & இன்டெல் ஆகியவை கூட்டாக, பின்வரும் எந்த இடத்தில் புதிய அனுபவ ஸ்டுடியோவை நிறுவியுள்ளன?**

அ) மும்பை

ஆ) சென்னை

**இ) புது தில்லி ☑**

ஈ) ஹைதராபாத்

✓ NITI Aayog, Amazon Web Services மற்றும் Intel ஆகியவை இணைந்து ஒரு புதிய அனுபவ ஸ்டுடியோவை உருவாக்கியுள்ளன. அது NITI Aayog Frontier Technologies Cloud Innovation Center, புது தில்லியில் அமைந்துள்ளது. அரசு, ஸ்டார்ட் அப்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கான பரிசோதனை வசதியாக இந்த வளாகம் செயல்படும். இது செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர கற்றல் (ML), இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT), ஆக்மெண்டட் ரியாலிட்டி மற்றும் விர்ச்சுவல் ரியாலிட்டி போன்ற தொழில்நுட்பங்களைக் கொண்டிருக்கும்.

---

**3. டேர் டு ட்ரீம் 2.0 & இளம் விஞ்ஞானிகளின் விருதுகள், எந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டன?**




அ) ISRO

**ஆ) DRDO ☑**

இ) AIIMS

ஈ) BARC

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) 'டேர் டு ட்ரீம் 2.0' போட்டியில் வெற்றி பெற்றவர்களை பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் பாராட்டினார். புத்தாக்கம் மற்றும் ஸ்டார்ட்அப்களை ஊக்குவிப்பதற்காக 'டேர் டு ட்ரீம் 3.0' ஐயும் அவர் தொடங்கினார்.

✓ டேர் டு ட்ரீம் என்பது டிஆர்டிஓவின் தேசிய அளவிலான போட்டியாகும், இது இந்திய கல்வியாளர்கள், தனிநபர்கள் மற்றும் ஸ்டார்ட்–அப்களை பாதுகாப்பு & விண்வெளி தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது. டிஆர்டிஓ தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் வெற்றியாளர்களுக்கு ஆதரவை வழங்குகிறது. 2019ஆம் ஆண்டிற்கான DRDO இளம் விஞ்ஞானிகள் விருதுகள், 16 DRDO விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டது.

---

**4. 'இந்திய வான்படை நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ) அக்டோபர் 2

ஆ) அக்டோபர் 4

இ) அக்டோபர் 5

**ஈ) அக்டோபர் 8 ☑**

✓ ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர்.8 அன்று, இந்திய வான்படை நாளாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு, இந்திய வான்படை நாளின் 89 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. 1932ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய வான்படை நிறுவப்பட்டதை இந்நாள் நினைவுகூருகிறது. முதல் செயல்பாட்டுப் படை, 1933 ஏப்ரலில் நிறுவப்பட்டது. இந்த நாள், 'பாரதிய வாயு சேனா' என்றும் அழைக்கப்படும் இந்திய விமானப்படை பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**5. உலகம் முழுவதும் அதிர்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்குவது எது?**



**அ) சாலைப் போக்குவரத்து விபத்து ☑**

ஆ) இயற்கை பேரிடர்கள்

இ) இடம்பெயர்தல்

ஈ) சுற்றுச்சூழல் அபாயங்கள்

✓ ஒவ்வோர் ஆண்டும் அக்.17ஆம் தேதி உலக அதிர்ச்சி தினமாக உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. உலகெங்கிலும் இறப்பு & ஊனத்தை ஏற்படுத்தும் பெரு விபத்துக்கள் மற்றும் காயங்கள் மற்றும் அவற்றைத் தடுப்பதன் அவசியத்தை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

✓ சாலைபோக்குவரத்து விபத்து என்பது உலகம் முழுவதும் பேரதிர்ச்சிக்கு முக்கிய காரணமாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும், உலகம் முழுவதும் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் காயங்களால் இறக்கின்றனர். இந்தியாவில் மட்டும், ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு மில்லியன் மக்கள் இறக்கின்றனர் மற்றும் 20 மில்லியன் பேர் காயங்களால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

---

**6. G20 நாடுகளில் தனிநபர் அடிப்படையில் கரியமில வாயுவை ($CO_2$) அதிக அளவில் வெளியேற்றும் நாடு எது?**




அ) இந்தியா

ஆ) சீனா

**இ) சவூதி அரேபியா ☑**

ஈ) ரஷ்யா

✓ உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளர்களுள் ஒன்றான சவூதி அரேபியா, 2060ஆம் ஆண்டுக்குள் பைங்குடில் இல்லவாயு வெளியேற்றத்தில் "நிகர சுழியத்தை" அடைவதை இலக்காகக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளது. உலகளவில் சவூதி அரேபியா 10ஆவது மிகப்பெரிய கரியமில வாயு வெளியிடும் நாடாக உள்ளது. G20 நாடுகளில் தனிநபர் அடிப்படையில் இது மிகப்பெரிய உமிழ்வாளராக உள்ளது. சவூதியின் முதல் பசுமை முன்முயற்சி மன்றத்தின் தொடக்க விழாவில், பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் இதை அறிவித்தார்.

---

**7. இந்தியாவில், எந்தக் கால்நடை இனத்தின் முதல் கன்று, இன்–விட்ரோ கருத்தரிப்பைப் (IVF) பயன்படுத்தி பிறந்துள்ளது?**



அ) சாகிவால்

**ஆ) பண்ணி ☑**

இ) ஓங்கோல்

ஈ) முர்ரா

✓ மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம், பண்ணி எருமை இனத்தின் முதல் கன்று, இன்–விட்ரோ கருத்தரிப்பின்மூலம் பிறந்ததாக அறிவித்துள்ளது. கிர் சோம்நாத்தில், பால் பண்ணையாளருக்கு சொந்தமான பண்ணி எருமை IVF ஆண் கன்றை ஈன்றது. பால் உற்பத்தியை அதிகரிக்க, மரபணு ரீதியாக உயர் இரக எருமைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்தச் செயல்முறை மேற்கொள்ளப்பட்டது.

✓ குஜராத்தின் கட்ச் பகுதியில் முதன்மையாகக்காணப்படும் பண்ணி இன எருமைகள், வறட்சியான சூழலில் அதன் வாழுந்தன்மை மற்றும் அதிக பால் உற்பத்தித் திறனுக்காக பொதுவாக அறியப்படுகின்றன.

---

**8. அண்மையில் 51ஆவது தாதாசாகேப் பால்கே விருது பெற்ற நடிகர் யார்?**



**அ) இரஜினிகாந்த் ☑**

ஆ) கமலஹாசன்

இ) சத்யராஜ்

ஈ) பார்த்திபன்

✓ இந்திய திரையுலகில், 'சூப்பர் ஸ்டார்' இரஜினிகாந்த் அவர்களின் சிறந்த பங்களிப்பிற்காக அவருக்கு 51ஆவது தாதாசாகேப் பால்கே விருது வழங்–கப்பட்டுள்ளது. சமீபத்தில், புது தில்லியில் நடைபெற்ற 67ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில், குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா, இந்த விருதை வழங்கினார்.

- ✓ 'தாதாசாகேப் பால்கே விருது' என்பது இந்தியாவின் மிகவுயரிய திரைப் பட விருதாகக்கருதப்படுகிறது. 1969'இல் இந்திய அரசால் நிறுவப்பட்டது.

---

**9. உலக உணவுத் திட்டத்தின் ஓர் அண்மைய அறிவிப்பின்படி, 'பட்டினியை நோக்கிச் சென்றுகொண்டுள்ள' நாடு எது?**



அ) வெனிசுலா

**ஆ) ஆப்கானிஸ்தான் ☑**

இ) சிரியா

ஈ) சூடான்

- ✓ உலக உணவுத் திட்டத்தின் நிர்வாக இயக்குநர் டேவிட் பீஸ்லி கூறுகையில், 22.8 மில்லியன் மக்கள் (ஆப்கானிஸ்தானின் 39 மில்லிய –ன் மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள்) கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் 'பட்டினியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்". 2 மாதங்களுக்கு முன்பு, 14 மில்லியன் மக்கள் உணவு நெருக்கடியின் விளிம்பில் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.
- ✓ உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் குழந்தைகள் உட்பட மில்லியன் கணக்கான ஆப்கானியர்கள் பட்டினியால் இறக்க நேரிடும் என்றும் அவர் அறிவித்தார். முடக்கப்பட்ட நிதியை மனிதாபிமான முயற்சி –களுக்குப் பயன்படுத்தவும் அவர் வலியுறுத்தினார்.

---

**10. NIPUN பாரத் மிஷனை செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட புதிய தேசிய வழிகாட்டுதல் குழுவின் தலைவர் யார்?**




**அ) மத்திய கல்வி அமைச்சர் ☑**

ஆ) மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சர்

இ) NITI ஆயோக் CEO

ஈ) ISRO தலைவர்

- ✓ பாரத் மிஷன் – NIPUN – புரிதல் மற்றும் எண்ணியல் மூலம் வாசிப்பில் நிபுணத்துவத்திற்கான தேசிய முன்முயற்சியை செயல்படுத்துவதற்காக சமீபத்தில் தேசிய வழிகாட்டுதல் குழு உருவாக்கப்பட்டது. இதற்கு மத்திய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் தலைமைதாங்குவார்.
- ✓ கல்வித்துறை இணையமைச்சர் அன்னபூர்ணா தேவி துணைத்தலை –வராக இருப்பார். பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையானது 2026–27ஆம் ஆண்டுக்குள் மூன்றாம் வகுப்பு முடிவதற்குள் ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணியல் ஆகியவற் –றில், உலகளாவிய நிபுணத்துவம் என்ற இலக்கை அடைய 2021 ஜூலையில் இந்த மிஷன் தொடங்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய போர்க்கப்பல் 'துஷில்' ரஷியாவில் இயக்கம்**

இந்திய கடற்படையின் 'பி1135.6' வகையைச் சேர்ந்த 7ஆவது போர்க் கப்பல், ரஷியாவின் கலினின்கிராட் நகரில் அமைந்துள்ள யந்தர் கப்பல் கட்டுமான தளத்தில் முதல்முறையாக இயக்கப்பட்டது.

ரஷியாவுக்கான இந்திய தூதர் டி பாலவெங்கடேஷ் வர்மா மற்றும் ரஷிய கூட்டமைப்பு மற்றும் இந்திய கடற்படை அதிகாரிகளின் முன்னிலையில் கப்பல் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

'துஷில்' என்றால் சம்ஸ்கிருதத்தில் பாதுகாப்பு கவசம் என்று பொருள். கோவா கப்பல் கட்டுமான நிறுவனத்தில் 2 கப்பல்களும் ரஷியாவில் இரண்டு 1135.6 ரக கப்பல்களும் கட்டமைப்பதற்காக ஒப்பந்தம் இந்தியா–ரஷியா இடையே மேற்கொண்டது. இந்திய கடற்படையின் தேவைகளு –க்கேற்ப கட்டமைக்கப்படும் இக்கப்பல்களில் அதிநவீன வசதிகளும், ஆயுதங்களும் உள்ளன. யந்தர் கப்பல் கட்டும் தளத்தின் தலைமை இயக்குநர் இல்யா சமரின், இந்தியாவின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

---

**2. அக்டோபர்.30 – உலக சிக்கன நாள்.**

---

**3. ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ரோம் நகருக்கு சென்றார் பிரதமர் மோடி: வாடிகனில் போப் பிரான்சிஸை சந்திக்க திட்டம்**

ஜி20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி, இத்தாலி சென்றுள்ளார். வாடிகனில் போப் ஆண்டவர் பிரான்சிஸை சந்தித்து பேசவும் மோடி திட்டமிட்டுள்ளார்.

இத்தாலி தலைநகர் ரோம் நகரில் 16ஆவது ஜி20 உச்சிமாநாடு இன்றும் நாளையும் நடக்கிறது. இத்தாலி பிரதமர் மரியோ டிரகியின் அழைப்பை ஏற்று இந்த மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

ஜி20 உச்சிமாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் மோடி, முதல்முறையாக வாடிகனுக்கு சென்று போப் ஆண்டவர் பிரான்சிஸை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார்.

பிரதமரின் பயணம் குறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

இத்தாலி தலைமையின் கீழ்நடக்கவுள்ள ஜி20 மாநாட்டில் கரோனாவுக்கு பிறகான பொருளாதார மீட்பு நடவடிக்கைகள், பருவ நிலை மாற்றம், நீடித்த வளர்ச்சி, உணவு பாதுகாப்பு உள்ளிட்ட பிரச்சினைகளில் கவனம் செலுத்தப்படும். ஜி20 மாநாட்டுக்கு இடையே இத்தாலி பிரதமர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் மோடி சந்தித்து பேச உள்ளார்.

அதன்பின், ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகருக்கு செல்லும் மோடி, அங்கு நவ.1, 2 ஆகிய தேதிகளில் நடக்கும் பருவநிலை தொடர்பான மாநாட்டில் பங்கேற்கிறார். இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனையும் சந்திக்க உள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**3. ஒரே செடியில் கத்தரிக்காய், தக்காளி**

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள இந்திய காய்கறி ஆராய்ச்சி நிறுவனத் தின் வேளாண் விஞ்ஞானிகள் கலப்பின முறையில் ஒரே செடியில் கத்தரிக்காய் மற்றும் தக்காளியை வளர்த்து புதிய சாதனை செய்துள்ளனர். கத்தரிக்காயின் ஆங்கிலப் பெயரான 'பிரிஞ்சால்', தக்காளியின் ஆங்கிலப்பெயரான 'டொமாட்டோ' ஆகியவற் –றை இணைத்து இச்செடிக்கு 'பிரிமாட்டோ' என்று பெயர்வைத்துள்ளனர்.

ஒரு செடியின் பாகத்தை மற்றொரு செடியின் தண்டு அல்லது வேரில் இணைத்து வளர்க்கப்படும் முறையில் இந்தப் புதிய கலப்பின செடி வளர்க்கப்பட்டுள்ளது. 25–30 நாட்கள் ஆன கத்திரிக்காய் விதைகள், 25 நாட்களான தக்காளி விதைகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு வாரத்துக்கு கட்டுப்படுத்தப் பட்ட சீதோஷ்ண நிலையில் வளர்த்து பின்னர் மேலும் ஒரு வாரம் நிழலில் வளர்த்து அதன் பிறகு நிலத்தில் பயிரிடப்படுகிறது.

இதுபோல் நகரங்களில் சிறிய இடத்தில் கூட வளர்க்கலாம். ஒவ்வொரு செடியும் 2.3 கிலோ தக்காளி, 2.6 கிலோ கத்தரிக்காய் விளைவிக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

---

**4. இந்தியா–ஐரோப்பிய யூனியன் வர்த்தக மேம்பாடு: பிரதமர் மோடி பேச்சுவார்த்தை**

ஐரோப்பிய யூனியன் நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தக உறவை மேம்படுத்துவது தொடர்பாக ஐரோப்பிய கவுன்சில், ஐரோப்பிய ஆணையம் ஆகியவற்றின் தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி கூட்டு பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜி20 நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் மோடி இத்தாலிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். தலைநகர் ரோமில் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் சார்லஸ் மிஷெல், ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லியன் ஆகியோரை பிரதமர் மோடி சந்தித்துப்பேசினார்.

அப்போது, ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான வர்த்தகத் தொடர்பை மேம்படுத்துவது தொடர்பாக தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

15ஆவது இந்தியா–ஐரோப்பிய யூனியன் மாநாடு கடந்த ஆண்டு ஜூலையில் காணொலி வாயிலாக நடைபெற்றது. ஐரோப்பிய யூனியனின் 10ஆவது மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக இந்தியா திகழ்கிறது. ஐரோப்பிய யூனியன் நாடுகள் இறக்குமதி செய்யும் பொருள்களில் 1.8 சதவீதம் இந்தியாவைச் சேர்ந்தவையாகும்.

கடந்த ஆண்டு நிலவரப்படி ஐரோப்பிய யூனியனில் இடம்பெற்றுள்ள 27 நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான வர்த்தகம் சுமார் ₹5.55 லட்சம் கோடியாக இருந்தது.

**5. ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலம் மூன்றாண்டுகள் நீட்டிப்பு**

இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது.

ஆர்பிஐ ஆளுநராக இருந்த உர்ஜித் படேல் தனது பதவியை ராஜிநாமா செய்ததையடுத்து, கடந்த 2018ஆம் ஆண்டு ஆர்பிஐ-யின் 25ஆவது ஆளுநராக சக்திகாந்த தாஸ் நியமிக்கப்பட்டார். 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்ட அவரது பதவிக்காலம் டிச.10ஆம் தேதியுடன் நிறைவடை–வதாக இருந்தது.

இந்நிலையில், அவரது பதவிக் காலத்தை பிரதமர் மோடி தலைமையிலா–ன நியமனங்களுக்கான குழு மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், 'ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலம் டிச.10ஆம் தேதியில் இருந்து மேலும் 3 ஆண்டுகளுக்கோ அல்லது அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையோ நீட்டிக்கப்படுகிறது' எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக ஆர்பிஐ'இன் தலைமைப்பொறுப்பை 2024ஆம் ஆண்டு டிசம்பர் வரை சக்திகாந்த தாஸ் வகிக்க வழி ஏற்பட்டுள்ளது.

நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்காக மத்திய அரசு ₹12.60 லட்சம் கோடி கடன் பெறுவதிலும் அவர் முக்கியப் பங்கு வகித்தார். தமிழகப் பிரிவு இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்) அதிகாரியான சக்திகாந்த தாஸ் கடந்த 2017ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

கடந்த 2015ஆம் ஆண்டுமுதல் பணி ஓய்வு பெறும் வரை பொருளாதார விவகாரங்கள் துறையின் செயலராக அவர் பதவி வகித்தார். 15ஆவது நிதிக்குழுவின் உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

தனது பதவிக் காலத்தை சக்திகாந்த தாஸ் முழுமையாக நிறைவு செய்தால், நீண்ட காலம் ஆர்பிஐ ஆளுநராக இருந்த 2ஆவது நபர் என்ற சிறப்பைப் பெறுவார். இதற்கு முன்பு பெனகல் ராமா ராவ் 1949 முதல் 1957 வரை தொடர்ந்து ஆர்பிஐ ஆளுநராக இருந்தார். அவரைத் தவிர 4 ஆளுநர்கள் மட்டுமே 5 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்துள்ளனர்.

ஆர்பிஐ ஆளுநரின் பதவிக்காலத்தை பாஜக தலைமையிலான மத்திய அரசு நீட்டிப்பது இதுவே முதல் முறையாகும். கடந்த 2016ஆம் ஆண்டில் ஆளுநராக இருந்த ரகுராம் ராஜன், பதவிக்கால நீட்டிப்பை ஏற்க மறுத்துவிட்டார். அதையடுத்து பதவியேற்ற ஆளுநர் உர்ஜித் படேல் 3 ஆண்டு பதவிக்காலம் முடியும் முன்பே ராஜிநாமா செய்தார்.

**6. ஒரே ஆண்டில் 1.53 லட்சம் பேர் தற்கொலை – தமிழ்நாடு இரண்டாம் இடம்**

நாட்டில் கடந்த 2020ஆம் ஆண்டு 1.53 லட்சம் பேர் தற்கொலை செய்து கொண்டனர். இதில் மகாராஷ்டிரத்துக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் 16,000 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

இதுதொடர்பாக தேசிய குற்ற ஆவணக்காப்பகம் வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு நாடு முழுவதும் 1,39,123 பேர் தற்கொலை செய்துகொண்டனர். இது கடந்த ஆண்டு 1,53,052–ஆக அதிகரித்துள்ளது. கடந்த 2019–ஆம் ஆண்டு 10.4 சதவீதமாக இருந்த தற்கொலை விகிதம், கடந்த ஆண்டு 11.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கடந்தாண்டு அதிகபட்சமாக மகாராஷ்டிரத்தில் 19,909 பேர் தற்கொலை செய்துகொண்டனர். அதற்கு அடுத்த இடங்களில் தமிழ்நாடு (16,883), மத்திய பிரதேசம் (14,578), மேற்கு வங்கம் (13,103), கர்நாடகம் (12,259) மாநிலங்கள் உள்ளன.

தற்கொலை செய்துகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் 50.1 சதவீதம் பேர் இந்த 5 மாநிலங்களைச் சோ்ந்தவர்கள். நாட்டில் அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலம் உத்தர பிரதேசம். மொத்த மக்கள் தொகையில் 16.9% பேர் அந்த மாநிலத்தில் வசிக்கின்றனர். ஆனால், அந்த மாநிலத்தில் தற்கொலை செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகப் பதிவாகியுள்ளது.

மொத்த தற்கொலை எண்ணிக்கையில் 3.1% பேர்தான் அந்த மாநிலத்–தைச் சோ்ந்தவர்கள். யூனியன் பிரதேசங்களை பொருத்தவரை, தில்லி–யில் அதிக அளவில் தற்கொலைகள் (3,142) பதிவாகியுள்ளன. அதற்கு அடுத்த இடத்தில் புதுச்சேரி (408) உள்ளது.

நகரங்களில் அதிக தற்கொலை: நாட்டில் உள்ள 53 பெரிய நகரங்களில் 23,855 பேர் தற்கொலை செய்துகொண்டனர். நகரங்களில் தற்கொலை செய்துகொண்டவர்களின் வீதம் (14.8%) ஒட்டுமொத்தமாக இந்தியாவில் தற்கொலை செய்துகொண்டவர்களின் விகிதத்தைவிட (11.3%) அதிகம்.

மொத்த தற்கொலை எண்ணிக்கையில் 56.7% தற்கொலைகளுக்கான காரணங்களாக குடும்பப் பிரச்னைகள், திருமணம் சார்ந்த பிரச்னைகள், உடல்நல பாதிப்புகள் உள்ளன.

10,000 விவசாயிகள்: கடந்த ஆண்டு தற்கொலை செய்துகொண்ட 1.53 லட்சம் பேரில் 10,677 போ விவசாயிகள்.

இவர்களில் 5,579 பேர் சொந்தமாக நிலம் வைத்திருந்தவர்கள்; 5,098 பேர் பிறர் நிலங்களில் பணிபுரிந்த விவசாயத் தொழிலாளர்கள். மொத்த தற்கொலை எண்ணிக்கையில் இவர்களின் விகிதம் ஏழு சதவீதமாகும். ஒட்டுமொத்த தற்கொலை எண்ணிக்கையில் 70.9% பேர் ஆண்கள்; 29.1 பேர் பெண்கள்.

**7. மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை 35% எட்டியது**

மத்திய அரசின் நிதிப்பற்றாக்குறை முதல் அரையாண்டில் பட்ஜெட் இலக்கில் 35 சதவீதத்தை எட்டியுள்ளது.

இதுகுறித்து பொதுக் கணக்கு கட்டுப்பாட்டாளர் (சிஜிஏ) வெளியிட்ட புள்ளி விவரத்தில் தெரிவித்துள்ளதாவது:

2021 செப்டம்பருடன் முடிவடைந்த முதல் அரையாண்டில் மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை ரூ.5,26,851 கோடியைத் தொட்டுள்ளது. இது, நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட் மதிப்பீட்டில் 35 சதவீதமாகும்.

இருப்பினும், கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் நிதிப் பற்றாக்குறை–யானது நடப்புநிதியாண்டில் மிகவும் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது. கடந்த நிதியாண்டில் கரோனா பேரிடரை எதிர்கொள்ள அதிக செலவிட வேண்டியிருந்ததால் நிதிப்பற்றாக்குறையானது பட்ஜெட் இலக்கை தாண்டி 114.8 சதவீதமாக அதிகரித்தது என சிஜிஏ தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் நிதிப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தி–யில் 6.8 சதவீதமாக (₹15,06,812 கோடி) இருக்கும் என்பது மத்திய அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**8. பிரதமரின் ஜன் தன் யோஜனா: வங்கிக் கணக்குகள் எண்ணிக்கை 44 கோடியாக அதிகரிப்பு**

பிரதமரின் மக்கள் நிதி திட்டத்தின் (ஜன் தன் யோஜனா) கீழுள்ள வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை 44 கோடியாக அதிகரித்துள்ளது என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

அசோசேம் வர்த்தகக் கூட்டமைப்பு சார்பில் நிதித்துறை தொடர்பான இணையவழி கருத்தரங்கு நடந்தது. இதில் மத்திய நிதியமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொருளாதார விவகாரங்கள் துறையின் ஆலோசகர் மணீஷ் சென்சர்மா பங்கேற்று பேசுகையில், "பிரதமரின் ஜன் தன் திட்டத்தின் கீழுள்ள வங்கிக்கணக்குகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டு அக்டோபர் வரை இந்த சுமார் 44 கோடியாக அதிகரித்துள்ளது".

கடந்த 2014ஆம் ஆண்டு சுதந்திர தினத்தின்போது பிரதமரின் ஜன் தன் யோஜனா திட்டத்தை பிரதமர் மோடி அறிவித்தார். அந்த ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் தேதி அத்திட்டம் அமலுக்கு வந்தது.

பொதுமக்களுக்கு நிதிச்சேவைகள், குறிப்பாக பணப்பரிவர்த்தனை, கட–ன் பெறுதல், காப்பீடு, ஓய்வூதியம் சார்ந்த சேவைகள் எளிதில் கிடைக்க வேண்டும் என்பதை நோக்கமாகக்கொண்டு இத்திட்டம் அறிமுகப்படுத்த–ப்பட்டது.